சித்த மருத்துவத்தில்

# அகத்தியர் ஒடிவுமுறிவு சாரி நிகண்டகராதி-1200

தொகுப்பாசிரியர்

மருத்துவர் சூ. ராஜமணி பி.ஐ.எம்.

இணைப்பேராசிரியர்

அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை

வெளியீடு

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை

சென்னை - 106.

1991

# சித்த மருத்துவத்தில்
# அகத்தியர் ஒடிவுமுறிவுசாரி நிகண்டகராதி
# 1200

தொகுப்பாசிரியர்

**மருத்துவர் சூ. ராஜமணி பி.ஐ.எம்.**

இணைப்பேராசிரியர்

அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை

வெளியீடு

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை**

**சென்னை – 106.**

1991

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Odivu Murivu Sari Nigandagarathi |
| Author | : | Agathiyar |
| Commentator | : | Dr. S. Rajamani, B.I.M., |
| Publisher | : | Directorate of Indian Medicine and Homoeopathy, Madras-106. |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 1991 |
| Paper used | : | Maplitho Paper |
| Printing type | : | 10 Point |
| Number of copies | : | 1000 |
| Number of pages | : | 226 |
| Price | : | |
| Printer | : | Tansi Press. Guindy, Madras-32 |
| Binding | : | Wrapper binding |
| Subject | : | "The Art of Varma" |

**சுர்ஜீத் கு. சவுதரி இ. ஆ. ப.,**
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித்துறை.

# வாழ்த்துரை

உங்கள் கைகளில் தவழும் இந்நூல் நான் பொறுப்பேற்ற பின்னர் வெளிவரும் நூற்களில் ஒன்று என்ற வகையில் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தின் ஒரு பிரிவான 'வர்மக்கலை' பற்றி சுவடிகளினின்றும் ஆராய்ந்து ஒரு நூலை அமைத்துத் தந்த மரு. சு. ராஜமணி பி. ஐ. எம். அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூலை அச்சிட்டு வெளியிட ஆக்கபூர்வமான பணியினை மேற் கொண்ட மரு. அ. சுந்தரராசன் பி. ஐ. எம். ஆய்வு மருத்துவ அலுவலர் அவர்களைப் பாராட்டுகிறேன். அன்றியும் இந்நூல் வெளிவர ஏதுவாக இருந்த சுவடி நகல் எடுக்கும் பிரிவிலுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டு தல்களும் உரித்தாகட்டும்.

ஒப்பம்
இயக்குநர்.

# பதிப்புரை

சித்த மருத்துவத்தில் ஒரு பிரிவுதான் வர்மம் என்பது. வர்மம், மர்மம் என்னும் சொற்கள் மறைவு என்ற பொருளில் பயன்பட்டு வருகின்றன.

எலும்பு முறிவு, எலும்பு ஒடிவு போன்றவற்றிற்கு செய்யப் படும் மருத்துவம் வர்ம மருத்துவமாகும். இதன் துணை கொண்டு வேறு பல நோய்களையும் குணப்படுத்த முடியும். நோயாளியின் மர்மப் பகுதிகளில் அடித்தோ, தட்டியோ, தொட்டோ, தடவியோ சிகிச்சை செய்யும் முறை இந்த வர்மத்தைச் சார்ந்ததாகும். வேறு வகையில் சொல்வதானால் இன்றைய நவீன முறையில் நரம்பியல் துறையாகச் செயல்படுவதே அன்று வர்மமாக அழைக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்திற்கு மட்டுமின்றி எதிரியிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் கலையாகவும் இது பயன்பட்டிருக்கின்றது.

எனவே இக்கலையைக் கற்றவன் பிறரை எளிதில் வீழ்த்தி விடவும் முடியும். எல்லோருக்கும் இக்கலை கற்றுத் தரப்பட்டால் அதை அழிவுக்குப் பயன்படுத்திவிட வாய்ப்பிருக்கிறது. எனவே, இக்கலை எல்லோருக்கும் கற்றுத் தரப்படாமல் குறிப்பிட்ட சிலருக்கே கற்றுத் தரப்பட்டது. காலவேகத்தில் இதுவே இக்கலை அழியவும் காரணமாக அமைந்துவிட்டது.

தேய்ந்து கொண்டே போகும் இக்கலையை, மறைந்துவிடாமல் காக்க வர்மம் பற்றிய நூல்களை வெளியிடும் பணியை இந்திய மருத்துவத் துறை இயக்ககம் மேற்கொண்டுள்ளது. அதன் முதல் படியாக—முதல் முயற்சியாக இந்த ஒடிவு முறிவு சாரி என்னும் நூல் வெளிவருகிறது. இதனைத் தொடர்ந்து வர்மநூல் தொகுப்பொன்றும் வெளியீட்டிற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இதில் இடம் பெற்றுள்ள பல பாடல்கள் இலக்கண வரம்புக் குள்ளும் செய்யுளமைப்புக்குள்ளும் பொருந்தவில்லை. காலங்கால மாக வாய்மொழி வழியாகப் பாடல்கள் பாடப்பட்டு வந்தமையும்,

பாட்டின் அமைப்பைவிட பொருளுக்கே முதலிடம் தந்தமையும் அதற்குக் காரணமாகலாம். இதனால் பல பாடல்களில் அடிகள் மிகுந்தும், பல பாடல்களில் குறைந்தும் காணப்படுகின்றன.

சுவடிகள் எவ்வளவு சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டாலும் 200-250 ஆண்டுகளுக்கு மேல் அழியாமலிருப்பது கடினம். எனவே, சுவடியில் இருப்பன அழிந்து விடாமல் நூலாக்கம் செய்யப்படும் நோக்குடன் இந்தப் புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழுமை பெறாத பாடல்களும் புரியாத பகுதிகளுங்கூட இந்நூலில் இடம் பெற்றுள்ளது. அதன் சரியான கருத்துகள் முழுமையான விளக்கங்கள் அறிந்தோர் தெரிவித்தால், அவை பின்வரும் பதிப்பிற்கு உறற துணையாக அமையும்.

நூற் பணிக்குப் பல்வேறு வகையில் முன்னோடியாக நின்ற திரு. து. முருகராஜ் இ. ஆ. ப., முன்னாள் அரசு ஆணையர் மற்றும் செயலர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை அவர்கட்கும், ஆக்கமும் ஊக்கமும் தக்க அறிவுரையும் வழங்கிய திரு. க. இன்பசாகரன் இ. ஆ. ப., அரசு ஆணையர் மற்றும் செயலர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அவர்கட்கும் எங்கள் நன்றி என்றென்றும் உடைத்து.

நூல் வெளியீட்டிற்குத் துணைநின்று விரைவாக வெளிவருவதற்குப் பல்லாற்றானும் முயன்று, அதனை முடித்துதவிய இயக்குநர் திருமிகு பிரிதிவிராஜ்லங்தசா இ. ஆ. ப., வாழ்த்துரை வழங்கி நூலுக்கு அணி செய்த இயக்குநர் திருமிகு சுர்ஜீத் கு. சவுதரி இ.ஆ.ப., திரு. அ. ஜ கிருஷ்ணசாமி, பி. ஏ., துணைச் செயலர், சுகாதாரம், இந்திய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்கட்கும் எங்கள் நன்றி எனறென்றும் உரித்தாகட்டும். சித்த மருத்துவ நூற்கள் விரைவில் வெளியீடு செய்யப்படாமல் ஏற்பட்ட தேக்க நிலையை தக்க தருணத்தில் நீக்கி உதவிய திரு க. கணேசன், இ. ஆ. ப., இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகட்டும்.

வழிகாட்டியாக நின்று நூல் அச்சுக்குத் துணை நின்ற இணை இயக்குநர், மருத்துவர் வீ. சுப்பிரமணியன் எம். டி. (சி), அவர்கட்கும் எங்கள் நன்றி.

நூலைப் பிழை திருத்தி செப்பம் செய்த தமிழ்ப்புலவர்கள் திரு. த. அழகப்பராசு, திருமதி செ. இரா. பிரசன்னா ஆகிய இருவருக்கும் மற்றும் இத்துறையைச் சார்ந்த திரு வெ. சாரங்கபாணி, திருமதி க. லலிதா, செல்வி. த. லட்சுமி, திருமதி நா. பாக்கிய சுந்தரி, திருமதி தா. நாகம்மா, திருமதி சி. லட்சுமி அனைவருக்கும் எங்கள் நன்றி. நூலினை நன்முறையில் அச்சிட்டு வழங்கிய டான்சி அச்சகத்தார்க்கும் நன்றி.

**மரு. அ. சுந்தரராசன் பி. ஐ. எம்.,**
ஆய்வு மருத்துவ அலுவலர்.

# பொருளடக்கம்


| பாடப்பொருள் | செய்யுளெண் | பக்கம் |
|---|---|---|
| 1. காப்பு | 1-8 | 1 |
| 2. வர்மங்கொண்டால் ஏற்படும் குறிகுணங்கள் | 9-23 | 3 |
| 3. வர்மங்கொண்டால் ஏற்படும் அசாத்திய குறிகுணங்கள் | 24-28 | 11 |
| 4. எலும்புகள் ஒடிந்தால் சரிசெய்யும் முறைகள் | 29-64 | 14 |
| 5. நாடி நடையின் நிலைகள் | 65-75 | 31 |
| 6. வர்மங்கொண்டு மயங்கிடும் விபரம் | 76-81 | 35 |
| 7. வர்மங்களில் மாத்திரை மிஞ்சி | 82-83 | 38 |
| 8. காலங்கொண்டு நோயில் புகுதல் | 84-100 | 39 |
| 9. உடலின் முக்கியமான எலும்புகள் ஒடிந்தால் கட்டும் முறைகள் | 101-158 | 46 |
| 10. வர்ம நரம்புகள் தாக்குதல் (முறிவு) கொண்டால் ஏற்படும் குறிகுணங்கள் | 159-500 | 70 |

# முன்னுரை

அகத்தியர் ஒடிவுமுறிவு சாரி நீண்ட அகராதி என்னும் இந்நூல் 1200 செய்யுட்களை உடையது. ஒவ்வொரு செய்யுளும் நுட்பம் நிறைந்ததாகவும், மருத்துவத்திற்கு மிகவும் பயன்தரக்கூடியதாகவும் காணப்படுகிறது. இந்நூற்களை ம்றைத்து வைப்பதற்கு காரணத்தைக் கீழ்கண்ட செய்யுள் விளக்குகிறது.

உறவாடி சிலபேர்கள் நூல் தாவென்று
ஓவியம் போல் மொழிபேசி உன்னை ஏய்ப்பார்
திறமான நூலவர்க்கு வெளிவிடாதே
சீசனென்று பன்னிரண்டு வருடம் காத்தால்
அறிவான புத்திஅவர்க்கு இருந்த தானால்
அப்பனே பொருள்வாங்கி நூலை ஈயே

ஈவதுதான் ஆளுக்கும் சிவயோ கிக்கும்
இகத்திலுள்ள வம்பருக்கு ஈன்றா யானால்
சாவது போல் கடுநரகில் விழுவாய் சொன்னேன்
சண்டாளா! ஈயாதே தரணி மீது
தாமிதுவே வெளியேறச் சொன்னோம் என்று
தாரணியில் இந்நூலை மறைத்தார் பாரே.

(வர்ம சூத்திரம்)

எனது கோரிக்கை இந்நூலை யாவரும் (குறிப்பாக வளரும் சித்த மருத்துவ கல்லூரி மாணவ மணிகள்) இதனைக் கற்றறிவதால் பிறருக்குத் திடீரென உண்டாகும் நோய், விபத்து போன்றவைகளுக்கு தைரியமாய் காரணம் கண்டறிந்து சிகிச்சை செய்ய வல்லமையும் பிறரைத் துன்புறுத்துவது பாவம் என்று அறியவும், அகிம்சா தர்மத்தை கைக்கொள்ளவும் உலகில் யாவருக்கும் நன்மையே பயக்கும் என்பது எனது துணிபு.

அங்காதி பாதத்தில் ஒரு மனிதனுக்குத் திடீரென்று அடிபடுவதாலோ அல்லது எதிரிகள் தாக்குவதாலோ, எதிர்பாராத விபத்துக்களாலோ

இன்னும் பிறவும் போன்ற காரணங்களினால் எலும்புகள் ஓடிதல் மயக்கம் வருவதல், நரம்புகள் பாதிப்பு, மூட்டுகள் நழுவுதல், உள் உறுப்புகள் பாதிக்கப்படுதல், உடலில் உள்ள வர்ம இடங்கள் கேடடைந்து உயிர்போகும் நிலைகளும் தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது.

மேலும் எலும்பு முறிவிற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று, உபகாரணங்கள் (Pre-disposing Cause) இரண்டு நேர் காரணங்கள் (Exciting Cause)

உபகாரணம்:- சிறு குழந்தைகள் தவறி விழுவதால் எலும்பு முறிவு ஏற்படுவது இயற்கை. குழந்தைகளுக்கு எலும்பின் வகை அந்தங்கள் முற்றுப் பெறாத குருத்தெலும்பா (Epiphysis)கவே இருக்கும். இளம் பருவத்தில் எலும்பு முறிவு என்றால் எலும்பின் முனை பிரிதல் (Seperation of Epiphysis) என்றே சொல்ல வேண்டும்.

நேர் காரணம்:- பலாத்காரத்தினாலும், நேரடியாக தாக்குதல், விபத்துகளில் உயரமான இடங்களிலிருந்து விழுவதாலும் எலும்பு முறிவு ஏற்படும்.

முறிவின் வகைகள்:-

1. சாதாரண முறிவு (Simple Fracture)
2. கலப்பு முறிவு (Compound Fracture)
3. சிக்கலான முறிவு (Complicated Fracture)
4. நொறுக்கப்பட்ட முறிவு (Comminuted Fracture)
5. முறிந்த ஒரு பாகம் இன்னொரு பாகத்துடன் மாட்டிக் கொண்டு அசையாமலிருப்பது (Impacted Fracture)
6. பச்சை கொம்பு முறிவு (Green Stick Fracture)

7. தன்னில் தானே முறிவது (Spontaneous Fracture)

8. பள்ளம் ஏற்படும் முறிவு (Depressed Fracture)

1. சாதாரண முறிவு:-

எலும்பு ஒரே இடத்தில் வெளிக்காயம் ஒன்றும் ஏற்படாமல் ஒடிந்திருப்பது.

2. கலப்பு முறிவு:-

ஒடிந்த எலும்பிற்கும் வெளிக்காற்றுக்கும் சம்மந்தமுண்டாகும், வெளிக்காயம் இருக்கும்.

3. சிக்கலான முறிவு:-

எலும்பு முறிவோடு இரத்த குழாய்கள், நரம்புகள், கணுக்கள், உள்ளுறுப்புகள் சேதமடைந்திருப்பது.

4. நொறுக்கப்பட்ட முறிவு:-

எலும்பு பல துண்டுகளாக ஒடிந்து விடுவது.

5. எலும்பு முறிந்து மற்ற எலும்புடன் மாட்டிக் கொள்வது.

6. பச்சைக் கொம்பு முறிவு:-

சிறுபிள்ளைகளின் எலும்பு வளையுமாதலால் இது ஏற்படும்.

7. தன்னில் தானே முறிவது:-

முறிவுக்கு வேண்டிய போதுமான பலாத்காரம் இல்லாவிடினும், நோய் பிடித்திருக்கும் நிலையில் எலும்பு முறிந்துவிடும்.

8. பள்ளம் ஏற்படும் முறிவு:-

புற விசை அழுத்துவதினால் ஏற்படும் முறிவு.

மேலும் இந்நூலில் சாத்தியம், அசாத்தியம் போன்றவையும், எலும்புகள் ஒடிந்தால் கட்டும் முறையும், இரத்தம் வெளிப்பட்டால் நிறுத்தும் முறையும், மயக்கமுற்றால் உணர்வு செய்யும் முறையும், தைலங்கள், இலேகியங்கள், ஒற்றடம், ஆக்ராணம், வேது முறைகள், பிழிச்சல் முறைகள், குடிநீர், தொக்கனம் (பிடித்தல்) போன்றவைகளும் மிகத் தெளிவாக விரிவான முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

வர்மம் என்றால் என்ன?

இக்கேள்விக்கு நாம் பதில் கூறுவோமானால் அவை இங்கு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. 1. மர்மம் அல்லது இரகசியம் என்றும், 2. ஒடிவு அல்லது முறிவு என்றும் 3. கருவி என்றும், 4 உயிர் நிற்கும் இடம் என்றும் அல்லது ஜீவ நிலை எனவும் கூறலாம்.

வர்மம்:- குரு சீடர் பரம்பரையில் தாம் கற்ற சித்த மருத்துவகலையையும், கிடைத்த அனுபவங்களையும், சிரமமின்றி மனப்பாடமாக வைத்துக் கொள்வதற்காகத் தமிழ் மருத்துவர்களும், சோதிடர்களும் பல நூற்றாண்டுகளாக இந்நூலைக் கையாண்டு வந்துள்ளனர் போலும்; எனவேதான் இந்நூல் யாண்டும் பரவாமல் குறிப்பிட்ட சில இடங்களிலுள்ள செய்யுட்கள் இலக்கண இலக்கிய வரம்புக்கு விஞ்சியதாகவும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களாகவும் சிற்சில அடிகள் நீண்டும், அவ்வாறு சில இடங்களில் குறைந்தும் அமைந்துள்ளன. எனினும் மென்மையாக (எளிமையாக) உள்ளமையால் பொருள் காண்பது எளிதாகவுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே சிறப்பாக கையாண்டு வரப்படுகின்ற இவ்வருமை வாய்ந்த கலை, பிற இடங்களுக்குப் பரவாத காரணங்கள் மேற்கூறியவாறு, ஆய்வுக்குறியனவாகும். இக்கலையை அறிந்தவர்கள் மிக்க இரகசியமாக வைத்திருப்பதும், தங்களிடம் உள்ள சுவடிகளை அச்சேற்றி, வெளியிடாததும் இக்கலை பரவாமைக்குரிய பிற காரணங்களாகக் கருதவும் இடமளிக்கின்றன.

குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட மாத்திரையில், குறிப்பிட்ட நேரத்தில் வர்ம நரம்புகள் தாக்குதல் ஏற்படுதல்:-

(தாக்குதல் என்பது அடிபடுவதினாலோ, விபத்துக்களினாலோ, பிறர் தாக்குவதினாலோ அல்லது கட்டை, குச்சி போன்றவை உடலில் விழுவதினாலோ ஏற்படுவது)

நரம்புகள் பாதிக்கப்படுவதினால், உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. அதனால் இது உயிர் நிற்குமிடம் அல்லது ஜீவநிலை எனக் கூறப்படுகிறது.

வர்ம நூல்கள்:- சித்த மருத்துவத்தின் ஒரு முக்கியப் பிரிவான வர்மத்தில் நூற்கள் ஏராளம் உள்ளன. அவைகளில் அச்சிடப்படாதவற்றில் ஒரு சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. வர்ம புலிப்பாணி
2. வர்ம ஆணிநூல்
3. வர்ம கண்ணாடி
4. வர்ம கண்ணாடி வடக்கன் வழி
5. வர்ம திறவுகோல்
6. வர்ம நாலுகை மாத்திரை
7. வர்ம சரநூல்
8. வர்ம பஞ்சவித பதிவிடங்கள்
9. வர்ம குடோரி நூல்
10. வர்ம பஞ்ச சூத்திரம்
11. வர்ம பீரங்கி
12. வர்ம குருநாடி
13. வர்ம பொன்னூசி திறவுகோல்
14. வர்ம குணடூசி திறவுகோல்
15. வர்ம ஒடிவு முறிவு சாரி நீண்டகராதி
16. வர்ம வில்லும் விசையும்
17. வர்ம லாட சூத்திரம்
18. வர்ம சர சூத்திரம்
19. வர்ம தேரையர் நரம்பு சூத்திரம்
20. வர்ம சாரி

21. வர்ம சிவோற்பத்தி காண்டம்
22. நர மாமிச நூல்
23. வர்ம ஊசிமுகம் 1800

ஒடி முறிவு சாரி நீண்டகராதி:-

தமிழ் இலக்கியத்தில் தொன்மையான நூற்கள் எவ்வளவோ அழிந்து போக, மிஞ்சிய சிலவற்றையாவது தமிழ் தாத்தா சாமிநாத ஐய்யர் போன்றவர்கள் காப்பாற்றி தமிழ் உலகிற்குத் தந்தனர். ஆனால் அத்தகைய ஆர்வம் தமிழ் மருத்துவ நூற்களை வெளியிடுவதில் காட்டப்படாததால் எத்தனையோ நூற்கள் உலகிற்கே அறிமுகமாகாமல் அழிந்துவிட்டன. அதிலும் குறிப்பாக வர்ம நூற்கள் ஒரு சில கூட வெளியிடப்பட்டது கிடையாது. சித்த மருத்துவத்திற்கே தனிச்சிறப்பான வர்ம கலையை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டுகிற கன்னி முயற்சிதான் இந்த ஒடி முறிவு சாரி நீண்டகராதி நூலை வெளியிடுவது.

இத்தகைய ஒடிவுகளினால் ஏற்படக்கூடிய சில சிக்கல்களையும் துணை நோய்களையும் பின்வருமாறு விளக்குகிறார்.

163 மாணாக கதலிவனம் இடதுபக்கம்
வரணமுற்ற உதிர நரம்பது முறிந்தால்
தேனே கேள் திசை நாளில் மரணமாவான்
திசை தப்பி கடந்தாலோ பதினெட்டாம் நாள்
வாணான பதியுண்டாம் விறைத்து குன்றும்
வளமான நித்திரையில் சுகம் வராமல்

164 நித்திரையில் சுகமுறா தழலுமுண்டாய்
நெருங்கியே மயங்கி லேசா நெடுமூச்சாகி
புத்திகெட்டு மயங்குஞ்சில வேழதன்னில்
புண்மையாம் மயக்கமது போடு போடென்று
த்தியே விறைக்குமடா உணர்வுண்டாம்
கபமதில் சோரைவற்றி,
வற்றியே வறட்சியது மிகவுண்டாகி
வளருநாள் தொண்ணூற்றில் நோயைக் கேளு

165 நோயதுகேள் இருமலுடன் பனிகுளிரும்
நுண்ணியமாய்க் கக்கலுடன் விக்கல் வியர்வை
பாயுமே மூக்கில் நீர் பார்த்து
பற்றியே மண்டதனில் ஊரல் உண்டாம்
தேவுமே விந்து அங்கே தெளிவுறாது
சிக்குமே சுவாசமது சிதறிநின்று
பாயுமே உயிரதும் நூற்றெட்டில்
மாளுமே மாமுனிவர் வகுத்தவாறே

**சிக்கல்கள்:-** (Complications)

**உதாரணம்:-** முட்டெலும்பு கண்டால்

கண்டு நீ செய்திடவே இன்னுமொன்று
கடினமடா முட்டு நகண்டிட்டால்
மண்டதான சிரட்டையது சவ்வற்றேகி
மறுபுறத்தில் சவ்வகன்று விசை
கொண்டாலோ மீள்வது யருமையாகும்
குதிகால் நரம்பற்றாலது போலாகும்
பண்டான பெருவிரலும் அது போலாகும்
பகர்ந்துடையின் நரம்பது போலாகும்

**தீரும், தீராத நிலைகள்:-** (Prognosis)

**தீரும் நிலைகள்:-**உ.ம்) தோள் புஜத்தில் நெட்டி தாழுதல்

பேணப்பா தோள் புசத்தில் நெட்டி தாழ்ந்து
பிலத்தேற தீர்ந்து கொண்டால் சொல்லக் கேளு
ஊனப்பா உடனே வில்லில் ஞானேற்றி
உத்தமனே பிடரியின்மேல் பதியக்கட்டி
காணப்பா கமுக்கட்டில் பந்து சேர்த்து
கதிப்பாக குறுக்கு ஒரு கச்சை கட்டு
தோணப்பா முறி வெண்ணை கதிக்க தாக்கு
தொண்ணூறு சென்றவுடன் கையிதமும் செய்

கையிதமே செய்து வசவெண்ணெய் தாக்கு
கதிப்பாக முடமதிலே ஞாணைத் தாக்கு
வையதுமே செய்து கொண்டால் நன்மையாகும்
வகுப்புடனே இந்த முறை வருந்தி செய்நீ
செய்யதுமே செய்து கொண்டால் பொருந்தி நிற்கும்
திடமாக இந்த முறை சொன்னேன் பாரே.

தீராத நிலைகள்:- (உ.ம்) ஆக்ராண பாலம்

கடகுமென்ற ஆக்ராண பாலந் தன்னில்
கனத்தடியால் குருத்தல் சோரை கண்டு
சடம் வெதும்பி கபாலமது வீக்கங் கொண்டு
சவ்வகன்று பலவழியாய் பேசக்கண்டால்
மடமயிலே மீள்வதற்கு அருமையாகும்
மருந்துபல செய்தாலும் அதிகம் கண்டால்
திடம்பேசி செய்யாதே அகன்று நின்று
ஜெயம் வருமோ எப்படியோ என்று சொல்லே.

# நூல்

1. அண்ட பிண்ட எண்டிசையும் மண்ட
பதிரெண்டாம் மதின் புறத்துமாகி நின்று
தெண்ட பிண்ட மதிகை ரதிரி நாவியோனி
யதிலெழுந்த உனர்வனமும் பறவை தேவர்
கண்டிருந்த மனுஷரோடு தாவரமும்
கதிப்பான நீர்வளமும் சாதி நாற்கால்
கொண்டிருந்த எழில் தோற்ற முற்றாய் நிறை
குணமான பொருளாதி குருவே காப்பு.

2. ஆதியந்தம் கடந்தபொருள் நிற்குணமாய் நின்ற
அண்டபரி பூரணமான வில்லாத
சோதியென்ற நிற்மலனே சூச்சா சூட்சம்
அடரெவி மதியெனும் முச்சுடரும் தாண்டி
வீதியென்ற வெளியதுக்குள் ஒளியாய் என்றும்
மெய்பொருளா யெப்பொருளாய் குமுறியதாக
ஜாதியென்ற உயிருக்குள் ளுயிரா யெங்கும்
தானாக நின்றிலங்கும் மூலங் காப்பாம்.

3. மூலமுத லாறுதல் தூடே மேலாய்
மூலவெளி தான் முதல் மேலா தாராம்
பாலவெளி தான் முதல்தான் கடந்து
பதியான முப்பாலும் கடந்து மேன்மேல்
கோலமணி நாராயம் மேல் குகையில்
குடியிருந்து வந்த வழி தன்னைக் காண
ஆலவிஷ முண்டசிவ னருளி னாலே
அடிபணிந்து ஐந்துருவும் காப்பு தானே.

4. ஐந்துருவும் மூன்றுருவும் ஒன்றாய்க் கூடி
அதனாலே இரண்டுருவும் களங்க மின்றி
தோய்ந்து கண்டபதி ரண்ட மெல்லாம்
தொல்லையற்று நின்றகுரு நாத உன்னை
ஆய்ந்துணர்ந்து தோய்ந்ததற்கு நீயே சொந்தம்
அல்லாமல் வேறுண்டோ அமைச்சர் கோவே
மாய்ந்த குருநாதா உன்னடி யினேயே
மறவாமலின்று முன்று காப்பு தானே

5. இன்று மென்று ஒன்றாகி நின்ற நாத
எதிர்பெருகி முப்பாழில் குடியுமேறி
இன்று மூன்று மொன்றாகி பதியில் வாழும்
இல்லறத்தை நல்லறமாய் சுத்திபண்ணி
குன்றுமதி போலிருந்து வாழு மந்த
குருவான பிராணவர்த்தில் வாழ்ந்த மூர்த்தி
சென்றுசுடர் மணிவிளக்கும் பூர ணமாய்
நின்ற செஞ்சுடரான் கமலமலர் காப்பு தானே.

6. மலரான குண்டெலியாள் தாயின் செய்கை
வல்லவைதான் பிராணபத்தோ டொன்று சேர்ந்து
சலமாகி வந்தவளே தன்னைக் கண்டு
சதுரான பாலவழி கபாலத் தூடே
நிலையாகி மறுத்துவந்து முன்பின் னாகி
நிர்லமாய் முதல் கடையாய் நடுவுமாகி
பலவகையாய் உருவாகி உணர்வாய் நின்று ஞு
பதிக்காச ஏவல் செய்தோன் தலத்தோன் காப்பு.

7. தலமான தலத்தோடு அசைவை புக்க
தாணுமதி லேறிமலர் மணத்தைக் காண
சலமாகி நின்றவனேத் தன்னைக் கண்டு
சந்தித்து மேல்வீட்டில் குடிதா னேறி
பலஉணர் வுயிராகி உணர்வு மாகி
பகர்கருவாய் நின்றபதி னாலுக்கப்பால்
நிலைபெருகி ஒருகுருவாய் நின்ற நாத
நின்னருளை என்மீது நிகழ்த்தி காப்பாம்.

8. நிகழ்த்துவாய் அண்ட பகிரண்ட மெல்லாம்
நின்றாடும் மதிசூச்ச தப்பா லேறி
புகழ்த்துவா ருனையன்றி வேறுண்டோ
புல்லர்கள்தா னுனையறியார் புனித நாதா
சகத்தில்அமைந் திருக்கும்வழிக் கடங்க நாதா
தன்னை ஒருநாளும் மறவாத வண்ணம்
அகத்திலிருந் தருள்ஞான தீபங் காண
அருள்புரிந்து என்னைக் காப்பாய் எண்ணலானே.

வர்மானி அல்லது ஆசான் சிவ பெருமானைக் குருவாக மனதில் அனுதினமும் நினைத்து வாழ்த்தப்படுவதைக் கீழ்கண்டவாறு கூறுகின்றேன். இப்பரந்த உலகத்தையும், உலகத்தில் வாழும் மாந்தர்கள், பறவைகள், மரம், செடி, கொடிகள், புல்பூண்டு எட்டு திக்குகளிலும் இருக்கும் தேவர்கள் அனைத்தும் தோன்றி மறைவதற்கு, ஆதி காரணமான சிவபெருமான் காவலாக உள்ளான்.

ஆரம்பமும் முடிவும் இல்லாததும், இவ்வுலகிற்கு ஜோதியாக விளங்கக் கூடியவருமாகவும், சூட்சுமம் நிறைந்து காணப்படுபவராகவும், இவ்வுலக வீதியெங்கும் சுற்றி திரிந்து சாதி வேறுபாடு காட்டாத நிர்மலனாய் விளங்கும் சிவபெருமான் காவலனாய் உள்ளான். ஆலகால விஷத்தை உண்டு அனுதினமும் ‘ நம, சிவாய ’ என்று மனதில் எண்ணி, எல்லா உருவும் பெற்ற சிவபெருமான் காவலாக உள்ளார்.‘ நமசிவாய ’ என்ற ஐந்து உருவும், சிவன், பிரம்மன், விஷ்ணு என்ற மூன்றுருவும் ஒன்றாய் சேர்ந்து ‘ ஓம் ’ என்ற உருவில் தோன்றிய இவ்வுலக மெல்லாம் எல்லையற்று விளங்குகின்ற சிவபெருமானே நான் உன் திருபாதத்தை பணிந்து வணங்குகின்றேன்.

*( 1 முதல் 8 பாடல்கள் வரை கடவுள்-வாழ்த்து)*

9. அண்ணலே உலகத்தில் வாழும் மாந்த
ரடி காயமுறு விழுதலாலும் விண்ணடியில்
பிணையற்று வீழ்தலாலும் விழுந்த நீசி
சிதறி துண்டங்கே வைய னாலும்

மண்ணதிலே வெகுநாளாய் துக்கமுற்று
மாளவே வர்மமது கொள்ள லாலும்
திண்ணமுடன் இவைகளிலே பலதுக்காக
செப்புகிற யெண்ணையொடு கஷாய மாத்திரை.

இவ்வுலகில் வாழும் மாந்தர்களுக்கு அடிபடுவதால் உண்டாகக்கூடிய வர்மங்களுக்கும், கீழே விழுவதால் ஏற்படும் வர்மங்களுக்கும், பிறர் அடிப்பதாலும், அடிபட்டு எலும்புகள் முறிவதாலும், எதிர்பாராத விபத்துகளினாலும், உயரமான இடங்களிலிருந்து கீழே விழுவதாலும், அடிபட்டு அங்கங்கள் சிதறுவதாலும், மனம் பேதலிப்பதால் ஏற்படும் விபத்துக்களாலும், இன்னும் பல காரணங்களால் ஏற்படும் வர்மங்களுக்கு தைலங்கள், கசாயங்கள், மாத்திரைகள், இலேகியங்கள், தாரையிடுதல், நசியமிடுதல் போன்றவைகள் கையாளப்படுகின்றன.

*10.* மாத்திரையாய் கிறுதவகை கஷாய போக்கும்
வகையான நசியவகை தூளின் போக்கும்
சேர்த்துமிகச் செய்கின்ற கணையின் போக்கும்
செய்யாமல் குளியாய் மீளாப் போக்கும்
பார்த்துமிக விலகுகின்ற ஸ்தலத்தின் போக்கும்
பண்பான ஈழுகொண்ட குணத்தின் போக்கும்
கரீத்துமிகச் செய்துயிர் கருதும் போக்கும்
கூடினத்தால் தீராட்டால் விலகும் போக்கும்.

வர்மத்தினால் ஏற்பட்ட சுரம் போன்ற வியாதிகளை மாத்திரையால் நீக்கலாம். உள்வர்மம் கொண்டவைகளை இலேகியத்தால் குணமாக்கலாம். இரத்தக்கட்டு போன்றவற்றை எண்ணெய் போன்றவற்றால் தொக்கணம் செய்வதால் குணமாக்கலாம். வர்ம ஸ்தலங்களில் அடிபட்டு மயக்கமுற்றோருக்கு சுக்கு போன்ற தூள்களை நசியமிடுவ்தால் குணமாக்கலாம்.

11. போக்கான கைகாலால் செய்யும் போக்கும்
பொட்டணத்தினால் விழிகளின் போக்கும்
தீர்க்கமாய் கண்டிதங்கள் செய்யும் போக்கும்
தெரிந்த மட்டும் சொல்லுகிறேன் திறமாய் பாரு
ஆக்கையற்று குருபரனை நினைத்துக் கொண்டு
அன்னியமாய் உயிரை உன் உயிரைப் போலும்
வாக்குமான ஒன்றாகிக் கொண்டு
வர்மங்கள் முறி காயமெல்லாம் காணே.

வர்ம இடங்களில் அடிபட்டு ஏற்படும் வலிப்பு போன்ற குறி குணங்களுக்கு சில மருந்துகளை பொட்டணமாகக் கட்டி தைலத்தில் தோய்த்து ஒற்றடம் கொடுத்தால் வலிப்பு போன்றவை சுகம் கிடைக்கும். மருந்து செய்யும் காலத்து குருபரனை நினைத்துக்கொண்டு பிற உயிர்களைத் தன்னுயிர் போல் பாவித்து அடிபட்டுள்ள வர்ம இடங்களைக் கண்டு கொண்டு மருந்து செய்வாயாக.

12. காணையிலே அவக்குறிகள் தட்டுமென்று
கண்டாலோ விலகிநீ அகல நில்லு
காணையிலே தீருமென்று நிசங்கள் கண்டால்
உத்தமனே செய்துவிடு உறுதி யாக
வாணுந்தான் பிரியுமென்று குறிகள் கண்டால்
வல்லவனே நீயதனில் பார்க்க வேண்டாம்
தூணது போல் நின்றுநட னங்கள் கண்டு
சூட்சமாய் பார்க்கையிலே சூட்சமாகும்.

மருத்துவன் நோயாளனைக் கண்காணிக்கும்போது அடிபட்ட வர்ம இடங்களைக் கண்டு கொண்டு, சாத்தியமான குறிகுணங்கள் கண்டால் சிகிச்சை செய்ய வேண்டும். அசாத்தியமான குறிகுணமாக இருப்பின் பாராமல் விட்டுவிட வேண்டும். உடம்பு விறைப்பாக இருப்பின் அது அசாத்திய நிலை என்று கண்டு கொள்.

13. சூட்சாதி சூட்சமதை கண்டு நீயும்
தொகையான விபரமெல்லா மாய்ந்து பாரு
ஆச்சரியமாய் இத்தலங்கள் கண்டால்
அதுவேர்வை குளிர்ந்திருக்கும் மருந்து பாரு
பாய்ச்சலுடன் ஸ்தலத்தில் பிராண வாயு
பற்றியே சிக்கலென் று பூண்ட தென் று
மாட்சிமையாய் நீயறிந்து ஸ்தலத்தைத் தேர்ந்து
வலுவாக இருவினயும் வகுத்துப் பாரு.

மிகவும் நுணுக்கத்தோடு அடிபட்ட இடத்தை நோக்கும்போது அவ்விடத்தில் வியர்வை, குளிர்ச்சி காணப்படும். சுவாசிக்கும்போது அவ்விடத்தில் சரியாக மூச்சுவிட, வாங்க முடியாது. இக்குறி குணங்களைக் கொண்டு சாத்தியமா, அசாத்தியமா என்பதை அறிந்து கொள்ளலாம்.

14. வகுப்பாக பார்க்கையிலே படு வர்மத்தில்
வர்மங்கள் கொண்டதென்றால் ஆய்ந்து கொண்டு
தொகுப்பாக பிராணகலை நாலும்
தோன்றினதாலே பிராணனுக்கு குற்றமாகும்
வகுப்புடனே சிக்கலது தீர்ந்த தென்றால்
வகையான வர்மங்கள் யில்லை யென்பார்
நகையுடனே யறுத்தெடுத்த வாசல் வழி
நழுகிநிற்கும் எட்டுவிரல் கலையெட் டாகும்.

படுவர்மங்களில் வர்மம் கொண்டால் உயிருக்குக் கெடுதல் உண்டாகும். உயிர்கலைகள் நான்கான கருவிழி மேலே வாங்கி கண்ணீர் வருதல், மலம், மூத்திரம் போகாமல் இருத்தல், சிலநேரம் மலமூத்திரம் செல்லுதல், விந்து வெளி வந்துவிடுதல், ஆகிய இவை நான்கும் கண்டால் அசாத்திய குறி குணங்கள் ஆகும். இவைகள் நான்கும் இல்லாவிட்டால் சாத்தியம். முக்கியமான இவ்வர்ம நிலைகள் யாவும் அறுத்தெடுத்த வாசலான தொப்பூழில் காணப்படும்.

15. எட்டான கலையுடனே பிராணம் நாலும்
ஏகினதால் ஈராறு கலையாய மென்ன
கட்டான ஈராறு வழியெட் டாகி
கருதினதால் தொடுவர்மம் தொண்ணூ றாகும்
நெட்டுறவே இவையெல்லாம் நூற்றெட் டாதி
நொந்ததினால் நூற்றெட்டு வர்ம மாகும்
மட்டுறவே இவையறிந்து வர்மம் தீர்க்க
வகைவிபரம் உடனறிந்து செய்து பாரு.

எட்டு கலைகளாகிய தட்டு வர்மம் எட்டாகும். இது அசாத்தியம். ஈராறு கலையாக காணப்படும் படுவர்மம் பனிரண்டாகும். இதுவும் அசாத்தியமாகக் கருதப்படுகிறது. இவைகளுக்கு தீரும் தீராத நிலையாக உள்ளது நான்கு பிராணகலையாகும். அவை மலம், மூத்திரம், சுக்கிலம், கருவிழி. மேலும் பனிரண்டு கலையாக விளங்கும் படுவர்மம் 12-ம், தொடுவர்மம் 96-ம், இவை சேர்ந்து 108 வர்மமாகக் காணப்படுகிறது. இவைகளுக்கு அடிபட்டவுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் பரிகாரம் தேட வேண்டும்.

16. அறிந்து செய் களங்கமற்று காணும் காணும்
யதன்மூலக் குருபரனை மனதில் காணல்
தெரிந்தவரை மனம்பணிய ஸ்தலமும் காணும்
செங்கதிரில் மதிப்பொடுங்கி ஒன்று
அறிந்துடனே மயிர்ப்பாலம் தாண்டிப் போனால்
வழிகளெல்லாம் செம்மையாய்க் காண லாகும்
பிரியமால் சிலயோக நிலையே சென்றால்
பெலமான ஆபரணமே காணும் பாரே.

வர்மம் கொண்ட இடத்தில் வலி, வீக்கம் காண்பது மட்டுமன்றி பஞ்சபூதங்களும் பாதித்து, மனக்கலக்கம் ஏற்பட்டு, உள்ளுணர்வு குன்றிப்போகும். மேலும் கண்கள் சூரியனுடைய செங்கதிர்கள் போல் காணப்படும். பின்பு சுளிமுனைப் பாகத்திலிருந்து மேலாக சுளிமுனை அடக்கத்திற்கு இப்பஞ்ச பூதங்களும் வந்து சேர்ந்து தலையில் உச்சி பாகத்தில் அமுதநிலையை

அடக்கிவிடும். அங்கே தான் சிவநிலை அடக்கமாக காணப்படும். அதுவே வர்ம அடக்கமாகும்.

17. காணுமே இருவழியாய் நின்றொ லிக்கும்
கலை நா லும் சொச்சமறும் வழியில் புக்கும்
அணுபுகும் வழியொன் று கூடி னதால்
அதில் கலைநா லும் அடர்ந்து நிற்கும்
பூணுகின்ற பிராணகலை நா லு மூன்றில்
மூன் று புக்கிதால் படுவர்மம் பன்னி ரண்டாம்
வேணுமென்ற பதினெட்டு வர்ம மொன்றில்
விபரமுடன் இரட்டையாய் வந்த தென்ன

மூக்கின் இரு துவாரங்களான இடகலையும், பிங்கலையும் ஆக்கிராண பாலமுமான (மூக்கு) சுழிமுனையிலும், நான்கு கலையாகிய மலம், மூத்திரம், சுக்கிலம், கருவிழி இவைகளின் நிலைகள் அடக்கமாகும். அசாத்தியமாக கருதப்படும் படுவர்மம் பனிரெண்டும் ஜீவநிலை என்றும், பிராணக்கலை என்றும் கருதப்படுகிறது. மேலும் படுவர்மம் பதினெட்டு எனவும் அனுபவ குறிப்புகள் உள்ளன.

18. வந்தவகை விபரம் இப்படியே கண்டாய்
மங்கையர்க்கே குறைந்தவர்மம் பீனசக் காலம்
சொந்தம்என்ற இந்தவர்மம் ஒன் றும் நீக்கி
துகையாக ஒருநூற்றி ஏழாம் பாரு
சந்தமுடன் இப்படியே இருக்கு தென் று
சடம்பார்த்து கூறுகண்டு அமத்தல் செய்நீ
பெந்தமது தான்பிரிந்து அமரா தென்றால்
வேறுகொண்ட காயமற்றால் வந்த தென்ன

ஆண்களுக்கு 108 வர்மமும், பெண்களுக்கு பீனசக்காலமாகிய (Testis) விரை இரண்டும் நீங்கலாக 107 வர்மம் காணப் படுகிறது. இவ்வா று காணப்படுவதால் ஒவ்வொரு வர்ம இடங்களில் அடிபடும் குறிகுணங்களைக் கண்டுகொண்டு மயக்கமுற்றவனை அல்லது வர்மம் கொண்டவனை எழுப்புதல் வேண்டும். இன்னும் எப்படி வர்ம

இடங்களில் காயம் ஏற்பட்டால் குறிகுணங்கள் இருக்கும் என்பதைக் கீழே காணலாம்.

19. காயமென்றால் படுகாயம் கனத்த ஈடு
கதிர்குலைகள் நொறுக்குண்டு நிறம்வே றாகல்
நேயமுடன் நூலற்றி சங்கி தாழ்தல்
நொடிக்குள்ளே நெட்டீழ்தல் சலவாய் பாய்தல்
தோயமுடன் பெருவியர்வை அழல கண்டம்
சுருங்கியே கழுத்துறையில் வலித்துண்ணுதல்
தூயதலை யுருட்டிடுதல் பிரண்டு ரண்டல்
துணிந்து கண் விழித்து கைமிகப் பார்த்துச் சீறல்

நம் உடலில் வர்மம் கொண்டு காயம் ஏற்பட்டால் பல அசாத்திய குறி குணங்கள் காணப்படும். நெஞ்சு நேர்பாகமான இதயத்தில் வர்மம் கொள்ளுதலே குரல்வளை நெருக்குண்டு, உள் நரம்புகள் அழுத்தம் ஏற்படுவதாலும், கைபொருத்து நழுவுவதாலும், வாயில் நீர் பாய்ந்து கொண்டிருக்கும். அதிக வியர்வை காணப்பட்டு, சுரமும் காணப்படும். கழுத்து பாகம் ஒரு புறமாக வலித்து தலையை இரண்டு பக்கமும் உருட்டுதல், உடல் முழுவதையும் அதிவேகமாக தரையில் அங்கும் இங்கும் புரண்டு உருளுதலும், பின்பு கண் விழித்து தன் இரு கைகளையும் நன்றாக உற்று நோக்கி அதி பயங்கரமாக சீற்றம் கொள்வார்கள்.

20. சீறலுடன் கைகாலால் சேட்டை செய்தல்
சினம் வெதும்பி குளிர்ந்திடுதல் சடம்க னத்தல்
மாறியே கெருடனுட பார்வை பார்த்தல்
விழிரண்டும் பிசகிபோவதற்கு நடையே கொள்ளல்
ஏறியே பலமதிகக் காட்டி பின்னே
யிடராக தேகம் விறைத்து உணர்தல மாகல்
மாறியே கருடனுட பார்வை பார்த்தல்
மயங்கி யதிமூர்ச்சை கபம் வர்த்தித்தல்

கோபம் சற்று தீர்ந்ததும் இரண்டு கைகளும் கால்களும் பற்பல சேட்டைகளை செய்து மனம் பேதலித்து காணப்படும். பின்பு உடல் முற்றும் குளிர்ச்சி காணப்படும். உடல் அதிக பாரமாக காணப்படுவதோடு கருடன் (பருந்து) பார்வை பார்ப்பது, சற்று நேரம் கழிந்ததும் இரு கண்களும் அடைப்பது போன்ற குறி குணங்கள் காணப்படும்.

21. வந்தனையாம் பீசலித்து கலங்கள் மூலம்
வலுவற்று இசவு தளர்ந்திடுதல்
கர்த்தவம் போல்அதிக மூர்ச்சை யாகி
கண்டவருக்கே காலால் உதைக்கலால்
வேர்த்துமிக வெருவிகுளிர்ந் திடுத லாக
வேகமாய் பொறிதளர்ந்து மயங்க லாகல்
பார்த்துமிக சிரித்துகப வேர்வை யாகி
பயப்பட்டு நடுநடுங்கி மயக்க முற்றல்

மேலும் விரை (Testis) இரத்தக்கட்டு உண்டாதல், மூலம் (Anus) வெளி வருதல், மயக்கமுண்டாகி உடல் முற்றும் குளிர்ந்து திடீரென்று மேலே எழும்பி, பார்ப்பவரை இரண்டு காலாலும் உதைத்தல், ஐம்பொறிகளும் தன் செயலைச் சரியாக செய்ய முடியாமை, பின்பு மயக்கமுண்டாதல், அத்துடன் சிரிப்பும் காணப்பட்டு, கபம் மிகுந்து உடல் முற்றும் வியர்வை காணப்பட்டு நடுக்கமுண்டாகி மயக்கமுறுர்.

22. நடுங்கியே மனம்பேதலித்து தலைக விழ்தல்
நற்கண்ணு மேல்சொருகி மிஞ்சிப் பார்த்தல்
அடங்கி மிக நடுவணையில் குன்ம மேறல்
திறலே சடங்கவிழ்ந்து நிமிர தாகல்
திடங்கொண்டு துகில் பொருமிக் கேறல்
சிக்கியே யறிகுறிவேர்வை விக்க லாகும்
மடமயிலே இக்குறிகள் கண்ட தானுல்
மறுகாலம் விதவித்தால் மாறு செய்தல்

உடல் முற்றும் நடுங்குவதோடு மனம் பேதலித்து தலையைக் கவிழ்ந்தவாறு கண்ணின் கருவிழி மேல் சென்று, அதிக கோபத்துடன் பார்ப்பதும், கோபம் தணிந்து முகத்தைக் கவிழ்த்து வயிற்றை இறுக்கிப் பிடிப்பது போல் காணப்பட்டு முன்னுக்கு உடலை வளைத்து நேராக நிமிர்ந்து நிற்க முடியாமல் செய்யும். பின்பு தூக்கம் காணப்பட்டு வயிறு பொருமி, சிறு வியர்வை, விக்கல் இவைகள் கண்டால் அசாத்திய குறிகள் என்று தீர்ப்பு சொல்லலாம்.

*23.* மறுகாலம் செய்திடவே தாள்வ ராமல்
மாறாமல் அதிகமுற்று கண்ட தானால்
வீறுபோகும் உயிர்களது தடைப டாமல்
வேரிழகை பிராணகலை வேறாய் நின்றால்
சர்வதொழில் பார்த்தாலும் பயனில் லாமல்
சந்தேகம் கண்டதென்றால் அறிந்து பாரு
குறுமுனிதான் சொன்னவரப் படியே சொன்னேன்
கூறறிந்து விலகிநீ அகல நில்லு

இவ்வாறிருந்து, மேலும் துர்குறி குணங்கள் கண்டால் இறந்துபோகும். இது மட்டுமல்லாமல் பிராணகலையாக உள்ள மலம், மூத்திரம், விந்து, கண்ணீர், கருவிழி போன்றவைகளின் தன்மை வேறுபட்டாலும் பிழைப்பது அரிதாகும் என்று அகத்தியர் கூறுகின்றார்.

*24.* நில்லென்ற தலங்களது உச்சி மூக்கு
நேர்கொண்ட திலர்தமறு தோளே யாகும்
வெல்லென்ற நடுவரி ஈரெட்டாம் வாரி
விசையான நேர்சுருக்கிக் கொண்டக் கொல்லி
கல்லென்ற பஞ்சவர்ணக் குகை நடுவம்
கதிர்கொண்ட வெள்ளிரல் வாரி யெல்லாம்
சொல்லென்ற தொண்டநடு பிறமே யாகும்
சுகமான பித்துக்காய் இரண்டின் பக்கம்

வர்மத்தில் முக்கியமாகக் கருதப்படும் உச்சிபாகம் திலர்த வர்மம், புஜ வர்மம், நட்டெல் வர்மம், வாரிகோகி வர்மம், நேர் வர்மம், அஸ்திசுருக்கி வர்மம், கொண்டை கொல்லி வர்மம், கதிர்காம வர்மம், கதிர் வர்மம், கைப்பூட்டு வர்மம் (நுரையீரல்) அடப்ப வர்மம், சங்குதிரி வர்மம், பிடரி வர்மம், வெல்லுறுமி, தல்லுறுமி வர்மம் (Kidney) போன்ற வர்மங்களும்,

25. பக்கமென்ற மணிபந்தம் எட்டி லமர்த்தி
 பகருஇரண்டின் பக்கம் கையுடனே காலுமாகும்
அக்கமென்ற கதலிவனம் நெருங்க லாகி
 ஆவியென்ற மூச்சடங்க ஸ்தலமில் லாமல்
சிக்கனவே மேல்கீழும் வாசி யாவல்
 திறமான வாரிமேல் எல்லு தாழ்தல்
பக்கமென்ற பூணெல் தாழ்தல் பதிந்து
 நடுவணை யசையத னடுத்த குணமேறல்

கையிலும் காலிலும் உள்ள மணிபந்த வர்மம், உறசைமான் வர்மம், மூச்சடக்கி வர்மம், சுழிமுனை வர்மம், இடகலை வர்மம், பிங்கலை வர்மம், (dislocation of the riles) - பழுக்கள் ஒன்றன் மேலே ஒன்று நழுவல் வாகென்பு கீழே இறங்குதல் (dislocation of the scapula bone), வம்சிகள் நழுவுதல் போன்ற வர்மங்களும்,

26. அசைவான நாபியது மூலம் சோர்தல்
 அதினாலே மூங்கில்வட் டம்விரிந் தென்றால்
விசையான கத்தரிக்கோல் விசையே கொள்ளல் மேல்வாசி
விசையற்று தளர்ந்து காணல் குண்டலி
 மையான கதிர்மூலம் மேல்சென்று திந்து கூட்டி
அசையாமல் நின்றசையும் விசைத ளர்ந்து
 அரைக்குக்கீழ் செத்தசவம் போலே யாகல்.

தொப்பூழ் பாகம் (umblical) மூலத்துடன் அல்லது குதத்துடன் (Anus) சேர்ந்து காண்பதும், பின்பு குதம் வெளிவருவதும் (prolapse of the rectum) கத்தரிக்கோல் போன்று

காணப்படும் இடுப்பு பாகமும், இருகால் பெருவிரல் பாகங்களும் அடிகொள்வதாலும், சுவாசநிலை தடைப்பட்டு மயக்கமுறுதல், குண்டலிப்பக்கம் காணப்படுகின்ற குய்யமுனை மேலே செல்லுவதாலும் இடுப்புப் பொருத்திற்கு கீழாக உள்ள பாகங்கள் பிணம் போன்று அசையாதிருப்பதும் போன்ற குறி குணங்கள் அசாத்தியத்திற்குரிய காரணங்களாகும்.

27. ஆகுமே இதுமுதலா குறிகள் காணும்
அறிந்துநீ கூடியது மட்டும் பாரு
பாகமாய் செய்தாலும் வகுக்கா தென்றால்
பண்பாக விலகிநீ அகல நில்லு
தோகையரே நீவதைகள் செய்தாலும் என்று
சொல்லுவா ரென்று கண்டாலும்
அகன்றுநில்லு வேகமருந் தென்றாலே செய்க்கா
தென்று வேருள்பார்க்க அறிந்து விரும்பி சொல்லே.

மேற்கண்ட குறிகுணங்கள் காணப்பட்டாலும் ஒருசில வர்ம இடங்களை கண்டு கொண்டு கை பாகங்கள் செய்தாலும், குணம் கிடைக்காவிட்டால் திட்டமாக உயிர் போய்விடும் என்று கண்டு மருத்துவம் செய்யாமல் அனுப்பிவிடுவது உத்தமமாகும்.

28. சொல்லுகிறேன் கனத்தஅடி கொண்டு அங்கம்
சேர்விசையால் அளவற்று பண்டு காணல்
வெல்லாம் அடிகொண்ட காயத் தாலே
வேகத்தில் பஞ்சகர்த்த நிலைத ளர்ந்து
பல்லுயிர்க்கும் தானாகி இருந்த நாதம்
பஞ்சரித்து நிலைபிசகி போன தாலே
அல்லுபகல் குறையதின்மேல் கூக்கு மாகில்
அவர்உயிர்க்கு தோசமில்லை அறிந்து சொல்லே

உடம்பில் பலமாக அடிகொண்டு கை கால்கள் உணர்ச்சி இல்லாமலும், ஐம்பொறிகள் தத்தம் தொழில்களைச் செய்யாமல், உயிரானது உடலைவிட்டு போகும் சமயம் கண் கருவிழியில் உணர்ச்சி இருந்தால் உயிர் பிழைத்து விடுவான்.

குண்டுமணி விலகல்

(இடுப்புப் பொருத்தில் உள்ள தொடை எலும்பு நழுவுதல்)

29. அறிவான அசைவைஎன்ற குண்டலியின் பக்கம்
அடுத்திருக்கும் குண்டுமணி விலகு மானால்
அறியாமல் காலிரண்டும் ஒன்றாய் சேர்ந்து
மடக்குறவே முட்டுரண்டும் ஒன்றாய் கட்டி
பிரியாமல் குண்டுமணி குண்டி லானால்
பிறம்போகா கச்சைவரி இறுக்கக் கட்டி
உறுதியுடன் நடுவரியில் சதுரப் பந்து
உத்தமனே தாக்கி விரல் தன்னைக் கெட்டே.

கால் நடக்கவும், ஓடவும், கீழே இருப்பதற்கும் ஆதி காரணமாக உள்ள குண்டலிப் பக்கம் அமைந்திருக்கும் தொடை எலும்பு (அனாமிகை - Innominate bone) நழுவிக் காணப்பட்டால், இருகால்களையும் பத்மாசன முறைப்படி ஒன்று சேர்த்து, இரண்டு மூட்டுக்களையும் சற்று கீழ் பாகத்தில் அமர்த்தல் செய்து, சரியானபடி கம்ச குழியில் பொருந்தும்படி செய்து, பின்பு குண்டலியின் மேல் பக்கமாக உள்ள முதுகுத் தண்டின் கீழாகக் காணப்படும்.

30. கட்டியே இந்நிலைக்கு அலைவில் லாமல்
கருதியே முறுவெண்ணெய் கதிக்கத் தாக்கு
மட்டுறவே தொன்னூறு நாளு சென்றால்
வயவெண்ணெய் தாக்குவாய் அந்த மட்டும்
திட்டமுடன் எண்ணெயிரண்டும் ஒன்றாய் சேர்த்து
செலுத்துவாய் மண்டலந்தான் செல்லு மட்டும்
மட்டாக வந்துதென்றால் நன்மை யாகும்
வழிபிசகி நிற்குமென்றால் தீமை யாமே.

நாயிருப்பு வர்மத்தில் ஒரு சதுரமான பந்து வைத்து அழுத்தம் செய்து தொடையெலும்பின் உள்பக்கமாக உள்ள பதக்களை வர்மத்தில் கட்டுப்போட வேண்டும். இவ்வாறு கட்டும்போது

பெருவிரல் கொண்டு அழுத்தமாக பதக்களை வர்மத்தைத் தாக்க வேண்டும். பின்பு 90 நாட்கள் சென்றபின் வயவெண்ணெய் தேய்த்து 41 நாட்கள் இவ்வாறு செய்தால் சுகம் கிடைக்கும். அவ்வாறு செய்யாவிட்டால் பூரண சுகம் கிடைக்காது.

**மணிபந்தம் கட்டும் முறை**

31. என்றாலோ மணிபந்தம் விலகி யாகல்
இதமெல்லாம் நொறுக்குண்டு சவ்வோ டாகல்
நன்றாக கண்விலகி யேகு மென்றால்
நலமான அஞ்சுவரி எலும்பின் பின்னே
நிறைசெய்யும் பேரெலும்போ டதனை யொப்பம்
நிசமாக புணையதனில் தாக்கிக் கொண்டு
குண்டுமணி அஞ்சுமுன்னில் பதியச் செய்து
குறிப்பான அஞ்சிரண்டு மொன்றாய் சேரே.

இரு கைகளில் அல்லது இரு கால்களில் அங்குலிகளுக்கு மேலாக உள்ள குளச்சிப்பாகம் நழுவி விடவோ அல்லது அடிகொண்டு எலும்பு ஒடிந்தாலோ, பொருத்துகள் விலகிவிட்டாலோ குளச்சிக்கு மேலாக காணப்படும் ஐந்து எலும்புகளையும், மெதுவாக கீழிருந்து மேலாக தடவல் செய்து (Massage) உள்ளங்கை, உள்ளங்கால் போன்றவற்றில் விரல் வைத்து அழுத்தம் கொடுத்து எலும்புகள் நழுவிய இடத்தில் பொருந்தச் செய்தல் வேண்டும்.

32. சேரேனு அச்சதினே பூணக் கட்டி
செருகிடும் விலகாமல் செலுத்து வைத்து
நீரதிகம் கொண்டுவனல் சேரா வண்ணம்
நிசங்கண்டு துவாரமிட்ட வழிக ளெல்லாம்
பாரதிகம் நெருங்காமல் பஞ்சி சேர்த்து
பண்பான முறிவெண்ணெய் தாரை செய்து
சீரேநீ மூன்றுநாள் கூட்டிப் பார்த்து
தொண்ணூறு நாளும் சென்றால்

பின்பு வட்டமான பத்து காசளவில் கட்டியான பந்து செய்து நழுவிய எலும்பில் அழுத்தம் கொடுத்து மேலே கொண்டு சென்று சரியானபடி தடவல் (Massage) செய்து மேல் பக்கமும், கீழ் பக்கமும் பஞ்சு வைத்து முறிவெண்ணெய் விட்டு தாரை செய்து மூன்று நாட்கள் கழித்து, கட்டை அவிழ்த்து குறி குணங்களைக் கண்டுகொண்டு, இவ்வாறு 90 நாட்கள் அவிழ்த்து, அவிழ்த்து கட்ட வேண்டும்.

33. நாள்சென்றால் உடனேவச வெண்ணெய் தாக்கு
நலமாக மண்டலமே கழிந்த பின்பு
தான்திறந்து அச்சிதனை விலகிப் போட்டு
தயவாக கையதனால் இதமும் செய்ய
வாள்முருகன் கிருபையினால் நன்மை யாகும்
வழிபிசகில் தீமைவந்து சேரும் சேரும்
நீள்வழியாய் இந்தமுறை செய்து கொண்டால்
நிலைபிசகி போகாது திடம்கண் டாயோ.

90 நாட்களும் சென்றபின்பு வசவெண்ணெய் போட்டு தடவல் (Massage) செய்ய வேண்டும். நாற்பத்தொரு நாட்கள் தடவல் செய்து கட்டுகளை அவிழ்த்து வர்ம முறைப்படி செய்தால் பூரண சுகம் கிடைக்கும். செய்யும் முறை தவறினால் சுகம் கிடைப்பது அரிது.

34. திடங்காணும் இந்தமுறை அசைவு கட்டில்
சீழிமுறிந் திட்டாலும் சவ்வற் றாலும்
அடதவறா நிலையாய் மன முறைத்து
ஆக்கையற்று போனாலும் கண்டு செய்நீ
மடமயிலே குருபாதம் மறவாய் நெஞ்சாய்
மற்றொருவர் அறியாமல் தியானம் செய்து
கடன்அலைக்க இப்படிவந் துற்ற தென்று
கருதியே மனமுறைத்து கண்டு செய்யே.

வர்மங்கொண்டு எலும்பு முறிந்தாலும், முறிந்த பாகத்தைக் கட்டும்போது கட்டு நழுவி விட்டாலும், சதைப்பாகம் வேறாக பிரிந்து, தனியாக போய்விட்டாலும், மாணவன் குருவின் பாதத்தை

மனதில் தியானம் செய்து நாம் செய்த பாவத்திற்குத் தண்டனை எனக்கருதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சிகிச்சை செய்வது நலமாகும்.

## முட்டெலும்பு நழுவுதல் (Dislocation of the Patella bone)

35. கண்டுநீ செய்திடவே இன்னு மொன்று
கடிமையடா முட்டு நகண்டிட்டால்
மண்டதான சிரட்டையது சவ்வற் றேகி
மறுபுறத்தில் சவ்வகன்று விசை
கொண்டாலோ மீள்வது யருமை யாகும்
குதிகால் நரம்பற்றால் அதுபோ லாகும்
பண்டான பெருவிரலும் அதுபோ லாகும்
பகர்ந்து துடையின் நரம்பது போலாகும்.

கால் முட்டெலும்பு (சிரட்டை) இருக்குமிடத்திலிருந்து நழுவி விட்டாலும், முட்டின் முழுப்பாகத்திலும் சுற்றி காணப்படும் சவ்வானது அறுந்து, சிரட்டை மறுபுறத்தில் போய்விட்டால் திட்டமாக சுகம் கிடைப்பது அரிதாகும். குதிகால் பக்கம் காணப்படும் நரம்பு அறுந்து வேறாக காணப்பட்டாலும், பெருவிரல் மேலாகக் காணப்படும் நரம்பு அறுந்து வேறாகக் காணப்படுவதும், தொடையின் நடுப்பாகம் மேலாகக் காணப்படும் நரம்பு அறுந்து வேறாகக் காணப்பட்டாலும் கிடைப்பது அரிதாகும்.

## மூணாற்வரி நெரிந்தால் கட்டு (Sacrul Plexus)

36. ஆகுமே மூணாற்கீழ் தாரைக்குள்
அடிகொண்டு விசைதளர்ந்து வரிநெ ரிந்தால்
வாகுபெற முறிவெண்ணெய் தாக்க செய்து
வகுப்பாக கீழ்மேலாய் அவையொட்டி
பாகமுடன் அணைவழியே கச்சை கட்டி
பதித்திறக்கி கையதினால் இதமும் செய்தால்

வேகமுடன் நொறுக்கென்பு சரியாகா விட்டால்
வேண்டியதாய் வசவெண்ணெய் தாக்கில் தீரும்.

குதத்தின் மேலாகக் காணப்படும் இடுப்புப் பொருத்தில் அடிகொண்டு பீடிகை, புச்ச எலும்புகள் ஒடிந்து வேறாகக் காணப்பட்டால் முறிவெண்ணெய் வைத்து மேல்பூச்சு செய்தல் வேண்டும். இடுப்பைச் சுற்றி துணிவைத்து கட்டிக்கொண்டு சரியான முறையில் தடவல் செய்துகொண்டு ஒடிந்த எலும்புகளைச் சரிசெய்து கொள்ள வேண்டும். ஒடிந்த எலும்புகள் ஒன்று சேராவிட்டால் வசவெண்ணெய் தடவல் செய்தால் நல்ல சுகம் கிடைக்கும்.

**நடுவரியில் வாரி பூணல்**
***(தண்டு வடத்தின் நடுப்பாகம் முறிந்தால்)***

*37.* தாக்குவாய் நடுவரியில் வாரி பூணெல்
தான்வேறாய் நடுவரியில் முறிவு கொண்டால்
போக்குயிர் மீள்வதற்கு அருமை யாகும்
பொன்னெட்டி நாலுவிரலுக் குள்ளே கொண்டு
தாக்குமே நெட்டதுவும் கவிழ்ந்து கண்டால்
தாழ்வினை பலவிதமாய் செய்திட் டாலும்
நீக்குமே உயிரதுவும் உடலை விட்டு
நிசமாக விலகிநீ அகல நில்லு.

தண்டுவடத்தின் நடுப்பாகத்தில் காணப்படும் வாரிப் பூணெலும்பு முறிந்தால் சுகம் கிடைப்பது அரிதாகும். தண்டு வடத்தின் கழுத்து பாகத்தில் காணப்படும் பொன்னெட்டி வர்மத்தில் முறிவு ஏற்பட்டால் தலைகுழைந்து வாயில் நீர் வந்தாலும் உயிரானது உடலை விட்டு திட்டமாகப் போய்விடும். எக்காரணம் கொண்டும் மேற்கூறிய குணங்கள் இருந்தால் நோயாளிக்கு வைத்தியம் செய்யாமல் விட்டு விடுவது நலமாகும்.

**கதலி வனத்தில் ஈடு**
**(நெஞ்சின் நடுப்பாகம் முறிந்தால் ஏற்படும் குறி குணங்கள்)**

38. நிசமாகும் கதலிவனத் தீடு கொண்டு
 நீளசவை முட்டியே விசவெளி யாய்
வசகேடாய் பெலனற்று வெதும்பல் தோன்று
 வாகுபெற வெருவியழல் குளிரு மாகி
கசமான கபமூர்ச்சை கண்டா யானால்
 காலனாரு டன்வருவா ரென்று நீயும்
குசமான மருந்துபல விதம்செய் தாலும்
 கூறுமுட லுயிர்விட்டு கடருந் தானே.

நெஞ்சின் நேர்பாகமாக கருதப்படும் கதலி வனத்தில் (Mid Sternum) அடிகொண்டு முறிந்தால் வாய் புலம்பல், சுரம், குளிர், கபம், மயக்கம் போன்றவை காணப்பட்டால் மருத்துவம் செய்தாலும் உயிர் பிழைப்பது அரிது.

**ஆக்கிராண பாலம்**
**(மூக்கின் நடுப்பாகம் முறிந்தால் ஏற்படும் குறிகுணங்கள்)**

39. கடருமென்ற ஆக்ராண பாலந் தன்னில்
 கனத்தடியால் குருந்தில் சோரை கண்டு
சிடம்வெதும்பி கபாலமது வீக்கம் கொண்டு
 சவ்வகன்று பலவழியாய் பேசக் கண்டால்
மடமயிலே மீள்வதற்கு அருமை யாகும்
 மருந்துபல செய்தாலும் அதிகம் கண்டால்
திடம்பேசி செய்யாதே அகன்று நின்று
 செயம்வருமோ யெப்படியோ என்று சொல்லே.

மூக்கின் நடுப்பாகத்தில் பலத்த அடிகொண்டு முறிவு ஏற்பட்டு இரத்தம் காணப்படுவதோடு உடல் முற்றும் சுரம் காணப்படுவதோடு, கபாலம் வீங்கி, வாய்புலம்பல் ஏற்பட்டால் வைத்தியம் செய்தாலும் நோயாளி பிழைப்பது அரிது.

**கபால கதலி வனம்**

***(கபாலத்தின் நடுப்பாகம் முறிவு ஏற்பட்டால் காணப்படும் குறிகுணங்கள்)***

*40.* எப்படியும் கபாலமது சதைத்து மூர்ச்சை
யேற்றிட்டு யெழுந்திருந்து மூர்ச்சை கண்டால்
அப்படியோ இப்படியோ ஆகு மென்று
ஆராய்ந்து திட்டமறிந் தகன்று செய்நீ
செப்பமுடன் கதலிவனம் பார ஈடு
சீனம்கொண்டு மூச்சடர்ந்து கவர்ச்சி கண்டால்
மப்பதிக மாய்வெகு மூர்ச்சை யானால்
மரணம்வரும் என்றுதிடம் வகுத்துச் சொல்லே.

கபாலத்தில் வேகமாக அடிகொண்டு அடிக்கடி மயக்கம் ஏற்பட்டு நீண்ட நேரம் உணர்வு வராமலிருந்தால் திட்டமாக உயிர் பிரிந்து விடும் என்று சொல்லலாம்.

**கைப்புஜம் சிப்பி தாழ்தல்**

***(தோள்பொருத்தும் வாகென்பும் நழுவினால் ஏற்படும் குறி குணங்கள்)***

*41.* சொல்லுவேன் கைப்புஜத்தில் ஈடு கொண்டு
சூட்சமாய் சிப்பியகன்று யாவோ தாழ்வோ
வல்லதீது யிரண்டிலொரு பாகங் கண்டால்
வலித்திருத்தி வைத்தாலும் முறையா தென்றால்
வெல்லுகிறேன் கால்வெண்ணெய் பதிவில் தாக்கி
விளங்கவே கையதினால் பிடித்து சேர்த்து
நில்லெனவே தலம்பதிய வைத்துக் கொண்டு
நேராக வில்லதிலே நாணப் பூட்டே.

தோள்பொருத்தில் காணப்படும் புஜவர்மத்தில் அடிகொண்டால் சிப்பி பாகமாகக் காணப்படும் வாகெலும்பு கீழே இறங்கிவிடும். நோயாளியின் அக்குள் பாகத்தில் விரல்வைத்து கட்டு வர்மத்தில் அமர்த்த சுகம் கிடைக்காமல் இருந்தால் நோயாளியை

சரிவாகப் படுக்க வைத்து மருத்துவன் கால்கொண்டு நோயாளியின் அக்குள் பாகத்தை அழுத்தி, சரியான முறையில் பதித்து வைத்துக்கொண்டு வந்து வைத்துக் கட்ட வேண்டும்.

42. பூட்டியே முன்வசத்தில் குறுக்கத் தாக்கி
போட்டிடுவாய் மற்றிதனை பதியச் செய்து
தாட்டிகமாய் மறுதோளில் தாக்கிக் கட்டி
சரியாக முன்தோளில் ஆப்பு தாக்கு
காட்டியே புயமணைத்து குறுக்கச் சுற்றிக்
கட்டிமுறி வெண்ணெய் கதிக்கத் தாக்கு
ஈட்டியே புறமுறிவில் மூன்றில் பாரு
இல்லாவிட்டால் ஐந்துநாள் கூட்டிப் பாரு.

நெஞ்சின் முன்பாகமும், முதுகின் பின்பாகமும் துணிவைத்து நன்றாக இறுக்கிப் பதியச்செய்து, மறுபக்கம் உள்ளதோள் பொருத்தில் ஒருகட்டு கட்டி பின்பு மேல் பக்கமாகச் சுற்றிக் கட்டுவதோடு முறிவெண்ணெய் மேல்பக்கம் விடுதல் வேண்டும். இவ்வாறு 5 நாட்கள் போட வேண்டும்.

43. ஐந்துநாள் கூட்டிப்பார்த் திதமே செய்து
அடவாக தொன்னூறு நாள்சென்றால்
மஞ்சவே வசவெண்ணெய் மண்ட லந்தான்
வேண்டிய தாயொட்டி பின்கை யிதம்செய்
துஞ்சலற்ற சவ்வுறைத்து பற்றிப் போகும்
சுகமாக கையதிலே பெலமும் சேரும்
நஞ்சுண்ட சிவனார்தன் னருளி னாலே
நல்வழியாய் இதிலுரைத்து நாட்டிப் பாரே.

ஐந்து நாட்கள் போட்டு தடவல் செய்து தொன்னூறு நாட்கள் இவ்வாறுசெய்ய வேண்டும். 90 நாட்கள் கழிந்த பின்பு வசவெண்ணெய் 41 நாட்கள் போட்டு வர்ம முறையில் தடவல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் நழுவிய கை புஜம் சரியான முறையில் வந்து சேருவதோடு கைக்கு நல்ல சக்தியும் கிடைக்கும்.

**கைமூட்டு விலகல்( Dislocation of Elbow Joint) (முழங்கைப் பொருத்து நழுவி காணப்பட்டால் வரும் குறிகுணங்கள்)**

44. நாட்டியே முன்கையில் பெலமு றைத்து
நன்றாக முட்டதிலே விசைதா னேற்றி
சாட்டிமுழங் கையெலும்பு முட்டை விட்டு
தானகதாகி விசைகொண்ட தென்றால் கூடியே
மூட்டுமுன் போல்செலுத் தினாலும் கூடாது
யென் றுகண்டால் சொல்லக் கேளு
ஆட்டியே கால்வெள்ளைப் பதிவில் தாக்கி
அங்கையில் பிடித்திழுக்க முன்போ லாகும்.

முன்கையில் முழங்கைப் பொருத்தில் அடிகொண்டு முழங்கை எலும்பு (ஆரை, இரத்தினி) விலகிக்காணப்பட்டால் கைவைத்து அழுத்தம் கொடுத்து சரி செய்தாலும் பொருந்தாது. அதைப் பொருத்துவதற்கு கால் வெள்ளைப்பதிவால் நோயாளியின் முழங்கையின் மேல் பகுதியில் தாக்கி, கைக்குளச்சு பாகத்தை சற்றுமேல் இழுக்க சரியான முறையில் பொருந்திவிடும்.

45. முன்போலே தாக்கியதை தாக்கி விட்டு
முடிகியே பற்றதினை பதியச் செய்து
பொன்போலே ஞாணேற்றி விசைமு டுக்கி
பொறியாக அகன்றலோடு முடிக்கல் செய்து
தன்மயம்போல் முறிவெண்ணெய் தாரை செய்து
தன்பலத்தால் முறிவெண்ணெய் தாக்கு வாய்நீ
முன்விதம்போ லாகுமடா பெலமும் காணும்
முறிவென் று பாராதே தெளிந்து பாரு

முன்கூறப்பட்ட முறைப்படிசெய்து 2 அங்குல வீதியில், 6 அங்குல நீளத்தில் ஒரு மூங்கில் துண்டு எடுத்து, அதில் துணி சுற்றி முன், பின், அக, புற பக்கங்களில் வைத்துக்கட்டி, அதன் மேல் முறிவு

எண்ணெய் தாரைசெய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் நல்ல சுகம் கிடைக்கும்.

கவளி கீறல்

46. தெளிவான கவளியது கீறல் கொண்டு
சீணமாக காலமதில் உற்று கொண்டால்
பழியாக ஒருவேளை வந்து கூடும்
பகர்ந்தஇடை பிங்கலைதான் நீங்கிக் கொண்டால்
வெளியாக முறிவெண்ணேய் கதிக்கத் தாக்கு
வேண்டியதாய் விரல்தனை மட்டாய் கட்டி
அழியாத பிடியிதமாய் செய்து கொண்டால்
அசடொரு நாளில் இல்லையடா அறிந்து செய்யே.

அங்குட்ட விரலுக்கும், தர்ச்சனி விரலுக்கும் இடைப்பட்ட பாகத்தில் காணப்படுவது கவளியாகும். இந்த கவளியில் முறிவு அல்லது கீறல் ஏற்பட்டால் சுகம் கிடைப்பது அரிது. சுவாசம் தடைப்பட்டால் அசாத்தியம். உடனே நோயாளிக்கு முறிவெண்ணெய் தாரைவிட்டு இரண்டு விரல்களையும் சரியான முறையில் வைத்துக்கொண்டு கட்டுப்போடுதல் வேண்டும், இவ்வாறு செய்வதால் திட்டமாக சுகம் பெறலாம்.

நால் விரல் மத்தி கீறல்

47. அறிந்திருந்த நால்விரலில் மத்தி கீறி
அங்கையில் வர்மமது விசைகொண் டிட்டால்
சேர்ந்திருந்த காய்ச்சலொடு குளிருங் காணும்
செயலாக வியர்வைகபம் சீதம் தோன்றும்
அறிந்திருந்த அறிவெல்லாம் குளறி பேசும்
அடவாக பலவிதமாய் கொட்டி செய்யும்
பிரிந்திடுங்காணும் ஈரலதுவும் உடலை விட்டு
பிரிந்துபோம் இந்தமுறை பேணிப் பாரே.

நான்கு விரல்களுக்கு இடைப்பட்ட பாகமாகக் காணப்படும் மத்திய பாகத்தில் வர்மமது கொண்டால் சுரம், குளிர், வியர்வை, கபம், சீதம் தோன்றும். அறிவுகுன்றி, வாய் பிதற்றல் ஏற்பட்டு பற்பல குறிகுணங்களைக் காட்டும். அதோடு உயிர் உடலைவிட்டுப் பிரிந்து போகும்.

**தோள்புசத்தில் நெட்டி தாழுதல்** (Dislocation of the shoulder joints)

48. பேணப்பா தோள்புசத்தில் நெட்டி தாழ்ந்து
பிலத்தேற தீர்ந்துகொண்டால் சொல்லக் கேளு
ஊணப்பா உடனே வில்லில் ஞாணேற்றி
உத்தமனே பிடரியின்மேல் பதியக் கட்டி
காணப்பா கமுக்கூட்டில் பந்து சேர்த்து
கதிப்பாக குறுக்கிலொரு கச்சை கட்டு
தோணப்பா முறிவெண்ணெய் கதிக்க தாக்கு
தொன்னூறு சென்றவுடன் கையித மும்செய்

தோள்பொருத்து கீழிறங்கி காணப்பட்டால் உடனே கூட்டு வர்மத்தில் பெருவிரல் கொண்டு அழுத்தம்கொடுத்தால், நோயாளி மிகவும் வேதனைக்குட்படுவதோடு நழுவிய மூட்டு ஒன்று சேர்ந்துவிடும். உடனே கூட்டு வர்மத்தில் (அக்குள்) ஒரு பந்து சேர்த்து, பிடரியின் மேலாக கழுத்தைச் சுற்றி ஒரு கட்டு போட வேண்டும். பின்பு முறிவெண்ணெய் 90 நாட்கள் போட வேண்டும்.

49. கையிதமே செய்துவச வெண்ணெய் தாக்கு
கதிப்பாக முடமதிலே ஞாணைத் தாக்கு
பதியவே முன்தோளில் இறுக்கிக் கட்டி
பதியவே முன்தோளில் ஆப்பைத் தாக்கு
வையிதுமே செய்துகொண்டால் நன்மை யாகும்
வகுப்புடனே இந்தமுறை வருத்தி செய்நீ
செய்யதுமே செய்துகொண்டால் பொருந்தி நிற்கும்
திடமாக இந்தமுறை சொன்னேன் பாரே.

*90* நாட்கள் சென்றவுடன் வசவெண்ணெய் தடவுதல் வேண்டும். பின்பு முன்தோளில் ஒரு துணியைச்சுற்றி அக்குளின் கீழாக பொருந்தச்செய்து மார்பின் முன்பக்கம் கொண்டுவந்து ஒரு கட்டு கட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் நன்மை பயக்கும்.

**வாரி எல்லு முறிந்தால்**
***(விலா எலும்பு முறிந்தால்)***

*50.* பார்த்திடவே வாரிஎல்லு முறிந்து தாழ்ந்தால்
பதியாக நிர்ப்பதிலே குழியைத் தோண்டி
சேர்த்திடுவாய் முறிதலத்தை குழி நடுவில்
சேரவே மறுதலத்தை நிரப்பில் தாக்கி
போர்த்திடுவாய் யிருபுறமும் ஒட்டி நிற்க
பொன்மைபோல் மேல்மறுத்து சேருங் கண்டாய்
ஆர்த்தவிதம் அறிந்துடனே பற்றை யிட்டு
அறிவான முறிவெண்ணெய் தாக்கத் தீரும்.

விலாஎலும்பு முறிந்தால் கீழ் நோக்கமாக காணப்பட்டால், ஒரு சமமான இடத்தில் குழிதோண்டி, விலாவில் எந்த எலும்பு முறிவுபட்டிருக்கின்றதோ, அப்பாகம் குழியின் நடுவே இருக்கும்படி செய்து, முறிவுபட்ட பாகத்தின்மேல் பாகத்தை அழுத்தம் கொடுத்து கொண்டால் சரியான முறையில் எலும்பு சேரும். பின்பு முறிவெண்ணெய் தாரையிட்டு வந்தால் சுகம் கிடைக்கும்.

**பூணெலும்பு உள்ளே தாழல்**

*51.* தாக்கிய எண்ணையது குறைவில் லாமல்
தன்கையால் யிதம்செய்ய சுகமே காணும்
ஊக்கமுடன் உள்ளே தாழ்வு உண்டாகி
முறிந்தவுட னேதாழ்ந் தாகில்
ஆக்கமுடன் முன்போல அடவு செய்து
அணைத்திருத்தி மறுபுறத்தை நெருக்கிப் பாரு
நீக்கமுடன் சேருமிது முன்பக் கத்தில்
நிசம்கண்டு செய்துவிட முன்போ லாகும்.

நெஞ்செலும்பானது முறிந்து உள்ளே தாழ்ந்தால் உடனே முன்பே கூறின முறைப்படி செய்து, இதற்கு எதிர்பக்கம் தடவல் செய்து, நோயாளனை மருத்துவனின் அருகாமையில் சேர்த்திருத்தி, மறுபுறத்தில் அழுத்தம் கொடுக்க சுகம் கிடைக்கும்.

52. ஏகியே அனதிலகம் அகல மாகி
இதம்பிழைத்து சுட்டியே நின்று கொண்டால்
வாகுபெற வசவெண்ணெய் புறமும் உள்ளும்
வார்த்துபின் அகலசவ் வகற்றி நிக்க
தோகையரே முன்போல ஆடி நிற்கும்
சுகமாகு குருவருளை நாடி செய்தால்
ஆகுமடா நீநினைத்து அவரி டத்தில்
அன்புகாட்ட பொருள் அளிப்பா ரின்மேல்.

பின்பு உடலில் சுரம் காணப்பட்டால் வசவெண்ணெய் உள்ளேயும் கொடுத்து, வெளியிலும் போட நல்ல சுகம் கிடைக்கும்.

எலும்புகள் முறிந்தால் உள்செலுத்த

53. அருளான எலும்புமுறிந்து வெளிவிட் டேகி
அளந்தெறிய ஆறுவிரல் கதிக்கக் கண்டால்
வெருளாக இருந்தாலும் நிசமா காது
வெளிப்பட்ட துள்செலுத்த செல்லா தென்றால்
மருளாமல் குறுக்கினதை அளந்து கொண்டு
மாத்திரையாய் மாங்கிசத்தை கீறிப் பின்னே
பொருளாக உள்செலுத்தி வைக்க வென்றால்
பொறியான தலங்களிலே படுமென் றாலோ.

எலும்பு முறிந்து தோலுக்கு வெளியே அறுவிரல் அளவு நீட்டிக்கொண்டிருந்தால் அது அசாத்தியமாகும். வெளிப்பட்ட எலும்பை உட்செலுத்த, அது உள்ளே செல்லாமல் இருந்தால் அதனுடைய இடைப்பட்ட பாகத்தை அளந்துகொண்டு சற்று கீறி உட்செலுத்தி வைக்கும் போது,

54. படுகாயங்க ளல்லாமல் நீக்கி.....
பண்பாகி கீறியதை உள்ளே தாக்க
நடுவான காயமது முறித லத்தில்
நன்றாக விரணமுற்ற இடங்க ளெல்லாம்
வடுவதிகம் சேராமல் இடை வருத்தி
வழிகண்டு கெட்டதிகம் நெடுங்கா வண்ணம்
நடுவரியாம் இடைபின்னில் அலவு வழியாய்
இதில் நெருங்கி பற்றி டாமல் .

காயங்களோடு விரணங்களோ ஏற்படாமலும், எலும்புகள் ஒன்றோடொன்று அழுத்தம் கொள்ளாமலும், அதற்கான வழிகளைக் கண்டு எலும்பை உட்செலுத்த வேண்டும்.

55. பற்றாமல் அற்றசைவு விலகி டாமல்
பதித்திருக்க முறிவெண்ணெய் உள்ளே தாக்கி
மற்றான இடங்களிலே எண்ணெய் செல்ல
வழிகண்டு முறிகாயம் மாறி யானால்
வெற்றன வசவெண்ணெய் காலங் கண்டு
வேண்டியதாய் செலுத்திமிக கையிதம் செய்
தெற்றாமல் தீருமடா கொடிய காயம்
திரைசூழும் புவனமெல்லாம் தெளியுந் தானே.

உள்ளே செலுத்திய என்பு இடம் பெயராமல், முறிவெண்ணெய் உள்ளேயும் கொடுத்து, காயத்தினுள் இறங்கும்படியான வழிகளையும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்து, முறிவு ஏற்பட்ட விரணங்களெல்லாம் மாறிய பின்பு, வசவெண்ணெய் வேண்டிய அளவுகொண்டு தடவல் செய்தால், எப்படிப்பட்ட காயங்களும் தீரும் என்று தெளிவாய் சொல்லலாம்.

**பீச விரை மேலேறி வலமிடமுற்றால்**

56. தெளிவான பீசவித்து மேலேறி
திசைபிசகி வலமிடமாய் நின்று கொண்டால்
வழியான துறைகளெல்லாம் பார்த்தா லுந்தான்

வந்திறங்கிட்டால் ஒன் று கேளு
தெளிவான மேல்புறத்தின் பக்கம் பற்றி
யிரண்டுகை நெட்டி விரலால் பிடித்து
குழியான மேல்குழியில் பெருவிரலால்
குத்திறக்கி அசைத்தெடுத்துக் கொண்டுசென் று.

57. சென் றுகொண்டு விட்டுநீ முன்த லத்தில்
சேர்கத்தரிக் கோல் போலே கட்டு
நின்றோடு நீர்களெல்லாம் மிஞ்சுண்டி பின்னே
நிசங்கண்டு நீர்நி லைத்து
நின்றிடாமல் ஒன்றாகும் ஔசதத்தை
செய்திடும்நீ அதுஉறைத்தால் மீளா ஒன் றும்
நின்றாடும் குருபரனை நினைத்துக் கொண்டு
நினைவுகெட்டுப் போகாமல் தியானம் செய்யே.

58. தியானமான மதைமனது வார்வாத வண்ணம்
செபித்திடவே பரமகுரு வருளி னாலே
செய்உனக்கு தந்தவரம் அளித்து நிற்பார்
செய்வதெல்லாம் பலிதமாய் வாய்க்கும் பாரு
காயமாக கண்காணா திருந்திட் டாலும்
கண்ணான அருள்மனம்உன் கண்ணால் காணும்
நயமாக இவ்வழியே முன்னிட்டு செய்
நமன்வரினும் பயமில்லை நளினம் பாரே

பீசமானது அடி கொள்வதனால் மேலேறி வலமிடமாக நின் று கொண்டால், எத்துணை முயற்சிக்குப் பின்னும் தன்னிடத்திற்கு வராவிடில், மேல்புறம் பற்றி பெருவிரல் இரண்டினாலும் அழுத்தி மேல்க்குழி (வஞ்சன காதம்) வழியாக அசைத்து இறக்கிக் கொண்டு சேர்க்கவேண்டும். பின் கத்தரிக்கோல் மாறலாக கச்சையினால் சுற்றிக் கட்டுப் போட வேண்டும்.

**உச்சி நடுவு முறிவு**

59. நளினமென்ற உச்சிதனில் பாரே ஈடு
நன்றாக அதிகைத்துள் முறிவு கொண்டால்
வெளியான ஈரஈ டென்றால் கேளு
விதமான மாத்திரைக்கு மிஞ்சி கொண்டால்
வெளியாக அதனடுத்த ஸ்தலத்தைக் கண்டு
வேகித்து நடுக்க முற்று செம்மிக் கேட்க
அழிவுகண்டு பாகமாய் செய் து கொண்டால்
அடுக்காது என்றுகண்டால் அகன்று நீங்கே.

60. நீங்கிடுநீ படுவர்மம் பதினெட்டுக்கும்
நிலையான தொடு வர்மம் தொண்ணூற்றாறும்
வாங்குகின்ற ஸ்தலங்களெல்லாம் அறிந்து போகும்
வகையறிந்து செய்தாலோ நன்மை யாகும்
ஆங்குகின்ற யிடகலையும் சுழிமுனையும்
அறிந்தெனெல் விழியறிந்து தேர்ந்து செய்தால்
பாங்குபெறும் இவ்வழிக ளெல்லாம் வேறு
பலவழி கண்டா தொன்று கூறே

உச்சிதலத்தில் என்பு முறிவு ஏற்பட்டு, முறிவுகள் ஒன்றுக்கொன்று நெருங்கி செம்மிக்கொண்டால் குணப்படுத்துவது கடினமாகும்.

ஒடி முறிவு மருத்துவம் செய்பவர்கள் படுவர்மம் 18-யும், தொடு வர்மத் தலங்கள் 96-யும், மேலும் சரநிலையையும், இட, பிங்கலை, சுழிமுனை முதலிய அமிர்த நிலைகள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். இவற்றைத் தெரிந்தவர்களே இந்நூல் முறைகளைக் கொண்டு எல்லா வகையான ஒடி முறிவுகளையும் மருத்துவம் செய்ய முடியும் என்று இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

கலை பனிரண்டின் விபரம்

61. கூறாத ஈரா று கலையின் மார்க்கம்
கூறுகிலோ வெளியாகி ஒளியும் கா ணும்
ஈரான கலைநா லும் பரத்தின் கூறும்
இதனடுத்த நா லுகலை சக்திகூறும்
வகுப்பான பரமகுரு தீப மானார்
வேறான சீவகலைதான் வாசி யாச்சு
வெளியான சக்திகலை வன்னி யாச்சு.

62. வன்னியென்ற சக்தியவள் தாயு மானாள்
வகுப்பான சீவகலைதான் தந்தை யாச்சு
சென்னியென்ற தீபபரம் நாத மானால்
செழிப்பான சீவகலை தந்தை யாச்சு
உன்னிநின்ற சீவகலை தானுருவ மாச்சு
உறப்பான சக்திகலை உடலு மாச்சு
கன்னியென்ற தாயவளும் சலத்தி லானாள்
கதிப்பான சலமதும் மண்ணி லாச்சு.

63. ஆச்சுதே மண்ண துவும் மாண்ட தாச்சு
அண்டமென்ற பிரமதலம் பாத்தி யாச்சு
ஆச்சுதே பரந்தானாய் நின்ற வானும்
வழுவாத யோனிநால் தோற்ற மேழும்
நீச்சுவாய் அதினும் பிறம்ப தாகி
நிற்றணுவும் அணுவான நிகரில் லானே
ஆச்சரியம் உணர்ந்து மனமுருகும் போ து
அறியாத தொன் றுனக்கு தோன்றி டாதே.

குறி அறிதல்

64. தோன்றிடா தென் றுசொன்ன வகையை நீயும்
தொகுப்பாக ஆராய்ந்து தலத்தை தேர்ந்து
கூறுகின்ற மயக்கமதை பனியைப் பாரு
குறிப்பான காயமதால் கபத்தைப் பாரு

வேண்டுகின்ற சீதமது வியர்வை தன்னை
விரண்டோடும் சுவாசத்தை விரைவில் பாரு
பூண்டிருந்த அறுபதினை திட்டம் பாரு
புகழான கதிமதியான் பலத்தைப் பாரு.

தோன்றிடாதென்ற வகையைத் தொகுப்பாக ஆராய்ந்து வர்மத்தலங்களை அறிந்து கொண்டு, மயக்கம், கபம், சீதம், வியர்வை, சுவாசம் முதலிய குறிகுணங்களை உடனடியாக கண்டறிய வேண்டும். பின் சுவாச நிலையையும் ஆராய்ந்து, அவனது உடல் இயங்கும் தன்மையையும் கண்டு கொள்ள வேண்டும்.

**நாடிகள்**

65. ஈரெண்டால் நாடியேநீ ஆய்ந்து பாரு
பருவமாய் தசநாடி தன்னைப் பாரு
கூறென்றால் கபநாடி பித்த வாதம்
கூன்றிருக்கும் குருநாடி தன்னைப் பாரு
சீரென்ற வாதமது மிஞ்சி கொண்டால்
தீரும்பாத தலமதிகம் தீர்ந்து ரைக்கும்
வேரென்ற பித்தமது மிஞ்சி கண்டால்
வெகுளாமல் கண்டமுதல் அஸ்தி மட்டாம்.

நாடிகளை ஆராய்ந்து தச நாடிகளின் நிலையை நன்கு அறிய வேண்டும். கப, பித்த, வாத நாடிகள் தன் நிலையில் உள்ளனவா அல்ல தன்னிலையை விட்டு கூடியோ, குறைந்தோ உள்ளதா வென்று அறிய வேண்டும். வாத நாடியானது தன்னளவில் மிகுந்திருப்பின் அதைச் சமநிலைப்படுத்துவது சாத்தியமாகும். பித்தம் தன்னளவில் மிகுந்திருப்பின் கண்டத்திலிருந்து இடுப்பு வரை உள்ள பகுதிகளில் வர்மம் கொண்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

66. மட்டுவிட்டு சிலேர்ப்பணம்தான் மிஞ்சிக் கண்டால்
வகையான கண்டமுதல் கேச மட்டாம்
விட்டிரண்டு நாடியென்ற இசையு மாகில்
விசையாக இரண்டு தலத்திடு காணும்

கட்டுவிட்டு மூன்றுமொன்றாய் தொந்திப் பானால்
கபவேர்வை சீதமுடன் சன்னி மூர்ச்சை
மட்டுவிட்டு தப்பியது காய மேறும்
வழிசெலுத்து கூடியது மட்டும் பாரே.

சிலேற்பனமானது மிஞ்சிக்கண்டால் கண்டம் முதல் கேசம் வரையிலான பகுதியில் வர்மம் கொண்டிருக்கலாம் என ஊகிக்கலாம். ஏதாவது இருநாடிகள் மாத்திரையில் கலந்திருக்குமானால் இருபக்கத்திலும் வர்மம் கண்டிருக்கலாம் என்றும், மூன்று நாடிகளும் தொந்தித்திருக்குமானால் கபம், வியர்வை, சீதமுடன் சன்னி, மூர்ச்சையும் காணும்.

67. கூடியது மூன்றுமொன்றாய் பதுங்கி னாலும்
குதிகொண்டு சாடியது மோதி னாலும்
ஆடிநின்ற பித்தமது நிலைவிட் டாலோ
அதினாலே அவகுறிவந் தணுகும் பாரு
தேடிநின்ற வாதமதில் சிலேர்ப்பம் கூடி
தொந்தித்ததாய் கபவியர்வை விக்கல் தோன்றும்
ஓடிநின்ற சிலேர்ப்பனத்தில் வாதம் கூட
உற்றாலே பலநோய்கள் உறுதி சேரும்

வாத, பித்த கபமானது ஒருங்கே குறைந்தாலோ அல்லது மூன்றும் ஒரே காலத்தில் அதிகரித்தாலோ, பித்தமானது தனது நிலையில் பிறழ்ந்தாலோ அவகுறிகள் தோன்றும். வாதத்தில் கபம் கூடி தொந்தித்து நின்றால் கபம் அதிகரிப்பதோடு வியர்வை, விக்கல் முதலிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். கபத்தில் வாதம் தொந்தித்திருந்தால் பல நோய்கள் உறுதியாய் வந்துசேரும்.

68. உறுதியென்ற வாதமதில் சிலேர்ப்பம் சேருதல்
உறப்பான பித்தத்தில் வாதம் சேருதல்
இறுதியுள்ள கபமதனில் பித்தம் சேருதல்
இடிந்தகபம் பித்தத்தில் உற்று சேருதல்

குறியிதுகள் கண்டாலே மருந்து செய்நீ
குணமான பித்தநிலை குலைந்திட் டாலோ
அறிவான உயிரதுவும் அம்ப ரத்தில்
பறக்கும் வகை யறிந்து பாரே.

வாதத்தில் கபம் சேர்ந்தாலோ பித்தத்தில் வாதம் சேர்நதாலோ கபத்தில் பித்தம் சேர்ந்தாலோ கபம் பித்தத்தில் சேர்ந்தாலோ உண்டாகும் குறிகுணங்கள் காணப்படின் மருத்துவத்தின் மூலம் அதைத் தன் நிலைக்குக் கொணர்தல் சாத்தியமாகும். ஆனால் பித்தமானது தன் நிலையில் சீர் குலைந்திருப்பின் அதைச்சமநிலைப்படுத்துவது அசாத்தியமாகும்.

69. பொக்கிநின்ற நாடியது பின்பக் கத்தில்
புகழா விலகியது நடக்கு மாகில்
மிக்கநின்ற பனிவெதுப்பு கிறக்க மூர்ச்சை
மிகுப்பான தன்பாகம் அழலும் காணும்
புக்குநின்ற நாடியது பின்பக் கத்தில்
தோன்றநிலை கண்டாலோ மரண மாகும்
சுக்கிலத்தின் விசைநரம்பின் வழியே சென்று
தோன்றிநிற்கும் கையில்வரை மயக்கம் காணும்.

70. மயங்கிநின்ற நாடியது கபத்தி லுற்று
மாறியே கரையேறி சாடி மோதி
பங்கிலே சமுற்றதிக கடின மூர்ச்சை
பரந்தேறி சன்னிகபம் விக்கல் தோன்றும்
நயமாக மருந்து பலவிதம் செய்தாலும்
நாடியே அதிகமுற்று மிஞ்சிக் கண்டால்
ஜெயமவர்க்கு ஒருபோதும் மீளா தென்று
செப்பினார் மலைமுனிவர் செகத்துள் ளோர்க்கே.

71. உள்ளபடி வாதமொரு பங்க தாகி
உற்ற பித்தமாம் அரைபங்கு சிலேர்ப்பனம் காலாகும்
கள்ளமற்று நடைகொண்டால் வினையொன் றில்லை
கண்டுகொள்ளு வன்னியது மிஞ்சிக் கொண்டால்

பள்ளமேடு இல்லாத வண்ணம் திருத்தல் செய்து
இங்குபெற முப்பொருளா ராய்ந்து கொண்டு
விள்ளுகின்ற கபநாடி வன்னி வாதம்
மிகுந்திருக்கும் நாடிவட்ட நாடி காணே.

72. வட்டமடா மூலமென்ற குண்ட லிக்குள்
வகுத்திருக்கும் சிவகலை மேலே சாடி
விட்டதினால் பஞ்சவர்ண கூடு தாண்டி
மேலாறு கோணநவ கோண தாண்டி
அட்டதிசை யூடாடி முனையில் சாய்ந்து
அம்பரத்தில் புக்கிமிக அடங்கி நின்று
கட்டாத காளையிட அதனைக் கட்ட
கதிர்திரைக்குள் சந்திரனைக் காட்டிப் பாரு.

## இடகலை நாடியின் நிலை

73. கட்டிநின்ற இடகலையின் மார்க்கம் கேளு
கருதிநின்ற வலக்காலில் பெருவிரலில்
தொட்டுநின்ற குதிகாலில் விசைகொண் டேகி
தொடுத்துநின்ற கத்தரிக்கோல் விசையில் புக்கி
மட்டுறவே இடதுபக்கம் சார்ந்து கொண்டு
வகுப்பான செவிக்குற்றி மேல்பக் கத்தில்
திட்டமுடன் சுற்றி அந்த பிடரி புக்கி
திடமாக இடது கரத்துள் ளாடும்.

இடகலைநாடியானது வலக்காலில் பெருவிரலின் நின்று, குதிகால்வழியாக விசைகொண்டேகி கத்தரிக்தோல் மாறலாக, இடதுபக்கம் சாய்ந்து சென்று பிடரிவழியாக இடதுகாதுக்குள் புகும்.

## பிங்கலை நாடியின் நிலை

74. ஊடாடி அசைவாய் நிற்கும் வழியு மாகி
உள்ளசைவை ஆக்கிராண வழியே சாடும்
கூடாத பின்கலைதான் இடது காலில்

குதிகொள்ளும் பெருவிரலில் குதியி லூற்று
ஆடாத கத்தரிக்கோல் விசையில் நின்று
அணிந்திளகி வலதுபக் கத்துள் ளாடி
நாடாத கபாலமதை சுற்றி மீளா
நளினமுடன் மணிபந்த அசைவு கட்டில்

பிங்கலையானது இடதுகாலில் பெருவிரலின்றும் எழுந்து குதிகால்வழியாக மேலேறி கத்தரிக்கோல் மாறலாக மூலாதாரத்தைக்கடந்து கசேருக்கொடி வழியாக வலப்பக்கமாகி கபாலத்தைச் சுற்றி நாசியை வந்தடையும்.

சுழிமுனைநாடியின் நிலை

75. அசைவைவழி கட்டுண்டு பெருவிரலைத் தொட்டு
அணிந்திருக்கும் பிங்கலையை ஒன்றித்துப் பாரு
நிசமான சுழிமுனைதான் மூலக் குய்யம்
நின்றிலங்கும் கத்தரிக்கோல் நடுவே யுற்று
வசமான நறுக்கெலும்பின் முன்பக் கத்தில்
வகுத்திருக்கும் நடுத்தாரை வழியேறி
குசமாக மதிவளரும் ஸ்தலத்தில் புக்கி
குய்யமுனை யாய்நிற்கும் குதித்துப் பாரே.

சுழிமுனை நாடியானது மூலத்திலே நின்றிலங்கி, கசேறுக்கொடிவழியேறி கத்தரிக்கோல் நடுவேநின்று மூளையின்வழி நாசிமுனையைச் சென்றடையும்.

வர்மங்கொண்டு மயங்கிடும் விபரம்

76. குறிப்பான காலமது கொள்ளும் போது
கூன்நடனம் புரியும்விசை தளர்ந்து
மதிப்பான நாதவிசை விட்டேகி
மாறிநின்ற பிராணகலை சிக்கல் கொண்டு
பொறியான பஞ்சகர்த்த நிலைதளர்ந்து
போனதினால் அறிவாய்ந்து மயங்கி பின்னும்

மறுத்துவந்தே பிராணகலை நாசி முனைமுட்டி
மட்டுறவே நின்றதினால் உணர்வுண் டாமே.

வர்மம் கொண்ட காலத்து, நோயாளி தன் நினைவின்றி, ஐம்பொறிகளின் நிலை தளர்ந்து அறிவும் குன்றி புலம்பி நிற்பான். பிராணகலையானது தன்னளவிலே நாசிமுனையில் நிற்கும்போது உணர்வுண்டாகும்.

77. உணர்வாக சொன்னவழி தன்னைத் தேர்ந்து
உரையாத வழிகளையு மாய்ந்து கொண்டு
பிணவான பலனுணர்வாய் செய்து
புகலாத பாதைகளை செய்வாய் தேறி
குணமாக சொன்னவழி யல்லால் வேறு
குறிதலத்தில் அடிகாயம் கொள்ளு மானால்
சினமான இருவழியும் ஆய்ந்து கொண்டு
செய்திடுநீ மறுகாலம் செகத்துள் ளோர்க்கு.

மருத்துவம் செய்பவன் இந்நூலிலே சொன்ன வழிகளையும் சொல்லாத வழிமுறைகளையும் பல நூல்களில் ஆராய்ந்து, நூலில் சொல்லப்படாத தலங்களிலும் முறிவு, அடிகாயம் கொள்ளுமானால் இந்நூலில் கூறியிருப்பதைக்கொண்டு கூறப்படாதவற்றை ஊகித்தும் வேறு நூற்களில் ஆராய்ந்தறிந்தும் மருத்துவம் செய்ய வேண்டும்.

**காலம்கொண்டால் குணங்கள்**

78. காலமதுகொண் டெழும்போது கடின முற்று
கொண்ட தென்றால் குணங்கள் மாறும்
சீலமுடன் ஒத்தபடி கொள்ளா தென்றால்
சினமாக மெதுவான குறிகள் தோன்றும்
ஆலவிஷம் போலக் கண்டால்
அமர்த்தினால் மாறாத குணங்கள் கண்டால்
ஞாலமதி லொருபோதும் மீளா தென்று
நாட்டினார் மலைமுனிவர் நாட்டுள் ளோர்க்கே.

79. நகரான உலகமதில் வாழு மந்த
நவராத சூட்சமதை ஆய்ந்து தேறி
சுகமான நன்மைதீமை அறிய வல்லான்
அறிந்தவாதை தனைப கைத்து
சுகிர்தமற்ற அகமறிய ஆங்காரங் கொண்டு
பேசும் வரமறியா அசடர் தம்மை
சுகமாக எண்ணினதால் ஆபத்து வந்து
அறுகாமல் அவரிடத்தில் சாருந் தானே.

80. தானேதா னொருநாளும் அம்ப ரத்தை
காணாததன் குருவென்று அறிந்தவரை சார்ந்து நில்லான்
ஊனேதா னொருநாளும் உயிருக் கானால்
உயிருணர்வு கூடுமடா ஒன் று காணான்
கோனேதான் நின்றநிலை வழியும் காணான்
குவலையத்தில் யாருமே எதிரில்லை என்பான்
நானேநா னென் றுசொல்லி பொருளை வாங்கி
நானிலத்தி லுள்ளவனை நவளிப் பானே.

பல தானங்களிலும் ஒரேகாலத்தில் ஈடுகொள்வதால் காணப்படும் பற்பல குறிகுணங்கள் மருத்துவத்திற்கு கடினமானதாகும். குறிகுணங்கள் விஷம்போல நொடிக்குநொடி அதிகரித்தாலும் அமர்த்தினால் அமராத குறிகுணங்கள் கண்டாலும் ஒருபோதும் குணமாகாதென் று அகத்தியனார் கூறியுள்ளார்.

உலகில் வாழும் மாந்தர்கள் சூட்சமென்ற வர்மநூலை ஆய்ந்துதேறி அறியாமையால் நன்மை தீமை அறியவல்ல அறிவுள்ளோரைப் பகைத்து மனத்திலே ஆங்காரங்கொண்டு பேசுகின்ற, ஆண்டவனை அறியாத அசடர்களோடு உறவுகொண்டால் ஆபத்தை அடைவார்கள்.

தானாக ஒருநாளும் ஆண்டவனை அடையும் வழியைப்பற்றி சிந்தனை செய்யாமலும் குருவென்று கொண்டவரை எப்போதுமே சார்ந்து நில்லாமலும் உயிர்நிலையையும் உயிர் உணர்வுகூடும் தலத்தையும் காணாதவன், உலகத்திலே என்னை யாரும் எதிர்க்க

முடியாது என்ற ‘ நான் ’ என்னும் ஆணவத்தில் உலகில் உள்ளார்க்கு பொருள் வாங்கி நூலையீந்தும் பாவம் கொள்வான்.

**ஸ்தலங்களின் உபதேசம்**

81. உள்ளபடி நூற்றெட்டு ஸ்தலங் களாகும்
உணர்வாகும் அத்தலங்கள் உயிரு மாகும்
கள்ளமுற்றால் ஸ்தலங்கள் பிணியு மாகும்
கள்ளமகற்ற சுகமும் காணும்
உள்ளுணர்ந்த அத்தலங்கள் வாசி யேறல்
உற்றதினால் ஸ்தலங்கள் உறுதி சேரும்
உள்ளபடி போல்தலங்கள் கண்ட பேர்க்கு
புகலார்கள் எல்லோரும் புவியிலுள் ளோர்க்கே.

உள்ளபடியே கூறப்பட்ட 108 தலங்களும் உணர்வும் உயிரும் கூடுகின்ற இடமாகும். ஈடுகொண்டால் அத்தலங்கள் பிணியுமாகும். இளக்கும் முறையினால் அவை சுகமும் காணும். உள்ளுணர்வான அறியக்கூடியதான இத்தலங்கள் பிராணன் நிலைகொள்ளும்போது உறுதிபெறும். உள்ளபடியே இத்தலங்களை உள்ளுணர்வால் அறிந்துகொண்டவர்கள் புவியிலுள்ளவர்களுக்கு இதைச் சொல்ல மாட்டார்கள்.

**வர்மங்களில் மாத்திரை மிஞ்சிக்கொண்டால் வரும் குறி**

82. அகலாது தலங்களது மாத்தி ரைக்கு
புகழ்பெறவே மிஞ்சியது கொண்ட தென்றால்
நிகழாமல் சாத்தியமாய் வந்து சேரும்
நின்றஸ்தலத் துள்முறிவு கொள்ளு மானால்
சுகம்பெறவே ஒருபோதும் மீளா தாகும்
சுழியிடைபின் நடுவழியே காய மேறும்
அகமறியாத ஆங்காரம் கொண்டு பேசில்
அசாத்தியமாய் முடியுமது அறிந்து பாரே.

83. முடிவான இத்தலங்கள் எல்லாம் வேறே
முன்பின்னாய் முறையீடு சதவு வெட்டு
அடியான குத்துடனே மொழிவிட் டேகல்
அசைவற்றல் சவ்வகன்றல் ஆக்கைத் தென்றால்
கொடிதான ஆக்கைகுன்னல் நீர்கொள்ளல்
கூன்றவிசை நரம்பு தளர்ந்திடுத லாகல்
வெடிகாயம் உள்ளுடவு மொழிசெருமல்
வேறுபட்டு பலவிதமாய் நின்று கொள்ளல்.

வர்மத்தலங்களில் மாத்திரைக்கு அதிக அளவில் ஈடுகொண்டதென்றாலும், அத்தலங்களிலே முறிவு ஏற்படுமானாலும் மீள்வது கடினமாகும். இதை அறியாதோர் ஆங்காரங்கொண்டு சாத்தியம் எனக்கூறி சிகிச்சை செய்ய முற்படினும் அசாத்தியமாகும்.

சொல்லப்பட்டுள்ள 108 தலங்களில் முறையான மாத்திரையில் ஈடு அல்லாமல் சிதைவு, வெட்டு, அடி, குத்து காரணமாக பொருத்துகள் விலகல், உணர்வற்றுப் போதல், சவ்வகன்று உறுப்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளல் இவை காரணமாக உடல் குன்றிப் போதல், பாதிக்கப்பட்ட தலத்தில் நீர் கோர்த்துக் கொள்ளல், விசை நரம்பு தளர்தல், உள்காயம், உள்முறிவு போன்றவை ஏற்படும்.

**காலங்கொண்டு நோயில் புகுதல்**

84. கொள்ளவே இதுமுதலாய் பலவ கைக்கும்
குணமாக பரமகுரு வருளை வேண்டி
மெள்ளவே கொண்டுற்ற விதங்க ளாய்ந்து
வெகுளியற்று மனக்கண்ணை திறந்து கொண்டு
பள்ளமேடு இறங்கியே ஏறிக் கொண்டு
பக்குவமாய் முன்சொன்ன பாதை நீக்கி
விள்ளாத பாதைவழி ஏகி மீழா
மிதமாக அவயத்தின் வாறு காணே.

85. வாறுகண்டு புனைதாக்கி கெட்டும் வைப்பும்
வகையான நெடுகலொடு அகற்றல் கண்டு
ஈறுமுதல் நடுவான இட்ங்கள் கண்டு
இடமல்லா தலங்களிலே புனைகள் கண்டு
தேறுதலாய் மனக்கண்ணை திறந்து கண்டு
தெற்றாக வந்ததென்றால் மாறக் கொண்டு
கூறுகண்டு வழியறிந்து செய்து பார்த்தால்
குணமாக காணுமிகு குருவி னானே.

86. குருவான பரமகுரு அருளி னாலே
கூண்டவர்மம் கொண்டவரை சென்று கண்டால்
தருவாகி மட்டாகி கொண்ட தென்றால்
சாற்றரிய குணங்காணும் இளக்க மானால்
மெருளாமல் இளக்கமாய் குறிகள் காணும்
வேற்றுமையாய் மாத்திரைக்கு மிஞ்சிக் கொண்டால்
பொருளான குறிகளெல்லாம் பேத மாகி
போதமது வேகமதாய் மாற்றிக் கொள்ளும்.

87. கொள்ளுமே அத்தலங்கள் முறிவு கொள்ளில்
குணங்களற்று அவகுறிகள் காணும் பாரு
விள்ளுமே துர்குறிகள் மிஞ்சிக் கொண்டால்
விதமாக சாத்தியமாமென்று அறிந்து கொள்ளு
கள்ளமாய் குறிகளதும் உருட்டல் கண்டால்
கடிகைநா ளிதனையென்ற அவதி சொல்லு
தள்ளுகிற வழியறிந்து பாகம் செய்தால்
சினத்துடனே அபத்தங்கள் அணுகா தென்றே.

89. மிஞ்சிடவே காற்றோடு தீயுங் கூட்டி
மிகுப்பான சுழிமுனையில் விசைதான் கொண்டால்
தஞ்சமில்லை ஒருபோதும் மீளா தப்பா
சாற்றுகிறேன் காலமது வன்னி யென்றால்
துஞ்சளற்று ஆறாண்டுக் குள்ளே மூன்றும்
துருசமாய் சேர்ந்துவிசை கொள்ளும் பாரு

அஞ்சலுற காலமது வாசி யானால்
அதனாலே மூவாண்டுக் குள்ளே சாவாம்.

90. சாவாரும் மிஞ்சாமல் கொள்ளு மென்றால்
தப்பாமல் இந்தமுறை சரியாய் காணும்
பூவாகி இருப்பாகி கொண்டு தென்றால்
புகலுவேன் ஒன்றேயன்று அறிந்து கொள்ளு
மேவாகி அதிகமுற்றால் அரேய ரைக்கால்
மேதினியோர் இந்த்முறை மெய்யாய்ப் பாரு
ஆவலுடன் மிஞ்சியது வழிய றிந்து
அன்புடனே கூடியது மட்டும் பாரு.

91. பாரேநீ அக்கினியில் ஊற்றுக் கொள்ளில்
பதிவான சாலமது தண்ணீ ரானால்
சேரமூ வா றுதிங்கள் சென்ற போது
சினமாக அக்கினியி லுற்றுக் கொண்டு
வாரேநீ வாசியது கூடி புக்கில்
வளமாகவும் மூன் று திங்கள் சென்றால்
கூறேநீ முப்பொருளும் ஒன்ற தாகி
குறியாக கொல்லுமொரு திங்கள்க் குள்ளே.

92. உள்ளான தண்ணீரி லுற்றுக் கொண்டாய்
உடனே அக்கினிதண் ணீரில் புக்கும்
விள்ளாக பரிசமது நோய்க்குள் ஏகி
வெளியிருளொடு நாள் ஐந்து முற்றாமல்
கொள்ளாத நோய்களெல்லாம் உடனே கொண்டு
கொதிப்பாகி உடலுயிரை நீக்கும் பாரு
கள்ளமுற்று கொள்ளுமுன்னே அவுச தனு
காலமதை நீக்கும்வகை கருதிப் பாரு.

93. கருகி வாகி அக்கினியைச் சேர்ந்து
கலந்துறைந்து மூலக்குண் டலியி னுள்ளே
வருகின்ற தண்ணீ ரும் பிறைகோ ணத்தில்
வீற்றிருக்கும் சந்திரபுஷ் காணிக் குள்ளே
அருமையென்றால் ஆகாசம் கருவு மாகும்
அடர்ந்திருக்கும் சதாசிவத்தின் மனோன்ம ணிக்குள்
வருகின்ற வாசியின் விட றுகோ ணத்தில்
உற்றுணர் அக்கினியோ முக்கோ ணத்தில்.

94. கோணமடா விஷ்ணுவின் தானந் தன்னில்
குணமதை தண்ணீ ரும் வீடு மாகும்
தீணான வட்டமது சிரச தாகும்
விள்ளுவேன் பிறக்கழுத்து வயி றுநாற் கோணப்
பூனான வட்ட மணோன்ம ணியாள் வீடு
பொருளான கருத்தளவாய் நந்தி வீடு
தூணான கதிர்ச்சிக்கிட தூக்கம்
தொடுத்திருக்கும் அமிர்த புஷ் பகானியாமே.

95. ஆமென்ற பிறஎல்லு முறிந்து தாழ்ந்து
அதிந்தால் நிலைசரியாய் வைத்துக் கொண்டு
தாமென்ற பற்றிதனை இறுகப் போட்டு
தப்பாமல் கணை அச்சை சரியாய் பூட்டி
ஓமென் று நெருங்கியே வைத்துக் கெட்டி
உத்தமனே கமுக்கூட்டில் பந்து சேர்த்து
கோமென்ற முன் கரத்தை பின்கரத்தில்
குறிப்பாக முன்புசத்தில் கட்டி வையே.

96. வையேநீ தோள்புசத்தில் கச்சை யொன் று
வருத்தியே கட்டுபின் குளியி னூடே
வைத்துவிட்டு மேலெடுத்து முன்போல
வளமாக பூட்டி நடுவில் சுத்தி
பையவே ஆவென் று சொருகிப் போடு
பற்றுரைத்து முறிவில்முறி வெண்ணெய் தாக்கு

நையவே இந்தமுறை கல்வியில் லாமல்
நாடியே மூன்று நாள் கூட்டிப் பாரு.

97. கூடியே பார்த்துநீ தொன்னூ றுநாள்
குணமான வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
தேடியே தாரையது செய்து நன்றாய்
சிறப்பாக கையிதமும் செய்து கொண்டால்
ஆடியே பரமகுரு உந்த னுக்கு
அருள்வா ரென்றுதிட மறிந்து நீயும்
வாடியே மனக்கண்ணால் கண்டு கண்டு
வருந்திநீ சிந்தைகூர்ந் தமத்தல் செய்து

98. அமத்தவே முறிந்தயிடம் வலமுற் றேகி
அப்பனே பெலமுறைத்து நின்று கொண்டால்
அமத்தவே வழிகளெல்லாம் செய்து கண்டால்
வந்திறங்கி நில்லாதென் று கேளு
சமர்த்துபோல் வில்லிறக்கி ஞாணப் பூட்டி
தயவான கழுத்தடியின் முனை நடுவில்
இமரவே வைத்துநல் இறுக்கி கட்டி
இருதோளில் இறுக்கியே வைத்துக் கொண்டு.

99. கொண்டுமே நெஞ்சடியில் முட்டு ஊன்றி
கூட்டியே இருகையும்கொண்டு மிறுகப் பூட்டி
மீண்டுமே முன்கழுத் திறுகும் போது
மேவியே முன்தலத்தில் பதிந்தங் காடும்
பண்டுமே முன்விதம்போல் சரிப்ப டுத்தி
பகர்ந்துவில் பூட்டிமுன் போலகையி தம்செய்
கண்டுமே செய்துவிடு சுகமும் காணும்
காணுமிது முன்தலத்தில் படுகாயத்தில்.

100. முன்தலத்தில் படுகாயம் போல்வி சைதான்
முனைமுடுகிக் கொண்டாலே பனி குளிரும்
பின்னியே யறிவற்று பிசகிக் காணும்
பேரான பஞ்சவர்ணம் பசகி நின்று
உன்னியே வியர்வைகபம் விக்க லோடு
உணர்வற்று கொண்ட நாள்ஒன் பதுக்குள்
வன்னியே உயரதுவும் எம்பிரான்
வழிதேடி போகுமென்பார் வருந்த தாமே.

கூறப்பட்ட 108 வர்மத் தலங்களில் ஈடுகொண்ட வேளை இறைவன் அருளை வேண்டி, ஈடுகொண்டவரை ஆராய்ந்தறிந்து அமைதியான மனத்துடன் மனக்கண்ணால் ஆராய்ந்து பார்த்து அமிர்தநிலை ஏற்றிறக்க நிலைகளை பக்குவமாய் தெரிந்து, முன் நூலில் சொல்லப்பட்ட வழிமுறைகளையும், சொல்லப்படாத பாதைகளையும் ஆய்ந்து ஈடுகொண்ட தலத்தை கண்டு கொள்ள வேண்டும்.

தலத்தைக் கண்டு, கொம்பு வைத்துக் கட்டி, வகையாக நெருக்கியோ அகற்றியோ, முதல், நடு, அந்தம் ஆகிய பகுதிகளிலும் கொம்பினை அமைத்து, தேறுதலாய் மனக்கண்ணால் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

தலங்களிலே மாத்திரைக்கு மிஞ்சி ஈடு கொள்ளுமானால் சொல்லப்படாத குறிகளினின்றும், பேதமான குறி குணங்கள் காணும். இத்தகைய அவகுறிகள் காணுமானால் கடிகை நாள் அவதி சொல்லி மருந்து செய்ய வேண்டும்.

வாத பித்த கப நாடி மூன்றிலுமே குற்றம் காணப்படின் பிழைப்பது அரிதாகும். வாதத்தின் இடமாகிய அரைக்குக் கீழ்பகுதியிலே வர்மம் கொண்டதானால் ஆறு வருடங்களுக்கு மேல் நோயாளி வாழ்வது கடினம். பத்தாவது பழுவென்பில் விலாப்பகுதியில் அடிபடுமானால் சுவாசிப்பதிலே கஷ்டம் ஏற்படும். மூன்றாண்டுகளில் மரணம் சம்பவிக்கும். ஈடுகொண்ட தலமானது குளிர்ந்து காணும், கண்களிலிருந்து கண்ணீர் வடியும். பித்த

நாடியானது சுதித்திருக்கும். வாத, பித்த, கபம் மூன்றும் ஒன்றோடொன்று தொந்தித்துக் கொள்ளுமானால் நோயாளி மூன்று மாதங்களிலே மரணமாவான். நோயாளிக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். வாயுவினுடைய அதிகரிப்பினால் கண்கள் பாதிக்கப்படலாம். மூலமும் அதனோடு இயைந்த உறுப்புகளும் பாதிக்கப்படும். வாயு அதிகரிப்பினால் அடிவயிற்றில் உள்ள பிறப்பு உறுப்புகளும் பாதிக்கப்படலாம்.

சித்தர்கள் மண்டையோட்டினுள்ளே மூளையானது திரவத்தினால் சூழப்பட்டிருக்கிறதென்று நூற்களிலே சொல்லியிருக்கிறார்கள். மேலும் வயிற்றறை, கழுத்து ஆகிய உடலின் பாகங்கள் நாற்கோணத்தையுடையது என்றும் கூறியிருக்கின்றனர்.

கழுத்தறையில் உள்ள என்புகளில் கடைசி என்பானது முறியுமானால், இரு அக்குளிலும் துணியால் செய்யப்பட்ட பந்து உருண்டையை வைத்து, தோளோடு சேர்த்து கச்சையால் கட்ட வேண்டும். வர்மத்தால் பாதிக்கப்பட்ட இடத்தில் மூன்று நாட்கள் முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். பிறகு கட்டை அவிழ்த்து, பாதிக்கப்பட்ட இடத்தை ஆய்வுசெய்து 90 நாட்களுக்கு வசவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். முறிவெண்ணெய், வசவெண்ணெய் ஆகிய இரண்டையும் நன்றாகக் கலந்து தடவலுக்கு பயன்படுத்தலாம். இவ்வாறு செய்வதாலும், இறைவன் அருளாலும், குருவின் அருளாலும் நோயாளி குணமடைவான் என்று நம்பப்படுகிறது. கழுத்து சாலத்தில் வலப்பக்கத்தில் நோயாளி பாதிக்கப்பட்டிருந்தால், குணமடைவது அசாத்தியமாகும்.

கட்டுவதற்குத் தேவையான மூங்கில் கொம்பை தோளின் நீளத்திற்குத் தகுந்தாற்போல் எடுத்து, அதன் மேல் துணியைச் சுற்றி முறிதலத்தில் பொருத்தி, கணையின் இரு அந்தங்களையும், தோளோடு சேர்த்துக் கட்ட வேண்டும். கைமுட்டானது நெஞ்செலும்போடு சேர்ந்திருக்கும்படி பொருத்தி வைத்து கட்ட வேண்டும். இவ்வாறு கட்டுவதால் முறிந்த என்பானது தன்னிடத்தில் பொருந்திக் கொள்ளும். பின் குறிக்கப்பட்ட மருந்து எண்ணெணை பயன்படுத்தி தடவல் செய்ய குணம் கிடைக்கும்.

பஞ்சவர்மமாகிய நெஞ்சு தன் இடம் விட்டு பெயர்ந்து கொண்டால், பாதிக்கப்பட்டவனுக்கு அதிகமான வியர்வை, கபம், விக்கல் இருப்பதுடன் தொடு உணர்வும் அற்றுவிடும். இக்குறி குணங்கள் தோன்றுமானால் நோயாளி ஒன்பது நாளில் மரணமாவான்.

முன்கையில் காறையென்பு முறிவு

101. ஆமப்பா முன்கையில் தாறை யென்பு
அதிர்ச்சியாய் முறிவுபட்டு கண்ட தானால்
ஓமப்பா இருபுறமும் கமலம் விட்டு
உண்மையாய் இருபுறமும் சிக்கல் செய்து
நாமப்பா இரண்டுமொன்றாய் பதித்தொன் றாகில்
நலமாக பற்றதினை நாட்டு வாய்நீ
வாரப்பா அஷ்டகணை வர்மம் செய்து
வருத்தியோர் கலமிட்டு அங்கலம் செய்யே.

102. செய்யப்பா கணைநடுவே பற்ற றுத்து
திறமாக கம்பியென்ற தறனு மிட்டு
நையவே நரம்பதனை நீக்கி
நாடியே விஷநரம்பு பச்சி மூன்றில்
கையதினில் கணைஇறுக்கி பற்றி டாது
கதிரான நரம்பிசங்கு நெடுங்காய் வண்ணம்
மையமிட்ட பக்கமதில் வலுவாய் பூட்டி
வருத்தி முறிவெண்ணெய் தாரை செய்யே.

103. தாரை செய்துவிடு முப்பத் தாறில்
தான்கணையும் விலக்கி கையித மும்செய்
சீராக வசவெண்ணெய் தாரை செய்து
செப்பரிய தொண்ணூற்றில் துவாலை போடு
வீரமுடன் சவ்வுறைத்துப் பற்றிப் போகும்
வெற்றியுடன் குருவருளை தியானம் செய்தால்

ஆரணமாம் முடி தரித்தோன் கிருபை யாலே
அப்பனே முன்வழியும் முறைக்குள் ளாமே.

காறையென்பானது அதிர்ச்சியினால் முறிந்ததானால் இருபுறத்திலும் கச்சையால் கட்டி, பற்று இட்டு, கொம்புவைத்து கட்ட வேண்டும்.

*36* வது நாள் கச்சையை அவிழ்த்து வசவெண்ணெய் பயன்படுத்தி தொக்கணம் செய்ய வேண்டும். *90* வது நாள் வரைக்கும் துவாலை போட்டு வர சவ்வானது உரத்து பற்றிக் கொள்ளும்.

காறையென்பு ஓடிவு கட்டல்

*104.* உள்ளான காறையென்பு முன்னி சங்கி
ஓடிந்தாலோ முன்போல உறவு செய்து
கள்ளமில்லா கணையதனை யுறவாய் செய்து
கதிரிட்ட உயில்குண்டு கதிர் முனையில்
மிள்ளவே நிலச்சுருளை உறவாய் செய்து
விளங்கவே உளைச்சுருளை மேலே பூட்டி
விள்ளவே முன்கருளை யதனில் சேர்த்து
விளங்கவே தட்டொதுக்கி இரண்டும் ஒன்றாய்

காறையென்பு ஒடிந்து முன்னே தள்ளிக் கொண்டிருக்குமேயாகில் அதனை அழுத்தி முன்போலவே தலத்தில் பதியச் செய்து, கச்சையால் கட்டி முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும்.

மேலெலும்பின் முனையதின் ஓடிவு

*105.* ஒன்றான மேலெலும்பின் முனைய தனில்
உண்மையாய் விலகியே முறிந்த தென்றால்
நன்றாகச் செய்துமுறி வெண்ணெய் பார்த்து
நாள்முப்பத் தெட்டில் வச வெண்ணெய்

குன்றாமல் தாரைசெய் இரண்டு மொன்றாய்
குணமான தொன்னூறில் சூட்சம் தான்
நன்றாக சவ்வுறைத்து பற்றிப் போகும்
நாடியே இந்தமுறை நலமாய் செய்யே.

காறையென்பானது முன் முனையிலே ஓடியுமானால் முன்போலே தலத்திலே பதியச் செய்து முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். 38 நாள் கழித்து வசவெண்ணெயும், முறிவெண்ணெயும் ஒன்றாக தாரை செய்ய 90 வது நாள் குணமாகும்.

## நடுமையத்தில் முறிவு

106. நலமாக நடுமையத்தில் நடுவில்
நாடியே முறிந்தாலோ நடுக்க மாகி
பலமான உயிரதுவும் முப்பத் தொன்றில்
பேசாமலே பிரமபுக்கு மென்று
புலத்தியனுக்கு உபதேசம் உரைத்தால் போல
புத்தியுடன் ஆராய்ந்து புவியுள் ளோர்க்கே
துலங்கவே சொல்லிவிட்டேன் இந்நூல் சூட்சம்
சுறுக்குடனே ஆராய்ந்து தொகுத்துப் பாரே.

காரையென்பானது நடு மையத்தில் ஓடியுமானால் அது அபாயமானதொன்றாகக் கருதப்படுகின்றது. எவ்வளவு தான் முயன்று சிகிச்சை அளித்த போதிலும், பாதிக்கப்பட்டவன் 31 வது நாளிலே மரணமாவான்.

## அடுக்கெலும்பு விலகல்

107. பாரப்பா அதன்முனையில் அடுக்கெ லும்பு
பதியாகவே குண்டில் விலகி நின்றால்
சார்பாச்சு நிரப்பாய் செய்து
சார்மதி னுள்ளில் கணையும் போடு

நேரப்பா உட்கருணைக் குள்ளாய் பொக்கி
நெருங்கிடவே குண்டில்விழுந் தாடும் பாரு
வீரப்பா பற்றதனை பதியாய் செய்து
விளங்கவே சதிரநிலையும் பதியாய் செய்யே.

108. பதிசெய்து உற்பனமாம் மூன்றாம் நாளில்
பகர்ந்துமே முறிவெண்ணெய் தாரை செய்ய
துதியாக தொன்னூறு நாளும் சென்றால்
சூட்சமுட னதனை விலக்கி மைந்தா
பதியமனம் வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
பாலகனே தாரையது பதமாய் செய்து
மதிப்பெருகி கையிதமும் செய்து கொண்டால்
மைந்தனே சவ்வற்று வற்றிப் போகும்.

வாகென்பானது இடம் பெயர்ந்தால் கைக்குழியில் விரல் பதித்து அழுத்தி என்பினை தலத்திலே ஏறச்செய்து பற்றதனை மேலேயிட்டு கச்சையால் இறுக்கிக் கட்ட வேண்டும்.

மூன்றாம் நாளில் பற்றதனை விலக்கி, நாளும் முறிவெண்ணெய் பயன்படுத்தி வரவேண்டும். 90 நாள் கழித்து கச்சையை விலக்கி வசவெண்ணெய் முறிவெண்ணெய் இரண்டையும் ஒன்றாக தாரை செய்து கையிதமும் செய்ய வேண்டும்.

கடைக்குழி குண்டிசங்கல்

109. பற்றியே போகுமது ஈரலது
பகரான கடைக்குண்டி சங்கித் தாழ்ந்தால்
வெற்றியாய் கமலஞ் சென்று தன்னை
மேவியே முன்முனையில் குழியில் சிக்கி
சுற்றியே இருபுறமும் தமரு மிட்டு
சூட்சமாய் முன்பின்னாய் சுருக்கல் செய்து
பற்றியே இழுக்கையிலே முன்குழியில்
பகர்ந்தாடும் சதுரம்பத்தின் பதிவும் செய்யே.

110. பதறாக செய்துமுன் நிலைந டுக்கி
பகர்ந்துநல் முறிவெண்ணெய் பதியாய் தாக்கி
விதமாக மூன்றுநாள் கூட்டிப் பாரு
மிதித்தநாள் முப்பத்தி யாறும் சென்றாம்
சிதறாமல் வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
சிறப்பாக தாரைசெய் தொன்னூற் றொன்றில்
முதியான அச்சதினை விலக்கி மைந்த
மீண்டும்நீ கையிதமும் செய்து கண்டால்

வாகென்பானது முழுமையாக தன் இடம் விட்டு பெயர்ந்தால் விரலால் அழுத்தி அதனை தன் இயல்பான நிலையில் இருக்கச் செய்து முறிவெண்ணெய் பயன்படுத்தி 3 நாள் கட்டுப்போட வேண்டும். பின்னர் 36 நாள் வரைக்கும் வசவெண்ணெய் பயன்படுத்த வேண்டும். 90 நாட்கள் வரை வசவெண்ணெய், முறிவெண்ணெய் இரண்டும் ஒன்றாய்க் கலந்து பயன்படுத்த வேண்டும். 90 நாள் சென்றபின் கட்டை அவிழ்த்து தடவல் செய்ய வேண்டும்.

தவளை நடுவு முறிந்தால்

111. கையிதமும் செய்துவிட சவ்வு றைத்து
கருத்தாக நிற்குமடா கண்டு கொள்ளு
நய்யவே தவளை நடுமை யத்தில்
நாடியே இடிஅடியாம் முறிந்த தாகில்
உய்யவே நாற்பத் தெட்டில் சாவான்
ஓதரிய முறியருகில் விலகி நின்றால்
தைய்யவே கமலமொன்று அச்சி ரண்டும்
சரிப்படவே மேவியதில் தமரிட் டருகில்

112. தமருமிட் டருகில் இருபுறமும் நன்றாய்
சார்பான கணைமருவா லொன்றாய் சேர்த்து
தமருமதில் பூட்டியே இறுகக் கட்டி
நன்றாக முறிவெண்ணெய் தாரை செய்து

கமருமென்ற அச்சுதனை் விலகிமைந்த
கணைநெருக்கி அச்சுநாள் ஒன்றில் பாரு
சுமக்குமே தொண்ணூ று நாளும் சென்றால்
சூட்சமுடன் வசவெண்ணெய் சுருக்குச் சொல்லே.

113. சென்றாலோ வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
சிறப்பாக தாரைசெய்து இதங்கள் செய்து
நன்றாக கையிதமும் செய்து கொண்டால்
நலமாக சவ்வுறைத்து பற்றிப் போகும்
நன்றாகக் கையிதிலே பெலனு முண்டாம்
கருணையாம் பரமகுரு வருளை நீயும்
அன்றாடமாய் வருந்தி செய்து கொண்டால்
ஆசொருநாள் வராதென்று அறிந்து கொள்ளே.

புய என்பானது அடிபட்டு முறிந்தால், நோயாளி 48 வது நாளில் மரணமாவான். முழுமையாக முறியாமல் அரைகுறையாக முறியுமானால் 4 தமருள்ள மூங்கில் கொம்புகளை வைத்துக்கட்டி அவற்றை ஒன்றோடொன்று தமர் வழியாக இணைத்து இறுக்கி முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். 90 நாட்கள் சென்றவுடன் வசவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். தடவலுக்கு வசவெண்ணெய், முறிவெண்ணெய் ஒன்றாய் கலந்து பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செய்யின் சவ்வு உரத்து பற்றிக்கொள்ளும். பின் கணையினை விலக்கி கையிதம் செய்ய இறைவனருளால் நலமடைவான்.

### கைப்புசத்தில் முன் எலும்பில் முறிவு
### (தோள் புசத்தில் பட்டை எலும்பு இசங்கி தாழ்ந்தால்)

114. கைப்புசத்தில் முன்னெலும்பு முறிந்தேங்கி
கருதியே அஞ்சேழில் சன்னி சீதம்
நைய்யவே யிருபத்தி மூன்றில் சாகும்
நாடியதில் சிரட்டையது விலகி நின்றால்

உய்யவே நிலைசரியாய் வைத்துக் கொண்டு
ஓதரிய கணையதினை ஒன்றாய் சேர்த்து
மையவே வைத்துநீ பதம்வ ருத்தி
பற்றிதனில் மருவியே பகர்ந்தன் பாய.

115. அன்புடனே நாடி இறுக்கிக் கட்டி
ஆச்சரிய மாகமுறி வெண்ணெய் தாக்கு
அன்புடனே நாற்பதுநாள் தாரை செய்து
வசவெண்ணெய் தாக்குவாய் அத்தி ரத்தில்
துன்பமுற்று வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
சூட்சமாய் தாரையது சுருக்காய் செய்யே
நண்பனே சவ்வுறைத்துப் பற்றி போகும்
நாடியே உற்பனமாய் கூர்ந்து பாரே.

116. கூறான தோள்புசத்தில் பட்டை யெல்லு
குமிறியே இடியடியாய் இசங்கி தாழ்தல்
மாறாமல் சரிநிலையாய் செலுத்தி வைத்து
மருவியே முன்னால் சிக்கல் செய்து
வீணாக போட்டுவில்லில் ஞாணு பூட்டி
வருந்தியே பிடரிதன்னில் பதியச் செய்யே.

117. செய்யவே தோள்புசத்தின் முன்நிறுத்தி
சேரவே கட்டிகமுக் கூட்டில் பந்து
ஒய்யாரமாக மேல்விரல் பந்தூணி
ஓதரிய வில்லிகனம் திரைவர் மத்தில்
பய்யவே அச்சதினை நடுங்கி டாமல்
பாதகனே பதம்வருத்தி எல்லின் பக்கம்
தைய்யவே ஆப்பொன்று சரியாய் செய்து
சரியான அச்சட்டத்தில் நிறுத்திக் கொள்ளே.

118. நிறுத்தியே முறிவெண்ணெய் தாரை செய்து
நேசமுடன் அஞ்சுநாள் கூட்டிப் பாரு
சுறுதியாய் தொண்ணூறு நாளி னுள்ளேச்
சென்றால் சூச்சமாய் முறிவெண்ணெய் அதனோடு ஒப்பம்
பொறுதியாய் வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
புகழாக ரேசித்துபின் தாரை செய்து
உறுதியாய் சொன்னமுறை தவறி டாமல்
ஓதரிய கையிதமும் சரியாய் செய்யே.

119. சரியாகச் செய்துவிடு பெலமு முண்டாம்
தப்பாமல் சவ்வுரைத்து பற்றிப் போகும்
பரிசியமாய் அருளுனக்கு பகர்ந்த தென்று
பாலகனே நீநினைத்து பற்றித்தே தான்
உருவுகண்டு உற்பனம்போல் செய்துகொண்டால்
உத்தமனே அருளுண்டு உண்மையாகி
திருவருளால் உபதேசம் ஈவார் பாரு
சிந்தைதனில் வைத்துகளி கூர்ந்து கொள்ளே.

தோள்பட்டை என்பானது தன் நிலை விட்டு விலகித் தாழ்ந்தால் 5 முதல் 7 நாளில் சன்னி வரும். இதோடு புய என்பின் முறிவும் ஏற்படுமானால் 23 ம் நாளில் மரணம் உண்டாகும். இடம் பெயர்தல் மட்டுமே ஏற்படுமானால் எலும்பினை முன்னிடத்தில் சேர்த்து, கொம்பு வைத்துக் கட்டி. பற்று இட வேண்டும்.

கச்சை வைத்து கட்டி முறிவெண்ணெய் தாரைசெய்ய வேண்டும். 40 நாள் சென்றபின் வசவெண்ணெய் தாரை செய்ய வேண்டும்.

## கதிர்வாளை வர்மத்தின்முறிவு

120. கூறப்பா அறுகு முனையிலே தான்
கூறரிய கதிர்வாளை வர்மம் தன்னில்
சேர்ந்துமே முறிந்தாலோ மூன்றாம் நாளில்
சீர்கேடா பனிகுளிரும் தேகம் வெட்டும்

உலர்ந்துமே விட்டிலைப்போல் நாக்கி னமதில்
ஓடியே துடிக்குமடா பதினொன் றுக்குள்
ஆர்க்குமே அம்பத்தோரில் சாவான்
அறிந்துநீ செய்துகொள் அன்பனுமே.

கழுத்து ஓரத்தில் கதிர்வாளை வர்மத்திலே முறிவு அல்லது வர்மம் ஏற்பட்டால் குளிரும் சன்னியும் ஏற்படும். பதினோராம் நாளில் உடல் உலர்ந்து விட்டிலைப் போல் துடிக்கும். 57 வது நாளில் மரணமாவான்.

அஞ்சுநிரை முன்னெலும்பு

*121.* அன்பான கழுத்தடியில் பின்கண் டத்தில்
அடுக்கான அஞ்சுநிரை முன்னெ லும்பில்
துன்பமுற்று முறிந்துசங்கி நின்று கொண்டால்
சூச்சமொடு மூன்றாம்நாள் மரண மாவான்
பண்பான நவிலெலும்பின் மேல்சங்கில்
பேசரிய சதுர்த்தி வட்ட மொன்று
வன்புறவே செய்து மேல் கழுத்தில் பூட்டி
வரிசையுடன் இதனகத்தில் அஞ்சு மெத்தே.

*122.* மெத்தையது சதுரவட்டம் அஞ்சதுபோல்
மேவியே செவித்துநவ துவார மிட்டு
வித்தையாய் பற்றறுத்து இறுகப் பூட்டி
விளங்கவே இட்டநவ துவாரந் தன்னில்
புத்தியாய் முறுவெண்ணெய் தாரை செய்து
புகழான நாளது முப்பத் திரண்டில்
சித்தியாய் அஞ்சுநிலை இறுக தாக்கி
சிறப்பான அச்சுதினில் விலகு மச்சே.

கழுத்து வம்சிகளில் முறிவு ஏற்படுமானால், அது துன்பம் தருவதாக அமைவதோடு நோயாளி மூன்றாம் நாளில் மரணமாவான்.

இத்தகைய ஈடுகொண்டோருக்கு கடற்பஞ்சினால் (Sponge) ஒரு கழுத்துப்பட்டை செய்து, அதில் ஒன்பது துவாரங்களிட்டு அப்பட்டையை கழுத்தைச் சுற்றிக் கட்டி, துவாரங்களின் வழியாக முறிவெண்ணெய் முப்பத்திரண்டு நாட்கள் தாரை செய்ய வேண்டும். இந்தக் கட்டும், கழுத்துப்பட்டையும் அசையாதவாறு மிகவும் எச்சரிக்கையுடன் சிகிச்சை நடைபெறுமானால் கடவுளின் அருளாலும், குருவருளாலும் நலமடைவான் என எதிர்பார்க்கப்படுகிறது. கவனத்துடன் கூடிய சிகிச்சை மேற்கொள்ளப்படாவிடில், நலமடைதல் சிரமமாகும்.

### பூணெலும்பின் மேலெலும்பு

123. விலகியே கையிதமும் செய்து கொண்டால்
தாமாக சவ்வுறைத்து பற்றிப் போகும்
நலமாக பெலனுண்டாய் உறுதி சேரும்
நல்கியே இந்தமுறை நாடி செய்து
துலங்கியே பரமகுரு வருளை நீயும்
சூட்சமுடன் ஆராய்ந்து மனக்கண் ணூன்றி
நிலையறிந்து செய்துவிடு நிசம தாகும்
நிலைபிசகி நின்றாலும் நோவுண் டாமே

124. நேர்மையாய் பூணெலும்பின் மேலெ லும்பு
நிசமாக முறிந்தாலோ சொல்லக் கேளு
கூர்மையாய் பதினொன்றில் சன்னி யுண்டாம்
குறியான இருபத்தொன்றில் சாவான்
பார்வையாம் பூணென்பின் கீழ் எலும்பு
பதிஇளகி முறிந்தங்கே இசையு மானால்
சார்வாகும் பதிமூன்றில் மரண மாவான்
தப்பாமல் நிலையெலும்பு இசங்கு மானால்.

125. இசங்கியே தாழ்ந்தாலோ சொல்லக் கேளு
இதமாக ஆள் மட்டாய் குழியைத் தோண்டி
பிசகாமல் நடுநேராய் பக்க மூன்றில்
பிசகாமல் இருபுறமும் அசைத்து கோர்க்க

விஷமுடுகி முன்தலத்தில் பதித்தங் காடும்
மேவியே நிலைசரியாய் வைத்துக் கொண்டு
வசமாக பற்றிட்டு கல்நெ ருக்கி
வலமிட்டு வர்மத்தில் அணுகி டாமல்.

126. அணுகாமல் பூட்டியே கட்டிக் கொண்டு
அறிந்துமே குறி தலத்தில் பற்றி டாமல்
கணுவோ டொன்றோடொன்றி சவர வண்ணம்
கருதியே செய் துமுறி வெண்ணெய் தாக்கு
நணுகாமல் சதுரநாளும் கூடிப் பாரு
நாடியே தொண்ணூ று நாளும் சென்றால்
ஊணியே கையிதம் செய் து ஒன்றாய்
ஓதிடவே சவ்வுறைத்து பற்றிப் போகும்.

பரிஞ்சு, அசி, ஏதி என்ற மூன்றும் சேர்ந்து உண்டான நெஞ்செலும்பின் மேல் என்பான பரிஞ்சு முறிந்தால் பதினொரு நாளில் சன்னியும், இருபத்தோராம் நாளில் மரணமும் சம்பவிக்கும். கீழ் என்பான ஏதி முறிவுற்றாலோ பதிமூன்றாம் நாளில் மரணம் ஏற்படும். நெஞ்செலும்பானது முறிந்து, தாழ்வுற்றாலோ நெஞ்செலும்பின் அளவாக சீழியை எடுத்து துணியால் அதைச்சுற்றி, நெஞ்சறையில் வைத்து நன்றாக இறுகக்கட்டி ஆள் மட்டத்திற்குக் குழி தோண்டி, கட்டானது நன்றாக இறுகும்படி கழுத்துவரை நோயாளியைக் குழியில் இறக்கி, சீழியானது நேராக அமையும் படி செய்ய வேண்டும். வர்மத் தலத்தில் பிசகு ஏதும் ஏற்படாதவாறு, முறிவெண்ணெய் 4 நாட்களுக்கு தாரை செய்ய வேண்டும். இவ்வாறு 90 நாட்கள் செய்து வர, சவ்வானது உரத்து நன்றாகப் பற்றிக்கொள்ளும். உடல் பலன் பெறும்.

**கீழ்வாய் முனை நட்டெலும்பு**

127. பற்றுமே இந்தநிலை பெலமுண் டாகும்
பகரவே கீழ்வாரி எல்லின் முனை
சுற்றியே பக்கமது முறிந்த தானால்
சூட்சமாய் முன்பின்னாய் தொடர்ச்சி யாகி

வெற்றியாய் வைத்துமேல் பற்று மிட்டு
மேவியே முன்னிதம்போல் செய்து கொண்டால்
நற்றியே பெலனுமுண்டாம் குருவருளை நாடி
நாடியே மனதிலுன்னி நாடி செய்யே.

128. நாடியே முதுகதிலே நட்டென்பு
நடுங்கியே முறிந்தாலோ மூன்றில் சாவான்
ஓடியே இசக்கமாய் விலகி நின்றால்
உத்தமனே பதினெட்டு கணைதா னென்று
சாடியே நடுநிலையை சரியாய் செய்து
தயவாக முறிவெண்ணெய் தாக்கல் செய்ய
நீடியே இசக்கமது தீரும் தீரும்
நிச்சயமென்று இன்னூலை நிகழ்த்தி னோமே.

(வீணுதண்டு நடுகதிர் மூலத்தில் அடி கொண்டால்)

129. நிகழ்த்தினோம் வீணாதண்டின் நடுவில்
நெருங்கியே முறிந்தாலோ மூன்றில் சாவான்
புகழவே இசக்கமாய் நின்று கொண்டால்
பதிமூன்று நாற்பத்தி யெட்டில்
இகழ்த்தியே மரணம்வரும் சொன்னோம் சொன்னோம்
இன்பமாய் கடந்தாலே ஐம்பத் தெட்டில்
மகிழ்ந்திருந்த உயிரதுவும் எம்பிரான்
வழிதேடி போமென்று வகுத்த வாறே.

தொங்கும் விலா என்புகள் முறிவுபட்டால், முன்கூறப்பட்ட முறையில் சிகிச்சை செய்தல் அவசியமாகும். ஆனால் கசேருக்கொடியானது நடுங்கி முறிவுற்றால் மூன்றாம் நாளில் மரணம் சம்பவிக்கும். தன்னிடத்திலிருந்து அது விலகி நின்றாலோ மூன்றாம் நாளில் மரணம் சம்பவிப்பதைத் தவிர்க்க ஒரே அளவான 18 மூங்கில் சீழிகளை தேவையான அளவில் எடுத்து துணியால் நன்றாக சுற்ற வேண்டும். முறிந்த இடத்தில் அணைவாக சீழிகளை வைத்து, அவை இடம் பெயராத வண்ணம் கட்டி, முறிவெண்ணெய் தாரை செய்ய

வேண்டும். இம்முறையை எச்சரிக்கையுடன் மேற்கொள்ள குருவருளால் நோயாளி நலமடைவான்.

கசேருக்கொடியின் இறுதியில் பலமாக அடிகொண்டு முறிவுற்றால் மூன்றாம் நாளில் மரணமாவான். இல்லை யெனில் 13 அல்லது 48 ம் நாளில் மரணம் வரும். அல்லது 58 ல் நிச்சயம் மரணம் ஏற்படும் என்று அகத்தியர் கூறியுள்ளார்.

**அலகை வர்ம முறிவு**
***(சிற்றெலும்பில் அடிஇடி கொண்டால்)***

130. வாறான கதிர்மூலம் பக்கந் தன்னில்
மருவியே அடிஇடிகள் வலுவாய் கொண்டால்
வீறாக நெருங்கியே விசைத ளர்ந்து
மேவுநாள் தொண்ணூ றில் வாத முற்று
வாறாக விந்துவந்து கால்மு டக்கி
வருந்தியே விசைதளர்ந்தால் மரண முண்டாம்
நீறான முந்நூ றில் மரண மாவான்
நேசமுடன் மாமுனியும் நிகழ்த்தி னாரே.

131. நிகழ்த்தினோம் நெஞ்சருகில் அலகை வர்மம்
நெருக்கிய தாலே நறுந றென்று
பகராமல் பல்கடிக்கும் நெடுமூச் சிடும்
பாதவித்து பாசதுபோல் முகங்க றுக்கும்
சுகமான பல்வாய் மிகுந்து கூசும்
குளிர்பனியும் இருபத்து நாலு தன்னில்
நிகழ்த்துமே கடந்தாலே எழுபத்தி ரண்டில்
நிச்சயமாய் உயிர்பிரியு மென்று சொல்லே.

புச்ச என்பின் அருகில் பலமாக வர்மம் கொண்டால், விசை நரம்பு தளர்ந்து 90 ம் நாள் வாதம் வரும். அதைத்தொடர்ந்து நோயாளி சக்தி விந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். எனவே இருகால்களும் செயலற்று காணப்படும். இக்குறி குணம் காணப்படுவதோடு நோயாளி 300 வது நாளில் இறந்து விடுவான்.

நெஞ்சுப் பக்கத்தில் காணப்படும் அலகை வர்மத்தில் ஈடு கொண்டால் நோயாளி பற்களை பயங்கர சப்தத்துடன் கடிப்பான். முகம் கறுக்கும். பல் கூச்சம் காணப்படும். அதைத்தொடர்ந்து 24 நாட்களுக்குள் சுரமும், உடல் குளிர்ந்தும் காணப்படும். இது கடந்தால் 72 ம் நாளில் நிச்சயம் உயிர் பிரியும்.

**கீழ் இடை முறிவு**

132. பொருந்தியே நட்டெல்லு இருவி ரல் கீழ்
பொருளான வட்டமுற்ற சிற்றெ லும்பில்
கருதியே அடிஇடியால் நெருக்க முற்று
எ லும்பி சங்கி முறிந்து கொண்டால்
வருந்தியே கால்கரமும் நாலு மொன்றாய்
வந்தொதிங்கி இருக்குமடா நாயி ருப்பாய்
திருந்தியே ஆளஞ்சு நடக்கொட் டாது
சென்றயிடம் இருந்தெழுந்தி ராத பின்னே.

133. பின்னாக அறுசுவையும் மற்றுங் காணும்
பிசகியே முறிந்தால் தொன்னூறில் சாவான்
மின்னியே இசக்கமுற்றால் கையி தம்செய்
வெருவியே முன்னூறில் நீர்நி லைத்தால்
வன்னியே திரண்டுருண் டுன்னிக் கண்டால்
வளருநிமிற் கண்டநாள் இருபத் தாறில்
தன்னிலே நீர்பொட்டிப் பொள்ளல் உண்டாம்
சார்ந்தநாள் எழுபதிலே மரணம் தானே.

134. தானான துடியாகும் கீழ் இடையில்
தப்பாமல் அடியிடியாய் இடைமு றிந்தால்
வாணாக நெருக்கமுற்றுக் கொண்டா லுந்தான்
மைந்தனே கீழ்இடைதான் முறிந்து தாளும்
யானான இருபத்தி யெட்டில் மைந்தா
இன்பமுடன் கையிதமும் சரியாய் செய்யே.

135. சரியாக செய்து வசவெண்ணெய் தாக்கு
தப்பாமல் இருபத்தே ழிருபத் தெட்டில்
கருதியே பனியுண்டாம் குளிரு மாகி
கருதிநாள் முப்பத்தி மூன்றில் சாவான்
உருவான குருவருளை மனக்கண் ணாலே
உண்மையாய் கண்டுமனம் அன்பு கூர்ந்து
அருந்தி ஆராய்ந்து செய்து கொண்டால்
அசொடுரு நாள்வராது அறிந்து செய்யே.

தண்டுவடத்தில் காணப்படும் நட்டெடல் வர்மத்தின் 2 விரல் கீ ாக முறிவு ஏற்பட்டால் நாய் அமர்ந்திருப்பது போன்று நோயாளி இ நகால்களையும், கைகளையும் மடக்கி ஒரே இடத்தில் உ கார்ந்திருப்பது போன்றிருப்பான். சிலருக்கு கால்கள் இரண்டும் செயலிழந்து விடும். நா சுவையிழந்து காணப்பட்டால் 90 வது நாளில் மரணமாவான். இல்லையெனில் 300 வது நாளில் மரணமாவான்.

இருபத்தெட்டு நாட்களுக்குள்ளாக வசவெண்ணெய் வெளிப்பிரயோகம் செய்து வர்மத் தடவல் செய்ய வேண்டும். சுரமும், குளிரும் காணப்பட்டால் நோயாளி 27 ம் நாளில் மரணமாவான் இல்லையெனில் 33 ம் நாளில் மரணமாவான். தகுந்த சிகிச்சை மேற்கொள்வதுடன், குருவருளை தியானித்தால் நோயாளி விரைவில் குணமாவான்.

சங்கு திருகி முறிவு

136. அறிந்துமே கழுத்தினடு சங்கு திருகி
அதிரான எலும்புமுறிந் தியங்கு மானால்
குறிகேடாய் வயதூறும் குன்மம் போலே
சுர்மையாய் முதுவரியில் கொழுத்திக் கொள்ளும்
நெறியாக உயரவெட்டா இருவிழியும்
நெருங்கிஇருள் வெழிக்காணா திருக்கும் பாரு
உறுதியாய் சங்கதனை எடுத் தமைத்து
உண்மையாய் முறிவெண்ணெய் தாரை செய்.

கழுத்தின் நடுவில் உள்ள குருத்தென்பானது முறிந்து இடம் பெயருமானால் வயிற்று வலி, வயிறு ஊதல், முதுகுத்தண்டில் சுளுக்கு இவை உண்டாகும். கருவிழிகள் அசையாமல் இருக்கும். சங்கு என்பினைச் சரியான இடத்தில் எடுத்து வைத்து முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். இவ்வாறு தொன்னூறு நாட்கள் செய்ய வேண்டும்.

அடிவயிற்றில் நடுவிடை

137. தாரையது செய்துநீ நாள்தொன் னூறில்
தப்பாமல் அடிவயிற்றில் நடுவி டையில்
சீராக அடியிடியால் இசங்கிக் கொண்டால்
சிறப்பாக அதினடுத்த பொருத்து ரண்டும்
தூராக பிராணகலை விசைத ளர்ந்து
சூச்சமற்று நிலைபெருகி சுறுக்கில் லாமல்
பார்த்த நடுதாரைக்குள் ளுயிரே சிவன்
பாதவித்து அதன்கீழே உணர்வற் றேகி.

138. உணர்வற்றுக் கண்டால் ஈரொன்ப தாம்நாளில்
உயிர்பிரியும் உணவருந்தக் கண்ட தென்றால்
பிணையாக கையிதமும் சரியாய் செய்து
பெலமாக முறிவெண்ணெய் தாரை விட்டு
சிணமாக தொன்னூ று நாளு சென்றால்
சிறப்பாக எண்ணெய்இரண்டும் ஒன்றாய் சேர்த்து
இணையாக சேர்பின்னே தாரை செய்து
இன்பமாய் செய்துவிட இசங்கல் போமே.

அடிவயிற்றின் நடுவில் அடியிடியால் ஈடுகொண்டால், அதனை அடுத்துள்ள இடுப்புப் பொருத்து இரண்டும் பாதிக்கப்பட்டு, பிராணகலை விசை தளர்ந்து, நிலை பிசகும். தன் உணர்விழந்து கண்ணீரும் சுக்கிலமும் வெளிப்படும். கால்கள் உணர்விழந்து காணப்படுமாயின் பதினெட்டாம் நாளில் உயிர் பிரிந்துவிடும். கால்கள் உணர்வுடன் இருக்குமானால் முறிவெண்ணெய் தாரைசெய்து கையிதம் செய்ய வேண்டும்.

தொன்னூறு நாட்கள் சென்ற பின் வசவெண்ணெய், முறிவெண்ணெய் இரண்டும் சேர்த்து தாரை செய்து, கையிதம் செய்ய குணம் உண்டாகும்.

குதிரை முகம் மத்தி முறிவு

139. ஓமப்பா குதிரைமத்தி தனில் பிசகிய
தகலை முறிந்தால் எழுபத் தெட்டில்
நாமப்பா விட்டிலைப்போல் நீரேற்றி
நடுங்கியே உள்ளங்கால் பெருவிரலில்
ஓமப்பா விட்டிலைப்போல் கரக ரைத்து
உணர்ந்துமே சாகுமடா உசந்த மட்டாய்
வாமப்பா மயக்கமடி கூடியே உண்டாம்
மருவியே எழுபத் திரண்டில் நீர்தான்

140. எழுபத்திரண்டில் விஷநீர் போலேறும்
போகுமிதில் சூலைநீர் சேர்ந்து விம்மி
வழுவாமல் முறிவெண்ணெய் தாரை செய்து
மருவியே கையிதம் செய்து கொண்டால்
தழுவாமல் நிலைசரியாய் சரிபட் டேகும்
சார்பான எலும்புமுறிந் துருளைக் கண்டால்
மழுகாமல் கணையெட்டும் சரியாய் செய்து
மருகவே எலும்பதினை ஒன்றாய் சேரே.

141. சேரு நீ பற்றதனை செரியாய் செய்து
திறமாக கணையதினை சரியாய் பூட்டி
சாருநீ முறிவெண்ணெய் தாரை செய்து
தறியதிலே இருத்தியே தாரை யிட்டு
கூறுநீ மூன்றுநாள் கூட்டிப் பார்
குறித்தநாள் முப்பத்தி மூன்றில் கேளு
சேரேநீ வயவெண்ணெய் தாரை செய்து
சிந்தநாள் நாற்பத் தெட்டில் தானே.

142. எட்டதனில் அச்சதுனை விலகி மைந்தா
இணையாக கையிதமும் செய்து கொண்ட
ஒட்டியே சவ்வுறைத்து பற்றிப் போகும்
உத்தமனே குருவருளை உண்மை கூர்ந்து
திட்டமுடன் மனக்கண்ணா லறிந்து கொண்டு
சிணமாக முப்பொருளை தெளிவாய் தேர்ந்து
திட்டமாய் முறிகாயம் பலதுக்காக
இணையாக குருவருளை அறிந்து செய்யே.

குதிரைமுக வர்மத்தில் (நள என்பின் மேல் அந்தத்தில் நடுப்பகுதியில்) முறிவு கொள்ளும் போது, பாம்புக்கடி, விடம் ஏறுதல் போல் வலி உண்டாகும். பெருவிரலும் உள்ளங்காலும் உணர்விழக்கும். தலைச்சுற்றும். உடல் வீக்கம் உண்டாகும். எலும்பினைச் சரியாக எடுத்து வைத்து 8 கொம்பு (சீழி) வைத்துக்கட்டி, முதல் மூன்று நாட்கள் முறிவெண்ணெய் தர்ரைசெய்து நான்காம் நாள் முதல் வசவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். முப்பத்திரண்டு நாளில் சீழியினை விலக்கி பரிசோதித்துப் பார்த்து, பின்னர் 48 வது நாளில், மறுபடியும் சீழியினை விலக்கி கையிதம் செய்ய, இறைவன் அருளாலும் குருவருளாலும் நலம் உண்டாகும்.

முட்டு இயங்கல். முட்டு வர்மத்தில் உணர்ச்சியுற்றால்

143. முறிந்து முன்சொன்ன முட்டு தீர்ந்து
சவ்வகன்று நீங்கிமுட்டு இயங்கு மானால்
பிறிந்து மெய்யங்கலுடன் சிரட்டை யேகி
பிசகிநின்று கொண்டால் சொல்லக் கேளு
குறியான சிரட்டையதை கூண்டல் செய்து
குணமான சவ்வுக்குள் கற்றல் செய்ய
நெறிசதுர செறுமுனையை நிரப்பில்தாக்கி
நிச்சயமாய் பற்றதினை பதியி லூழே.

கபோலி என்பானது சவ்வகன்று இடம் பெயருமானால், அல்லது முறிந்தால் குளிர் காய்ச்சல் முப்பத்தாறாம் நாளில்

உண்டாகும். பெருமூச்சு உண்டாகும். முட்டு அசைவு உண்டாகும் போது தாங்க முடியாத வலி உணர்வு உண்டாகும். இவ்வென்பினை சரியான தளத்தில் பொருத்தி, பற்றிட்டு, அதன்மீது சதுரத் துணியினை அமைத்து முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். தொன்னூறு நாட்கள் சென்ற பின்பே கட்டினை விலக்கி, ஆராய வேண்டும். இதனுள்ளிருக்கும் நாடியானது அற்றுப்போகும் போது உயிர் பிழைப்பது கடினம்.

**உள்நாடி நரம்பற்றால் நடுமத்தி குண்டிசங்கல்**

*144.* உண்மையுடன் துணியி தனால் வட்ட
முத்திரை ஓதியே நால்சதுரம் போலாச்சு
வெண்மையாய் பதிந்திறுக்கி தாரை செய்து
வயவெண்ணெய் இரண்டு மொன்றாய்
செய்தாயானால் தீமையாய் தொன்னூறு நாளும்
சென்றால் திறமாக சவ்வுறத்து பற்றிப் போகும்
உண்மையாய் முட்டதிலே பெலமுண் டாகும்
ஒதுங்கியே முட்டுவர்மத்தில் உணர்ச்சி யுற்றால்.

*145.* முறிந்தாலோ பெருமூச்சு மிகவே போடும்
முடுக்கியே இயங்குமேல் வலிக்கும் பாரு
தெரிந்துமே காய்ச்சலது குளிர் பனியாம்
சேர்ந்துநிற்கும் முப்பத்தி ஆறாம் நாளில்
அறிந்துடனே சென்றாலோ சுகமுண் டாகும்
மாறியதிலுள்ள நாடி நரம்பென் றாலோ
பிரிந்திடுமே உயிரதுவிம் உடலை விட்டு
பிழையாது என்றுமா முனிவர் சொன்னார்.

*146.* சொன்னதொரு நடுமத்தி குண்டி சங்கி
துகைபெசகி நின்றாலோ சொல்லக் கேளு
வன்னமாய் தலமதிக வைத்துக் கொண்டு
மகிழவே பற்றதினைப் பதியச் செய்து
பின்னாக சதுரப்பந்து வட்ட மொத்து
பிலமாக சதுரக் கணையும் பூட்டி

நன்மையாய் முறிவெண்ணெய் தாரை செய்து
நலமாக தொன்னூறு நாளுஞ் சென்றால்.

147. நாள்சென்றால் உடனேவச வெண்ணெய் தாக்கு
நலமாக மண்டலமே கழிந்த பின்பு
வளம்பெறவே துவாலையது சரியாய் செய்தால்
சவ்வுறைத்துப் பற்றிப் போகும் னு
பாழ்வழியாய் போகாது பெலமுண் டாகும்
பற்றிநிற்கும் குருவருளை அன்பு கூர்ந்து
நாள்வளியே நீநினைத்து கொண்டா யானால்
நலம்பெறவே உந்தனுக்கு அருள்தா னீவார்.

இடுப்பு மூட்டானது இடம் பெயர்ந்ததானால், மூட்டினை சரியாகப் பொருத்தி அமைத்து சதுர வடிவில் அமைந்த துணி மெத்தயினை தளத்திலே பதிய வைத்து, முறிவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். தொன்னூறு நாள் சென்றபின், வசவெண்ணெய் பயன்படுத்தி, துவாலை செய்ய வேண்டும். ஒரு மண்டலம் வரைக்கும் இவ்வாறு செய்ய நலமுண்டாகும்.

காலடியில் குண்டிசங்கல்

148. ஈவதுகேள் காலடியில் குண்டி சங்கி
இடவலமாய் நின்று கொண்டால் பகரக் கேளு
தாயகமாய் குண்டதனை சரிப்ப டுத்தி
தப்பாமலோ ஒவ்வொன்றால் நெருக்கிக் குத்தி
மாயமாய் கணையதினை பின்வி லக்கி
மாறியே மொழியதனை குண்டில் போடு
தூயாமல் குண்டதினை சரிப்ப டுத்தி
சூச்சமாய் பற்றதினை பதியச் செய்யே.

149. பதியவே செய்துமேல் துணியால் சுற்று
பதித்திருக்கி அஷ்டகணம் வட்டம் மோது
துதியாக ஒவ்வொன்றாய் நெருங்கா வண்ணம்
சூச்சமுடன் வைத்துடனே நிலையாய் சேர்த்து

சதிராக பதித்திறுக்கி வைத்துக் கொண்டு
தப்பாமல் முறிவெண்ணெய் தாரை செய்து
குதிகாலில் வலித்திறுக்கி விலி முடுக்கி
கூர்மையாய் தளர்ச்சி ஒன்று பூட்டே.

150. பூட்டியே மூன்றுநாள் கூடிப் பாரு
புகழாக தொன்னூறு நாளுஞ் சென்றால்
சூட்டியே கையிதமும் செய்து கொண்டால்
சுகம்பெறவே சவ்வுறைத்துப் பற்றுப் போகும்
வட்டமாய் குருபரனே மனக்கண் ணாலே
வணங்கியே கண்டு குருதியான செய்ஈது
நட்டமாம் முறுகாயம் மர்ம காயம்
நலமாக தீருமென்று நாதன் சொன்னார்.

கணுக்கால் எலும்புகள் பிசகினால் பதமாக அவற்றை எடுத்து, சரியான தளத்திலே பொருத்தி உள்ளங்காலிலே தட்டி, விரல்களை நீவிவிட்டு, மொழியினை சரிப்படுத்தி பற்றிடவேண்டும். அதன்மீது துணியால் சுற்றி எட்டுகொம்புகள் வைத்து சுற்றிக்கட்டி, முறிவெண்ணெய் தாரைசெய்து மூன்றுநாள் வரைக்கும் அக்காலை நிறுத்தி அமைத்து வைத்திருக்க வேண்டும். இவ்வாறு செய்ய 90 நாளில் குணமாகும்.

குதிகால் குண்டு விலகினால்

151. நலமாகும் குண்டடியில் குதிரை நேர்மேலே
நாடியே குண்டுமணி நிலைகொண் டப்பா
பிலமான குண்டுமணி விலகு மானால்
பேசறிய கையதினால் பிடித்து சேர்த்து
நிலையாக ஒவ்வொன்றில் பற்றல் செய்து
நேர்மையாய் பற்று நெருங்கா வண்ணம்
பலமாக பழந்துணியால் சுற்றிப் போடு
பிசகாமல் பஞ்சண்ண பெருக்கி செய்யே.

152. பெருக்கியிடை பின்கலையில் நெருக்கி டாமல்
பேசுமுன் நரம்பின் நடுநி லையில்
திருக்கியே இசங்கிடா தருளற்றா போலே
திறமாக பதித்திறைக்கி பதமாய் பூட்டி
பதுங்கியே உள்வெள்ளை கடியச் சென்று
வளமாக செய்துமே மேல்மூட்டு முனை
மருவியே பூட்டிநீ வைத்துக் கொண்டு
வளமான முறிவெண்ணெய் வைத்திரு சூட்சம்

153. சூச்சமாய் தாரையது செய்து கொண்டு
துணிவாக எட்டுநாள் கூடிப் பாரு.
ஆச்சரிய மாகவே தொன்னூறு நாள்
அடவாக வசவெண்ணெய் தாரை செய்ய
கூச்சலுடன் சவ்வுறைத்து பற்றிப் போகும்
கூர்மையாய் பலமுண்டாம் நலமும் சேரும்
நீச்சலுடன் துவாலையது நிசமாய் செய்து
நிலையாக கையிதமும் செய்து கொள்ளே.

குதிகால் எலும்புகள் நிலைபிசகிக் கொள்ளும்போது கையினால் பிடித்துச் சேர்த்து ஒவ்வென்றினையும் பற்றிக்கொள்ளும்படி செய்து அதிகம் நெருங்கிடாவண்ணம் துணியால் இதமாக சுற்றி நரம்புகள் பிசகிடாவண்ணம் கால்வெள்ளை வழியாக துணியினை இழுத்து மேல்மூட்டினையும் சேர்த்துக்கட்டி முறிவெண்ணெய் தாரைசெய்ய வேண்டும்.

எட்டு சென்றபின் வசவெண்ணெய் பயன்படுத்தி 90 நாள் வரையிலும் மருத்துவம் செய்ய சவ்வுறைத்து பலமுண்டாகும்.

**உள்சவ்வு மணி முறிதல்**

154. கொள்ளவே உள்சவ்வு மணிமு றிந்தால்
கூர்மையினால் பதிமூன்றும் பதினெட் டுக்குள்
வில்லவே மரணமாகும் இதுவே சொன்னோம்
மேவியே பலகாலம் செய்திட் டாலும்

உள்ளான பிராணனது குளித்தெழுந்து
தொக்கே என்றமறிச் சுடலை தேகம்
கள்ளமாய் போகுமுன் மாமுனிவர்
காசினியோர்க் குரைத்த உபதேசம் பாரே.

கபோலி என்ற எலும்பினூடே இணைந்திருக்கும் உள்சவ்வுமணி முறிந்தால் சரியாக 13 அல்லது 18 நாளில் மரணமாகும். இதைவிடுத்து மருத்துவம் செய்தாலும் பயன் இருக்காது.

குறிவெள்ளை ஓர் முறிவு

155. உபதேச முமாகும் குறிவெள் ளைதனில்
ஓர்மதின் குழியருகில் விசைகொண் டாலோ
சீபாதமா கீறிமுறி கொண்டு தானால்
செருவியர்வை ஆகியே மூன்றாம் நாளில்
இருமலுடன் கண்காணா திரளு முண்டாம்
இக்களுடன் வியர்வைகமம் எங்கும் உள்ளில்
நவநாளில் இருபத் தெட்டில் சாவான்
நன்றாக மனமுரைத்து நாடிப் பாரே.

156. நாடிநீ பார்ப்பதற்கு சூச்சா சூச்சம்
நாதனால் குருபரனைக் கண்டு கொள்ள
சாடியே மனதென்றால் மதிப்ப டுத்தி
தயவாக கதியான குருபூஜை செய்து
கூடிநீ ஒன்றாக மனமு ரைத்து
குருபூஜை தீர்ந்துஉன் குருவை நீயும்
வாடியே கண்டுகண் டிருத்தல் செய்து
வளமாக பிராணகலை நாடி நாதம்.

157. நாதமுடன் பஞ்சவர்ண சூச்சா சூச்சம்
நலமாகக் கண்டுநல முறிவு காயம்
ஓதியே வர்மங்கள் எல்லாம் கண்டு
உண்மையாய் செய்திடவே இருத்தல் தட்டல்

வீதியிலே குருநிலையாய் செய்து கொண்டால்
வெளியாகும் உந்தனுக்கு இருளொன் றில்லை
பாதமலர் உனக்குப கர்ந்த தென் று
பாவித்து வைத்துகுரு பாதம் போற்றே.

வெள்ளை வர்மத்தில் முறிவு ஏற்பட்டால் தசையானது கீறி முறிவு வெளிப்பட்டதானால் பெருகியே வியர்வை உண்டாகும். மூன்றாம் நாளில் இருமல் உண்டாகும். கண்கள் இருண்டு கொள்ளும். விக்கல், வியர்வை, கபம் இவை பெருகும். 28 ம் நாளில் மரணமாவான்.

சூச்சா சூச்சமான நாதன் குருபரனை கண்டுகொள்ள மனதினை ஒருமைப்படுத்தி, பணிந்து அவனேக் கதியென் று குருபூஜை தீர்ந்து, குருவை எந்தக் கணமும் மனக்கண்ணால் கண்டிருக்க, பிராணகலை நாடி நாதம் பஞ்சவர்ண சூச்சம் இவைதெரிந்து காயம், ஓதரிய வர்மம் நன்மையாய் செய்யவே இருத்தல் தட்டல் இவை நொடியில் செய்ய நலமாகும். உனக்கும் கேடு ஒன் றும் இல்லை. இறை பாதமலர் இதை பகர்ந்ததென் று பாவித்து குருவினைப் போற்றுவாய்.

**வலக்காலில் பூவெலும்பு**

158. போற்றவே வலக்காலில் பூவெ லும்பு
பொருமியே முறிந்தாலோ சொல்லக் கேளு
ஆற்றவே அங்கமதில் நீரு முண்டாம்
அடவான அசைவையெல்லா மடர்ந்து பின்னும்
தோற்றமாய் தோண்டியுரை லூரல் உண்டாம்
சூச்சமுடன் நிலைசரியாய் வைத்துக் கொண்டு
மாற்றாமல் முறிவெண்ணெய் தாரை செய்து
வருந்தியே கையிதமும் செய்து கொள்ளே.

வலக்காலில் நளக எலும்பானது முறியுமானால் அங்கமெல்லாம் நீர்கோர்த்து, மூட்டுக்களில் வலி உண்டாகும். தேகந்தன்னில் ஊரலும் உண்டாகும். என்பினைச் சரியாக

நிலைப்படுத்தி வைத்துக்கொண்டு முறிவெண்ணெய் பயன்படுத்தி கையிதம் செய்ய வேண்டும்.

*பீச நரம்பு*

*159.* கொள்ளவே நடுவிடையில் நடுவில் தானே
கூர்மையென்ற பீசநரம் பிளகி தாழ்ந்தால்
விள்ளவே நிவர்த்திரண்டும் நேர்மை யற்றத்தில்
மேவியே நீருகொண்டு விதையைச் சாற்றும்
கள்ளமுடன் கண்ணிரண்டும் மேல்புருவம்
கடுகியே இடைக்கிடையே துடிப்புண் டாகும்
துள்ளவே நாளது முப்பத் தெட்டில்
சூச்சமுற்ற அங்கமதில் நீருண் டாமே.

*160.* நீருண்டாம் நாளதுவே அறுபத் தெட்டில்
நிசமாக பனிகுளிரும் நெருக்க முற்று
தாரைதனில் அத்திசுரம் போலே காயும்
தப்பாது தொன்னூறில் மரண மாகும்
வீரமுடன் உள்குறிகள் இல்லா விட்டால்
மேவியே துவாலைசெய் தங்க மெல்லாம்
காரமுற்று பையயருத் தைல முள்ளே
கருத்தாகக் கொண்டுகை யிதமும் செய்யே.

*161.* தயவாக செய்துமே இதங்கள் செய்து
தப்பாமல் கீழிசுக்கம் சார்ந்து செய்து
நயமாக உள்ளங்கை மத்தி பத்தால்
நாடியே தேய்திறு பிசங்கள் செய்து
செயலாக முறுவெண்ணெய் தாரை செய்து
திறமாக கையிதமும் செய்து கொண்டால்
இசலாக நரம்புசங்கல் முறிவு காயம்
இதமாக தீருமென்றறிய இயம்பி னோமே.

இடை நடுவில் ஓடுகின்ற கூர்மை என்று சொல்லப்படும் பீச நரம்பானது தாக்கப்பட்டால் விதையிலே நீருண் டாகும்.

கண்ணிரண்டும் மேலேறி துடிக்கும், நாள் முப்பத்தெட்டுக்குள் அங்கமெல்லாம் நீர்உண்டாகும். அறுபத்தெட்டாம் நாளில் தேகம் குளிரும், சுரம் உண்டாகும். தவறாமல் 90 ம் நாளில் மரணமாவான். சுரம் போன்ற உள்குறிகள் காணாவிட்டால் உடலெங்கும் வர்மத்தைலம் துவாலை செய்து, தைலத்தை உள்ளுக்கும் கொடுத்து, கையிதம் செய்ய வேண்டும். காயதலத்தில், முறிவெண்ணெய் தாரை செய்து, உள்ளங்கையால் தேய்த்துவிட, முறிவு காயம் தீரும்.

## இந்திரிய வர்மத்தில் முறிவு (8th Intercostal Nerve)

162. இசம்பினோம் தாமரையின் வட்டத் தின்கீழ்
இந்திரிய வர்மத்தில் முறிந்திட் டாலோ
நிசம்பெறவே மூன்றாம் நாள் பனி குளிரும்
நெருங்கியே பதிமூன்றில் விசைதா னேறி
விசையான இந்திரியம் திரண்டு ருண்டு
மேகமுடன் உதிரம் போல் ஒழுகும் பாரு
வசமான லிங்கமதில் வழியே காணும்
வடிவதுதான் ரத்தநிற மாகும் தானே.

தாமரைவட்டத்தின் கீழிருக்கும் இந்திரிய வர்மத்தில் முறிந்தாலோ மூன்றாம் நாளில் குளிர் உண்டாகும். பதிமூன்றாம் நாளில் இந்திரியமானது திரண்டு, உருண்டு, மேகமுடன் உதிரம் போல் ஒழுகும். சில வேளைகளில் தூய இரத்த நிறமாகவே வடிவதும் உண்டு. இரத்த நிறமாக இந்திரியம் காணின் 90 ம் நாளில் மரணமாவான்.

### உதிர நரம்பு முறிவு

163. தானாக ரத்தநிறம் போலே காணில்
சாருநாள் தொண்ணூறில் மரண மாவான்
மாணாக கதலிவனம் இடது பக்கம்
வரணமுற்ற உதிர நரம்பது முறிந்தால்
தேனேகேள் திசைநாளில் மரண மாவான்
திசைதப்பி கடந்தாலோ பதினெட் டாம்நாள்

வானான பதியுண்டாம் விறைத்து குன்றும்
வளமான நித்திரையில் சுகம்வ ராமல்.

164. நித்திரையில் சுகமுறா தழலு முண்டாய்
நெருங்கியே மயங்கிலேசா நெடுமூச் சாகி
புத்திகெட்டு மயங்குஞ்சில் வேழ தன்னில்
புண்மையாம் மயக்கமது போடுபோ டென்று
சுத்தியே விறைக்குமடா உணர்வுண் டாமே
சுபமதில் சோரைவற்றி வற்றியே
வறட்சியது மிகவுண்டாகி வளருநாள்
தொண்ணூறில் நோயைக் கேளு.

165. நோயதுகேள் இருமலுடன் பனி குளிரும்
நுண்ணியமாய் விக்கல் வியர்வை
பாயுமே மூக்கில் நீர் பார்த்து
பற்றியே மண்டதனில் ஊரல் உண்டாம்
தேஷமே விந்துஅங்கே தெளிவு றாது
சிக்குமே சுவாசமது சிதறி நின்று
பாயுமே உயிரதும் நூற் றெட்டில்
மாளுமே மாமுனிவர் வகுத்த வாறே.

கதலிவனத்தின் இடப்பக்கம் உதிர நரம்பானது விரணமுற்று முறிந்தால் எட்டாம் நாளில் மரணமாவான். அது கடந்தால் 18 ம் நாளில் மரணமாவான். அதிலும் பிழைக்கில் நித்திரை வராமல் வருந்துவான். முள்ளந்தண்டானது வளைந்து காணப்படும். சுரம், மயக்கம், நெடுமூச்சு, புத்தி தடுமாற்றம், வறட்சி இவை உண்டாகி தொண்ணூறாம் நாளில் இருமல், குளிர், வியர்வை, விக்கல், மூக்கில் நீர் பாய்தல், சிரசில் ஊரல் இவை உண்டாகும். விந்து கலங்கி, சுவாசம் சிக்கி 108 ம் நாளில் மரணம் சம்பவிக்கும்.

**உறி நரம்பின் வட்ட முறிவு**

166. வாறுகேள் உந்திதனி லுறிந ரம்பில்
வட்டமதில் முறிந்தாலோ சொல்லக் கேளு
கூறதுகேள் உன்னியே உறுமும் பாரு
குமுறியே வீழ்மேலும் குடைச்ச லுண்டாம்
தேறியது வாய்பேசாது சிரசில் குத்தும்
திடுதிடனே இருகண்ணும் முழிக்கும் பாரு
வேறியது வாய்வேகம் அனலென்று மேனி
விம்மியே மூக்கடைத்து கண்சி வக்கும்.

167. சிவக்குமே முப்பத்தாறில் மண்டை சினந்து
சிறுசொறி யுடனே சொறியும் பாரு
குவலயத்தில் பித்தனைப்போல் கூச்ச லிட்டு
குத்துள வுண்டாகி கூறும் நாவு
புவனமதில் நாவசையாய் திருகிப் பாரு
புத்திகெட்டு அடிக்கடியே உணர்வுண் டாகும்
மௌனமதில் சிலநேரம் வகுத்துக் காட்டும்
மாறாட்டமாய் பேசும் வகுப்ப றாதே.

168. வகுப்பறாது இருக்குமடா முப்பத் தொன்றில்
மறுகியே குணக்குறியு மாற லாகி
தொகுப்பான முப்பத்தி மூன்றில் கன்னி
சூச்சமுடன் காணுமடா தொகுத்துப் பாரு
மெகுப்பான முப்பத் தேழில் சன்னி
மேவியே நிற்குமடா விறுவி றுத்து
பகுப்பாக எடுத்திருத்தி நிலையில் வைத்து
பகருவேன் கீழ்மேலாய் பகர்ச்சை யாட்டி.

169. ஆடியே நிலையொன்று சரியாய் செய்து
அடவாக கீழ்மேலும் கமத்தி நாட்டி
கூட்டியே கையிதமும் செய்த பின்பு
துவாலையது செய்துமேல் கையி தம்செய்

கூட்டியே தைலமது உள்ளே கொண்டு
குணமாக வசவெண்ணெய் தாரை செய்து
பூட்டியபின் னேமூவாறு நாளும்
பெலமாக செய்துடனே இசங்கல் செய்தால்.

170. செய்தாலோ நரம்புநிலை பின்னல் விட்டு
சேருமே நரம்பெல்லாம் பிசகில் லாமல்
எய்துடனே நடுநிலை கண்டா யானால்
எதிரமருவி யொன்றாய் குணந்தான் பாரு
ஒயிதுடனே பரம குருவருளை நீயும்
ஓதிநீ மனதாலே தியானம் செய்து
வயதுமே கையிதமும் செய்து கொண்டால்
வசமாகும் இம்முறை மாத்திரையாய் செய்யே.

ஏதியின் கீழ்புறத்தில் 3 அங்குலத்திற்கு கீழ் அமைந்திருக்கும், உந்தியில் உறிநரம்பு வட்டத்-தில் முறிந்தாலோ, உடல் உன்னிப்பாயும், உறுமும், குமுறி விழும். மேலும் உடலெங்கும் குடைச்சல் உண்டாகும். அதிகம் வாய் பேசாது. சிரசில் குத்து உண்டாகும். திரு திருவென கண் விழிக்கும். வாய்வு வேகத்தினால் அனல் எழுப்பி, மேனி விம்மி, மூக்கு அடைத்து கண்ணும் சிவக்கும்.

36 ம் நாளில் சிரசு சிவந்து சொறி உண்டாகும். தலையைச் சொறிந்து பித்தனைப்போல் கூச்சலிட்டு அலைவான். உடலெங்கும் குத்தும், உளைவும் உண்டாகும். நாவானது அசையாவண்ணம் திருகிக்கொள்ளும். புத்திகெட்டு முன்னுக்குப் பின் முரணாக பேசவும் செய்வான்.

முப்பத்தோராம் நாளில் முற்கண்ட குறிகுணங்கள் மாறி, முப்பத்து மூன்றாம் நாளில் இவற்றிக்குக் குறிகுணங்களை தோற்றுவிக்கும். முப்பத்தேழாம் நாளில் சன்னி உண்டாகி, உடலெங்கும் விறுவிறுப்பு உண்டாகும். நரம்பினை வசப்படுத்தி, கீழ் மேலாகக் கச்சையால் கட்டி, வசவெண்ணெய் தாரை செய்ய வேண்டும். வர்மத் தைலமும் உள்ளே கொடுத்து, 12 நாள் செல்ல

நரம்புப் பின்னல்கள் விட்டு ஒன்றாய்ச் சேரும். அதன்பின் கச்சையினை அவிழ்த்து கையிதம் செய்ய வேண்டும்.

எதிர்நிரை நரம்பிசங்கல் (Nerve in the Lumbar Plexus)

171. மாத்திரையாய் செய்துவிட இன்னுமொன்று
மைந்தனே உறிநரம்பின் முந்தி ரையில்
சாத்திரம் போல் எதிர்நிரையின் நரம்பி சங்கி
சார்புடனே சோர்ந்துமுறிந் தேங்கு மானால்
பூத்திருந்த அங்க வெழியில் சாடும்
பூண்டிருந்த அறிவெல்லாம் காணா தோடும்
பார்த்திருந்த சூத்திரமே நிலையில் தாளும்
பகர்ந்திருந்த வாக்குநிலை பகருண் ணாதே.

172. பகருண்ணா தங்கமதில் வியர்வை யுண்டாம்
பதியாகும் பனிகுளிரும் வியர்வை யாகும்
உகரவே கூறியது துடிக்கும் தேகம்
உபங்காளம் இருமல்சர்த்தல் ஒன்ப தில்கேள்
பகருவேன் பதினாறும் பதினெட் டாம்நாள்
பகற்ச்சையிலே மரணமது தப்பி நின்றால்
இகரவே தைலமது உள்ளே கொண்டு
இன்பமாய் துவாலையது இதமாய் செய்யே.

173. இதமாக செய்துடனே கையி தம்செய்
யேகியே நடுநிலையில் இருத்திப் பாரு
விமான நரம்பெல்லாம் ஒன்றாய் சேரும்
வித்தகனே கண்டுநீ பின்னல் செய்து
மதியான இடகலை பின்கலை சுழியும்
மாறால்தின வழியறிந்து தேர்ந்து செய்தால்
பதமாகும் நிலை சரிப்பட் டேகும்
பகருவேன் இன்னுமொரு சூச்சா சூச்சம்.

உரி நரம்பின் முன்பக்கம் இருக்கும் எதிர்நிறை நரம்பானது முறியுமானால், அறிவு மயங்கி, சொற்கள் தடுமாறும், வியர்வை

உண்டாகும். தேகம் துடிக்கும். உடல் குளிரும். இருமல், சர்த்தல் இவை உண்டாகும். ஒன்பதாம் நாளிலிருந்து பதினெட்டாம் நாளில் மரணமாவான். தப்பி நின்றால் உள்ளே தைலம் கொடுத்து, வெளியே துவாலை செய்து தடவி, நடுநிலையில் இருத்த நரம்புகள் ஒன்றாய்ச் சேர்ந்து நிலைப்படும். எதிர்நிரை நரம்பிசங்கல் மிகுந்த துன்பம் தருவதாக அமைந்த போதிலும், வர்மம் கொண்டவரை நேராக அமரச்செய்து, மேற்குறிப்பிட்டுள்ள சிகிச்சை செய்ய, நோயாளி குணமடைவான்.

### வில் நரம்பு விசை தளர்தல் (Leftern Nasal Nerve)

*174.* இன்னுமொரு சூச்சாதி சூச்சங் கேளு
இடகலையின் உள்ளுறைந்த வில்ந ரம்பு
மின்னியே விசைவிட்டு முன்பின் னாகில்
மேவியே மூன்றாம்நாள் குளிர் பனியாம்
வன்னிபோல் காயம் உதட்டில் மாறும்
மீறியே ஆயிரத்திரு பத்தி ரண்டில்
பின்னதிகம் காய்ச்சலதி வியர்வை உண்டாம்
பெலமாக வாதமுற்று பெலக்கே டுண்டாம்.

*175.* பெலங்கொண் ணாதிருக்கம் நீர்பதியி லுற்று
பெருகநீ ரொழிவுபோல் நீரி றங்கும்
நிலையான பிருவதின் குறுகலம் போலே
நெருக்கமுற்று குறுக்குமிடா கைசு ழற்றும்
நலமாக அடிக்கடியே உணர்வு மாறும்
நாடியே உணவருந்த நாட்ட மாகும்
துலங்கியே இழியுமிக வாடை கொள்ளும்
தூச்சமுடன் தொண்ணூறில் மரண மாவான்.

*176.* தொண்ணூறாம் நாளதிலே மரண முண்டாம்
தூச்சமாய் வேருயிடன் முறிந்திட் டாலோ
விண்ணற்ற உயிரதுவும் ஈரா றாம்நாள்
மேவியே புறம்புக்கு மென்று

நண்ணுற்ற நிலையறிந்து சொன்னோம் அப்பா
நாடியே இந்நூலில் நலமாய் பாடி
கண்ணொழிபோல் நன்னூலால் அறிந்து சொன்னோம்
கருதியேநீ யறிந்து கண்டு கொள்ளே.

இடகலை நரம்பில் அமைந்த வில் நரம்பானது பிசகமானால் மூன்றாம் நாளில் தீ போல் உடம்பு காயும், உதடு கறுத்து ஆயிரத்து இருபத்திரண்டாம் நாளில் வாதம் உண்டாகும். நீரிழிவு நோயாளியைப் போன்று நீர் இறங்கும். கைகாலை ஆட்டி நடக்கும். அடிக்கடி உணர்வு மாறும். அதிகமான உணவை உட்கொள்ள நாட்டமாகும். தொன்னூறாம் நாளில் மரணமாவான். வேறுயிடம் முறிந்தாலோ பனிரண்டாம் நாளில் மரணம் உண்டாகும். முன் இந்நூலில் கூறியுள்ள முறைகளையெல்லாம் ஆராய்ந்து அதில் கூறியுள்ள மார்க்கங்களைக் கடைப்பிடிக்க நலமாகும்.

## முள்ளெலும்பு (Spinal Cord)

*177.* கண்டுநீ முள்ளெலும்பு எழுபத்தி ரண்டில்
கடினமாய் இடியடிகள் கொண்டு தானால்
விண்டுமேல் கண்டமதில் இதம்வ ருத்தி
வித்தகனே துவாலைசெய் தங்க மெல்லாம்
தங்கமே கணையொன்று பதியச் செய்து
கவர்ந்துமேல் நோய்நிலையும் சரியாய் செய்தால்
தொண்டுரையாய் முறுவெண்ணெய் தாரை செய்து
சுகமாக கையிதமும் செய்து பார்த்தால்.

*178.* பாருநீ எழுநூறில் நட்டெல் லுக்குள்
பரபரனே ஊறுமடா வறண்டு சவ்வில்
நீரேற்றியே பிழப்பு அதிக முண்டாய்
நிசம்வியர்வை யொப்பம்கபம் வெழுக்கு மேனி
வாரேனி சர்த்திக்கும் பெருவயிறு போல்
மலசல்வும் இறுகுமடா தடைபட் டங்கே
கூரனவே எண்ணூறில் மரண மாவான்
குருவருளை அனுதினவும் கூர்ந்து பாரே.

179. கூரேனி அரையருகில் கோழிக் குளிடன்
    கூர்மையென் திரைமுறிந்தால் சேரேனி அஞ்சேழில்
சேர்ந்துபனி குளிருடனே பொரும லுண்டாம்
    பேர் துள்ளி அளைப்புடனே வியர்வை கபம்
பார்த்துமே புத்திகெட்டு பொருபொ ருக்கல்
    சார்ந்துநடை பதறியே நடுக்கம் பேசும்
தன்னிலே உணர்வற்று சரம்பிசகி பேசும்
    பேசுமிடா குன்மமது வயிற்றி லேறும்.

180. ........................................
    பெலமாக பதினெட்டில் விக்க லுண்டாம்
பாசுபோல் நீர்தனிலே காணும் பாரு
    பதித்தநாள் முப்பத் தெட்டில் சாவான்
வாசமுடன் பொதிகமலை சார்பு தன்னில்
    மகிழ்ந்திருந்து வடநூலை ஆய்ந்து பார்த்து
நேசமுடன் இந்நூலை தமிழாய் செய்தேன்
    நிச்சயமாய் பண்டிதர்க்காய் நிகழ்த்தி னோமே.

முள்ளெலும்புத் தொடரில் அடிபடுதல் சாதாரணமாக நிகழ்வதாயினும் அதன் விளைவு சற்று கடினமானதாகும். முள்ளெலும்புத் தொடரில் அடிபட்டு, நோய் கொள்ளுமானால் கொம்பு வைத்து கட்டி, உடலெங்கும் முறிவெண்ணெய் தாரைசெய்து, கையிதம் செய்ய வேண்டும். எழுநூறாம் நாளில் முதுகெலும்பினுள் ஊரல் தோன்றி, திரவம் சுரக்க ஆரம்பிக்கும். வியர்வை அதிகம் உண்டாவதுடன் கபம் உண்டாகி, மேனி வெளுக்கும். சர்த்தல் உண்டாகும். நட்டெல்லானது வறண்டு, சவ்வில் நீரேறி இளைப்பு உண்டாகும். மலசலம் அடைத்து பெருவயிறு போல் வயிறு வீங்கிக் காணப்படும். நோயாளி எண்ணூறாம் நாளில் மரணமாவான்.

**பகர்ச்சை வர்ம முறிவு**

181. நிகழ்த்தினார் சார்முதுகில் பகர்ச்சை வர்மம்
    நெருங்கியே குளிர் பனியும் வியர்வை
புகழ்த்தியே வெடுவெடனே வெட்டும் கண்கள்
    புத்தியது மயங்குமுடன் உணர் வுண்டாம்

பகையான பதிமூன்றில் மரண மாவான்
பகருநாள் கூடந்துபதி னெட்டில் கேளு
வகையான அமிர்தமுக் கூட்டெண் ணெய்வரும்
தலங்கள் தனில்விட்டு துவாலை செய்து

182. துவாலையது கையிதமும் செய்து கொண்டு
துச்சமுடன் முறுவெண்ணெய் துவாலை செய்ய
நிவாலமுடன் குருபரனை அந்தி சந்தி
நினைவறிந்து தாரையது நினைவாய் செய்ய
கபாலமதில் செய்பலதும் காய மெல்லாம்
கருவான பகர்ச்சை வர்மம் நரம்பின்
காயம் நிவாலமுடன் பலகா யங்கள்
நெருங்கியே வர்மமெல்லாம் தீருந் தானே.

அனாமிகை என்பின் அருகிலுள்ள பகர்ச்சை வர்மத்தில் முறிவு ஏற்பட்டு, அனாமிகை என்பு பாதிக்கப்பட்டால் உடல் குளிரும் மயங்கி, சிறிது நேரத்தில் விழிக்கும். கண்கள் வெடுவெடென வெட்டும். பதிமூன்றாம் நாளில் மரணமாவான். இவ்வாறு கூறிய பதிமூன்று நாட்களும் கடந்து உயிர் வாழ்வானாகில், பதினெட்டாம் நாளில் அமிர்த முக்கூட்டெண்ணெய் வர்மத்தலந்தன்னில் துவாலை செய்து, பின் இருநாள்விட்டு, முறிவெண்ணெய் துவாலை செய்து, கையிதம் செய்ய நரம்பின் காயம் தீர்ந்து நலமாகும்.

### கீரி நரம்பு முறிவு

183. தீருமடா கழுத்தடியின் பக்கந் தன்னில்கீரி
நரம்பது முறிந்தால் தேக மெல்லாம்
சேருமடா நிறம்வேறாய் திடுதிடென்று தெறிக்கும்
மேல்குன்னு மண்டை யெரிச்சல் போலாம்
பாருமடா நட்டெல்லு நேர்கு றுக்கே
பனியளலாய திகமுற்று பல்வாய் நாறும்
சீருமடா சன்னியுண்டாம் மதிம யங்கி
சிக்கனவே உணர்விட்டு உறக்கம் போலாம்.

184. உன்னியே உணர்வுண்டாம் ஒன்பதி லேதான்
உறப்பாக விசமுற்று சன்னி சீதம்
மின்னியே வரைந்துநடு காய முண்டாம்
வித்தகனே சுவாசமது மேல்வ லிக்கும்
நன்னியே இருபத்தி யெட்டாம் நாளும்
நாடியே கடந்தாலோ முப்பத் தாறில்
துன்னியே உயிரதுவும் மேலோ கத்தில்
சூச்சமாய் சேருமென்று தொகுத்தார் பாரே.

அடிக்கழுத்தின் ஓரத்தில் கீறி நரம்பானது முறிந்தால் அங்கத்தின் நிறம் மாறி, அங்கம் துடிக்கும். உடல் குன்னும், மண்டை எரியும், உணர்விழந்து காணப்படும். நட்டெல்லு குளிரும், வாயில் ஒருவித நாற்றம் காணும். சன்னி உண்டாகும். உணர்வு கெட்டு உறங்கும். ஒன்பதாம் நாளில் சன்னி உண்டாகும். உடல் முழுவதும் வலி ஏற்படும். இளைப்பு உண்டாகும். இருபத்தெட்டாம் நாளில் மரணம் சம்பவிக்கும். கடந்தாலோ முப்பத்தாறாம் நாளில் உயிர் பிரியும்.

### நடுநிலை முறிவு

185. பாரென்ற நடுநிலையில் முறிந்து தாகில்
பகருவேன் மூன்றாம் நாள் மரண மாகும்
கூறென்ற மானிடர்க்கே குறித்த நாள்தான்
கூர்மையாய் விட்டங்கே கடந்த தாகில்
சீரென்ற ஐந்தாம்நாள் மரண மாவான்
திட்டமாய் சேர்ந்துரைத்தார் இந்நூல் பாரு
வாரென்ற வடநூலை தமிழாய் செய்தேன்
மகிழ்ந்துநீ இந்நூலை வகுத்துப் பாரே.

நடுநிலை என்பான கசேருக்கொடியில் முறிவு உண்டானால் மூன்றாம் நாளில் மரணமாவான். இம்மூன்று நாள் கடந்தாலோ 5 வது நாளில் மரணமாவான்.

பின் முடிச்சு நரம்பு

186. ஆகுமே வேகமுற முறிந்து தானால்
அருவையரே இருபத்தெட்டில் மாளும்
ஓமென்று இசங்கிவல னிடமுற் றாலோ
உத்தமனே நடுநிலையை திரிவீர் திருவிரலால்
வாமொன்று மருவியே நிலையில் தாக்கு
வசமாகும் நரம்பெல் லாம்திரை நிலையில்
கோமென்ற உடனேதான் பற்ற றுத்து
குருபாதம் போற்றியே நிலைச ரியாய்.

187. நிலைசரியாய் வைத்துமுறு வெண்ணெய் தாக்கு
நெருங்கவே பழந்துணியால் சுற்றி வைத்து
துலங்கியே முறுவெண்ணெய் தாரை செய் து
சொல்லுநாள் அறுபதிலே சூச்ச மாக
பெலமாக துவாலைசெய்து உடலில் சிக்க
பெருகியேபின் முடிச்சி நரம்பின் காயம்
தலைநெருங்க காயமொரு நடுகா யங்கள்
தறுகா து எலும்பின் நிலைகா யம்போம்.

188. காயமது போகுமடா குருபரனும்
கதிர்மதியும் ஒன்றுநிலை சரியாய்
தூயவெளி யாகியங்கே சுடர்தான் போன்று
சூச்சமுடன் உயிரதுவும் நின்றே
பாயுமந்த சிக்கலுடன் பகர்ச்சை மாறும்
பதியான முப்பொருளும் ஒன்றாய் வாழும்

கழுத்து சாலத்தில் அமைந்துள்ள பின்முடிச்சு நரம்பானது இடம் பெயர்தல் என்பது அபாயமானது. நோயாளி இருபத்தெட்டாம் நாளில் மரணமாவான். நரம்பானது வலஇடமாக மாறி நின்றாலோ, நடுவிரலால் அதை நிலைப்படுத்தி, நரம்புதனை நன்றாகத் தடவி, சரியான நிலையில் அமைத்து, முறிவெண்ணெய் துவாலை செய்ய வேண்டும். பின்முடிச்சு நரம்பு இடம்பெயர்ந்த இடத்தை நன்றாகக்கட்டி, முறிவெண்ணெய் தாரைசெய்து, கையிதம்

செய்ய வேண்டும். அறுபது நாள் சென்றபின்பு, கட்டினை அவிழ்த்து சோதனை செய்து பின்பு, அதே எண்ணெய் பயன்படுத்தி, புதிதாகக் கட்டுப்போட வேண்டும். இவ்வாறு செய்ய நரம்பின் தொடரானது தன்னிலையில் அமையும். இவ்விதம் முறைப்படி கையிதம் செய்ய, இருபத்தெட்டாம் நாளில் மரணம் சம்பவிப்பதைத் தவிர்க்கலாம்.

**பக்கமிடை முறிவு**

*190.* சாற்றினோம் பக்கமிடை முறிந் தாகில்
தப்பாமல் சேனீர்போல் நீர் ஒழுகும்
தெற்றியே சிரம்வெறைக்கும் சிரசு வெட்டும்
சிக்கெனவே பல்பூட்டும் சிமைத்துக் குன் றும்
சேற்றிலே விழுந்தபுழு போல்து டிக்கும்
திறமான வியர்வையுடன் சன்னி சீதம்
மாத்திரையாய் காணுமிடா பதினெட் டாம்நாள்
மாளுமுன் மாமுனிவர் வகுத்துச் சொன்னார்.

பக்கமிடையில் நடுவில் முறிவு ஏற்படுமானால், உடனே ஒருவித திரவம் சுரந்து ஒழுக ஆரம்பிக்கும். சிரம் விரைக்கும், சிரசில் கட்டி ஏற்பட்டு சிரம் வெட்டும். பல் கட்டும், உடல் வளைந்து காணும். சேற்றிலே விழுந்த புழுப்போல் அங்கம் துடிக்கும். அதிகமான வியர்வையுடன் சன்னி, சீதம் காணப்படும். காய ராஜாங்க எண்ணெய் தாரைசெய்து, முறைப்படி வர்மக் கையிதம் செய்ய நலமாகும் என்று அகத்தியர் செப்புகின்றார்.

**கதலி வனம் நடுவில்**
***(நெறிவர்மத்தில் முறிவு)***

*191.* சொன்னதொரு கதலிவனம் இடை நடுவில்
சூச்சமுடன் நெறிவர்மம் முறிந்து தாகில்
பின்னையொரு கையிசங்கி பில்கொட் டாது
பிலமான தீயழல்போல் வன்னி காந்தும்
பின்னையுமோ மேனியெல்லாம் காந்த லுண்டாம்
பிசகியே புலம்புமடா பதினெட் டாம்நாள்

வன்னேறம் காந்தல் விட்டதி யுண்டாம்
மலஞ்சலவும் அடைத்துவயிறு பொருமுந் தானே.

192. பொருமியே நிற்குமடா புனல்வ டிந்து
புத்திகெட்டு மயங்குமதி வியர்வை யுண்டாம்
வருந்தியே ஐயாறு ஐயெட் டுக்குள்
மரணமது கடந்தாலும் சொல்லக் கேளு
திருந்தியே காயரா ஜாங்க எண்ணெய்
திறமாக தாரையது செய்து பின்னே
திரும்பியே கையிதமும் செய்து கொண்டால்
செயலாகு மென்றுமுனி செப்பி னாரே.

கதலிவனத்தின் அருகில், நெஞ்செலும்பின் நடுவிற்கு அருகில் உள்ள நெறிவர்மம் முறிந்ததானால், பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள கரமானது தன் முறையான செயலாற்றும் சக்தியை இழக்கும். அங்கம் முழுவதும் தீப்போல காந்தும். பதினெட்டாம் நாளில் உணர்விழந்து வாய் உளறும். மலசலம் அடைத்து வயிறு பொருமிக் காணப்படும். கண்களிலிருந்து நீர் வடிந்து, அறிவு மயங்குவதுடன் மிகு வியர்வையை ஏற்படுத்தும். இக்குறிகுணங்களால் பாதிக்கப்பட்டவன் முப்பது முதல் நாற்பது நாட்களுள் மரணமாவான். மரணம் சம்பவிக்காவிடில் காய ராஜாங்க எண்ணெய் பாதிக்கப்பட்ட இடத்தில் தாரை செய்து கையிதம் செய்ய நலமாகும்.

திவளை வர்மம்

193. ஒன்பதிலே தவளையுட தேகம் போல
ஒப்பரிய நாக்கு பச்சைநிறம் வடிவாம்
வம்புடனே காணுமிடா மின்னல் போல
மருவியே நாற்பத்தெட்டில் சன்னி
துன்பமுற்று காணுமிடா அறுப தில்தான்
சூச்சமுடன் காணுமிடா சூச்ச மாக
இன்பமாக கடந்தாலோ காயராஜாங்க
எண்ணெயது செய்துகொண்டு தாரை செய்யே.

194. செப்பினார் காறையின்கீழ் தவளை வர்மம்
சீர்கெட்டு முறிந்தாலே தவளை தன்னில்
ஒப்பினியாழ் தாழலாட்டம் போலே காணும்
ஓதரிய சன்னிரண்டில் உற்ப னம்போல்
தப்பியது கிறங்கலுடன் நடுக்கு மேனி
கணையான தேகமெல்லாம் கமல வன்னி
வெப்புடனே காணுமடா விழி களிரண்டில்
மிகுந்துவரும் முப்பத் தொம்பதில் கேள்.

195. மேல்தாரை செய் துமே கையிதம் செய் து
மேவியே தவளைவர்மம் நரம்பின் காயம்
மேல்காயம் முறிகாயம் நடுவின் காயம்
மிகுந்தவொரு விசகாயம் வர்ம காயம்
தலமதி லுள்ளபல காய மெல்லாம்
தப்பாமல் தீருமென்று மாமுனிவர் ஞாலம்
அதிலுரைத்த நூல் நாட்டி னார்காண்
நலம்பெறவே இந்நூல் சூத்திரத் தில்தானே.

இரண்டாவது பழுவிடையில் காணப்படும் திவளைகாலத்தில் வர்மம் கொண்டதானால், பாதிக்கப்பட்டவனின் நாக்கு பச்சைநிறமாக மாறுவதுடன், கண்கள் மின்னல் போல மருவிக்காணப்படும். நாற்பத்தெட்டாம் நாளில் சன்னிகாணும். இக்குறிகுணங்கள் அறுபது நாட்கள் காணப்படும். காயராஜாங்க எண்ணெய் தாரைசெய்து, கையிதம் செய்ய வேண்டும். இவ்வர்மம் கொண்டோர்க்கு தேகம் முழுவதும் வன்னி போல் காயும். காய ராஜாங்க எண்ணெய் தாரைசெய்து, முறைப்படி கையிதம் செய்ய திவளை வர்மத்தில் காணப்படும் நரம்பின் காயம், முறிவுகாயம், நடுகாயம், விசகாயம், வர்மகாயம் ஆகியவற்றுடன் தலமதில் காணப்படும் பல காயங்களும் தீர்ந்து விடுமென்று இந்நூல் முனிவர் கூறியுள்ளார்.

## இரத்த காயத்தின் முறிவு

196. தாமேகேள் ரத்தா சயத்திடை நடுவில்
தக்கதொரு குதிரம்படுத்தி நரம்பி லேதான்
தாமேதான் முறிந்தாலோ இலத்த மெல்லாம்
தாரைவிட்டு பாய்தலது தவறிக் குன்றும்
போமேகேள் நவதுவார வழியே இரத்தம்
பொருமிகை இசைவுதனில் நீர்தான் மேவி
ஆமேகேள் சிவந்து அஞ்சில் விஷநீர்
போலேம ருவியேதேக மெல்லாம் காணுமே.

197. காணுமிடா மூவெட்டில் வாய் வழியே
கடுகியே இரத்தமது கழுகிக் காணும்
வேணுமென்ற இருபத்தி அஞ்சாம் நாளில்
மேன்மையாய் மரணமது வருந்திக் காணும்
காணுவாய் நாள்கடந்து மதியுற் றாலோ
அப்பனே தருண இராஜாங்க எண்ணெய்
வேணுமட்டு அருந்தியே கையிதம் செய்
வித்தகனே நிலகாயம் நரம்பின் காயம்.

198. நரம்பினுடைய காயமொடு எலும்பின் காயம்
நாடியே வர்மமொடு நடுகா யங்கள்
விரைவாக பைத்தியமும் நீர்கா யங்கள்
மேவியே பாண்டுகுன்மம் பீலிகை யோடு
விரைவான உதர ரோகங்கள் மேகம்
வெட்டையோடு சிலந்திமறு உஷ்ண காயம்
திரமான கிரிசமொடு பலநோ யெல்லாம்
தீருமென்று மாமுனிவர் திடஞ்சொன் னாரே.

199. மாமுனிவர் வகுத்தநூல் வடநூல் ஆய்ந்து
வகுத்துரைத்த வர்ம சூத்திரத்தை நன்றாய்
ஓமுறையில் நின்றிருந்த வர்ம மெல்லாம்
ஓதினேன் முறிவுகண் டகரா திக்குள்

வரமுறையில் சூத்திரமாய் பாடி வைத்தேன்
வனமுறிவு சாரிநிகுண் டகரா திக்குள்
நானுரைத்த நா லுதனை நன்றாய் பாரு
நாடியே நின்றதொரு சூச்சா சூச்சம்.

200. நின்றதொரு சூச்சா சூச்ச மெல்லாம்
நிகழ்த்தினேன் இந்நூல் சூத்திரத்தில் தானும்
என்றதொரு மாத்திரையும் நடுநி லையும்
இசங்குமொரு கோலமணி குருவின் சூட்சம்
சென்றெடுத்துக் கண்டாலோ மனக்கண் ணோட்டம்
செப்பரிய பரநிலையும் சரியாய் காணும்
அன்றரூபமாய் நின்றகுரு பாதம் போற்றி
அப்பனே முறிகாய மெல்லாம் பாரே.

நெஞ்சென்பின் கீழ் அந்தத்தில் உள்ள ஏதியின் உட்புறத்தில் அமைந்திருக்கும் இந்நரம்பு முறிவுற்றால், அங்கத்தில் உள்ள நவதுவாரங்களின் வழியாகவும் இரத்தம் தாரையாகப் பாயும். இதனால் பிசித நீரானது மேனியில் காணப்படும். உடலானது சில்லிட்டு, சிவந்து, விஷநீர் தேகமெல்லாம் இருப்பது போல் காணப்படும். இருபத்து நான்காம் நாளில் வாய்வழியாகக் கருமை நிறமான இரத்தம் வெளிப்பட்டு, அடுத்த நாளில் மரணம் சம்பவிக்கும். இது கடந்து நோயாளி பிழைத்திருப்பானாகில், தருண இராஜாங்க எண்ணெய் உள்ளுக்கும் கொடுத்து, மேலே தாரை செய்து வர்மக் கையிதம் செய்ய இம்முறிவு குணமாவதுடன், நரம்பில் ஏற்படும் காயங்கள், எலும்பு முறிவும், அவற்றினால் ஏற்படும் காயங்களும் பைத்தியம், நீர்காயங்கள், பாண்டு, குன்மம், மேலும் வயிற்றில் ஏற்படும் மற்ற ரோகங்கள், மேகம், சிலந்தி, உஷ்ண காயங்கள் முதலான பல நோய்களும் தீருமென மாமுனிவரான அகத்தியர் கூறியுள்ளார்.

### பஞ்சவர்ண நடுவில் அக்கினி நரம்பு

201. பாரப்பா பஞ்சவர்ண நடுவெ லும்பில்
பக்கத்தி னருகில் அக்கினி நரம்பில்
வீரமாய் முறிந்தாலோ தேகம் காந்தும்
.......................................................
ஊருமே எறும்பூர்தல் போலே தோன்றும்
உத்தமனே கதிரிட்டு உன்னிக் கொள்ளும்
கூறுமே அழலேறி வேக முண்டாம்
குமறியே காந்துமே அங்க மெல்லாம்.

202. அங்கமெல்லாம் காந்தலுண்டாம் ஆறாம் நாளில்
அறியவே நின்றதொரு அறிவா ராய்ந்து
திங்களிலே புராந்தனைப்போல் திசையெட் டேறும்
சேர்ந்துமேல் திரைமடக்கி கச்சை கட்டி
தூங்கவே முறுவெண்ணெய் தாரை செய்து
சுகமாக தடவியே இதங்கள் செய்ய
திங்களிலே சுகமுண்டாம் அமிர்த முக்கூட்
டெண்ணெய்தனை உட்கொள்ளத் தீருந் தானே.

பஞ்சவர்ணக் குகையாகிய நெஞ்சறையின் நடுவில் உள்ள நெஞ்சென்பிற்கு அருகில் காணப்படும் அக்கினி நரம்பில் முறிவு ஏற்பட்டால் அங்கம் முழுதும் காந்தல் உண்டாகும். உடலில் எறும்பு ஊர்தல் போன்ற உணர்வு உண்டாகும். மனப்பிறழ் நோயுள்ளவனைப் போல செயல்படுவான். இந்நோயாளிக்கு சீழி வைத்துக்கட்டி, முறிவெண்ணெய் தாரைசெய்து, கையிதம் செய்து அமிர்த முக்கூட்டெண்ணெய் உள்ளே கொடுக்க ஒரு திங்களில் குணம் உண்டாகும்.

### முன்னெலும்பின் முறிவு

203. தானான நட்டெலும்பின் முனையெ லும்பில்
தறிகியே முறிந்தாலோ தாக முண்டாம்
வானான நீர்வேண்டு பைத்தி யம்போல்

வார்த்தைசொல்லும் அக்கமுண்டா மிடிக்குமண்டை
ஆறான பைய்யரு தைல முள்ளே
அருந்தியே கணையொன்று நேர்ப டுத்தி
காணான கச்சையது இறுகக் கட்டி
கருணையாய் கையிதனால் இதமும் செய்யே.

கசேருக் கொடியில் காணப்படும் வம்சிகளில் உள்ள விகங்களானது முறிவுற்றால், அதிகமான தாகமுண்டாகும். மனப்பிறழ் நோய் உள்ளவனைப் போல சத்தம் எழுப்புவான். தலையில் மிகுதியான வேதனை உண்டாகும். இதற்குப் பாதிக்கப்பட்ட இடத்தில் கச்சை வைத்து இறுகக்கட்டி, பயறுத்தைலம் தாரைசெய்து, கையிதம் செய்து, அதையே உள்ளுக்கும் கொடுக்க முறிவு குணமாகும்.

## புத்தெலும்பு முறிவு (Sacral Plexus)

204. நிலையான நரம்புநிலை சரிபட் டேகும்
நின்றநிறை புத்தெலும்பு முறிந்து தானால்
பிலமாக நிலைசரியாய் வைத்துக் கொண்டு
பிசகாமல் உள்கறையை பின்ன கற்றி
நிலையான பற்றுமிட்டு அட்ட கணையே
திறமாக பூட்டியே கணை யிறுக்கி
வலமாக திரிகோண கணைநெ டுக்கி
வருந்தியே மேல்திரையில் பற்ற றுத்து.

205. பற்றறுத்து முறுவெண்ணெய் தாரை செய்து
பகர்ச்சியாய் மூன்றுநாள் கூட்டிப் பாரு
மற்றுமே முப்பத் தெட்டில் மேவி
மருகவே முறுவெண்ணெய் தாரை செய்து
சற்றுமே கையிதமும் செய்து கொண்டால்
தப்பாமல் நிலைசேரும் பிலமும் உண்டாம்
கற்றுமே குருபரனைக் கண்ணால் கண்டு
கருதியே முறிகாய மெல்லாம் காணே.

புத்தெலும்பு முறிந்ததானால், அதைத் தன் நிலையில் எடுத்து வைத்து, நிலையாக பற்றிட்டு, மூங்கில் சீழிகளை எடுத்து அவற்றை மேற்புறத்தில் இணைத்து, பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்து இறுகக்கட்டி, முறிவெண்ணெய் மூன்று நாட்கள் தொடர்ந்து தாரை செய்ய வேண்டும். முப்பத்தெட்டால் கட்டினை அவிழ்த்து ஆய்வு செய்து, மீண்டும் கட்டி முறுவெண்ணெய் தாரைசெய்து, கையிதம் செய்து கொள்ள நோய் குணமாவதுடன் பெலமும் உண்டாகும்.

**விட்டில் வர்மம்** (4th Intercostal Nerve)

*206.* காயமாம் மார்பதனில் விட்டில் வர்மம்
கருதியே சிறிந்தாலோ தேக மெல்லாம்
தீயான விட்டிலைப்போல் துடிக்கும் பாரு
தீபோலே காயுமிட கண்கா ணாது
வாயுவுண்டாம் குன்மமது மெத்த வுண்டாம்
வளமான பதிமூன்றில் வியர்வை காணில்
மாயமாய் உயிரதும் முப்பத் தாறில்
மாயுமே எமபுர மறிந்து கொள்ளே.

*4* வது பழுவிடையில் காணப்படும் விட்டில் வர்மத்தில் ஈடுகொண்டால், தேகமெல்லாம் தீப்போல் எரிவதுடன், விட்டிலைப்போல அங்கம் துடிக்கும். பார்வை மங்கலாகும். வாயு உண்டாகும். குன்மம் உண்டாகும். பதிமூன்றாம் நாளில் வியர்வை கண்டால் நோயாளி முப்பத்தாறாம் நாளில் மரணமாவான்.

**கூச்சல் நரம்பு அற்றால்** (Nerve attached with the mastoid process)

*207.* கேளப்பா கழுத்தின்மேல் பின்பக் கத்தில்
செறுவான கூச்சலின் நரம்பற் றாலோ
நீளப்பா விள றுமிடா வியர்வை யுண்டாம்
மேனியெல்லாம் நடுக்கமுண்டாம் வியர்வை யாகி
சூழப்பா முப்பத்தி யாறாம் நாளில்
சூச்சமாய் சன்னியுண்டாம் அதிவே கந்தான்

வாளப்பா பைய்யருந் தைல முள்ளில்
வருந்தியே யிதமும்செய் வண்மை தானே.

கழுத்தின் பின்புறத்தில் மேல்பகுதியில் உள்ள கூச்சல் நரம்பு இடம் பெயர்ந்தாலோ, முறிவுற்றாலோ உடலில் வியர்வை உண்டாகும். அங்கம் முழுவதிலும் நடுக்கம் உண்டாகும். முப்பத்தி ஆறாம் நாளில் சன்னி உண்டாகும். இத்தகைய பாதிப்படைந்தோர்க்கு பயறுத்தைலம் தாரைசெய்து கையிதமும் செய்ய முழுமையான நலன் கிடைக்கும்.

**சென்னி பக்கத்தில் கம்பி நரம்பற்றால் (Zygomatico Frontal Nerve)**

*208.* வன்மையாய் சென்னிதனில் பக்கம் பற்றி
வளமான கம்பி நரம்பது முறிந்தால்
உண்மையாய் அடிக்கடியே பனியுண் டாகும்
ஒருபுறமே சரித்துவெட்டி மயக்க முண்டாம்
வண்மையாய் சன்னியொடு சீத முண்டாம்
வளருநாள் ஐயாறில் உணர்வு முண்டாம்
கண்மையாய் பனிகுளிரு மதிக முண்டாம்
கையிதமும் செய்துமேல் தைலங் கொள்ளே.

*209.* கையிதமும் செய்துமே இசங்கள் செய்ய
கடியதோ நரம்புசங்கல் வர்ம காயம்
செய்யிதமே செய்துவர தீரு மென்று
செப்பினார் குருவருளை தேர்ந்து நீயும்
நைய்யவே மனக்கண்ணை திறந்து பார்த்தால்
நாடியே குருபரனை நாட்ட மாக
ஒய்யவே நின்றநிலை தெளிவாய் காணும்
உண்மையாய் கண்டுநீ உணர்வாய் செய்யே.

சென்னியின் பக்கந்தனைப் பற்றி ஓடும் கம்பி நரம்பானது முறிந்தால் அடிக்கடி குளிர் உண்டாகும். சுரம் தோன்றும். உடலானது ஒரு பக்கமாய் சரித்து வெட்டி, மயக்கத்தினை

உண்டாக்கும், குளிரும் சன்னியும் உண்டாகும். முப்பதாம் நாளில் உணர்வு தோன்றினும் மீண்டும் குளிர், சுரம் போன்றவை மிகுதியாய் காணும். இதற்கு பயறுத்தைலம் தாரை செய்து முறைப்படி வர்மக் கையிதம் செய்து கொள்வதுடன் குருபரனைத் தியானிக்க நலம் கிடைக்கும்.

## தாமரை நரம்பில் முறிந்தால் (Sub - Costal Nerve attached to the Umblical)

210. உணர்வான நாவிதனின் இடது பக்கம்
உற்ற தாமரை முறிந்து தானால்
மணமாகக் கொண்ட தொன்றாம் நாளில்
வளர்ந்துமே பனிகுளிரும் வருந்தி நின்று
இணையான தேகமெல்லாம் விறைத்து வெட்டும்
எட்டாம்நாள் பேதிவிட்டு சன்னி யுண்டாம்
கணமாக பதிமூன்றில் தபநீர் வேர்வை
காணுமே இருபத் தெட்டாம் நாளில்.

211. நாளிலே மட்டான நினைவு கண்டால்
நளினமுடன் முப்பத்தி மூன்றில் சன்னி
குளிருபோல் வந்துடனே கொல்லு மப்பா
குறிகுணமும் ஆராய்ந்து குணமாய் பார்த்து
காளிபோல் குறிகண்டால் உயிர்தான் போகும்
கடுகுறிகள் இல்லாதால் கண்டு கண்டு
பாளிலே போகாது கையி தம்செய்
பரமகுரு அருளதினால் பகர்ச்சை யேகும்.

212. பகர்ச்சையது கடந்தாலோ மீழும் சொன்னேன்
பகர்ந்துநீ ஆராய்ந்து கையிதம் செய்
இகபரத்தின் அருளுனக் குள்ளில் நித்தம்
இன்பமுடன் குருவருளை சிந்தை கூர்ந்து
சிகிச்சையாய் தெளிவற்று அருளு மாகும்
சிந்தைதனில் அன்புமிக சேர்ந்து காணும்

மகிழ்ச்சியாய் கைமுறை குருமு றையும்
வருந்தியே செய்திடவே மாறுந் தானே.

நாபியின் இடதுபக்கத்தில் உள்ள தாமரை நரம்பானது முறிந்தால், முதலாம் நாளில் அங்கம் குளிர்ந்து தேகமெல்லாம் விறைத்து வெட்டும். எட்டாம் நாள் அடிக்கடி தன் உணர்வின்றி பேதியாவதுடன் சன்னி உண்டாகும். பதிமூன்றாம் நாளில் கபநீர், வியர்வை தோன்றும். இருபத்தெட்டாம் நாளில் நினைவும், தன் உணர்வும் கொண்டிருந்தால் முப்பத்து மூன்றாம் நாளில் மரணமாவான். நோயாளி காளிபோல் குறிகுணங்களைத் தோற்றுவித்தால் உயிர் பிரியும். இக்குறி குணங்கள் காணப்படாவிடில், வர்மத் தைலம் தாரை செய்து, கையிதம் செய்ய வேண்டும். குருவருளை மனத்தில் தியானித்து, கையிதமும், குரு பூசையும் முறையாய் செய்திட நலம் உண்டாகும்.

## வில்லி நரம்பின் முறிவு (Dislocation of the Nerve connected with the Xiphoid Process (by Trauma)

213. மாறுமடா கூம்பெல்லின் அடியில் தானே
வளர்வில்லி நரம்பதுதான் முறிந்து தாகும்
கூறுமந்த விழிரண்டும் காணா தாகும்
குலைநோவு பரதாபம் நெடுமூச்சி யுண்டாம்
வேறுபட்டு சிரசுவெட்டு காத டைக்கும்
மேவிவரும் பதிமூன்றில் குளிர்ச்சி காச்சல்
சிறுமனம் வெறுக்குமடா முப்பத் தாறில்
சேருமே சன்னியொரு சீத முண்டாம்.

214. சீதமுண்டாய் மாறுமிடா மயக்க முற்று
செப்பரிய முப்பத்தாறில் சன்னி
சூதானம் போலேயல்லோ தொடர்ந்து நிற்கும்
சூச்சமுடனே பதில் சொல்லக் கேளு
சாதனையால் பக்கமது சரித்து வெட்டும்
தளர்ச்சியாய் மதிமயங்கி சார்ந்து கொள்ளும்

ஓதவே தொண்ணூறில் மரண மாகும்
உண்மையுடன் கடந்துதென்றால் ஒருநூற் றெட்டில்.

215. கடந்தாலோ இருநூற் றெட்டில் ஜீவன்
கைலாசம் புக்குமென் று கண்டு கொள்நீ
தொடர்ந்தால் நூற்றி இருபதுக்குள் வருந்தி நீயும்
சொல்பெரிய முறுவெண்ணெய் தாரை செய்நீ
அடர்ந்து மேல்அமிர்த முக்கூட் டெண்ணெய்
அருந்தியே கையிதமும் செய்து கொண்டால்
மடமயிலே வில்லிநரம்பி யகல காயம்
வர்மங்கள் தீருமென் மகிழ்ந்து செய்யே.

ஏதி என்பின் அடியில் காணப்படும் வில்லி நரம்பு முறிந் துதானால் பார்வை கெட்டுவிடும். அதிகமான நெஞ்சுவலியுடன் மூச்சு நடையானது மிகுந்த சிரமத்துடன் நடைபெறும். அதிகமான தலைவலியுடன் காது அடைக்கும். பதிமூன்றாம் நாளில் குளிரும் காய்ச்சலும் உண்டாகும். முப்பத்தாறாம் நாளில் குளிருடன் சன்னியும் தோன்றும். தேகம் ஒருபுறம் சரித்து வெட்டும். அங்கம் தளர்ச்சியடைந்து மதி மயங்கிக் காணப்படும். தொன்னூறாம் நாளில் மரணமாவான். தப்பினால் நூற்றெட்டாம் நாளில் அல்லது இருநூற்றெட்டாம் நாளில் மரணமாவான். இதன் பின்னும் நோயாளி பிழைத்திருந்தால், அமிர்த முக்கூட்டெண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து முறிவெண்ணெய் மேலே தாரை செய்து கையிதம் செய்ய இடம் பெயர்ந்த அல்லது முறிந்த வில்லி நரம்பு தன்னிலையை அடையும்.

## சலத்திறி நரம்பு முறிந்தால் (Dislocation of the nerves found in the bottom of the Penis)

216. பாரப்பா லிங்கத்தின் அடிப்பக் கத்தில்
பகரும் சலதிறி நரம்பில் முறிந்தால் கேளு
நேரப்பா கண்புகுந்து மேல் துடிக்கும்
நிசமாக இழுப்புவலி ஈழை காணும்

சாரப்பா பளபளப்பு மிக வுண்டாம்
சார்ந்துவரும் சன்னியோடு சீத முண்டாம்
சீரப்பா மாறியேவரும் குறிகள்
திரும்பியே ஆறாம்நாள் அன்ன ரம்பில்.

217. அன்னரம்பில் சுறுசுறுப்பு மிகவே தோன்றில்
ஆடியே ஊருமிடா உன்னி வெட்டும்
மின்னியே எண்பதினில் நீரு முண்டாம்
விளங்கவே உந்திஇரு பக்கமி ரண்டும்
தன்னிரையாய் பொள்ளுமிடா நீர் பாய்ந்து
தப்பாது பதினெட்டில் மரண மாவான்
உன்னியே நாள்கடந்தால் இருபத் தெட்டில்
உற்றமுப்பத் தேழதிலே மரண மென்றார்.

218. என்றதொரு நாள்கடந்து திசைவிட் டேகில்
இன்பமுடன் பையரு தைலம் கொள்ள
நின்றனவே காயரா ஜாங்க எண்ணெய்
நாடியே தாரையது நலமாய் செய்து
என்றதொரு கையிதமும் செய்து கொண்டால்
ஏகுமோ சலத்திறி நரம்பின் காயம்
கன்றனவே வந்ததொரு காய மெல்லாம்
கருவாக தீருமென்று கருத்தாய் செய்யே.

ஆண் சலவாகியின் அடிப்பக்கத்தில் காணப்படும் சலதிறி நரம்பில் முறிவு ஏற்பட்டால் கண் துடிக்கும். உடல் நடுக்கத்துடன் வலிப்பு உண்டாகும். ஈழை காணும். உடல் முழுவதும் பளபளப்பாகத் தோன்றும். இதனைத் தொடர்ந்து குளிரும் சன்னியும் உண்டாகும். இக்குறிகுணங்கள் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். பாதிக்கப்பட்ட செயலிழந்து காணப்படுவதுடன் அவ்விடத்தில் ஊறல் ஏற்படும். எண்பதாம் நாளில் நீர் உண்டாகி, மேனி வீக்கமுற்று காணப்படும். உந்தியின் இரு பக்கங்களிலும் நீர் கோர்த்துக் கொண்டிருக்கும் கொப்புளங்கள் உண்டாகும். நோயாளி பதினெட்டாம் நாளில் மரணமாவான். தப்பினால் இருபத்தெட்டாம் நாளில் அல்லது முப்பத்தேழாம்

நாளில் மரணமாவான். நோயாளி பிழைத்திருந்தால் பயறுத்தைலம் உள்ளே கொடுத்து, காய ராஜாங்க எண்ணெய் தாரை செய்து கையிதம் செய்துகொள்ள சலத்திறி நரம்பின் காயம் நலமாவதுடன் சலத்திறி நரம்பு தன்னிலை அடையும்.

**நன்ன நரம்பு முறிவு**

219. கருதியே நெட்டடியில் பக்கந் தன்னில்
காணுமுலிர் தன்னநரம்பு முறிந்து தாகில்
திருந்தியே இருந்தநடை குன்னிக் கொள்ளும்
சேரவே குன்மமது வயிற்றி லேறும்
வருந்தியே ஆறாம்நாள் சன்னி யுண்டாம்
வந்ததா ரென்றுமிக வருந்தி கேட்கும்
பொருந்தியே பேசுமிடா பதினெட் டாம்நாள்
புகழாக இருபத்தா றிருபத் தெட்டில்
ஆறான ஆறாறு நாளில் சாகும்
அதுக டந்தால் தொண்ணூ று நாளப்பா.

220. வீறான இறைகளது செய்தி டாதே
விமலநா ரெசிகளுக்கு முனி வோர்க்கும்
கூறாக தானரு ளுபதே சித்தால்
குருவருளை ஆராய்ந்து தேர்ந்து யானும்
மாறாமல் இந்நூல் சூத்திரத்தில் சொன்னேன்
வருந்தி குருபரனைக் கண்ணில் காணே.

221. கண்ணிலே காணுமடா மனக்கண் ணாலே
கமலமாம் குருவருளை கருத்தில் வைத்து
நன்னியே வைத்தகுரு பரனை நீயும்
நாடிஎன் மனக்கண்ணால் தேர்ந்து கொண்டு
வண்ணமாய் முன்னுறுத்தி வர்ம காயம்
மாத்திரையங்கை முறைசெய் முறையாம் பாகம்
எண்ணியே எவ்வுயிர்க்கும் செய்து கொண்டால்
இடரொருநா ளில்லைஎன இசம்பி னோமே.

சலவாகியின் பக்கங்களில் காணப்படும் நன்ன நரம்பு முறிந்துதாகில், உடல் வளைந்து குன்னிக் கொள்ளும். வாயு குன்மம் உண்டாகும். ஆறாவது நாளில் சன்னி உண்டாகும். சுய உணர்விழந்து காணப்படும். பதினெட்டு அல்லது இருபத்தாறு, இருபத்தெட்டு, முப்பத்தாறு அல்லது தொன்னூறாம் நாளில் மரணமாவான்.

**உறுதி நரம்பின் முறிவு** (Dislocation of the nerve just above 3" to the umblical)

222. இசம்பினேன் பித்துகாய மிரண்டின் பக்கம்
இயம்புமேல் உறுமிநரம்பு முறிந்து தானால்
வசமாக சன்னியுண்டாம் உடனே மாறும்
மாறியே தசநாளல் தேச மெங்கும்
விஷம்போலே சீறியே வெட்டு தேகம்
மேவியே ஈராறில் சன்னி யுண்டாம்
வசம்பியே மரணமது வருமே சொன்னோம்
பகர்ச்சைநாள் கடந்தாலோ பதினெட் டாம்நாள்.

223. பதினெட் டாம்நாள் அமிர்தமுக்கூட் டெண்ணெய்
பாலகனே தானறிந்து பகர்ச்சை தன்னில்
விதியாக வந்ததென்று தேர்ந்து நீயும்
மேவியே வந்தசன்னி தைலந் தன்னில்
பதமாக தாரையது தானே செய்து
பகர்ச்சையாய் கைபிதமும் செய்து கொண்டால்
அதகாயம் முறிகாயம் நரம்பின் காயம்
மாறியே தீருமென்று வாழ்த்தி னோமே.

பிருக்கங்களின் மேல் பக்கத்தில் உள்ள உறுதி நரம்பானது முறிந்தால், உடனே சன்னி உண்டாகி மறையும். பத்தாவது நாளில் உடலெங்கும் விஷம் போலேறி சன்னி உண்டாகும். பனிரண்டாம் நாளில் மீண்டும் சன்னி உண்டாகி உயிர் பிரியும். பகர்ந்த இந்நாட்கள் கடந்தால் அமிர்த முக்கூட்டெண்ணெய் பாதிக்கப்பட்ட

இடத்தில் தாரை செய்து கையிதம் செய்ய அதகாயம், முறிகாயம், நரம்பின் காயம் முதலியவை மாறி நலம் உண்டாகும்.

நீர் நரம்பு முறிவு (Dislocation of the nerve connected with the urinal bladder, just below 2" to the umblical)

224. வாழ்த்தினேன் நீர்ப்பையில் பக்கந் தன்னில்
வளமான நீர்நரம்பு முறிந்து தாகில்
பழுதியே சன்னியுடன் காணும் காணும்
பாடிபல நிலைபேசும் பலது காட்டும்
விழுத்துமே பதினொன்றில் மரண முண்டு
மேவியே மாமுனிவ ராய்ந்து கண்டு
வழுத்தினோம் இந்நூலில் சூத்தி ரத்தில்
மாறாட்டம் இல்லையடா மகிழ்ந்து பாரே.

சலப்பையோடு இணைந்திருக்கின்ற நீர் நரம்பானது முறிந்தால் உடனே சன்னி உண்டாகும். பாதிக்கப்பட்டவன் தன் உணர்வின்றி பலவாறு பேசுவான். பல செய்கைகளைக் காட்டுவான். பதினோராம் நாளில் மரணம் உண்டாகும். மாமுனியான அகத்தியர் ஆராய்ந்து கூறிய இவ்வுண்மையில் மாற்றம் ஏதும் கிடையாது.

பகலொளி நரம்பின் முறிவு

225. பாருநீ கண்ணிமையின் அருகி லப்பா
பகலொழியா நரம்புதனில் முறிந்தால் கேளு
நீரையுள் ளறிவுண்டாம் விழிகா ணாது
நினைவுகெட்டு அடிக்கடியே மயக்க முண்டாம்
வாரேநீ மண்டையது சொறிந்து நிற்கும்
மகிழவே முப்பத்தாறில் கொல்லும்
சீரேநீ நாள்கடந்தால் தொண்ணூற் றாறில்
திடமாக சொன்மனம் தேர்ந்து கொள்ளே.

226. தேர்ந்துமே சாரநா ளொருநூற் றெட்டில்
செவிடாகும் தீராத சாத்திய மென்ன
ஆர்ந்துகொள் வெண்குன்றி வேர் தைலம்
அடவாகக் கொண்டுமுறி வெண்ணெய் தாரை
கூர்ந்திருந்த குமரியுட துவாலை செய்து
கூர்மையாய் கையிதமும் செய்து கொண்டால்
ஊர்ந்துமே பகலொழியாய் நரம்பின் காயம்
ஓடுமே மாமுனிவர் உரைத்த வாறே.

கண்ணிமையின் அருகில் உள்ள பகலொளி நரம்பில் முறிவு ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவன் பார்வை இழப்பான். நினைவு கெட்டு அடிக்கடி மயக்கம் உண்டாகும். சிரசினில் ஊறல் தோன்றும். முப்பத்தாறாம் நாளில் அல்லது தொன்னூறாம் நாளில் மரணமாவான். நூற்றெட்டாம் நாளில் செவிடாகும். இந்நாட்கள் கடந்த பின்னும் உயிர் பிழைத்திருந்தால் வெண்குன்றி உள்ளே கொடுத்து முறிவெண்ணெய் தாரை செய்து குமரி துவாலை செய்து கையிதம் செய்து செய்து பகலொளி நரம்பின் காயம் குணமாகும்.

**பத்தினி நரம்பின் முறிவு** (Dislocation of the Nerve found in the left side of the Heart) 8th Intercostal.

227. வாறான உள்ளத்தின் இடது பக்கம்
வளரும் பத்தினிநரம்பில் முறிந்த தானால்
சீறியே நித்திரையில் தரிசனம் போல்
சேர்ந்தாலோ காணுமடி தொண்டைக் குள்ளே
வீறான சுளுசுளென வெருவெருத்து மேல்
துடிக்கும் அங்கமெல்லாம் துடிப்புண் டாகும்
வாறான வீணாதண் டிடையில் குத்தி
அனலெழும் பியாணுவங்கள் மிகவுண் டாமே.

228. மிகவுண்டாம் அடங்காத பெலமும் கட்டும்
வேகமதா லிங்கமதில் விந்து பாயும்
நகந்தெறிக்கும் விந்து கண்ட எட்டாம் நாளில்
நாடியே மரணமென நலமாய் சொன்னோம்

செகந்தனிலே செகத்தோருக் குறிகண் டாலோ
திரும்பிநீ அவுசதங்கள் செய்ய வேண்டாம்
அகமறிய மானிடரே பழிய செய்வான்
அன்பாக குருவருளை அறிய மாட்டான்.

229. அறியவே சொல்லுகிறேன் தடவு மார்க்கம்
ஆதரவாய் மத்திதனி லெடுத் திருத்தி
பிரியாமல் குருவருளை தினமும் போற்றி
பேசரிய திருவருளை பெலமாய் வைத்து
நெறியாக நடுவணையில் கச்சை கட்டி
நெடியான பாலணையில் குய்யம் போட்டு
குறியாக பதித்திறுக்கி வைத்துக் கொண்டு
கூர்மையாய் இடம்பிரியே திருத்து வெட்டி.

230. வெட்டியே வலம்பிரியின் முட்டி னாலே
மேவியேஅ ணைத்துதிர திரையில் சுற்றி
கட்டியே முன்பிறை தாரை தன்னில்
காயமிடு குய்யமதில் கரத்தா லூணு
வட்டமாய் கண்டமதில் பிறைக்குள் ளாக
மருவியே இருபுறமும் திருத்துக் கட்டி
ஒட்டியே நரம்பெல்லாம் வெழியே காணும்
உத்தமனே கண்டுமனங் கருத்தால் நீயும்.

231. கருத்தாக கண்டுமே பின்னல் கண்டு
கருவாக திருநிலையும் பச்சையது
பொருந்தவே நிலையதனில் வைத்துக் கொண்டு
புகழாக கையிதமும் செய்து கொண்டால்
திருந்தியே நரம்புநிலை சரிப்பட் டேகும்
தீர்ச்சைபோல் இந்தமுறை செய்து கொண்டால்
பரந்தாடும் நிலையெல்லாம் பதியில் சேரும்
பகரவே இன்னுமொரு பகர்ச்சை கேளு.

232. பகர்ச்சையாய் நேரமதில் கையிதமும் செய்ய
பகரு நல்லதாவாய் பதியில் சேர்த்து
சிகில்சையாய் செய்திடவே தெளிவுண் டாகும்
தேகமதில் நரம்பிசங்கல் தெளிவூ டாடி
சுகமிட்டு தானெழும்பி அடர்ந்து நிற்கும்
ஆதரவாய் பகர்ச்சையதில் மருந்து செய்ய
நகமணிபோல் மனக்கண்ணால் நாடிப் பாரு
நல்கியே மாத்திரையும் செய்து கொள்ளே.

இதயத்தின் இடது பக்கம் உள்ள பத்தினி நரம்பானது முறிந்தால், தொண்டை வலியுடன் விறுவிறுப்பும் அங்கமெல்லாம் துடிப்பும் உண்டாகும். உறக்கமின்மை தோன்றும். உறங்கினால் பலவிதமான கனவுகளால் துன்புறுவதுண்டு. அதே நேரத்தில் உடலில் நடுக்கம், ஆண்குறியில் குத்தல், வலி ஆகியவற்றுடன் ஆண்குறி விறைப்புடன் காணப்படும். விந்துநீர் மிக்க வலியுடன் வெளிப்படும். நகங்களில் மிகுந்த வலி உண்டாகும். இக்குறிகுணங்கள் கண்டால் ஔசதம் பார்ப்பதில் பயனொன்றும் இல்லை. ஏனெனில் விந்து கண்ட எட்டாம் நாளில் மரணமாவான் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறிகுணங்கள் தோன்றாவிடில், நோயாளி மருத்துவர் முகமாகத் திரும்பி, தன்காலின் பெருவிரல் ஆசனவாயைத் தொடும்படி கால்களை மடக்கி முழங்காலை ஊன்றி அமர வேண்டும். மருத்துவர் நோயாளியின் இடுப்புப் பக்கத்தில் பற்றி கசேருக்கொடியின் நடுவில் நன்றாக தன் முழங்கால்களினால் அழுத்தம் கொடுக்க வேண்டும். பின் நோயாளியை வல, இடப்பக்கங்களில் அப்படியே திரும்பச் செய்ய வேண்டும். மருந்தெண்ணெய் பயன்படுத்தி பெருவிரலினால் நன்றாக அழுத்தம் கொடுக்க வேண்டும். இத்துடன் கழுத்தின் இரு புறங்களிலும் அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பத்தினி நரம்பானது தன் இடத்தை அடையும். இத்துடன் உள்நாக்கில் இலேசாக அழுத்தம் இறுதியாகச் செய்வித்தல் நல்லதென்றும் கூறப்பட்டுள்ளது.

குருபோக நரம்பில் முறிவு

233. கொள்ளேநீ உச்சிதனில் நடுமை யத்தில்
குருபோக நரம்பங்கே முறிந்து தானால்
மெள்ளவே போகமது கழிந்தால் போலே
மேவியே எண்ணையுமிடா விந்து போகும்
கள்ளமாய் தேகமது மிகக்க ரைக்கும்
கருதியே விந்து அங்கே இறங்கும் போது
துள்ளியே மயங்குமிடா உணர்வு மாறும்
சூச்சமாய் சன்னியோடு சீத முண்டாம்.

234. சீதமுண்டாம் உடன்மாறும் முப்பத்தி யொன்றில்
தெளிவுண்டாய் மயக்கமரும் மூன்றாம் நாளில்
பாதமுதல் முட்டெங்கும் மட்டில் நின்று
பகர்ச்சையாய் விட்டிலைப்போல் துடிப்புண் டாகி
ஈதலால் மரணமரும் முப்பத் தெட்டில்
என்றுமே மாமுனிவர் நூலாய்ந்து ஓதினோம்
செகத்தோர்க்கே உண்மை கூர்ந்து
உரைத்திட்ட நூல்தனை உன்னிப் பாரே.

235. நூ லுமிக கருவாக செய்தே னப்பா
நுண்ணியிமையாய் இந்நூல்சூத் திரத்தில் யானும்
மேலான விண்ணொளி போல் விளங்கச்
செய்தேன் விளக்கொளிபோல் காணுமிடா
மேன்மையாக ஞாலமதில் ஆராய்ந்து கண்டு
கொண்டு நாடியே நின்றதொரு சூட்சா சூட்சம்
மூலமாய் காணுமிடா அறிந்து கொண்டால்
முறிகாய வர்மங்கள் கூர்ந்து பாரே.

உச்சியின் நடு மையத்தில் உள்ள குருபோக நரம்பு முறிந்தால், போகம் கழிந்தபின் ஏற்படும் உணர்வு தோன்றும். விந்துநீர் வெளிப்படும். மயக்கம், உணர்வின்மை, உடல் குளிர்தலுடன் சன்னியும் உண்டாகும். உடனே இக்குறி குணங்கள் மாறும். முப்பத்தோராம் நாளில் மயக்கம் நீங்கி தெளிவு உண்டாகும்.

மூன்றாம் நாளில் பாதம் முதல் முழங்கால் மூட்டுவரை விட்டிலைப் போல் துடிப்பு உண்டாகும். முப்பத்தெட்டாம் நாளில் மரணம் நேரிடும். நாடியினை ஆராய்ந்து அறிந்த பின் இம்முடிவிற்கு வரவேண்டுமென அகத்திய முனி செப்புகின்றார்.

குளங்கிலும்பு நரம்பில் முறிவு (Dislocation of the nerve connected with the middle of the Spinal Cord)

236. கூர்ந்துகேள் நட்டெல்லின் அடி முடுவின்
குளங்கிலும்பு நரம்புடனே முறிந்து கொண்டால்
ஊர்ந்துமே புத்தி கெட்டு மயங்கும் பாரு
உத்தமனே மாறுமறு பத்தி யெட்டில்
சார்ந்துமே மூக்கடைக்கும் உணர்வு முண்டாம்
தப்பாது சிரசுமிக பதறி வெட்டும்
ஆராய்ந்துமே விட்டிலைப்போல் துடிப்பு முண்டாம்
அங்கமெல்லாம் விறைத்து விழும் அறிந்து நின்றே.

237. அறிந்துடனே காயரா ஜாங்க எண்ணெய்
அடவாக கொண்டதின் பின் அறிந்து கேளு
குறியான வாதசன்னி தைலந் தன்னை
கூர்மையாய் கண்டத்தில் குளிர்மை தாக்கு
பிறியாம் ஒன்றுவிட்டொரு நாளாக
பேதகமாய் தாரையுடன் கையிதம் செய்
வெறியான உள்குலுங்கி நரம்பின் காயம்
வேகமுடன் மாறுமென்று உரைத்தோமே.

கசேருக்கொடியின் நடுவில் உள்ள குளங்கிலும்பு நரம்பு முறிந்து கொண்டால் உடனே புத்தி மயங்கி தன் உணர்விழந்து காணப்படுவான். பதினெட்டாம் நாளில் மூக்கடைப்பு ஏற்படும். அங்கமெல்லாம் விட்டிலைப்போல் துடித்து விறைத்து விழும். ஆனால் ஞாபக சக்தி மீளும். தலையில் இரு பக்கங்களிலும் மிகுதியான வலி உண்டாகும்.

உடனடியாக காயராஜாங்க எண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து வாத சன்னித் தைலத்தினை ஒருநாள் விட்டு ஒருநாள் தாரை செய்து, கையிதம் செய்ய குளங்கிலும்பு நரம்பின் காயம் விரைவாய் குணமாகும்.

## தாரை நரம்பில் முறிந்தால் (Dislocation of the nerve found near the lumbar plexus)

*238.* உரைக்கவே முதுகினுட தாரை பக்கம்
ஓதரிய தாரை நரம்பது முறிந்தால்
வரையாக குகடம்போல் கொக்க ரிக்கும்
வயிற்றினால் குன்மமுண்டாம் அஞ்சாம் நாளில்
திரையாக நாள் ஐந்தில் வெறுக்கு வண்ணம்
திறமாக முத்தமிட்டு பேசும் பாரு
விரைவாக தொண்ணூறில் அலகு வெட்டும்
வெற்றியாய் வதனமதில் நீரு முண்டாம்.

*239.* நீருண்டாய் நானூறில் மரண மாவார்
நனைவாக பரமகுரு தியானஞ் செய்து
சீருடனே மனக்கண்ணால் கண்டு கொண்டு
சிறப்பாக குருநிலையை தானி ருத்தி
சாருமது நிலையறிந்து நிலையில் நில்லு
தப்பாமல் முறிகாயம் நரம்பின் காயம்
பாருடனே தீருமென்று முனிவர்
பாலித்து தானுரைத்த பகர்ந்த தாமே.

முதுகுப்புறத்தில் தாரை நரம்பு முறிந்தால் சேவல் போல் கொக்கரிக்கும். குன்மம் உண்டாகி வயிறு வீங்கிக் காணப்படும். அன்னதுவேஷம் ஏற்படும். தொன்னூறாம் நாளில் அலகு வெட்டி ஏதாவதொரு பக்கமாக இழுத்துக்கொள்ளும். முகத்தில் நீர் கோர்த்து காணப்படும். இக்குறிகுணங்கள் காணப்பட்டால் நானூறு நாட்களில் மரணமாவான் என்று கூறப்பட்டுள்ளது. இறையருளால் நோயாளி முறைப்படி சிகிச்சைப் பெற்றால் குணம் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

### திரளு வர்மத்தில் முறிவு (Dislocation of the nerve found in the buttocks)

*240.* ஆமெனவே ஆரத்தில் திரளு வர்மம்
அடியிடியால் முறிந்தாலோ சொல்லக் கேளு
ஓமெனவே பொருத்து ரண்டும் விட்டால் போலே
உற்றது காணுமடா கால்மு டிக்கும்
தாமெனவே நரம்பெல்லாம் தேய்வுண் டாகி
தப்பாமல் வறட்சையது சார்ந்து காணும்
நாமெனவே ஆரத்தில் பொற்ற லுண்டாம்
நலமெழிந்து கொல்லுமது நாட்டி னாரே.

திரளு வர்ம தலத்தில் அடிகொண்டு முறிந்தால் கால் பொருத்துக்கள் உடைந்துவிட்டாற் போன்று வலி உண்டாகும். நரம்புகளில் எல்லாம் தேய்வு உண்டாகி வறண்டு காணும். மேலும் பாதிக்கப்பட்ட இடத்தில் கொப்புளங்களும் உண்டாகும். இக்குறி குணங்கள் காணப்படின் நோயாளி மரணமாவான்.

### தேரை நரம்பின் முறிவு (Dislocation of the nerve in the Spleen)

*241.* நாடியே புற்றீரல் அஞ்சின் சார்பில்
நலமான தேரைநரம் பதுமு றிந்தால்
சாட்டியே தேரை நிறம்போல் மேனிதான்
கா ணும் பச்சைநிற வடிவு போல
வாட்டியே தேகமெல்லாம் முள்ளு போலே
மருவியே கண்டும் காணாமலும் போம்
கூட்டியே புத்தியது மயக்க முண்டாம்
குறித்தமுகங் காணுமடா அஞ்சாம் நாளில்.

*242.* அஞ்சாம்நாள் பச்சைநிற மதுதான் மாறி
அப்பனே தேகமெல்லாம் கறுத்து காணும்
துஞ்சலறு ஏழாம்நாள் சன்னி யுண்டாம்
சூச்சமுடன் பதினெட்டில் குறிகு ணங்கள்

நஞ்சலுறும் மாறுமடா தொன்னூ றாம்நாள்
நாடியே மரணமது கடந்திட் டாலோ
தஞ்சமின் குருவருளைநீ நினைந்து
சர்வாங்க தைலமேல் தாரை செய்யே.

243. தாரையது செய்து ராஜாங்க எண்ணெய்
தயவாக கையிதமும் செய்து கொண்டால்
பாரமுற்ற நரம்பிசங்கல் வர்ம காயம்
பலகாயம் விசகாயம் மேக காயம்
சாராது என்று மாமுனிவர் தாமும்
சார்ந்துமே இந்நூலை தயவாக
சீராக பாடி வைத்தார்தனை நீயும்
தெளிந்துகண் டாராய்ந்து செய்ய நன்றே.

தேரை நரம்பு முறிந்தால் உடனே மேனியின் நிறம் மாறி தேரையின் நிறத்தைப் போலாகும். சில நாட்கள் மேனி பச்சை நிறமாய் மாறும். தேகமெல்லாம் முள் குத்துவது போன்ற வலி உண்டாகும். அறிவு மயங்கும். பின் ஐந்தாம் நாளில் நிறம் மாறி கறுத்து காணப்படும். ஏழாம் நாளில் சன்னி உண்டாகும். தொன்னூறாம் நாளில் மரணம் நேரிடுவது கடந்திட்டாலோ, குருவருளை நினைத்து சர்வாங்கத் தைலம் தாரை செய்து ராஜாங்க எண்ணெய் உள்ளுக்கும் கொடுத்து, கையிதம் செய்து வர நரம்பிசங்கல், வர்ம காயம், பல காயங்கள், விஷகாயம், மேக காயம் தீருமென்று அகத்திய மாமுனி இயம்பியுள்ளார்.

### குண்டிசங்கல் நரம்பின் முறிவு
### (Dislocation of the nerve found either side of the Sacral Plexus within 2")

244. நன்றனவே முடிச்சியது அஞ்சின் பக்கம்
நல்லகுண்டி சங்குந ரம்பதுமு றிந்தால்
கன்றுபோல் ஒடிவரும் தண்ணீர் வேண்டும்
கண்டித்து விழுந்தாற்போல் ஒடி யேகும்

குன்றனவே தேகமெல்லாம் சுழித்து குத்தும்
சூர்மையாய் ஓங்களித் தேப்ப முண்டாம்
துன்றனவே சுருசுரென்று தும்மிக் கொள்ளும்
நாளிருபத் தெட்டில் கேளு.

245. கேளுநீ உள்ளங்கால் வலிக்கு மப்பா
கிறுகிறனே சுழித்துமேல் துடிப் புண்டாம்
நாளுமே விட்டுநிலை தப்பி நின்றால்
நாளி நெட்டதிலே நடுக்க முண்டாம்
வாளுமே அம்பத்தி மூன்றில் சன்னி
மாறியே காணுமடா அறுபத் தெட்டில்
கூளியே பேசுநிலை தொண்ணூ றாம் நாள்
குடிபோகும் உயிரோ புரத்திற் கேற்றார்.

246. ஏம்புரம் போகுமதிலே காய் விட்டால்
இன்பமுடன் பையரு தைலங் கொள்ளு
நலமுடன் சாற்றியே கபரா ஜாங்கம்
நல்கிமேல் வாதசன்னி தைலந் தன்னில்
தரமெனவே தாரைசெய்து சங்கல் செய்ய
தப்பாமல் தாமரை நரம்பின் காயம்
ஓமெனவே குறிகாயம் வர்ம காயம்
உடல்காயம் நடுகாயம் மூடுந் தானே.

பீடிகை என்பின் இரு பக்கங்களிலும் உள்ள குண்டிசங்கு நரம்பு முறிந்தால் அதிகமான தாகத்தினால் வருந்தி, தண்ணீருக்காக அலைவான். உடல் முழுவதும் சூல்கொண்டு குத்தினாற் போன்று வலி உண்டாகும். வாந்தி உண்டாகும். அடிக்கடி தும்மல் உண்டாகும். இருபத்தெட்டாம் நாளில் பாதத்தின் நடுவில் வலி தோன்றும். இருபத்துநாலாம் நாளில் உடல் நடுக்கம் ஏற்படும். ஐம்பத்து மூன்றாம் நாளில் வலிப்பு உண்டாகும். அறுபத்தெட்டாம் நாளில் சன்னி குறைந்துவிடும். மேற்கண்ட குறிகுணங்கள் இருக்குமானால் பாதிக்கப்பட்டவர் தொன்னூறாம் நாளில் மரணமாவான். மரணம் தப்பினால் பயறுத்தைலம் உள்ளே கொடுத்து காயராஜாங்க எண்ணெயும், வாத சன்னித் தைலமும் கலந்து தாரைசெய்து கையிதம்

செய்ய வேண்டும். இவ்விதம் செய்ய வர்ம காயம், முறிகாயம், உடல் காயம், நடுகாயம் முதுலியவை தீரும்.

### பேரல் வர்மத்தில் முறிவு
### (Dislocation of the nerve found in the middle of the hip joint)

*247.* ஓடுமென் கீழ்பொருத்தின் நடுவி டையில்
ஓதரிய பேரல்வர்மம் முறிந்து தானால்
வாடுமே உடல்கறுத்து வறட்சை யாகும்
மதிமயங்கி கண்ணில்விஷ காய மாகும்
நாளுமெத்த பனியுண்டாம் பல்லு கூசும்
நாவறண்டு சோரையுடன் நாற்ற மாகும்
கூடுமெத்த உந்தியதில் குன்ம மேறி
கொடுங்கனலாய் வேகமுண்டாய் குளிர்ச்சி யாகும்.

*248.* குளிர்ச்சிகொண்ட அன்னமது போலே யாகும்
குண்டலிக்குள் மெனமே இழுக்கும் பாரு
விழிரண்டும் காணா விளறி பேசும்
மேகமதி லிங்கமதில் வழியே சாடும்
நளினமுடன் பேசுமடா முப்பத் தேழில்
நாட்டியே உயிரதுவும் மேலோ கத்தில்
வழிதேடி போகுமுன் சொன்னோம்
மருவிநீ இந்நூலை மகிழ்ந்து பாரே.

இடுப்புப்பொருத்தின் மையத்தில் அமைந்துள்ள பேரல் வர்மத்தில் முறிவு காணப்படில் உடல் கறுத்து காணப்படும். தோல் வறண்டு கண்கள் சிவந்து மயக்கம் உண்டாகி சுரம், நாவறட்சி, வாயில் துர்நாற்றம் முதலிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். இவற்றுடன் அடிவயிறு பொருமி வீக்கமுற்று காணப்படுவதுடன் உண்ட உணவை அப்படியே வாந்தியாக வெளியேற்றும். குண்டிப் பேசிகள் இழுத்துக்கொள்ளும். பார்வை காண முடியாது. தன் உணர்வின்றி பேசுவர். விந்துநீர் வெளிப்படும். முப்பத்தேழாம் நாளில் உயிரானது மேலோகத்தை வழிதேடிப் போகுமென்று கூறப்பட்டுள்ளது.

சுரகாரி நரம்பின் முறிவு

249. தூட்சமா மண்ணீரல் இடது பக்கம்
சுரகாரி நரம்பதுதான் முறியு மானால்
பாய்ச்சலுடன் தென்றலைப்போல் உன்னி யாடும்
பதறியே அகமுறுமி தெறிக்கும் தேகம்
மாச்சினிர் வற்றி வறட்சை யாகும்
மாரடைத்து மலஞ்சலவும் பிடித்துக் கொள்ளும்
காய்ச்சலதில் கோர்முன் சன்னி சீதம்
காணுமே நாளிருபத் தெட்டில் காணே.

250. இருபத்தெட் டொருகடந்தால் நடுநி லையில்
இன்பமுடன் திருவிரலால் நெருக்கிப் பாரு
வெருவியே நரம்பெழுந்து முனைநின் றாடும்
விளங்கவே வெட்டிவேர் தைலங் கொள்ளு
மருவியே பஞ்சபுஸ் பாதி யெண்ணெய்
மாறியே கொண்டபின் கையிதம் செய்
திருகியே உறுப்பினிடையால் இசங்கல் செய்ய
செப்பரிய சுரகாரி நரம்பின் காயம்.

251. காயமது தீர்ந்துடனே தீரா தாகில்
கதிரிட்டு இடவலமாய் சுளிக்கிட் டாலோ
மாயமாய் செந்தழல்போல் சுரமுங் காயும்
மருவியே கண்போய்ந்து மயக்க முண்டாம்
ஞாயமாய் உறுப்பிடையில் சங்கல் செய்ய
நலமாக தீருமிது சிக்க லுற்றால்
தூயநா ளொருமூன்றில் குறிகள் மாறி
சூச்சமுட னாயிரத் தொன்றில் வாதம்.

252. ஞன்றதிலே வாதமதில் திருச்சை யாகி
உற்றபனி குளிர்சுர முடனே காணும்
குன்றியே மேகமுடன் நாவ றட்சி
கூடியே இடகலையின் சுழி வழியே

நின்றுமே தேய்வுண்டாம் இடைக் கிடையே
நித்திரையில் தெரிசனமே நெருக்க முண்டாம்
இன்றுமுதல் அன்னமது வெறுக்கும் பாரு
அருந்துநீர் சாயாமல் மிறுக்குந் தானே.

253. தானேதான் அங்கமது வெளறிக் குன்றி
சார்பாக நரம்பதனை இழுத்துக் கொள்ளும்
ஊனேதான் உடல்குன்றி வயிறு காந்தும்
உடலுடனே மந்தமது ஒத்து நிற்கும்
தானேகேள் முன் சொன்ன துவாலை செய்து
தெரிந்தவே பிகையும் உறுப்பு சங்கல் செய்து
ஏனேதான் புஸ்பாதித் தைலந் தன்னை
ஈந்திடவே தீருமுன் கண்டு செய்யே.

மண்ணீரலின் இடது பக்கத்தில் இருக்கும் சுரகாரி நரம்பது முறிந்துவிட்டால், ஓணானைப் போல் உடல் துடிக்கும். தேகம் இழுக்கும். நாவறண்டு, நெஞ்சடைத்து, மலசலம் வெளியேறல் தடைப்படும். இருபத்தெட்டாம் நாளில் சுரமும், சன்னியும் உண்டாகும். இருபத்தெட்டு நாள் கழிந்த பின் திருவிரலால் நரம்பினை எடுத்து, அதனிடத்தில் பொருத்தி வைக்க வேண்டும். வெட்டிவேர் தைலம் உள்ளே கொடுக்க வேண்டும். கையிதம் செய்ய திசபுஷ்பாதி தைலம் பயன்படுத்த வேண்டும். இச்சிகிச்சையில் குணம் பெறாவிடில் அல்லது நரம்பானது இடவலமாய் சுளுக்கிக் கொண்டால் தனல் போல் சுரம் காயும். கண்களில் உறுத்தலும், மயக்கமும் உண்டாகும். இதற்கு மலவாயின் அருகில் மெதுவான கையிதம் செய்ய நலமாகும். இதிலும் நலம் பெறவில்லையானால் ஆயிரத்தோராம் நாளில் வாதத்துடன் சுரம், உடல் குளிர்தல், மேகம், நாவறட்சி, இடதுநாசி சுருங்கிப்போதல், உறக்கத்தில் கனவுகள் காணல் ஆகியன தோன்றும். அன்ன வெறுப்பு உண்டாகும். சிறுநீர் கழிதல் முழுவதும் நின்று விடும். தேகமானது பாண்டுவினால் வெளிறி, குன்றி, இழுத்துக்கொள்ளும். வயிறு காந்தல் உண்டாகும். உடல் மந்தமாகக் காணப்படும். முன்கூறியபடி திச புஸ்பாதி தைலம் கொண்டு துவாலை செய்து கையிதம் செய்ய நலம் பயக்கும்.

**கதிருதிர சன்னி நரம்பின் முறிவு**

254. கண்டுகொள் நகத்தினி டையின் நடுவில்
கதிருதிர சன்னிநரம் பதுமு றிந்தால்
விண்டுமே மூக்கில்வாய் உதிரம் நீர்போல்
மேவியே உதிரமது ஒழுகிக் காணும்
கரள் துடித்து சுறுசுறாய் விறைத்து வெட்டும்
ஒண்டிவரும் மூன்றாம்நாள் கண்ம யங்கி
ஒளியூடு வியர்வையுண்டாம் அஞ்சாம் நாளில்.

255. அஞ்சாம்நாள் சன்னியொடு சீத முண்டாம்
அறியவே ஒன்பதிலும் பதிமூன் றாம்நாள்
விஞ்சாமால் பதினெட்டில் மரண மாவாய்
விலகினால் ஐம்பத்து எட்டில் சன்னி
துஞ்சியே காணுமடா தொன்னூ றில்கேள்
சூச்சமுடன் சன்னியொடு சீத முண்டாம்
அஞ்சாகி மரணம்வரும் அறிந்து சொன்னேன்
நற்பொருளாய் ஆராய்ந்து கண்டு நீயும்.

256. ஆராய்ந்து கண்டாலோ துறக்கு றிகள்
அகமறியாய் மானிடரே பழியச் செய்வான்
பாராத பரமியவன் செய்த வித்தை
படுகுழியில் நீநெருப்பில் பற்று கூர்போல்
நேராக காணுமடா குருவ ருளை
நீகண்டு நின் று குருநிலை அறிந்து
வீரமாய் நரம்புவிச காய மெல்லாம்
மேவிநின்ற நடுக்காயம் விலகும் தானே.

நகத்தினிடையில் காணப்படும் கதிருதிர சன்னி நரம்பானது முறிந்தால் மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் நீர்போல் உதிரம் ஒழுகும். தேகம் நடுங்கி, விறைத்து வெட்டும். மூன்றாம் நாளில் பார்வை மயங்கும் ; அதிக வியர்வை காணப்படும். ஐந்தாம் நாளில் சன்னியும் குளிரும் உண்டாகும். ஒன்பது, பதிமூன்று அல்லது பதினெட்டாம் நாளில் மரணம் ஏற்படும். இல்லையேல் ஐம்பத்தெட்டாம் நாளில்

சன்னியுண்டாகும். இதிலும் தப்பினால் 90 ம் நாள் குளிரும் சன்னியும் உண்டாகும். இதனைத்தொடர்ந்து ஐந்தாம் நாள் மரணம் ஏற்படும். இருப்பினும் நற்பொருளை ஆராய்ந்து கண்டறிந்து, குருவருளை தியானித்து தீவிரமாய் சிகிச்சை செய்தால் நரம்பு, விச காயங்களும், நகத்தின் நடுவில் தோன்றிய காயங்களும் மறைந்து நலமுண்டாகும்.

### கருமந்தி நரம்பின் முறிவு

257. விலகுமடா காரீரல் முன்முனையில்
மெத்த கருமந்தி நரம்பது முறிந்தால்
துலங்கியது அங்கமெல்லாம் அக்கினி போல்
இலங்கியே மண்டையது கனத்து விம்மி
இன்பமாய் தேகமது நிமிருண் ணாது
நலங்கியே தேகமெல்லாம் கூச்ச லுண்டாம்
நாடியே கண்ணிரண்டு புகைந்து காணும்
புகைந்துமே காணுமடா தேக மெல்லாம்.

258. பூமரிசை வில்லுபோல் வளைந்து கட்டி
சிகையாகச் சுற்றியே வளைத்துக் கொள்ளும்
செப்பரிய பன்றியைப்போல் உறுமி குன்றி
வகையான ஆறாம்நாள் சன்னி யுண்டாம்
மருவியே பதினெட்டும் இருபத் தொன்றும்
துகையான நாள்கடந்தா லங்கமெல்லாம்
சொல்பெரிய வதைசன்னித் தைலந் தன்னை.

259. தைலத்தை தாரைசெய் துவாலை போட்டு
தப்பாமல் அமிர்தமுக் கூட்டெண்ணெய்
பிலமாக கொண்டுமேல் கையிதம் செய்
பிசகிவரும் நரம்போடே நரம்பின் காயம்
களைமாறல் முறிகாயம் நடுக்கா யங்கள்
கதிரிட்டு நின்றபல காய மெல்லாம்
துலங்கியே தெளியுமடா தேர்ந்து கொண்டு
சொல்பெரிய முப்பொருளை தெளிவாய் காணே.

260. முப்பொருளும் கண்டுண்மைப் பொருளை தேர்ந்து
முறையான குருவருளை முத்தி பண்ணி
எப்பொருளும் உற்பணத்தை இணைந்து பூட்டி
இயலறிந்து சிந்தைதனில் உணர்ந்து கொண்டு
தற்பொருளுக் கமிர்தமென்ற அவுசத மீந்தால்
சார்ந்துமே பலகாயம் யமகாயம்
நற்பொருளும் முற்றநிலை காய மெல்லாம்
நாடாமல் ஓடுமென நவில லாமே.

261. நவிலவே சொல்லுகிறேன் தடவு தட்டல்
நாடியே இருத்தலொடு விமரிசை கேள்
புவிமீதில் நேர்படவே எடுத்தி ருத்தி
புத்தியுடன் முழங்காலால் அமையல் போட்டு
கவலவே கால்பெரு விரலு ரண்டில்
கவிராகச் சைய்யது தானே பூட்டி
புவிமீதில் இருத்திபதம் போட்டி றக்கி
புகழான கச்சைநடு வணையில் பூட்டி.

262. பூட்டியே வைத்துமே திரைய கத்தில்
பொருளான குருவருளால் குய்யந் தாக்கி
தாட்டிகமாய் முன்திரையில் திசை மருவி
தயவாக கூட்டியே கீழ்த்தி சையில்
கூட்டியே அங்கமெல்லாம் தனித்துக் கோரும்
குறியான துவாலையது துணையாய் செய்து
தாட்டிகமாய் பேர்கரம லிதம்வ ருத்தி
தருகாமல் கையிதமும் செய்து கொள்ளே.

263. கையிதம்செய்து குருவருளைப் போற்றி
கருணைபெற மனக்கண்ணால் கண்டு நீயும்
நையாதே பூட்டித் தக்க தீந்து கொண்டு
நாடியே குருவருளை நாட்ட முற்று
பொய்யில்லை எவ்வுயிர்க்கும் பலதுக் காக
புனிதமுடன் அன்புடனே பொருளைக் கண்டு

பேயிதமே கையிதமும் செய்து கொண்டால்
பலதுக்கும் ஆச்சரியம் விதத்தை பாரே.

காரீரலின் முன்முனையில் உள்ள கருமந்தி நரம்பானது முறிந்தால் அங்கம் தீபோல காந்தும், சிரசு கனத்து தேகம் நிமிரவொட்டாது கூச்சலுண்டாகும். கண்கள் புகைந்து எரிச்சலுடன் தோன்றும். தேகமானது வில்போல் வளைந்து பன்றிபோல் ஒலியெழுப்பும். ஆறாம்நாளில் சன்னி உண்டாகும். பதினெட்டு, இருபத்தொரு நாட்கள் கழிந்தவுடன் சன்னித்தைலம் தாரைசெய்து, கையிதம் செய்து அமிர்த முக்கூட்டெண்ணெய் உள்ளேகொடுக்க நரம்பின் காயங்கள், முறிகாயம், நடுகாயங்கள் யாவும் நலமாகும். இச்சிகிச்சையில் நலம்பெறவில்லையாகில், பாதிக்கப்பட்டவரை பத்மாசன நிலையில் அமரவைத்து, வயிற்றுப்பகுதியை நன்றாகக் கட்டிவைத்து மருந்தெண்ணெய் தாரைசெய்து ஆசன வாயிலிலும் இந்திரியத்திலும் தடவல் செய்ய வேண்டும். சித்தர்களால் கூறப்பட்ட இம்முறையைப் பின்பற்றி சிகிச்சை முறைப்படி அளித்தால் ஈரலின் முன்முனையில் அமைந்துள்ள கருமந்தி நரம்பு முறிவு நலமாகும்.

குயில் நரம்பு முறிந்தால்

264. ஆச்சரியமது நடுவில் இடது பக்கம்
அடியிடியால் குயில்நரம்பு முறிந்திட் டாலோ
கூச்சமாய் கொக்கரித்து சன்னி யுண்டாம்
குமுறியே மாறுமிடா அடுத்த டுத்து
பாய்ச்சலுடன் சன்னியுண்டாம் நாசி ரண்டில்
பகரவே உதிரமது உருகும் பாரு
காய்ச்சலுடன் அடிக்கடியே உணர்வு முண்டாம்
கடுகியே சீர்கனக்கும் சிவக்கும் தேகம்.

265. தேகமது சிவந்துமேல் அங்க மெல்லாம்
திடுக்கெனவே பதறுமனம் பதினெட் டாம்நாள்
பாகமாய் காயரா ஜாங்க எண்ணெய்
பகரவே தேகமெல்லாம் துவாலை யிட்டு

வேகமாய் அமிர்த முக்கூட் டெண்ணெய்
மேவிஉள் அருந்தி விம்புதல் செய்தால்
ஆகமாய் வந்தபல காய மெல்லாம்
அடவாகத் தீருமென் றறிந்து செய்யே.

மூச்சுக்குழலின் இடதுபக்கத்தில் அமைந்துள்ள குயில் நரம்பானது அடி, இடியால் முறிந்துதானால், பாதிக்கப்பட்டவன் குயில்போல ஒலியெழுப்புவதுடன் சன்னிக்கும் உள்ளாவான். மூக்கிலிருந்து உதிரம் பாய்வதுடன் மீண்டும் மீண்டும் சன்னிக்கு ஆளாவான். காய்ச்சலால் அவதியுறுவதுடன், தேகம் சிவந்தும் அடிக்கடி மயக்கமுறும் நிலையும் ஏற்படும். உடல் நடுக்கம் உண்டாகும். பதினெட்டாம் நாளில் காயராஜாங்க எண்ணெய் துவாலை செய்து, அமிர்தமுக்கூட்டெண்ணெய் உள்ளுக்கும் கொடுத்து, மேலிலும் தடவி கைமுறைப்படி கையிதமும் செய்ய, குயில் நரம்பு முறிவும் மற்றும் பல காயங்களும் தீரும்.

### கொட்டகாய நரம்பின் முறிவு

266. அறிந்துமே பீசவித்து மேல் திரையில்
அருகில்கொட்ட காயநரம் பதுமு றிந்தால்
சேர்ந்துமேல் ஓடியே சுருண்டு விழும்
சீற்றனைப்போல் தேகமெல்லாம் செறிந்து காணும்
அறிந்துநடு காயமது குமிறி யேறும்
மாறியே ஓங்காளத் திகில் விட்டுக்கும்
பொருந்தொருளும் சன்னியது மூன்றில் காணும்
போகுமுயிர் நாள்மூன் று கடந்து தாகில்.

267. கடந்தாலோ கையிதமும் செய்து கொண்டால்
கருவாக தீருமுன் கருத்தாய் சொன்னோம்
கடந்துநீ குருவருளை தேர்ந்து கொண்டு
கூர்மையாய் நின்றபல காயத் திற்கும்
திடந்தானே ஆராய்ந்து செயல றிந்து
சிறப்பாக கையிதமும் செய்து கொண்டால்

திடந்தான் தீருமென்று கருத்தாய் சொன்னோம்
திருவான குருவருளை தேர்ந்து நன்றாய்.

பீசத்தின் மேற்புறத்தின் அருகில் காணப்படும் கொட்டகாய நரம்பு முறிந்தால், நோயாளி வேகமாக ஓடுவான். உடலானது பாம்பினைப்போல் செறிந்து காணும். இதனால் ஏற்பட்ட வேதனையும் வலியும் மூளையைச் சென்றடையும். மூன்றாம் நாளில் சன்னியும் அதைத் தொடர்ந்து மரணமும் வரும். மரணம் நேராவிடில் முறைப்படி மருந்தெண்ணெய் பயன்படுத்தி கையிதம் செய்துகொள்ள, குருவருளால் நலம் கிட்டும்.

வருணநரம்பின் முறிவு

268. மன்றாகும் இதனுடைய இடது பக்கம்
வருணநடு வதிலேநரம் பதுமு றிந்தால்
குன்றாமல் சன்னியது உடனே யுண்டாம்
கூன்றெழுந்த சன்னியது மூன்றி லேகும்
சென்றாலும் அஞ்சாம்நாள் பனியழ லாய்
திறமான ஒன்பதில் கைகால் வலிக்கும்
அன்றாடு கிறுகிறெனே வலிக்கும் பாரு
அழலுண்டாய் பதினெட்டில் கபத்தோடி கீழ்.

269. கபமுண்டாய் இருபத் தெட்டில் சன்னி
காணுமிடா முப்பத்தி மூன்றில் சாவான்
நவமாக கடந்தாலோ மரண மாகும்
நாடிநீ முப்பொருளைக் கண்டு தேறு
உபதேச மாகவே முன்னே சொன்ன
ஓதரிய தடவலத்தின் மார்க்கந் தன்னை
இன்பமுடன் செய்துமேல் துவாலை செய்ய
ஏகுமின் மாமுனிவர் இசைந்தா ரிதமே.

பீசவித்தின் இடப்பக்கத்தின் நடுவில் காணப்படும் வருண நரம்பு முறிந்தால் உடனே சன்னியும், 5ம் நாளில் சுரமும் உண்டாகும். ஒன்பதாம் நாளில் அங்கம் முழுவதும் வலி உண்டாகும்.

பதினெட்டாம் நாளில் மூச்சுக்குழலில் கபம் உண்டாகி, அடைக்கும். இருபத்தெட்டாம் நாளில் சன்னியும், முப்பத்து மூன்றாம் நாளில் மரணமும் உண்டாகும். தப்பினால் வர்ம முறைப்படி மருந்தெண்ணெய் தாரை செய்து கைபிதம் செய்து கொள்ள குணமாகும்.

**கண்ணொழி நரம்பின் முறிவு**

270. இசையவே மேல்புரிக மேல்பா கத்தில்
இலங்குகண் ணொழிநரம்பு முறிந்து தாகில்
விசையான கண்ணொழியும் மயங்கி காணும்
வேகமாய் செறுஅனலும் பெருமிக் காணும்
திசையாகி மண்டைக்குள் விட்டி லைப்போல்
தெறிக்குமே மூவாண்டில் கண்ணில் சுக்கிரன்
இசம்பியே புழுபூன்றிப் போல் காந்தும்
பகர்ந்துசீ காணுமடா மதிக்குள் ளாகி.

271. உள்ளாகி நிற்குமடா சாந்த மாகி
ஓதரிய விழிரண்டும் காணா தப்பா
மெள்ளவே அங்கமெல்லாம் துவாலை யிட்டு
மேவியே கையிதமும் செய்து கொண்டால்
கள்ளமுற்று நரம்புசங்கல் முறிவு காயம்
கருகிவரும் விஷகாயம் வர்ம காயம்
தெள்ளியே நீர்காயம் சேர்ந்த காயம்
தீருமென்று மாமுனிவர் செப்பி னாரே.

கண்ணில்மேல்பாகத்தில் புருவத்தில் காணப்படும் கண்ணொளி நரம்பு முறிந்தால் பார்வை மயங்கும், இலேசான சுரம் காணும். சிரசினுள் வெட்டி விட்டிலைப்போல் துடிப்பு ஏற்படும் உணர்வுண்டாகும். மூவாண்டில் கண்காசம் ஏற்பட்டு, கண் எரிந்து சீழ்கோர்த்து காணும். இதனால் பார்வை சிறிது சிறிதாக மங்கும். இதற்கு மருந்தெண்ணெய் பயன்படுத்தி அங்கமெல்லாம் துவாலை செய்து கையிதமும் செய்துகொண்டால் நரம்பிசங்கல், முறிவுகாயம்,

விஷகாயம், வர்மகாயம், நீர்காயம் முதலியவை தீருமென்று கூறப்பட்டுள்ளது.

**ஈரல் வர்மத்தில் முறிவு**

272. இசம்பினோம் பிடரியின்கீழ் மத்தி தன்னில்
இடியடியால் ஈரல்வர்மம் முறிந்து தாகில்
வசமாகும் மூன்றில்விஷம் சன்னி சீதம்
மருவியே காணுமடா நெருக்க முற்று
திசைநாளில் பனிகுளிரும் சேர்ந்து விக்கல்
தியங்கியே மயக்கமது வியர்வை யாகி
விசைநாள் ஈராறு இருபத் தெட்டில்
விலகிநின் றல்லோ கையிதம் செய்யே.

273. சென்றுமே துவாலைசெய் தங்க மெல்லாம்
திசைமருவி அமிர்த முக்கூட் டெண்ணெய்
மைதலே கொண்டுரா ஜாங்க எண்ணெய்
வைத்துமேல் துவாலையது தாரை செய்து
தோய்தமுடன் அந்திசந்தி குருபரனை
சூச்சமுடன் கண்டுமனக் கண்ணி னாலே
நைய்யவே வந்ததொரு நரம்பின் காயம்
நலமாக தீருமென வகுத்தார் தானே.

கசேறுக்கொடியின் மேல் அந்தத்தில் உள்ள ஈரல் வர்மத்தில் அடியிடியால் வர்மம் கொண்டு முறிந்ததானால் மூன்றாம் நாளில் சுரம், பாம்புவிஷத்தால் ஏற்பட்ட சன்னியைப் போன்றும் உண்டாகும். பத்தாம் நாளில் மயக்கம் விக்கல், வியர்வை காணும். பனிரெண்டு, இருபத்தெட்டாம் நாட்கள் கடந்தால் நோயின் வன்மைக்குத் தக்கவாறு அமிர்த முக்கூட்டெண்ணெய், ராஜாங்க எண்ணெய் ஒன்றாய் கலந்து துவாலை செய்து கையிதம் செய்ய காயம் தீரும்.

உள்குத்து வர்மத்தில் முறிவு

274. வகுத்ததோர் நெஞ்சினடி வரியின் பக்கம்
வகுத்தஉள் குத்துவர்மம் முறிந்து தாகில்
தொகுத்ததோர் கடிகையது மூன்றுக் குள்ளே
சூச்சமுடன் வரிவுயிர்போய் சுடலை புக்கும்
பகுத்துமேல் இசங்கியே நெருக்கி னாலும்
பகர்ச்சையாய் காணுமடா மேல் துடிக்கும்
மிகுப்பான தரிசனமும் மிகவுண் டாகும்
விறுவிறுத்து மேலிழைப்பு ஆகு மென்றே.

275. மேலதுவே இழுத்துமே அழலு முற்று
வேகமுடன் தொண்டைதனில் துடிப்புண் டாகும்
கால்பெரு விரல்நகம் துடிக்கு மாகில்
கண்ணிரண்டும் அண்ணாயந்து வயிறும் ஊதும்
நீலநிற மாகவே நீரி றங்கும்
நெருங்கியே பிறவீச்சு பல் கடிக்கும்
ஞாலமதில் இருபத் தெட்டில் சாவான்
நலமாகும் இந்தமுறை நாடிப் பாரே.

ஏதியினோடு இணைந்துள்ள கடைசி பழுவென்பான உள்குத்து வர்மத்தில் அடிகொண்டு முறிந்ததானால், உடனடியாக மூன்று மணித்துளிகளில் பாதிக்கப்பட்டவன் மரணமாவான். இல்லையேல் அங்கமெல்லாம் நடுக்கமுண்டாகி மூச்சுவிடத் திணறுவதுடன் மிகுதியான சுரமும் இளைப்பும் உண்டாகும். கால்பெருவிரலில் நகம் துடிக்குமானால் கண்களின் விழியானது மேல்செருகி வயிறு ஊதிக்காணும். நீலநிறமாக சிறுநீர் பிரியும். பற்கடிப்பும் காணப்படும். இக்குறிகுணங்கள் யாவும் காணப்பட்டால், வர்மம் கொண்டவன் இருபத்தெட்டாம் நாளில் மரணமாவான்.

## பதிவிருதை வர்மத்தின் முறிவு

276. பாரேநீ உள்ளத்தின் நடுவிலே தான்
பதிருதை வர்மத்தில் முறிந்து தாகில்
நீரேநீ நேடுமூச்சு நெருங்கி பேசும்
நினைவெல்லாம் தகடுமுடன் உணர்வு முண்டாம்
ஊறென்ற மானிடரே கண்டால் நானும்
உற்றமே இருளில் சென்றே தூங்கிப் பேசும்
வாரேநீ அடிக்கடியே சிரித்து நாடும்
வாயதுமே பேசாது மலங் கருக்கும்.

277. கருத்துமே நரம்பில்வரும் போக மிஞ்சும்
நில்லென்றால் முத்தமிட்டு கடிக்கும் பாரு
மறுத்துமே தெளிவான வார்த்தை பேசும்
வரணமுற்ற பூவதுவை கண்டால் நாணும்
செறுதான மானிடரே தொட்டால் பேசும்
சிலநேரம் கண்ணாலே உருட்டிப் பார்க்கும்
பெருமயிலே கண்டாலோ அடித்துத் தள்ளும்
பிசகாமல் நாளதுவும் இருநூ றாகும்.

278. இருநூறு நாளுக்கு முன்னே சொன்ன
இசையான மாத்திரையால் கையிதம் செய்
விரும்பியே முனையதில் திரு விரலால்
விரல்பதியும் மாத்திரையால் கையிதம் செய்
சருதியே பதிக்கவிரல் வர்மந் தீரும்
தப்பாமல் காயராஜாங் கத்தின் எண்ணெய்
நடுங்கவே முன்சொன்ன துவாலை செய்து
நாடியே கையிதமும் செய்து கொள்ளே.

இதயத்தின் அருகில் காணப்படும் பதிவிருதை வர்மம் முறிந்தால் நெருங்கியே நீண்டமூச்சு, நினைவு தடுமாற்றம், பிறரைகண்டு நாணல், இருளில் தூக்கம், தூக்கத்தில் பேசுதல், அடிக்கடி சிரித்தல், பேசமுடியாமை, மலங்கறுத்துக் காணுதல், மிஞ்சியபோக உணர்வு, பிறரை கடிக்கும் உணர்வு, வண்ணமலர்களை

கண்டு நாணல், கண்களை அங்கும் இங்கும் உருட்டிப் பேசுதல், பறவைக்கொல்லும் உணர்வு முதலியவை காணப்படும். இருநூறு நாட்கள் கடந்து செல்வதற்குள் திருவிரலால் ஈடுகொண்ட இடத்தினைச் சரிசெய்து, காயராஜாங்க எண்ணெய் தாரை செய்து, துவாலையிட்டு தக்க மாத்திரையளவு அறிந்து கையிதம் செய்ய, பதிவிருதை வர்மத்தின் முறிவு குணமாகும்.

**புனல் வர்மத்தின் முறிவு**

279. கொள்ளவே நாவியதின் நடுவி டையில்
குமுறியே புனல்வர்மம் முறிந்து தானால்
வில்லுமே உச்சிநடு மத்தி தன்னில்
விட்டிலைப்போல் துடிக்குமடா சுண்டும் கோணும்
கள்ளமடா லிங்கமது சுருங்கி தாளும்
கண்ணும் நகக்கண்ணும் இரண்டுமூர்ந்து குத்தும்
மெள்ளவே ஆறாம்நாள் கண்க லிரண்டும்
விழிகாணா தோடுமதி யுணர்வு மாறும்.

280. உணர்வது மாறுமடா சன்னி சீதம்
வுற்றுயிரும் புறம்புக்கு மென்றே
கணையாகும் நாளெட்டு கடந்து சென்றால்
கருவாக சுபராஜாங் கத்தின் எண்ணெய்
குணமாக துவாலையது தானே செய்து
கூறிய மாத்திரையில் கையிதம் செய்
பிணமான வர்மமது தீரு மென்று
பேசும் நரம்பறிந்து நீபேச நன்றே.

நாவியின் நடுவிடையில் காணப்படும் புணர்வர்மம் முறிந்ததாகில் உச்சியில் மிகுந்த நோவுண்டாகி விட்டிலைப்போல் துடிக்கும், லிங்கமானது சுருங்கித்தாளும். விழிகளும் நகக்கணுக்களும் குத்தும். ஆறாம் நாளில் விழிகள் பார்வை சக்தியை இழப்பதோடு உணர்வு, ஞாபக சக்தி தடுமாறும். சன்னி சீதம் உண்டாகும். எட்டு நாட்கள் கடந்த பின்னர் காயராஜாங்க எண்ணெய் தாரை செய்து,

குறிப்பிட்ட மாத்திரை அறிந்து கையிதம் செய்துகொள்ள, புனல்வர்மத்தின் முறிவு நீங்கும்.

### மேல்பட்டை எலும்பு

281. நன்றனவே மேல்பட்டை எலும்பதெல்லாம்
நாடியே முறிந்து உள்கை மற்றாலோ
சென்றுமே மாத்திரையில் அளந்து கொண்டு
திறமாக மாங்கிசத்தை கீறி நன்றாய்
குன்றனவே நரைதிரை போல் அளந்துயில்
குமறியே நடுவூன்றி தமரு மிட்டு
வென்றனவே பற்றறுத்து மாத்தி ரையும்
விதமறிந்து செய்திடவே விளக்கும் போலாம்.

### பிறவீச்சு வர்மம்

282. விளங்கவே வாரியெல்லு மேல்தி ரையில்
பிறவீச்சு வர்மந் தன்னில்
தளம்பெறவே முறிந்தாலோ அஞ்சு ஏழில்
சார்ந்துமே கொல்லுமடா தப்பி நின்றால்
சலம்பிசகி இருபத் தாறில் சன்னி
தப்பாமல் காணுமடா தருண மாக
விளம்பியே அமிர்தமுக் கூட்டெண்ணெய்
விண்டுமே முறுவெண்ணெய் தாரை(செய்).

283. செய்யேநீ தாரையது இதமாக திறம்பார்
கையிதமும் செய்து கொண்டால்
நைய்யவே வந்ததொரு வர்ம காயம்
நாடியே விஷகாயம் நரம்பின் காயம்
தைய்யவே முறிகாயம் எலும்பின் காயம்
தலைதனில் நீர்காயம் படுகா யங்கள்
பைய்யவே தீருமென்று திட்டம் சொன்னோம்
மைந்தனே செய்துவிடு மாறுந் தானே.

நான்காம் பழுவிடையில் காணப்படும் பிறவீச்சு வர்மநரம்பில் முறிவு ஏற்பட்டால் ஐந்து அல்லது ஏழு நாளில் சாவான். தப்பி நின்றால், இருபத்தாறாம் நாளில் தவறாது சன்னியுண்டாம். அமிர்தமுக்கூட்டெண்ணெய், முறிவெண்ணெய் இரண்டும் கலந்து தாரைசெய்து, கையிதம் செய்ய வர்மகாயம், விஷகாயம், நரம்பின்காயம், முறிகாயம், எலும்பின் காயம், நீர்காயம் போன்ற பல காயங்களும் தீரும்.

### தீரை எலும்பு

284. தானான கீழ்வாரி எல்லின் பக்கம்
 சார்பதிலே தீரையெலும் பதுமு றிந்தால்
மானான வில்லொன்று சதிராய் செய்து
 மருவியதில் கணையேற்றி விசைமு டுக்கி
ஊனான முறிவுநிலை சரிப டுத்தி
 உத்தமனே பற்றறுத்து ஞாணு பூட்டி
வானான நற்கவசம் மூன்று கூட்டி
 மருவியே நடுநிலையாய் சரியாய் செய்யே.

285. சரியாக நடுநிலையைச் செய்து கொண்டு
 தப்பாமல் முறிவெண்ணெய் தாரை செய்து
துரிசமுடன் மூன்றுநாள் கூட்டிப் பாரு
 துச்சமுடன் ஈராறில் பெருங்கண்
பெருவிரலின் நடுக்கண்ணும் இரண்டு மொன்றாய்
 பெலமாக வெட்டியே கோணு மாகில்
திருவாகை ஈரெட்டில் மரண மாவான்
 திரும்பியே விட்டுநீ அகல நில்லே.

பழுக்களில் கடைசி என்பான தீரையெலும்பு முறிந்தால் மூங்கில் சீழியை எடுத்து துணியினால் சுற்றி, பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்து நன்றாக இறுகக்கட்டி முறிவெண்ணெய் மூன்று நாட்களுக்கு தாரைசெய்ய வேண்டும். பன்னிரு நாட்களில் பெருவிரலும், நடுவிரலும் பின்னிக்கொண்டு வெட்டியே

கோணுமானால் பதினெட்டு நாட்களில் மரணம் நேரும். சிகிச்சை மேற்கொள்வதில் பயன் ஒன்றும் இல்லை.

**அரணை வர்ம முறிவு**

286. சில்லனவே அரணைவால் வர்மந் தன்னில்
சிக்கியே முறிந்தாலோ இருகு வரும்
மேல்லனவே ஒடுக்கியே பல்க டிக்கும்
மேனியெல்லாம் கறுக்கும்மதி மயக்க முண்டாம்
வில்லுபோல் காணுமதி யுணர்வு முண்டாம்
மேவியே கடிகைக்குள் ளுடன்ம யங்கும்
நல்லான விட்டிலைப் போல் தெறித்து விழும்
கருவாக துடிக்குமடா சென்னி ரண்டும்.

287. சென்னிரண்டும் துடிக்குமடா எட்டாம் நாளில்
தேங்கியே நாவறட்சை இருக்கு மாகில்
பின்னியே உயிர துவும் முப்பத் தாறில்
சேராமலே பிறம்புக்கு மென்று
மின்னியே மாமுனிவ ரறிந்துசொன்ன விதமாக
ஆயிரத்திரு நூறும் ஆய்ந்து நன்றாய்.

288. ஆய்ந்துபார் இந்நூல்தான் பொன்னூ லப்பா
அருளான குருநூலாய் அடங்கல் பாடி
தூயவெளி சுடர்போன்ற சுடர்வி ளக்காய்
தூண்டாத மணியதுபோல் துலக்க மாகி
நேயமுடன் அருள்பெருகி நேசம் வைத்து
நின்றமுனி ரெசியோர்க்கும் செகத்தோர்க் கான
வாய்தேய்ந்து மேஆராய்ந்து சூச்ச மாக
சொல்லிவிட்டேன் இந்நூலை தொகுத்துப் பாரே.

கடைக்கண்ணின் அருகில் உள்ள அரணைவர்மத்தில் முறிந்தால் உடனே இருமல், தோல் கறுத்தல், மதிமயக்கம், பற்கடித்தல் முதலிய குறிகுணங்கள் தோன்றும். மீண்டும் சுயஉணர்வு திரும்பலாம். ஆனால் உடலானது வில்போல் வளைந்து காணும்.

அருகில் உள்ள தலைப்பாகை காலவர்மத்தில் விட்டிலைப்போல் துடிப்புண்டாகும். மீண்டும் சுயஉணர்வை நோயாளி இழப்பான். எட்டாம் நாளில் மீண்டும் சன்னியும் நாவறட்சியும் உண்டாகும். மேற்கண்ட குறிகுணங்கள் காணப்படின் நோயாளி முப்பத்தாறாம் நாளில் மரணமாவான்.

**துடியெலும்பின் முறிவு**

289. தொகுப்பான வாரிமேல் சினமத்தி
துடியெலும்பு முறிந்தால் சொல்லக் கேளு
வகுப்பான முன்சொன்ன முறைகள் செய்ய
வந்திறங்கி இல்லாவிட்டால் அப்பால் கேளு
வகுப்பான குண்டுநடு குறுக்கே போட்டு
பதித்திருக்க குண்டில்விழுந் தாடுந் தானே.

290. விழுந்தாடும் நிலைசரியாய் வைத்துக் கொண்டு
மேல்நின்ற குன்றெலும்பை அணைத்து வைத்து
அழுத்தாமல் பற்றிட்டு பதம்வ ருத்தி
அப்பனே முறுவெண்ணெய் தாரை செய்ய
பழுந்தாமல் அஞ்சுநாள் கூடிப் பாரு
பகர்ச்சையாய் தொன்னூ று நாளு சென்றால்
அழுந்தவே வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
ஆறியே தாரையது மாறல் செய்யே.

291. உமறலது செய்துகணை மாறல் செய்து
ஓதரிய கையிதழும் செய்து கொண்டால்
திமறலது மாறுமது எலும்பின் காயம்
செறுகாயம் வலுகாயம் எலும்பின் காயம்
கமறுமல் எறிவகலு விசகா யம்போம்
கருதியே மாத்திரையை கண்டு செய்யே
சமரதுவும் மாறுமுன் மாமுனிவர்
தப்பாமல் உரைத்தாரிந் நூலில் தானே.

முதலாம் பழுவான துடியெலும்பு முறிந்துதானால் பாதிக்கப்பட்ட இடத்தில் போதுமான அழுத்தம் கிடைக்கும்படி நோயாளியைக் குப்புற படுக்கும்படி செய்ய வேண்டும். அழுத்தாமல் பாதிக்கப்பட்ட இடத்தில் பற்றிட்டு முறிவெண்ணெய் ஐந்து நாட்கள் தாரை செய்ய வேண்டும். தொன்னூறு நாட்கள் கடந்தபின் முறிவெண்ணெயும், வசவெண்ணெயும் ஒன்றாகக் கலந்து தாரைசெய்து வர்ம முறைப்படி கையிதமும் செய்துகொள்ள முறிந்த எலும்பானது தன்னிலையை அடையும். மேலும் எலும்பின் காயம் செறுகாயம் வலுகாயம், எலும்பின்காயம், விஷகாயம், முதலியனவும் மாறி குணமாகும்.

ஈரெலும்பு வாரி

292. நூலான கீழ்வாரி எலும்பி னஞ்சில்
நுண்மையுள்ள ஈரெலும்பு முறிந்து தானால்
பாலமுடன் நிரையதிலே வைத்துக் கொண்டு
பகருவேன் முன்பின்னாய் சவ்வ கற்றி
தூலமுடன் கவரியே விமரிசை செய்யே
சூச்சமுடன் விசைநெருங்கி தலத்தி லாடும்
ஞாலமதில் நிலைசரியாய் வைத்துக் கொண்டு
நாடியே பற்றுமிட்டு நலம தாக.

293. நலமாக கணையாக்ஷி நாடி செய்து
நாள்சதுரம் போல்மெத்தை செய்து
நிலையாக வைத்துமுறு வெண்ணெய் தாக்கு
நேசமுடன் மூன்றுநாள் கூட்டிப் பாரு
பிலமாக முப்பத்தி மூன்றில் தானே
பேசரிய வசவெண்ணெய் தான் செய்ய
துலங்கவே அச்சதனை விலக்கிப் போட்டு
சூச்சமுடன் கையிதமும் செய்து கொள்ளே.

294. கையிதம்செய்ய மாத்திரைய தாக
கடுகிய வர்மமது தீரும் கண்டாய்
மையயவே எலும்புமுறிந் துயங்கித் தாழ்ந்து
வலுவாக கதிநிலையில் மருவி நின்றாய்
அய்யாறு முப்பத்தா ரதுக டந்தால்
அறுபத்தி ரண்டினிலும் மரண மென்ன
சூச்சமாய் உரைத்தநூல் சூச்சந் தானே.

ஐந்தாம் பழுவெலும்பு முறிந்தால் முங்கில் சீழிகளையெடுத்து நாற்சதுரமாய் பஞ்சினையெடுத்து அதன்மேல் நன்றாக சுற்றி பாதிக்கப்பட்ட இடத்தில் வைத்துக்கட்டி, சில நாட்களுக்கு பற்றிட வேண்டும். பின் பற்றினை நீக்கிவிட்டு மூன்று நாட்களுக்கு முறிவெண்ணெய் தாரைசெய்ய வேண்டும். முப்பத்து மூன்றுநாள் கழித்து பஞ்சினையும், சீழிகளையும் நீக்கிவிட்டு வசவெண்ணெய் தாரைசெய்து வர்மமுறைப்படி கையிதம் செய்ய வேண்டும். எலும்பானது முறிந்து தசையினைக் கிழித்து வெளியே தள்ளிக்கொண்டிருந்தால் பாதிக்கப்பட்ட முப்பத்தாறாம் நாளில் மரணமாவான். தப்பினால் தொன்னூற்றாறாம் நாளில் மரணம் ஏற்படும்.

நடுக்கெலும்பின் முறிவு

295. சூச்சமாய் இருபத்திநாலெ லும்பி டையில்
துய்ய நடுக்கெலும்பு முறிந்து தாகில்
ஆச்சரிய மாகவே கிடற்றி வைத்து
அரியவே முக்கோண குழியை தோண்டி
பூச்சியமாய் செய்துமே லியம்பக் கேளு
புத்தியுடன் முன்பின்னால் உருட்டி நிற்க
ஆச்சரியம் சவ்வகற்றி முன்த லத்தில்
மருவிநிலை பதிந்தாடும் அறிந்து கொள்ளே.

296. அறிந்துகொள் நிலைசரியாய் வைத்துக் கொண்டு
ஆதரவாய் பற்றிட்டு கணைநெ ருக்கி
குறியாக முன்தலத்தில் பதிந்தி டாமல்
கூர்மையாய் முறிவெண்ணெய் தாரை செய்து
நெறியாக மூன்றுநாள் கூடிப் பாரு
நேசமுடன் ஆறுபத்துநாள் சென்ற போது
பொறியான வசவெண்ணெய் இரண்டு மொன்றாய்
புத்தியுடன் தாரைசெய்து பின்னே.

297. பின்னாக தொன்னூறு நாளும் சென்றால்
பிணையாக கணையதினை அகல நீக்கி
மன்னாகேள் துவாலையது வருந்தி செய்து
வளமாக கையிதமும் செய்து கொண்டால்
பின்னாடும் எலும்பெல்லாம் நிலைச ரியாய்
பிலமாக சவ்வுறைத்து பெலமுண் டாகும்
நன்மையாய் நிலைசேரும் தாச்சி யாகும்
நலமாகும் இந்தவிதம் நாடிச் செய்யே.

கசேருக்கொடியின் இருபத்திநாலாவது முன்னெலும்பான நடுக்கெலும்பு முறிந்தால் நோயாளியை குப்புற படுக்க வைத்து பாதிக்கப்பட்ட எலும்பில் பொருந்தும்படியாக ஒரு முக்கோணவடியில் மூங்கில் சீழியை அமைத்து அதை நன்றாகப் பஞ்சினால் சுற்றிக் கட்டி, பாதிக்கப்பட்ட இடத்தில் பொருத்தி உடலைச்சுற்றும் நன்றாகக் கட்ட வேண்டும். முறிவெண்ணெய் மூன்று நாட்களுக்கு தாரைசெய்து சோதித்தறிய வேண்டும். அறுபத்து நான்குநாட்கள் கழிந்தபின் வசவெண்ணெயும், முறிவெண்ணெயும் ஒன்றாய்க் கலந்து தாரைசெய்து, கையிதம் செய்தால் நடுக்கெலும்பு முறிவு குணமாகும்.

எலும்புகள் முறிந்து கீறி அகமுற்றால்

298. நாடி எலும்புடனே முறிந்து கீறி
நடுநிலையை தாவியே அகமுற் றாலோ
ஓடியே பிராணனது சாடியே மோதி

உத்தமனே நாலாம்நாள் உடலை விட்டு
சாடியே வெளிப்போகும் அப்பா சீவன்
தப்பாமல் சுடலைதனில் புக்கு மென்று
பாடினார் பரமமுனிவர் செகத்துள் ளோர்க்கே
பலனாக காணுமின் பகர்ந்தார் தானே.

முறிந்த எலும்புகளானது மாங்கிசத்தைக் கிழித்து அகமாக ஊடுருவிச் சென்றால் நான்காம் நாள் பிராணன் உடலைவிட்டு நீங்குமென்றும், சிகிச்சைக்கு இது சாத்தியப்படாது என்றும் கூறப்பட்டுள்ளது.

திலை எலும்பின் முறிவு

299. ஆகுமதின் மேலான திலையெ லும்பின்
அப்பனே அடியிடியில் முறிந்திட் டாலோ
வேகமேன் ஒருபுறமே சரித்து வைத்து
மெத்தனமே நிலைசரியாய் வருதல் கண்டு
வாகுபெறும் பற்றதனை இறுகப் பூட்டி
வளமாக கணைநெருக்கி வசம தாகில்
சாகான சதர்ச்சி தயவாய் பூட்டி
இறுகாமல் இதம்வருத்தி தாரை செய்யே.

300. செய்துமே முறுவெண்ணெய் தாரை செய்து
திறமாக தொன்னூறு நாளுஞ் சென்றால்
வயதுமே வயவெண்ணெய் தாரை செய்து
வளமாது துவாலையது வருந்திப் போடு
உய்துமே அச்சதனை விலக்கி மைந்தா
உண்மையாய் கையிதமும் செய்து கொண்டால்
நைய்யவே எலும்பொன்றாய் சரிபட் டேகும்
நாடியே இந்தமுறை நன்றாய் செய்யே.

301. நன்றாகச் செய்துவர பலனும் உண்டாம்
நடுங்கியே முறிந்துள்ளே முனையற் றாலோ
நின்றாடும் பிராணகலை நிலைசே ராமல்
நெருங்கியே சுவாசமது மேல் வலிக்கும்
நன்றான வியர்வைகபம் பனிக் குளிரும்
நடுக்கமுடன் நடுக்காய நடுவிடையில் புக்கி
சென்றாடும் பிராணனங்கே வெளியே சாடி
சிவலோகம் போகுமடா முப்பத் தாறில்.

302. முப்பத்தாறில் அங்கே பிராணன் போகும்
மூர்க்கமுற்று போகாமல் இருந்து தாகில்
தப்பாமல் அம்பத்தெட்டில் தானே
சட்டெனவே பிராணனது சடத்தை விட்டு
ஒப்பினை விட்டோடு மின்பரம முனிவர்
உகந்துஇந்நூல் உரைத்தமுறை உண்மை தானே
தப்பாமல் மானிடர்க்கு உரைத்த தாச்சு
சாற்றினேன் அறிந்துகொள் தரணி யோர்க்கே.

303. தரணிதனில் உற்பனமாய் முப்பொருளை
தயவாக கண்டுஉன் மனக்கண் ணாலே
வருணமது கண்டாலோ மனக்கண் சாத்தி
வளம்பெரிய குருவருளை வைத்துக் கொண்டு
நிர்ணயமாய் முறிகாயம் நரம்பின் காயம்
நேசமொடு விஷகாயம் யம காயம்
எண்ணியே செய்துபார் பரம குரு
இருப்பிடத்தில் இருந்துவரம் புரிவார் தாமே.

இடுப்பு காலத்தின் மேல் அந்தத்தில் உள்ள திலை எலும்பானது முறிந்துதானால் பாதிக்கப்பட்டவனை சிகிச்சை அளிப்பதற்கு ஏற்றவாறு குப்புறப்படுக்க வைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் பஞ்சினை நன்றாகப் பொருந்தும்படி வைத்து முறிந்த எலும்பானது தன்னிடத்தில் பொருந்துமாறு நன்றாகக் கட்ட வேண்டும். பின் தொன்னூறு நாட்களுக்கு முறிவெண்ணெய் தொடர்ந்து தாரைசெய்ய வேண்டும். தொன்னூறு நாள் சென்றபின்

கட்டினை விலக்கிவிட்டு வசவெண்ணெய் பயன்படுத்தி கையிதம் செய்ய நலமாகும். அதனால் முறிந்த எலும்பானது அகமாக ஊடுருவிச் சென்றிருந்தாலோ சிகிச்சை எப்பயனையும் நல்காது. சிறுநீர், விந்துநீர், கண்ணீர், மலம் ஆகியவை தன்உணர்வின்றி வெளியேறுவதுடன் சுரமும் சன்னியும் உண்டாகும். நோயாளி முப்பத்தாறாம் நாளில் மரணமாவான். தப்பினால் ஐம்பத்தெட்டில் மரணம் நேரும். இதன்பின்னும் நோயாளி பிழைத்திருந்தால் மருத்துவனின் இறைநம்பிக்கையாலும் குருவருளினாலும் நலமடைவான்.

நடுமத்தியடி எலும்பு

304. கூறான நடுமத்தி யடியெ லும்பின்
குமிறியே முறிந்திடம் வலம தாக்கி
வாறான துறைகளெல்லாம் பார்த்து செய்நீ
மருவியே நில்லாட்டால் ஒன்று கேளு
நீறாக நிலையிருக்க கமத்தி வைத்து
நெறாகாயம் முதுகில்திரை மடக்கின் பூட்டி
சீறாமல் சுருங்கிட்டு மேலி ருத்தி
சிறப்பாக உருட்டியே நெருக்கும் போது.

305. உருட்டவே முன்தலத்தில் பதிந்தங் காமே
ஓதரிய அதன்நடுவில் வாறு மெத்தை
திருத்தமாய் மேல்குட நிலைதான் வைத்து
சேராமல் விலக்கியே கச்சை பூட்டி
பருத்தகச்சை பூட்டி மேல்
கமலகணை பதமாக முன் பின்னாய்
கருத்தாய்செய்து நெருக்கியே முறு வெண்ணெய்
தாரைசெய்து நேசமுடன் மூன்றுநாள் கூடிப் பாரே.

306. மூன்றுநாள் கூடியே பார்த்து மைந்தா
முத்தியாய் தொன்னூறு நாளுஞ் சென்றால்
குன்றுமே வசவெண்யெ் இரண்டு மொன்றாய்
குணமாக தாரையது குறிப்பாய் செய்து

ஈன்றிடுவாய் துவாலையது தாரை செய்நீ
இன்பமுடன் அச்சுதனை விலகிப் போடு
போன்றுமே கையிதமும் செய்து கொண்டால்
பொருளான சவ்வுறைத்துப் பற்றிப் போகும்.

307. பற்றியே போகுமடா பெலனு முண்டாம்
பகருமுன் பின்இசைந்த நரம்ப றிந்து
ஒற்றியே அதில்நெருக்கி பற்றி டாமல்
ஓதியே வர்மத்தில் மறந்தி டாமல்
தெற்றாமல் கணைநெருக்கி இசங்கி டாமல்
திறமான மனக்கண்ணால் கண்டு கண்டு
வெற்றியாய் பலநிலையும் கண்டு செய்தால்
இடறான தொருநாளும் இல்லை தானே.

கசேருக்கொடியின் கீழ் அந்தத்தின் நடுமத்தியில், வலஇடமாக முறிந்துதானால், நோயாளியைக் குப்புற படுக்க வைத்து, பாதிக்கப்பட்டஇடத்தில் பஞ்சினைப் பொருத்தி, மூங்கில் சீழி வைத்து நன்றாகக்கட்டி, இடுப்புப் பொருத்தினைச் சுற்றி நன்றாகக் கட்டவேண்டும். முறிவெண்ணெய் மூன்று நாட்கள் தொடர்ந்து தாரைசெய்து, இதையே தொன்னூறு நாட்கள் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

பின் சீழியினை நீக்கி, பஞ்சினையும் எடுத்துவிட்டு, முறிவெண்ணெய், வசவெண்ணெய் இரண்டையும் ஒன்றாகக் கலந்து தாரைசெய்து, கையிதம் செய்ய, பாதிக்கப்பட்ட என்பானது முறிவு நீங்கி நலமாவதுடன் பெலனும் ஆகும்.

குளவல நரம்பில் முறிவு

308. இல்லையென்ற வாரியெல் நடுப்பக் கத்தில்
குளவல நரம்பதி முறிந்தால் சொல்லக் கேளு
மெல்லெனவே தேகம்நடு நடுக்க முண்டாம்
விழிரண்டும் மயங்கி விழி கேளா தப்பா

வில்லுபோல் தேகமது வசைத்து வாட்டும்
மேவு நாள் மூன்றில்விடும் பதிமூன் றாம்நாள்
மெல்லெனவே யேகாசி சுரம்போல் காயும்
மேவியே முன் முறியும் விளங்கிக் காணும்.

309. விளங்கவே பதிமூன்றில் குறிகள் கண்டால்
மேவியே பதிமூன்றில் சன்னி சீதம்
சளம்பியே காணுமடா முப்பத் தாறில்
தப்பாமல் விடுவிடென துடிக்கும் பின்னே
தெளிம்பியே நாளதுவும் நாப்பத்தி யெட்டில்
தப்பாமல் அமிர்த முக்கூட் டெண்ணெய்
விளங்காஉண்டு வாதரா ஜாங்க எண்ணெய்
மேவியே தாரையது செய்து மைந்தா.

310. மைந்தனே கையிதமும் செய்து நன்றாய்
மருவியே நாளொன்றில் இருநே ரந்தான்
விந்தையாய் அந்திசந்தி வென்னீர் மூழ்கி
விளங்கவே மண்டலம் இப்படியே செய்தால்
சிந்தையொன் று மில்லாமல் தீரும் நோய்தான்
சிறப்பான குருவருளை சிந்தை கூர்ந்து
அந்திசந்தி ஆனநிலை அறிந்து செய்நீ
அசொடுரு நாள் இல்லையடா அறிந்து பாரே.

மூன்றாம், நான்காம் பழுக்களின் இடையில் உள்ள குளவல நரம்பு முறிந்தால், உடல் நடுக்கம், அறிவு மயங்கிக் காணுதல், உடல் வில்போல் வளைந்து காணல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். பதிமூன்று நாள் சென்றபின் சன்னியுடன் உடல் குளிர்ந்து காணும். முப்பத்தாறாம் நாளில் மீண்டும் உடல் நடுக்கம் உண்டாகும்.

இதற்கு அமிர்த முக்கூட்டெண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்து, வாதராஜாங்க எண்ணெய் தாரைசெய்து நாளுக்கு இருமுறை நாற்பத்தியொரு நாட்களுக்குக் கையிதம் செய்ய வேண்டும்.

கையிதம் செய்த பின் வென்னீர் ஒற்றடம் கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்ய குளவல நரம்பின் முறிவு நீங்கி, நலமாகும்.

**செந்தணல் வர்மத்தில் முறிவு**

311. பாரப்பா மேல்நெட்டி எலும்ப ருகில்
படுசெந் தணல் வர்மம் முறிவுற் றாலோ
கூறப்பா ஆவனவே அலறி வீழும்
கும்பிட்டு மல்லார்ந்து வானம் பார்க்கும்
நீரப்பா மூக்கடைக்கும் உணர்வு முண்டாம்
நெடுங்கியே சொல்லிட அறுத்தாக மாறி
வாரப்பா மூன்றிலிட சுழியே போல
மாற்றியே முன்வெட்டில் மருங் கண்டாய்.

312. கண்டாலோ குணக்குறி யுடனே மாறும்
கருவான முப்பத்தி மூன்றில் சன்னி
விண்டுமே காணுமடா முப்பத்தி யெட்டில்
மேவியே சென்றாலோ நடுநி லையில்
கண்டுமே திருவிரலால் பதித்துக் கொள்ளு
சாடியே மதியுணர்வு முண்டாம்
பண்டுமே முன்சொன்ன தைலங் கொண்டு
பாலகனே தாரையது பதமாய் செய்யே.

313. மேவியே வாத காய மெல்லாம்
விசிதமாய் விஷகாயம் நீர்கா யங்கள்
கூவியே தேர்த்துவரும் நடுக்கா யங்கள்
குணமான செறுநரம் பதுமு றிந்தால்
தேறியே யேகசுரம் போலக் காயும்
சிறுவியர்வை வியர்த்துவிடும் தாக முண்டாம்.

314. மாறியே மூன்றாம்நாள் மூக்கில் புண்ணாய்
விடுபட்டு நாசிவழி ரத்த முண்டாம்
வேறாக கண்ணிரண்டும் அடைக்கும் பாரு
இருபத்தி யெட்டில்விழி மறைத்துக் காட்டும்.

315. வழிமறைத்துக் காட்டுமடா மூன்றும் தேகம்
வியர்வையாம் முப்பத்தி மூன்றில் சன்னி
வழுத்துநாள் ஒம்பதுவும் கடந்து சென்றால்
வாதரா ஜாங்கஎண்ணெய் உள்ளே கொள்ளு
தெளிவாக சித்தமூட்டி தைல மணம் பாராய்
சிறப்பாக மெழுகியே அந்தி சந்தி
வழியெனவே வென்னீரு மெழுகும் போது
மைந்தனே ஏகாசி நரம்பின் காயம்.

நெட்டி எலும்பருகில் செந்தணல் வர்மத்தில் முறிவுற்றாலோ, அலறிவிழுவான். கண்கள் செருகிக்கொள்ளும், மூக்கு அடைத்துக்கொள்ளும், பார்வை மயங்கும். முப்பத்தி மூன்றாம் நாளில் சன்னி உண்டாகும். கடந்து சென்றாலோ முப்பத்து எட்டுக்குள் மருத்துவம் செய்ய குணம் உண்டாகும். அமிர்த முக்கூட்டெண்ணெயும், காயராஜாங்க எண்ணெயும் தாரைசெய்ய வேண்டும். செந்தணல் வர்ம நரம்போடு தொடர்பு கொண்ட சிறு நரம்புகளில் ஏதேனும் ஒன்றில் முறிவு ஏற்படுமானால், சுரம் உண்டாகும். வியர்வை காணும். மூன்றாம் நாளில் நாசியிலிருந்து இரத்தம் வரும். கண்ணிரண்டும் இருண்டுவரும். இருபத்தெட்டில் பார்வை போகும். முப்பத்து மூன்றில் சன்னி வரும். அதிலிருந்து ஒன்பது நாட்களுக்குள் மருத்துவம் செய்தால் பிழைக்கும். வாதராஜாங்க எண்ணெய் உள் மருந்தாகவும், சிற்றாமுட்டி எண்ணெய் வர்மத் தடவலுக்கும் பயன்படுத்தி காலைமாலை வெந்நீரில் குளிக்க, நலமாகும்.

### குக்குட நரம்பில் முறிவு

316. ஏகாசி நரம்பினுட காய மெல்லாம்
எளிதாக தீருமென்று இசம்பினோம் நாம்
வாகான பித்துக்காய் நடுமை யத்தில்
மைந்தனே குக்குட நரம்பது முறிந்தால்
வேகமாய் குக்குடம்போல் கொக்க ரித்து
விழுந்திருளும் சன்னியொடு சீத முண்டாம்

பாகமாய் உரைந்துமே கைப்பு கண்டும்
பார்அஞ்சி லெட்டில்வலி சன்னி யுண்டாம்.

317. சன்னியுண்டாம் முப்பத்தி யெட்டில் மாறும்
தவறாமல் ஆறெட்டு நாள்க டந்தால்
வன்னிமா தைலமது காசிஇடை கொள்
வருந்தியே முறுவெண்ணெய் தாரை செய்து
பின்னியே திருவிரலால் பெருக்கியே
பதித்திடவே சரிப்ப டுத்தி
மன்னியே வழிநிலையும் காணும் பாரு
மருவியே திறிவிசையின் காலஞ் சொன்னேன்.

318. திறியான உந்தியதின் மேல்குய் யத்தில்
திறிவிசையின் காலமதில் முறிந்து தாகில்
குறியான கண்ணிரண்டும் திருகிக் கோணும்
குடுகுடெனே துடிக்குமடா அங்க மெல்லாம்
பிறியான தேகம் வெட்டும் ஸ்திரியைக் கண்டால்
பேசியே மோகித்து கணைந்து காட்டும்
அணுகியே குன்மமுடன் அழலெழும்
பிதறுவியர்வை யமுகியே நெருங்கிக் காணும்.

319. நெருங்கியே கண்டாலோ அறுபத்தி ரண்டில்
நன்னிலை அகந்தால் தொன்னூறில் மரண மாவான்
துரிசமுடன் நாள்கடந்து விலகி நின்றால்
துவாலையுடன் கையிதம் செய்து கொண்டு
பருகிடும்நீ அமிர்தமுக்கூட் டெண்ணெய்
பாய்ச்சலுற்றால் திறிவிசையின் நரம்பின் காயம்
திரும்பியே போகுமின் மாமுனிவர்
தேர்ந்துரைத்த நூல்முறையை அறிந்து காணே.

பிருக்கத்தோடு இணைந்திருக்கின்ற குக்குட நரம்பானது முறிந்தால், பாதிக்கப்பட்டவன் சேவல்போல் கொக்கரிப்பான். உடல் குளிர்வதுடன் சன்னியும் உண்டாகும். தேகத்தைத் தரையில் கிடத்தி உருளுவான். வாயில் கைப்புச் சுவை தோன்றும்.

பதிமூன்றாம் நாளில் உடல் குளிர்தலும், சன்னியும் உண்டாகி முப்பத்தெட்டாம் நாளில் அவை மாறும். வன்னிமா தைலம் காசெடை உள்ளே கொடுத்து, 48 நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு, அதன்பின் திருவிரலால் முறிவிடத்தைப் பதித்து, சரிப்படுத்தி, முறிவெண்ணெய் தாரை செய்ய குணமாகும்.

உந்தியின் மேற்புறத்தில் உள்ள நரம்பது முறிந்தால் கண்கள் மேல்நோக்கி செருகிக்கொள்ளும். அங்கமெல்லாம் துடிப்புண்டாகும். சன்னி உண்டாகும். மாதரைக்காணின் போகம் கொள்ளும், குன்மம், வியர்வை, பிதற்றுதல் ஆகிய குறிகுணங்கள் காணப்படின் 62 அல்லது 90 ம் நாளில் மரணமாவான். தப்பினால் அமிர்த முக்கூட்டெண்ணெய் தாரைசெய்து, கையிதம் செய்து கொள்ள, நலமாகும்.

**கருங்கலங்கி வர்மத்தில் முறிவு**

320. தேர்ந்துரைத்த உள்ளத்தின் இடது பக்கம்
சிறப்பான கருங்கலங்கி வர்மந் தன்னில்
கூர்ந்துமே முறிந்தாலோ விறைக்குந் தேகம்
குறிகேடாய் கிடுகிடனே விறைக்கும் பாரு
ஆராய்ந்து அருள்நிலையில் அழல் கொதித்து
அங்கமெல்லாம் வெளிறியே காந்தும் பாரு
ஊர்ந்துமே நஞ்சுவிசம் உண்டாப் போலே
உணர்வற்று மயங்கும் பதினொம்ப துக்குள்.

321. உண்மையாய் நாள்கடந்தால் கையிதம் செய்யே
உத்தமனே அமிர்த முக்கூட் டெண்ணெய்
இன்பமுடன் அருந்திடுநீ மண்ட லந்தான்
எதிரான நாள்கடந்தால் கையிதம் செய்
நன்மையாய் பைய்யரு தைலங் கொண்டு
நாட்டிய தோர்செய் அங்க மெல்லாம்
வண்மையாய் கையிதமும் செய்து கொண்டால்
வளமான கருக்கலங்கி நரம்பின் காயம்.

322. காயமது தீர்ந்து மைந்தா கேளு
கருவாகி விஷமுற்றால் தொன்னூறு நாள்
மாயமாய் செறுவிசம் போல் அழலு முண்டாம்
வருந்தியே கைகாலும் தரித்துக் குத்தும்
சாயும் மேகமது பழுப்புத் தோன்றும்
சரசரக்கும் இருமல்பனி இழப்பு காயம்
தேயுமே உடம்பதுவும் வறட்சை யாகி
திக்கெனவே வாய்வதுபோல் வலுத்துக் காணும்.

323. வலுத்துமே காணுமது மரண மாவான்
வழங்கியே மாத்திரைகை யிதம்செய் தாலும்
நலமான உயிரதுவும் கூடு விட்டு
நாடியே போகுமுன் நவின்றா ரய்யா
நிலையான அதினடுத்த அணை யருகில்
நேச கருமந்தி நரம்பது முறிந்தால்
இலங்கியே தேகமெல்லாம் அக்கினிபோ லாகி
காந்து காந்தும் தேகம்.

இதயத்தின் இடப்பக்கம் உள்ள கருங்கலங்கி நரம்பானது முறிந்துதானால், தேகம் குளிர்ந்து, சன்னி காணும். அங்கம் வெளுக்கும், உடல் முழுவதும் தனல்போல் காந்தும். பதினொன்பது நாட்களுக்குள் அங்கம் நஞ்சுவிசம் உண்டதுபோல் உணர்வற்று அறிவு மயங்கும். அமிர்தமுக்கூட்டெண்ணெய் தக்க அளவில் உள்ளே கொடுத்து, வெளியாட்சியாகவும் பயன்படுத்தி 40 நாட்கள் கையிதம் செய்ய வேண்டும். அதன்பின் பைய்யறு தைலம் பயன்படுத்தி 40 நாட்கள் கையிதம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்ய நலமாகும். சில நிலைகளில் தொன்னூறுநாட்கள் கடந்தபின், வெறுவிஷம்போல் உணர்வுண்டாகி, சுரம் காணும். கை, கால்களிலும், பொருத்துகளிலும் வலியும், குத்தலும் உண்டாகும். மேகமது பழுப்புடன் தோன்றும். சுரத்துடன் இருமல், குளிர், உடல் மெலிதல், வறட்சையாதல் ஆகியவற்றுடன் வாயுவானதும் காணப்படும். இக்குறிகுணங்கள் காணப்படின் மாத்திரை அளவறிந்து கையிதம் செய்தாலும், குறுகிய காலத்தில் உயிரானது உடலை விட்டேகும்.

## கரு நரம்பு முறிவு

324. தேகமது காந்தி சிரம்போல் கனத்து போகும்
தீந்த விழிரண்டுமுடன் புகைந்து காணும்
தேகமது போல்நோக்கி சாருண் ணாது
தீர்ச்சையாய் வில்லுபோல் வளையுந் தேகம்
நாகமுறும் பல்கூசும் ஆறில் சன்னி
நாடிவரும் பதினெட்டில் விக்க லுண்டாம்
வேகமுடன் இருபத்தி யெட்டில் சாவான்
மேலான மாமுனிவர் விதித்த வாறே.

ஈரலின் அருகில் காணப்படும் கருநரம்பு முறிந்தால், தேகமெல்லாம் காந்தல் கொண்டு, கனத்துக்காணப்படும். கண்கள் புகைதலைத் தொடர்ந்து அங்கம் வில்போல் வளைந்து காணும். பதினெட்டாம் நாளில் விக்கல் உண்டாகும். பல் கூசும். இக்குறிகுணங்கள் காணப்படின் இருபத்தியெட்டாம் நாளில் மரணமாவான்.

## வாண நரம்பின் முறிவு

325. விதியாக கழுத்தடியில் உள்ளணியில்
விதமான வர்ண நரம்பது முறிந்தால்
சதியாக கொண்டவுடன் சன்னி யுண்டாம்
தலையுருட்டி மூன்றாம்நாள் தானே மாறும்
மதியாகி அஞ்சாம்நாள் பனி குளிராம்
பத்திலே தேகமெல்லாம் பதைத்து வெட்டும்
பதியாகி கிடுகிடனே விறைக்குந் தேகம்
பகர்ச்சையாய் வேகமுண்டாம் தீர்ந்து சாடும்.

326. சாடுமடா தன்நினைவை தாரை யெலும்பு
புக்கிசரம் பாதைவிட்டு கீழ்விழி ரண்டாகும்
ஒட்டுமே வியர்வையது வேக முண்டாம்
உத்தமனே முப்பத்தி மூன்றில் சாவான்

மாட்டியே உயிர்நிலைத்து நாள்க டந்தால்
ஆறெட்டில் அமிர்தமுக் கூட்டு எண்ணெய்
ஊட்டியே நடுநிலையை நெருக்கிப் பாரு
ஓடுவாண நரம்பெல்லாம் ஒன்றாய் சேரும்.

327. சேர்ந்துமே நிற்குமடா சரமொன் றாகி
திரும்பியே பாதவழி யாகி மீழும்
கூர்ந்துமே எட்டெட்டில் மாறி யோடும்
கூறியே நினைவுபதி னைந்தில் மீழும்
ஆர்ந்துமே உயிருணர்வு மணந்து கொள்ளும்
அருள்மீளும் விசகாயம் சுரத்தின் காயம்
நொந்துமே நிலைகறுத்தால் நிலை சரியாய்
நேர்மையாய் நின்றுகொள்ளு நிசங்கண் டாயே.

328. நிசங்கண்டு நிற்குமடா முன்னூற் றெட்டில்
நிச்சயமாய் ஏகாசி சுரம்போல் காயும்
வசையாக முந்நூற்றி பதினெட் டாம்நாள்
மருவியே உச்சிநடு மத்தி பத்தில்
விசையாக உள்குத்து போலே குத்தும்
வியர்வை குருவியர்வை மிகுத்துக் காணில்
பிசகில்லை முந்நூற்றி இருபத்தி யெட்டில்
பிரிந்துயிர் இயம்புரம் புக்குந் தானே.

கழுத்தடியில் உள்ளணியில் உள்ள வாண நரம்பு முறிந்தால் உடனே சன்னி உண்டாகும். தலையை உருட்டிக்கொள்ளும். மூன்றாம் நாளில் தன்னிலைக்கு மாறும். 5 ம் நாளில் சுரமும், குளிரும் உண்டாகும். பத்தாம் நாளில் அங்கமெல்லாம் நடுக்கம் உண்டாகி வெட்டும். அதிவியர்வையும், மூச்சுவிட மிகுதியான சிரமமும் உண்டாகும். இக்குறிகுணங்கள் காணப்படின் முப்பத்து மூன்றாம் நாளில் மரணமாவான். தப்பினால் அமிர்த முக்கூட்டெண்ணெய் பயன்படுத்தி நாற்பத்தெட்டு நாட்களுக்கு தடவல் செய்ய வேண்டும். இத்துடன் கழுத்திலும், கசேருக்கொடியிலும் தகுந்த அளவு அழுத்தம் கொடுக்க முறிந்த, இடம் பெயர்ந்த நரம்பானது தன்னிலையை அடையும். சுவாசித்தல் இயலபாகும்.

இதன்பின் 308 நாட்கள் கடந்தபின் சுரமும், நடுநிலையாகிய கசேருக் கொடியினுள் உள்குத்து, வியர்வை முதலியவை முன்னூற்றி பதினெட்டாம் நாளில் காணப்படின், சிகிச்சைக்குப் பின்னும், முன்னூற்றி இருபத்தெட்டாம் நாளில் மரணமாவான்.

**கருள் விருக்கான நரம்பில் முறிவு**

329. புக்கவே நெஞ்சிநடு வில்லு போலே
பொருந்திநிற்கும் கருள்விருக்கான நரம்பு தன்னில்
மிக்கவே விரிந்தாலோ வேக முண்டாம்
மிகப்பதறி அருள்நிலைதான் திடுதி டென்று
மிகவே சாடியது ஓடும் போலே
மிகவோடி விட்டிலைப்போல் தெறிக்கும் சன்னி
தக்கசிறு வியர்வையுடன் இருமல் ஈழை
சன்னி விக்கல் கக்கலதி சார முண்டாம்.

இதயத்தோடு இணைந்திருக்கும் கருள் விருக்கான நரம்பு முறிந்தால், அங்கங்கள் பதறி, அருள் நிலை மாறுவதுடன், சன்னி, அதிவியர்வை, இருமல், அதிசாரம், சர்த்தல், விக்கல் ஆகியவை உண்டாகும். 13 அல்லது 18 ம் நாளில் மரணமாவான். தப்பினால் குய்யத்தினருகில் தடவல் செய்து, மேலும் கழுத்து முதல் வயிற்றறையில் சன்னை வரையிலும் மருந்தெண்ணெய் பயன்படுத்தி தடவல் செய்ய வேண்டும். இச்சிகிச்சை அளித்தாலும், 836 ம் நாளில் மரணமாகலாம்.

**கணிகாய நரம்பின் முறிவு**

330. அதிசார முற்றுபதி மூன்றாம் நாளில்
அவருயிர் போல் மதுகடந் தால்பதி னெட்டாம்
சுதையான நடுநிலையின் மேல்பா கத்தில்
சூச்சமுடன் கணிகாய நரம்பில் தானே
மதிபெருகி திருவிரலால் இருத்திப் பாரு
மதிநிலையும் சதுரநிலையில் வந்து கூடும்

குறியாக பதினேழில் துவாலை செய்து
குருவருளால் அனுதினமும் கூர்ந்து போற்றி.

331. போற்றியே மனக்கண்ணால் கண்டு கண்டு
பொருளான முன்னிறுத்தி புகழ்ந்து போற்றி
மாற்றியே கதிர்திரையாம் மண்ட பத்தில்
மதிசாடும் திரைசார்பில் மதிகுய் யத்தில்
வீற்றிருக்கும் திருவிரலால் தேய்த்து விட்டு
மேல்திரை யாய்சதுர மண்டபத் துள்ளே
சாற்றியே பின்குகையின் சார்பில் நல்ல
சதுரவிரலால் திருவிரலும் தேய்த்து விட்டால்.

332. தேய்த்துநீ போட்டுகால் பெருவி ரலால்
திலையதினில் நிலைமருவி தேய்த்துப் போடு
சாய்த்துமுன் சொன்னதொரு தடவு மார்க்கம்
தப்பாமல் செய்துவிட மனக்கண் ணாலோ
மாய்ந்துமே போகுமடா நரம்பின் காயம்
மாறியே எண்ணூற்றி இருபத் தெட்டில்
தோன்றுமுன் கருநிலையும் திடுக்கிட் டேகி
சூச்சமென்ற நாவிடறி சொல்லிடறி.

333. சொல்லிடறி எண்ணூற்றி முப்பத் தாறில்
தூலமுயி ரிடம்பதில் நெருக்க முற்று
மெல்லனவே உடலைவிட்டு கீழி றங்கி
வேகமுடன் சுடலைதனில் போகு மென்று
நல்லுரையாய் உரைப்படியே யாறும்
நாடியே இந்நூல் சூத்திரத்தில் அன்பாய்
வெல்லுமுறை பண்டிதர்க்காய் உரைத்தேன் அப்பா
மேவியே இந்நூலை விதித்த காலே.

334. காலையிலே விதித்தநூல் இந்நூல் முந்நூல்
கருணையாய் கண்டுநீ காசி னியில்
சீலமுடன் சுடர்விளக்கின் தீபம் போலும்
சொல்பெரிய வர்ணத்தின் மருவல் போலும்

ஓலமாய் மானிடர்க்கு அமிர்த சஞ்சீவி
உற்றமருந் தவுசதம் போல் அன்பு கூர்ந்து
மூலமாய் முறிவு நிகண்ட ரகராதிக்குமா.

335. இந்நூல்தான் அன்புமிகக் கூர்ந்து சொன்னேன்
இதங்கெட்டு விழுந்துருண்டு முறித லாலும்
குன்னியே நரம்பிசங்கி முன்பின் னாகில்
குமிறியே சுவாசமது வெருவிக் குன்னில்
துன்னியே வர்மமது முறிந்து காயம்
சூச்சநிலை முறைபிசகி சூச்ச மெல்லாம்
முன்னாக சொல்லிவிட்டேன் இந்நூல் தன்னில்
உண்மையாய் பொன்னூல் போல்.

336. இன்னுமொன்று வர்மமது தூண்டான மணிநூல்
ஏகமென்ற சரசூச்ச மதில் பாடி
நன்னியே மதிவிளக்கு போல் அன்பாய்
நானுரைத்தேன் தீயதனைக் கண்டு கொண்டு
பின்னியே சொல்லுகிறேன் நரம்பின் மார்க்கம்
பேசரிய அந்நூல் சூச்சா சூச்சம்
இந்நிலத்தில் அறிந்தாலோ எவனே சித்தன்
ஏகமுறை வர்மத்தி னாதி சூச்சம்.

337. வர்மத்தின் சூச்சமெல்லாம் பரத்தி னாட்டம்
மடங்கிய அடங்கலுமே ஆடு தப்பா
கருமமிக உரைத்தவிதி பயன்வ தியாம்
காசினியோர் முன்செய்த கருமத் தாலே
தோற்பொரு ளுற்பவித்த உற்ப னமாம்
சூச்சாதி சூச்சமருள் பரத்தின் தூட்சம்
நற்பொருளின் உற்பனத்தைக்கண்டேன் உண்மையாய்
நடுநிலையும் வன்னறிவான் சூட்ச மாமே.

பாலூன்றி நரம்பின் முறிவு

338. சூச்சமாய் குய்யத்தின் இருவி ரல்மேல்
குறித்தபா னூற்றிநரம் பதுமு றிந்தால்
காய்ச்சலுடன் பால்போல் உதிரமது ஒழுகும் பாரு
பாய்ச்சனுட உச்சிதனில் அகத்து முண்டாம்
பகர்ச்சையது உள்குத்து போல காணும்
காய்ச்சலதி சாரமுடன் மூன்றில் சன்னி
கைகா லெங்கும் திமிர்பின் னிருளும்.

339. உருளுமடா முன்கமந்து பல்க டிக்கும்
உணர்வுவரும் பதினெட்டு நாளில் தானே
திருத்தமாய் நடுநிலையை நெருக்கிப் பாரு
திடுக்கனவே நரம்புநிலை சரிப்பட் டேகும்
பிரம்பியே அமிர் தமுக்கூட் டெண்ணெய்
பிலமாக உண்டுமேல் அங்க மெல்லாம்
தருணமாய் செய்திடுநீ பரவத் துவாலை
தப்பாமல் முன்சொன்ன தடவு மார்க்கம்.

340. தடவுசித் தாமுட்டி தைலம் மெழுகு
தப்பாமல் அந்திசந்தி வென்னீர் தன்னில்
அடவாக மெழுகிவர நரம்பின் காயம்
ஆடியே முறிகாயம் எலும்பின் காயம்
திடமான சயகாயம் வர்ம காயம்
தீருமடா நாற்பத்தி யொன்றில் கேளு
நடநடன லிங்கமது மேல்து டித்து
நச்செலியின் முகம்போல் மதிமு கமாம்.

341. முகங்கறுத்து செறுகரப்பான் போலே காணில்
முதுகு நடுவில் விசம்போலே கறுத்துக் காணும்
அகம் வெதும்பி ஏகாதி சுரம்போல் காயும்
அறுபத்தி மூன்றாம்நாள் மரண மாவான்
முகமதனில் கவம்பெரிய நாள்க டந்தால்
சேர்ந்துவரும் குணக்குறியும் உடனே மாறும்

பகையாதே முன்செய்ய தடவு மார்க்கம்
பாலகனே செய்துவரில் பகருந் தானே.

குய்யத்திற்கு இருவிரலின் மேலே இருக்கின்ற பாலூன்றி நரம்பது முறிந்தால் சுரம் உண்டாகும். உதிரமானது பால்போல் ஒழுகும். உச்சியிலும் உடலிலும் குத்தல் உண்டாகும். அதிசாரம், சன்னி உண்டாகும். கழுத்து உருளும், பல் கடிக்கும். *18* ஆம் நாள் கடக்குமுன் நடுநிலையில் திருவிரலால் அழுத்திநெருக்க நரம்புநிலை சரியாகும். அமிர்த முக்கூட்டெண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து, சர்வாங்கத் தடவல் செய்ய வேண்டும். இருநாட்கள் கழித்து சிற்றாமுட்டித்தைலம் தலைக்குத் தேய்த்து வெந்நீரில் காலை, மாலை முழுகிவர நரம்பின்காயம், முறிகாயம், எலும்பின்காயம், சயகாயம், வர்மகாயம் இவை அனைத்தும் தீரும். தருணத்தில் மருத்துவம் செய்யாவிடில் நாற்பத்தோராம் நாளில் மதிபோன்ற முகம் சுருங்கிப்போகும், லிங்கம் வலித்துத் துடிக்கும். கறுத்த முகத்திலே கரப்பான் போன்று காணும். நடுமுதுகு நஞ்சேறியது போல்கறுத்துக் காணும். உட்காய்ச்சல் உண்டாகி அறுபத்து மூன்றாம் நாளில் மரணமாவான்.

குயில் நரம்பின் முறிவு

*342.* தானேதான் நடுமார்பின் நேர்குய் யத்தில்
தளவான குயில்நரம்பு முறிந்து தானால்
தேனேகேள் சுரங்காயும் மாந்த நீர்போல்
சிறுநீரும் பேதியதின் நிறமே காணும்
கோனேதான் அடிக்கடியே சாடும் குறி
தாரைகீழ் விட்டில்போல் துடிக்கும்
மானேகேள் அரைக்குகீழ் காந்த லுண்டாம்
மாறியே பதிமூன்றில் மேல்வி றைக்கும்.

*343.* விழித்துமேல் வியர்வையுண்டாம் விழிசி மட்டும்
வேகமுடன் குயில்போல் கரமும் காலும்
சிறைவிரித்து காட்டுமிது காணல் போல
சிறப்பாக பைய்யரு தைலங் கொள்ள

முறையாக துவாலையது செய்து கொண்டு
முன்போலே கையிதமும் செய்து கொண்டால்
உறவாக நரம்புவிசம் காயம் எல்லாம்
உத்தமனே தீருமின் உண்மை தானே.

344. உண்மையாய் தீருமடா ஒருநூற் றெட்டில்
உரைகடந்தால் முந்நூற்றி லுந்திக் கொள்ளே
வண்மையாய் வாட்டமுற்ற நீரேக் கண்டால்
மருவியே காணுமடா குளிர் பனியும்
தன்மையாய் இடவலமும் கால்க ரங்கள்
சாகுமொன்றி டைக்கிடையே விசைத ளர்ந்து
புண்போலே வாதமுற்று அதர்ச்சை யாகி
புத்தியுடன் ஓராண்டுஒரு அம்பத் தாறில்.

345. ஓராண்டு மொருபத் தாறில் சாவான்
உத்தமனே கையிதமும் நடுநி லையும்
சீராக தானறிந்து செய்திட் டாலும்
செத்தசவம் திரும்பிவந்து பேசி னாலும்
நேராக மீள்வது அருமை யாகும்
நிர்மலனார் கிருபையினால் நிலைதான் மாறி
வாராது மரணமது அவனுக் கேது
மார்க்கண்ட ராகுமின் வகுக்க லாமே.

நடுமார்பில் குயில் நரம்பானது முறியுமானால் சுரம் உண்டாகும். சிறுநீர் சிவந்த நிறமாக வீழும். அடிக்கடி நீர் பிரியும். அரைக்குக் கீழே காந்தல் உண்டாகும். பதிமூன்றாம் நாள் கடந்தால் அளவற்ற வியர்வை காணும், கைகால்கள் மரத்துப்போகும். இதற்குச் சிறப்பாக பைய்யறாதைலம் உள்ளுக்குக் கொடுத்து, முறையாக துவாலை செய்ய நரம்புகள் உறவாகும். இவ்விதம் செய்ய 108 ம் நாளில் முழுக்குணம் காணும். இது கடந்தும் குணம் காணாது, உடலெங்கும் நீர் கோர்த்து குளிர் காய்ச்சல் உண்டாகும். இருபக்க கால், கரமும் வாதமாகும். அதிர்ச்சியில் புத்தி தடுமாறி ஓராண்டு ஐம்பத்தாறாம் நாள் அல்லது ஓராண்டு அறுபதாம் நாளில் சாவான். முறையாக மருத்துவம் செய்திட்டாலும் மீள்வது கடினமாகும்.

### சீத நரம்பின் முறிவு

346. வகுக்கவே நடுநிலையின் அருகில் தானே
வசமான சீதநரம் பதுமு றிந்தால்
தொகுத்துமே சன்னியோடு சீத முண்டாம்
சொல்பனமாய் அடிக்கடியே உணர்வு முண்டாம்
புகுத்துமே காணா து உளரவிட் டோடும்
பகர்ச்சையாய் கண்குறியும் மெத்த வுண்டாம்
வகுத்துமே உணர்வுண்டாம் அகம்வி றைத்தால்
மாறியே உள்ளிருமல் தொடர்ந்து நிற்கும்.

347. நிற்குமே நாக்கில்சிறு கசப்பு தோன்றும்
நிலைக்கண்ணு சிவந்துசிறு மஞ்சள் போலே
தற்பொருளாம் அங்கமதில் குளிர்ச்சி காணும்
சார்ந்தநாள் இருபத்து அஞ்சு தன்னில்
உற்பனமாய் வாதசன்னி இராஜாங்க எண்ணெய்
உண்டமிர்த முக்கூட்டெண்ணெய் உடம்பில் போடு
தற்செயலாய் கையிதமும் செய்து கொண்டால்
தாண்டு சீதமுடு விஷகா யங்கள்.

348. விசகாயம் சயகாயம் வர்ம காயம்
வேகமுள்ள பலகாயம் விரண்டே ஓடும்
பழகியே நாளிருநூற்றி இருபத் தெட்டில்
படபடனே கண்ரண்டும் பதறி மின்னும்
தளதளனே சென்னிரண்டில் துடிப்பு முண்டாம்
சார்ந்தஇரு விலாவதிலும் தணல்போல் காயும்
இளகியே வேறுபட்ட இடங்க ளெல்லாம்
ஏகியே குளிர்ந்திருக்கும் வியர்வை யுண்டாம்.

349. வியர்வையுண்டாம் பொன்னெட்டில் வட்டம் போன்று
வித்தகனே பொரியழல்போல் காய்ந்து கொள்ளும்
கூர்மையாய் விழிகாயம் கொண்டே யேறும்
கொடியநிலை சன்னியொடு சீத முண்டாம்

ஓர்மையாய் ஐந்நூற்றி பதினெட் டாம்நாள்
உயிர்போகும் ஏம்புரம் உண்மை யாக
சீர்பொருந்தும் பண்டிதனே யறிந்து கொள்ளு
திடம்பேசி அவுசதங்கள் செய்தி டாதே.

350. செய்திடுநீ நாளறு நூற்றிமுப் பத்தாறு
சென்றாலோ எழுநூறில் திடம தாக
மொய்துடனே கொல்லுமடா சொன்னேன் சொன்னேன்
உண்மையாய் பரமகுரு வருளை நீயும்
மெய்யான மனக்கண்ணால் உணர்வு போன்றும்
மேவியே சிந்தைசெய் தரிசித் தப்பா
பைய்யவே அனதினமும் கண்டு கண்டு
பாலகனே அனுதினமும் பகர்ச்சை காணே.

நடுநிலை அருகிருக்கும் சீத நரம்பு முறிந்தால் சன்னி உண்டாகும். அடிக்கடி உணர்வு மயங்கும், கண் துடிக்கும். உடல் விறைத்து இருமலும் காணும். நாவில் கசப்பு தோன்றும். கண்களில் சிவந்த மஞ்சள் நிறம் காணும். அங்கமெல்லாம் குளிர்ந்து 25 ம் நாளில் வாதசன்னி உண்டாகும். இதற்கு ராஜாங்க எண்ணெய் உட்கொண்டு, அமிர்த முக்கூட்டெண்ணெய் துவாலை செய்ய இதனோடு தொடர்பான வர்ம காயம், சயகாயம், விஷகாயம், போன்றவை விட்டோடும். இதில் குணம் காணாமல் 228 நாளும் கடந்தால், கண்கள் படபடவெனத் துடிக்கும். சென்னியில் வலி உண்டாகும். இருபக்க விலாவிலும் தீபோல காயும். இது தவிர்ந்த இடங்களெல்லாம் குளிர்ந்து, வியர்வை உண்டாகும். பொன்னெட்டி வர்மத்தில் வட்டம் போன்று அழல் காணும். கண்கள் செருகிக்கொள்ளும். சீதசன்னி உண்டாகி 518 ம் நாளில் மரணமாவான்.

**பூத நரம்பின் முறிவு**

351. காணப்பா நடுநிலையின் நடுவிலே தான்
கதிரிட்டு பீதநரம் பதுமு றிந்தால்
பூணப்பா சிணுசிணுத்து இசங்கி பேசும்
பொடுபொடனே கொன்னையுண்டாம் நாவு ளறும்

நாணப்பா பல்கூசும் முகங்க ளெல்லாம்
நளினமுடன் பளபளத்து நடுக்க முண்டாம்
காணப்பா கமுக்கூட்டில் வலது பக்கம்
காயுமடா தீரைபோலே யழலு மேறி.

352. அழலேறி எண்ணூறில் அடர்ந்து கொல்லும்
அதுகடந்தால் ஆயிரத்தி எட்டாம் நாளில்
சளசளத்து நாவுளறும் வாந்தி பண்ணும்
தப்பாமல் ஆயிரத்தி பதினெட் டாம்நாள்
விசமானது கடந்தாலோ மாறும் சொன்னேன்
விசமேறி ஆயிரத்தி முன்னூற் றொன்றில்
அழுகியே சுருண்டுவிழும் தளரும் பாரு
அப்பனே புலம்புழித்து சூழை போடும்.

353. சூழையிட்டு கேட்குமடா வேண்ட தெல்லாம்
சொல்லிடறி காறிதுப்பும் பாரு பாரு
தாழைபோல் தனலுமேல் ஊர்ந்தால் போலே
தானூர்ந்து சொறியுமடா நாக்குப் புண்ணாம்
நாளையிலே முழைமுனைபோல் பழுத்துக் காணும்
நாடிநின்றி குமிதில் நீர்கள் சேர்ந்து
பீழையது கண்ணதினில் பீக்கும் பாரு
பிர்மையது தானெழுந்து பிதற்று மெத்தா.

354. மெத்தெனவே ஒழுகுமடா நித்தி ரையில்
வேகமுடன் ஆளுருவம் போலே காணும்
சுத்தநாள் ஆயிரத்தி நானூற் றெட்டில்
சூச்சமுடன் தருணரா ஜாங்கத் தெண்ணெய்
பத்தியே உள்ளுக்குள் பிதமுண்ணு பாலனே
அங்கமதில் துவாலை போடு
இத்தரையில் முன்சொன்ன நடு நிலையை
இன்பமாய் நெருக்கியே தேய்த்துக் கொள்ளே.

355. தேய்த்துநீ கொள்ளுகையில் பலகா யங்கள்
தேறியே பூதநரம் பதிர்ந்த காயம்
ஒய்ந்ததோர் சுரகாயம் பலகா யங்கள்
உண்மையாய் தீருமென்று விமல நாதன்
ஆய்ந்துமே எந்தனுக்கு அருளிச் செய்தார்
அன்பான சித்தருக்கு அடைக்க லம்போல்
நேய்ந்துமே நானுரைத்தேன் இந்நூல் தன்னில்
நிச்சயமாய் அறிந்துநீ தேர்ந்து கொள்ளே.

இதயத்தின் நடுவில் காணும் பூதநரம்பானது முறிந்துதானால், சிணுசிணுத்த பேச்சுடன் முகத்தில் இயல்பிற்கு மாறான குறிகளைத் தோற்றுவிக்கும், நா உளறும், பல் கூசும், முகம் பளபளத்து நடுக்கமுடன் காணப்படும். வலது அக்குளில் தீபோல் காந்தும். இக்குறி குணங்கள் காணப்படின் எண்ணூறாம் நாளில் மரணமாவான். தப்பினால் சர்த்தலுடன் நா உளறல் உண்டாகும். ஆயிரத்து பதினெட்டு நாட்கள் கடந்தால் மேற்கண்ட குறிகுணங்கள் மாறும். ஆயிரத்து முன்னூற்றி ஒன்றாம் நாளில், அங்கமெல்லாம் நடுங்கி, சுருண்டு தளர்ச்சி அடையும். தேகம் ஊறல், நா புண்ணாதல், கண்களில் பீழை, பிதற்றுதல், நித்திரையில் ஆள் உருவம் போல் காணுதல், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

ஆயிரத்து நானூற்றெட்டு நாட்கள் கழிந்தபின்பு ராஜாங்க எண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்து, அதே எண்ணெய் பயன்படுத்தி துவாலைசெய்து, முறைப்படி கைபிதம் செய்ய நலமாகும்.

கொழுத்து நரம்பின் முறிவு

356. தேர்ந்துமே நட்டெலும் பிடைகுய் யத்தில்
சிறப்பான கொழுத்துநரம் பதுமு றிந்தால்
ஆர்ந்துமே கொண்டவுடன் கீழ்வி ழுந்து
அலறியே உருளுமடா மதிம யங்கும்
சொந்தாரைப்போல் போகமுண்டாய் போகு மிந்து
சிறப்பாக தேகமது அணுக்கெ டாது

சார்ந்து மெட்டிருத்தி மூன்றில் சன்னி
தப்பாமல் காலமுடன் நடுநி லையே.

357. நடுநிலையில் திருவிரலாய் இருத்திப் பாரு
நாடியே கையிதமும் செய்து கொள்ளே
நடையாக பகர்ந்துபா ரின்ன மொன்று
நானூற்றி இருபத்தி நாலாம் நாளில்
படபடனே மூக்கு நடுமத்தி பத்தில்
பார்த்து உச்சிநடு தாரை மட்டாய்
விடுவிடனே குத்தியே சுரம்போல் காயும்
வேகமுற்று நகக்கண்ணில் சுழித்து வருத்தும்.

358. குத்துமடா கோகரணம் போட்டுப் பாரு
கூர்மையாய் ஐந்நூற்றி அம்பத் தேழில்
சக்தியுடன் முன்னூற்றி அம்பத் தோறில்
சார்ந்தவிச காயமாதலால் சாவா னப்பா
வெற்றியுட தொன்னூற் றெட்டில்
மேன்மை விட்டோ புரமேகி விடும் பாரே
சித்தியுடன் மனக்கண்ணால் கண்டு நீயும்
சிறப்பான குருவருளை தேர்ந்து காணே.

குய்யத்திலே நட்டெலும்பில் காணுகின்ற கொழுத்து நரம்பு முறியுமானால் நோயாளி தரையில் விழுந்து உருண்டு அலறுவான். புத்தி பேதலித்து முகம் கறுத்துப் போகும். நடுநிலையில் திருவிரலால் இருத்தி கையிதமும் செய்துகொள்ள நலமாகும். நலமாகாவிடில் 424 ம் நாளில் மூக்கு நடுவிலிருந்து உச்சிநடுவரை குத்து உண்டாகும். சுரமும் காயும். நகக்கண்களில் வலி உண்டாகும். 557 ம் நாளில் மரணமாவான்.ஞு

**கூச்சல் நரம்பின் முறிவு**

359. குருவான முதுகின்பின் தாரை தன்னில்
கூச்சல்நரம் பதுமுறிந்தால் சொல்லக் கேளு
குருதியாய் உதிரமது பெருகும் பாரு
கூச்சமுடன் தின்முன்னே உதிர முண்டாம்

பொருந்தியே சொல்லிடறும் ஒன்ப தாம்நாள்
புத்தியுடன் நடந்தஈ ரா று தன்னில்
வெருவியே சன்னியுண்டாம் அழலுற்று
வேகமாய் அழலுமதி கோப மாகி.

360. கோபமாய் இருபத்தி ஒன்றாம் நாளில்
குமுறிகரு வேர்வை கண்டால் இருபத் தெட்டில்
சாபமுற்ற மரணமதி வருந்திக் கொள்ளும்
தப்பியே கடந்தாலோ கையிதம் செய்யே
ஆவலுடன் நடுநிலையை நெருக்கப் பாரு
அமிர்தமுக் கூட்டெண்ணெயைநீ யருந்திக் கொள்ளே
கூவியே மந்திர நரம்பின் காயம்
குணமாக தீருமேன் று குறிசொன் னோமே.

361. சொன்னோமே இருநூ ற்றி பதினே ழாம்நாள்
சூச்சமாய் நடுக்கூம்பின் வட்டந் தன்னில்
முன்னாக நீலநிறம் மஞ்சள் போலே
முகத்தில்சிறு வியர்வையழல் சுரம்போல் காயும்
பின்னாக கபாலமடத் திருமலு முண்டாம்
பெரியசல மடைத்துக் கட்டிக் கொள்ளும்
அன்னநடை மயிலேகேள் நாளுமுன் னூறில்
அவர்உயிர்போம் ஏம்புரம் அறிந்து கொள்ளே.

முதுகில் கூச்சல் நரம்பு முறிந்தால் குருதிக்கசிவு உண்டாகும். 21 ம் நாளில் கறுமைநிறத்தில் வியர்வ்வ காணும். 28 ம் நாளில் மரணமாவான். இதுகடந்தாலோ நடுநிலையை நெருக்கிப் பார்த்து அமிர்தமுக்கூட்டெண்ணெய் அருந்தக் கொடுக்க நலமாகும். இது கடந்தால் 217 ம் நாளில் கூம்பு வர்மத்தில் நீலநிறம் கண்டு, முகம் மஞ்சள் நிறமாகி சிறுவியர்வை காணும், சுரம் காயும். மலசலமடைத்து 300 ம் நாளில் மரணமாவான்.

பூந்தூர் நரம்பில் முறிவு

362. கொள்ளடா அடிவயிற்றின் நடுவின் பக்கம்
கூர்பூந்தும் பலநரம் பதுமு றிந்தால்
மெள்ளவே அனல்போல தேக மெல்லாம்
வெருவியே காய்ந்துசிறு காந்த லுண்டாம்
கள்ளமாய் இதுகில்பிடித்து வியர்வை யுண்டாம்
கருதியே நாவும்பல் முகமும் கறுக்கும்
தள்ளியே மூலமது வெளியே சாடில்
தணலதுபோல் தோணுமடா தொன்னூ றுந் தானே.

363. தானென்று காந்தலுடன் உணர்வற் றேகும்
சார்ந்ததொரு சன்னியுற்றியே நிற்குமடா பகர்ச்சையாக
நானென்ற நாற்பத்தி ரண்டா றட்டில்
மருவியே அம்பத்தொன் று கலம் நீக்கி
தேனென்ற முன்னிலையை நெருக்கிப் பாரு
சினமாக பலகாயம் தீரும் பாரே.

364. பாரேனி பைய்யரு தைலங் கொண்டு
பகர்ந்துமேல் துவாலையது தாரை செய்து
தாரேனி கையிதமும் தீர்ச்சை செய்து
திருவான குருவருளை தியானம் பண்ணி
பாரேனி முறிகாயம் விசகா யங்கள்
படுகாயம் நிலகாயம் பகர்ச்சை சன்னி
வாரேனி தீர்ந்தவருள் களங்க மற்றால்
வலுவாக அறுநூற்றி முப்பத் தொன்றில்.

365. நடுவெலும்பின் இடைநடுவில் நச்சுப் போலாம்
நளுநளனவோ வியர்க்குமது குளிர்ச்சை யுண்டாம்
துடித்துடனே தொண்டையூர் தடைக்கும் சத்தம்
சுவிச்சமுடன் தேகமதில் ஆகாசம் போல்
கடுகெனவே புகநிறவும் போலே காணில்
கண்டிருந்த உணர்வெல்லாம் கதறி ஓடும்

விடுவிடன உயிரதுவும் உடலை விட்டு
விரைவாக சிவலோகம் போகுந் தானே.

நாபியருகில் உள்ள பூந்தூர் நரம்பில் முறிவு காணப்படுமானால் தேகம் அனல்போல் காந்தல், சுரம், வியர்வை, பற்களும் முகமும் கறுத்துக் காணல், மூலம் வெளிச்சாடல் முதலிய குறிகுணங்களும் 90 நாட்களுக்குப்பின் மனத் தோற்றங்களும் மீண்டும் உடல் காந்தல், சன்னி முதலியவையும் உண்டாகும். முறிந்த நரம்பினைச் சரியான இடத்தில் பொருத்தும்படி நாபியில் தக்க அளவு அழுத்தம் கொடுக்க வேண்டும். பைய்யறு தைலம் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட இடத்தில் முறைப்படி வர்மத்தடவல் செய்ய முறிந்த அல்லது இடம் பெயர்ந்த நரம்பானது தன்னிலை அடையும். 631 ம் நாளில் உடல் வியர்த்தல், குளிர், தொண்டை அடைப்பு, தேகம் கறுத்து புகைநிறத்தில் காணப்படின், உணர்வற்று உயிரானது உடலைவிட்டு சிவலோகம் விரையும்.

**எச்சு வர்மத்தில் முறிவு**

366. மேயுமே வீணான தண்டின் இடை நடுவில்
விரல் இரண்டின் கீழ் எச்சுவர்மம் முறிந்து தாகில்
தாவியே அதிசாரம்போல் சுழியும்
சலமலமும் சிறுநீர்போல் காணும் பாரு
மேவியே அக்கினிபோல் பறந்து காயும்
பரும்போல் முள்ளதுபோல் படுத்துக் காணும்.

367. சாற்றியே பதினேழும் பதினெட் டாம்நாள்
தான்பதறி ஒடுமது போலே காணும்
சாற்றினோம் திருவிரலால் நடுநி லையைத்
தப்பாமல் மாத்திரையால் நெருக்கும் போது
சுற்றியே சூச்சமென்ற சரகங்கள் எல்லாம்
சுருக்காக முன்வழியே சுரந்து ஓடும்
பார்த்தறிந்து பைய்யரு தைல முள்ளில்
பாலகனே அருந்தியே கையிதமும் செய்யே.

368. ஏகாகி சுரம்போல் காய்ந்து காய்ந்து
கொள்ளும் இருமலது சாரமொடே இழப்பு
ஆகார மறுத்துநீர் முக்க லுண்டாம்
அப்பனே இருநூற்றி மூன்றில் சன்னி
ஆகாசமுண்டாம் மலசலங்கள் வழிய டைக்கும்
இருநூற்றி மூன்றில் சீவன்
போகுமே எமலோகம் புக்கு மென்று
புகந்துவெளி போகுமென புகட்டி னோமே.

சலவாகியின் நடுவில் காணப்படும் எச்சுவர்மத்தில் முறிவு ஏற்படில் அதிசாரம், சிறுநீர் மஞ்சளாகக் காணப்படல். தேகம் அக்கினிபோல் பறந்து காணல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். *17* அல்லது *18* ம் நாளில் அச்சத்தால் பதிய ஓடுவான். இக்குறிகுணங்கள் காணப்படின், நரம்பினைத் தன்னிடத்தில் பதியச்செய்யும் பொருட்டு, நடுநிலையில் மாத்திரை அளவறிந்து, அழுத்தம் கொடுக்க வேண்டும். தவிரவும் பையறு தைலம் தக்க அளவில் உள்ளே கொடுத்தும், வெளியாட்சியாகவும் பயன்படுத்தி கையிதம் செய்ய வேண்டும். நோயாளிக்கு இருமலுடன் இலேசான சுரமும், சிறுநீர் கழித்தலில் சிரமமும் அன்னவெறுப்பும் உண்டாகும். *203* ம் நாளில் மலசலம் செல்லும் வழிகள் அடைக்கும். *203* ம் நாளில் மரணம் நேரிடும்.

### இந்திரிய வர்மத்தில் முறிவு

369. புகட்டினோம் உச்சியின்கீழ் அடியி டையின்
புகழுமென இந்திரிய வர்மந் தன்னில்
திரட்டியே முறிந்தாலோ லிங்கம் தன்னில்
சீழிரங்கும் இரத்தநிறம் போல தாக
புகட்டியே வானவழி ஒழுகும் பாரு
புகலுவேன் ஆறெட்டில் சன்னி யுண்டாம்
திகட்டியே சன்னியது உடனே மாறும்
சொல்பெரிய ஐம்பத்தி மூன்றில் சன்னி.

370. மூன்றிலும் ஐம்பத்தி ஒன்ப தாம்நாள்
முத்தியுடன் சிரசுவெட்டி இழுக்கும் பாரு
கூன்றுமே எழுபதில் இரும லீழை
கூடிவரும் எண்பதிலே வீக்க முண்டாம்
சான்றறியும் எண்பத்தி எட்டி லேதான்
கருகரன பல்கடிக்கும் மயக்க முண்டாம்
ஒன்றேநாள் ஒருநூற்றெட்டு ஒருநூற் றாறு
உத்தமனே விலகிநின்றால் ஓதிக் கேளு.

371. ஓதிக்கேள் காயரா ஜாங்க எண்ணெய்
உடம்புதனில் நடுநிலை நெருக்கி
மோதியே முன்சொன்ன வலம் புரியின்
முறையான உறுப்பிடங்கள் மூர்ச்சை செய்து
சூதான மாகஇடைபின் கலையும்
சுழிமுனையும் அறிந்து முன்வழி யறிந்து
ஆதரவாய் அடந்தவில் நரம்ப றிந்து
அதன்வழியாய் கையிதம் செய்து கொள்ளே.

372. செய்துகொள் பரமகுரு வருளை நீயும்
சிந்தைதனில் உன்னிமனம் நற்சித தேகி
வைத்துக்கொள் நின்றுமதி உணர்வி லாய்ந்து
வழியறிந்து முன்பின்னாய் நிலையு மாய்ந்து
பொய்யான இருகண்ணை அகல நீக்கி
பொருளான உள்கண்ணை கண்ணால் கண்டு
மெய்துடனே குருவருளை தியானஞ் செய்து
வெற்றியுடன் கையிதமும் செய்து பாரே.

உச்சியின் கீழ் இந்திரிய வர்மத்தில் முறிவு ஏற்பட்டால் விந்துநீர் வெளிப்பட்டு அதைத்தொடர்ந்து இரத்தமும் சீழும் வெளிப்படும். 48 ம் நாளில் உடனே மாறுகின்ற சன்னி உண்டாகும். 53 ம் நாளில் மீண்டும் சன்னி உண்டாகும். 59 ம் நாளில் தலை நோவு உண்டாகும். 70 ம் நாளில் இருமல், ஈளை உண்டாகும். 80 ம் நாளில் தேகம் வீங்கிக் காணும். 88 ம் நாளில் பற்களைக் கடிப்பதுடன் மயக்கம் உண்டாகும். 106 அல்லது 108 ம் நாளில் காயராஜாங்க

எண்ணெய் பயன்படுத்தித் தடவல் செய்ய வேண்டும். மேலும் அங்கமதில் அதே எண்ணெய் பயன்படுத்தி நடுநிலை நெருக்கி வலம்புரியின் முறையான உறுப்பிடங்களையும், இடைகலை, பிங்கலை, சுழிமுனை அவற்றின் வழிகளையும் அறிந்து முறைப்படி தடவல் செய்ய வேண்டும். கண்களை நன்கு ஆராய்ந்து வர்ம நிலையைக் கண்டறிந்து மீண்டும் மந்திர வர்மம், நட்சத்திர வர்மம் ஆகிய இடங்களிலும் தடவல் செய்ய இறையருளால் குணம் கிடைக்கும்.

### மொருநரம்பின் குணம்

373. பாரேனி பின்கலையின் நடுந டுவில்
பகருமொரு நரம்பதுதான் முறிந்து தானால்
சீரேனி ஓடியே அரங்கம் பேசி
தேகமெல்லாம் பின்னியே புறஞ்ச ரிக்கும்
தாரேனி கூனிபோல் மதிம யங்கும்
சன்னியுண்டாம் மூன்றாம்நாள் உணர்வு முண்டாம்
காரேனி நாளேடு இருபத் தேழு
கடந்தாலோ ஐயாறு அம்பத் தேழில்.

374. அம்பத்தேழு கடந்தமிர்த முக்கூட் டெண்ணெய்
அருந்தியே கையிதமும் செய்து பாரு
உறும்பிடையில் இடைமருவி அம்பரத்தி வெட்டி
ஓதரிய முன்னூ று பெலமாத் திரையில்
சொறுக்கெனவே திருவிரலால் தேய்த்துப் பாரு
சூச்சாதி சூச்சமென்ற சூச்ச மெல்லாம்
மறுத்து வந்து முன்னிடையில் அடிநிற் குமா
மண்டலத்தோர் அறியாதார் அறிந்தா ரானால்.

375. அறிந்தாலோ உலகுதனில் ரெசிய சித்தன்
ஆச்சரிய மானசிவ லோக வாழ்வு
நெறியாக உந்தனுக்கு நிலையில் காணும்
நினைத்ததெல்லாம் அன்புடனே காணும் பாரு

குறியான கோகரணம் உனக்கு முண்டு
    கோகரண சித்தனேன் பேரு மாச்சி
பிறியார்க ளிந்தனிடம் பாராய் பார்த்தால்
    பெருத்தநிலை கனவிலையும் காணு மப்பா.

376. நீயுமவர் அருள்நிலையும் சொரூபம் காண்பாய்
    நேசிமில்லாப் பண்டிதனே பூவுலகில்
பாயுமிந்த நீருதனில் பதித்து விதியே
    பலகோடி எந்தனுக்கு பகர்ந்தா ரென்று
நோயுமது திரிந்தாப்போல் அலைந்து ருண்டு
    நடுநிலையின் வழிகாண பாவி யெல்லாம்
தூயதோர் வர்மமளித்த நாகத் துள்ளாய்
    சுடலைதனில் அக்கினியில் விழுந்து வெந்து.

377. வெந்துமே உள்ளுளி கால மெல்லாம்
    வேறொருவர் செயல்நிலையும் காணா மல்தான்
செந்தூள் பட்டாய்போல் நரகில் துன்பம்
    சேர்ந்துமே போகாமல் மனக்கண் ணாய்ந்து
சொந்தமென்ற நிலையறிந்து பரத்தில் கூர்ந்து
    தூயபரு சுடரொளியின் சூச்சங்கண்டு
அந்தணரும் வேதியரும் அறிந் தாலோ
    அனேகசித்தர் உற்பனத்தின் ஜென்மம் நீக்கி.

378. நீங்கியே மாயமாய் நின்றா ரப்பா
    நிமலனருள் நிலையறிந்த நேச ரெல்லாம்
தூங்கியே போகாமல் வாசஞ் செய்து
    சொல்பெரிய நடுநிலையும் பெற்ற பின்பு
ஓங்கியே நாள்முதலாம் நாட்கள் மட்டும்
    உண்மையென்ற மரணமவர்க்கு இல்லை கண்டாய்
தீங்கில்லா முனிவருக்கும் ஜென்ம முற்று
    செனித்துவள்ந்து உலகில்நிலை யறிந்தார் மாணவர்.

379. பிரகாத முனிவர்கள் ஒருவ ரில்லை
பேதையர்கள் வாக்கியமே பலதும் பேசி
உறவாக பிறவியற்ற முனிஉண் டென்று
ஓதுவார் பதினெட்டு முனிவ ருந்தான்
சிறப்பாக குருமுனியா அகஸ்தீசர் என்றும்
செப்புமுனி கும்பதில் உற்ப வித்த
நிறையாக பூவுலகில் நின்றா னப்பா
நின்றமுனி ரெசியோர்கள் நேச முற்றேன்.

வலமூக்காகிய பின்கலையின் நடுவில் காணப்படும் மோரு நரம்பு முறிந்தால் வாய் உளறி, தேகம் ஒருபக்கமாக இழுத்து, அறிவு மயங்கி, சன்னி உண்டாகும். மூன்றாம் நாளில் இவை மாறும். 57 ம் நாளில் அமிர்த முக்கூட்டெண்ணெய் பயன்படுத்தி கையிதம் செய்ய வேண்டும். கழுத்தின் இடப்பக்கத்தில் உரோதர நரம்பில் முறைப்படி தடவல் செய்ய வேண்டும். இம்முறையினால் நரம்பு மண்டலம் தனது இயல்பான நிலையை அடையும்.

## கும்பசங்கி வர்மத்தில் முறிவு

380. உற்றதோர் கூம்படியின் அருகி லப்பா
உள்கூம்பு சங்கிவர்மம் முறிவு கொண்டால்
மற்றுமே கீழ்மேலும் மேறிட் டால்போல்
வலமிட்டு நின்றுகுண் டேறு மாம்போல்
சுற்றியே காணுமடா பதினெட் டாம்நாள்
சூச்சமொடு கடிகைதனில் சன்னி சீதம்
உற்றதொரு மூன்றாம்நாள் உடனே மாறும்
ஓதரிய ஆறாம்நாள் நாவில் பூக்கும்.

381. பூக்குமே வென்னிறம்போல் புகந்து காணும்
பொறிகளெல்லாம் புழுப்போலே தேய்ந்து காணும்
தாக்குமே எட்டினிலே குளிர்சு ரங்கள்
சன்னியாய் இருமலது சிணுசி ணுக்கும்
நீர்உதிரம் வழிந்து கொள்ளும்
நுணுக்கமிரு மார்படைத்து துடிப்புண் டாகும்

பார்க்கில்நீர் நீலநிறமாய் காணும்
பதினேழில் சன்னியுண்டாம் பதினெட் டில்கேள்.

382. பதினெட்டும் இருபத்தொன் று மிருபத் தா றும்
பகர்ச்சையது விட்டாலோ நாற்பத் தொன்றில்
விதியாக எம்புரமும் உயிர்தான் போகும்
விலகியே கடந்தாலோ நடுநி லையே
மதியான பக்கமதின் முன்னே சொன்ன
மகிளான திருவிரலால் நிலைதனில்
நதியான மாத்திரையின் நிசங்கள் கண்டு
நேர்மையென்ற கையிதமும் செய் து கொள்ளே.

383. நேர்மையென்ற கையிதமும் செய் து கொண்டு
நிலையறிந்து அவுசதங்கள் நேராய் செய் து
கூர்மையென்ற திசைபுஸ்ப எண்ணெய் கொண்ட
பின்னமிர்த முக்கூட்டின் எண்ணெய்
தாரையதின் கண்டத்தின் மேலே செய் து
தப்பாமல் கண்டத்தின் கீழே கேளு
ஆர்மையாய் குடங்களிலே லாதி எண்ணெய்
உத்தமனே தாரையது உண்மை யாக.

384. உண்மையிலே நடுநிலையில் அமிர்த சஞ்சீ
ஓயாமல் எண்ணையது தாரை செய் து
வண்மையாய் வேப்புகைதான் ஒன் று செய் து
மருவியே தாழம்பூ படருந் தாழை
நன்மையாய் கொழுந்தோலை கொண்டு வந் து
நடுநிலையின் மட்டாக நாடிச் சுற்றி
கண்மணியே நடுநிலையின் பக்கம் பற்றி
இடவலமே கண்கால் கண்டு.

385. கண்டுமே உறப்பான விஷதை லத்தை
கண்டுநீ நீக்கியே கச்சை பூட்டி
பண்டுமே பின்னறிந்த அவுச தத்தை
பாலகனே விலகியதில் தாளு பூட்டி

விண்டுமே நின்றதொரு மனக்கண் ணாய்ந்து
　　வெற்றியுடன் குருவருளை அன்பு கூர்ந்து
கண்டுமே பேறிட்ட மாடந் தன்னில்
　　கருத்தாக உள்ளங் காலி ரண்டு மொன்றாய்.

386. ஒன்றாக வைத்துநிலை பெசகி டாமல்
　　உற்றதோர் அங்கமதை நிலையில் சேர்த்து
மன்னாதி யாகவேதான் கிடத்தி வைத்து
　　மைந்தனே அதன்மேலே நடுவில் நின்று
சென்றாட்ட மாக திரட்டி நீயும்
　　சித்திரம்போல் நித்திரையின் நிலையைப் போலே
அன்றாட்ட மாகவே அதிர்நி லையில்
　　அடக்கலமாய் கண்டுநீ அதர்ச்சி செய்யே.

387. அதர்ச்சையது செய்திடுநீ உறுப்பு தன்னில்
　　ஆடியே முப்பத்தி ரண்டு நிலை
சிதிரான அடவடங்கல் ஈரா றுக்குள்
　　தக்கநிலை சார்பதிலும் தட்டிப் பாரு
குதிர்ச்சியென்ற குச்சடங்கலோ ரெட்டுக்குள்
　　கூர்மையுடன் தேய்த்துவிடு நெருக்கி டாதே
பதர்ச்சையென்ற அடங்கலெல்லாம் பதம்ப டுத்தி
　　பைய்யவே தடவிமெள்ளப் பதித்துப் பாரே.

388. பதித்திடதாகி நாசிநிலையில் சென்று
　　பதம்போட்டு நிலை பின்கலை சுழியில்
துதிபெருகி வைத்திடுநீ மூன்று நாளும்
　　சூச்சமுடன் இப்படியே செய்து கொள்ளு
இதமாகி முன்போலே யாகிக் கொள்ளும்
　　ஏறிட்டு பின்னது கொண்டு தாளும்
அதிரான சர்வாங்கம் தன்னி லாக்கி
　　அமத்தல்செய் தடங்கல் இப்படி யேசெய்.

389. இப்படிசெய்துநீ செய்து கொண்டு மைந்தா
இன்பமுடன் தியானகுரு பூசை செய்து
தப்பிதங்கள் இல்லையடா குருப ரந்தான்
சார்பாக உன்னிடத்தில் சார்ந்தி ருந்து
ஒப்பனையால் கெட்டவர்மம் அளிப்பா ரின்மேல்
உத்தமனே மனக்கண்ணை மறந்தி டாமல்
தப்பொருநாள் வராத சாகு மட்டும்
தற்பாதத்தை யொருநாளும் மறந்தி டாதே.

390. மறந்திடா தாகுமடா மனக்கண் ணைநீ
மாதவ சித்தர்களும் மனக்கண் ணாலே
குறைநீக்கி சிவலோகம் பெருமை பெற்றோர்
கூர்மை சித்தராகில் மனக்கண் காணும்
நிறைதப்பி நின்றதினால் இன்ப துன்பம்
நெருங்கி வந்தாற் பலநோய்க்குள் ளானார்
உறப்பாக நின்றறிந் ததினால் சித்தனார்
உத்தமனே இன்னுமொரு சூச்சங் கேளே.

இதயத்தின் பக்கத்தில் அதற்குக் கீழாக அமைந்திருக்கும் நெஞ்சென்பின் கீழ் அந்தத்தில் பொருந்தியுள்ள ஏதியில் உள்ள கும்பசங்கி வர்மத்தில் முறிவு ஏற்படுமானால் நோயாளிக்கு பதினெட்டாம் நாளில் குளிரும், சன்னியும் உண்டாகி மூன்றாம் நாளில் மாறும். ஆறாம்நாளில் நா வெண்மை நிறமாக மாறம். பஞ்சேந்திரியங்களும் சிறிது சிறிதாக தேய்ந்து காணும். எட்டாம் நாளில் சுரம், குளிர், இருமலுடன் சன்னி, இரத்த நிறமாக சிறுநீர் காணல் ஆகியவை உண்டாகும். 18 அல்லது 21 அல்லது 26 அல்லது 41 ம் நாளில் உயிரது பிரியும். தப்பினால் நோயாளியை நேராகப் படுக்க வைத்து திச புஸ்பாதி எண்ணெய், அமிர்த முக்கூட்டெண்யெண் இரண்டையும் கலந்து உடலிலும், தலையிலும் தாரைசெய்து முறைப்படி கையிதம் செய்ய வேண்டும். உடலின் பிற பாகங்களில் குடங்களிலேலாதி எண்ணெய் தாரைசெய்து நாபியில் அமிர்த சஞ்சீவி எண்ணெய் தாரை செய்ய வேண்டும். வேப்பிலை புகைத்தல் வண்மை தரும். தாழம்பூ இலையினை இடுப்பினைச் சாற்றி நாபியை மூடும்படி வைத்துக்கட்டி அதன் வழியாக விஷதைலம்

நாபியில் தாரைசெய்ய வேண்டும். இரு பாதங்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கட்டி, நோயாளி இதே நிலையில் இருக்கும்படிச்செய்ய வேண்டும். பின் 32 உணர்வுறுப்புகளையும், 12 அடங்கல் நிலைகளையும் ஆராய வேண்டும். பின் 8 குச்சடங்கள் நிலைகளிலும் தடவல் செய்யவேண்டும். மூன்று நாட்களுக்கு விஷதைலம் முகரும் (ஆவி பிடிக்கும்) படி செய்ய வேண்டும். சர்வாங்க அடங்கலிலும் முறைப்படி மருந்தெண்ணெய் பயன்படுத்தி கையிதம் செய்ய வேண்டும். இச் சிகிச்சை முறையினை முறைப்படி மேற்கொள்ள இறையருளாலும், குருவருளாலும் நலம் கிட்டும்.

### மாத்திரை நரம்பு முறிந்தால்

391. சூட்சமே சங்குதிரி நடுவி டையில்
சொல்லுமாத் திரைநரம் பதுமு றிந்தால்
பாய்ச்சலுடன் பயந்துமேல் எழுந்து சாடும்
படபடன அலறுமுடன் மயங்கி வீழும்
கூச்சமுட னானகண்டால் ஒதுங்கி பேசம்
குடுகுடனே சிரிக்கும்வாய் பொத்திக் கொள்ளும்
தீர்ச்சையாய் நாளேழு அறுபத் தொன்றில்
திகழவே கண்காணா திருக்கும் பாரே.

392. இருளாக அறுபத்தோர் கடிகை தன்னில்
யேகாசி சுரம்போலே காய்ந்து கொள்ளும்
மருளாக முன்னிருந்த குணக்கு றியும்
மாறியே உணர்வுமுண்டாம் கைகா லெங்கும்
பெருகவே ஊசிபோல் தரித்துக் குத்தும்
பேதவித்து மீழுமிடா சொன்னோம் பின்னும்
கருகியே பல்கடிக்கும் கண்ணு தூங்கும்
கதிராக பல்நாவு கூசும் பாரே.

393. வெருவியே மேனியெங்கும் கனத்து விம்மும்
வீங்குமடா மூக்கடைக்கும் நாற்பத் தெட்டில்
செருமியே சன்னியோடு சீத முண்டாம்
சொந்தநாள் எண்பதிலே தெளிவுண் டாகும்

பருகியே ஏகாசி சுரம்போல் காயும்
பகர்ச்சையாய் குணக்குறியும் தொன்னூற் றெட்டில்
நெருங்கியே வந்திடுகில் ஒருநூற் றெட்டில்
நிச்சயமாய் சுடலைதனில் உயிர்போம் பாரே.

மூச்சுக்குழலின் மத்தியில் உள்ள மாத்திரை நரம்பு முறிந்தால் பயந்து பாய்ச்சலுடன் மேல் எழுந்து சாடும். அலறலுடன் அறிவு மயங்கி விழுவான். 28 அல்லது 61 ம் நாளில் கண்களானது பாதிக்கப்படும். பின் சுரம், உடல் முழுவதும் குத்தல், குடைச்சல், பற்களைக் கடித்தல், உறக்கமின்மை, சுவையின்மை ஆகிய குறிகுணங்கள் தோன்றும். மூக்கில் நீரொழுகல், உடல் முற்றிலும் வீங்கல் முதலிய குறிகுணங்களும் தோன்றம். 48 ம் நாளில் குளிரும், சன்னியும் உண்டாகி 81 ம் நாளில் இக்குறிகுணங்கள் மாறும். 98 அல்லது 108 ம் நாளில் மரணமாவான்.

### மாற்றான் நரம்பின் முறிவு

394. சுடரான நேத்திரத்தின் அருகி டையில்
துட்ச மாற்றான் நரம்பது முறிந்தால்
படபடன மண்டையது இடித்து குத்தும்
பகர்ச்சையாம் பொன்னிறம்போல் வதனம் காணும்
மிடர்பதறும் சுவாசமது இழுத்து வாங்கும்
ஓகோகோ வாதநரம் பிடித்து காயும்
திடமாக திருநீறு றுத்தலா தன்னில்
தெறுதெறன வட்டமுற்று தெறிக்கும் பாரே.

395. தெறிக்குமடா நாற்பத்தி ரண்டி தன்னில்
தேகமது நடுநடுங்கி சிரம்வெ டிக்கும்
குறியான கண்கள்இரண்டு மஞ்சள் போலாம்
கொக்கரித்து மின்னல்போல் குமிறிக் காணும்
செறிந்தநாள் நாப்பத்தி யெட்டு தன்னில்
செடம் வெதும்பும் அறுபதிலே மரண மாவான்
சிறையாகி கடந்தாலோ கையிதம்செய் சீராக
தஷபுஸ்பாதி எண்ணெய் தன்னை.

396. புஸ்பாதி எண்ணையதி உள்ளே கொண்டு
புகழ்ந்துமேல் கையிதமும் செய்து கொண்டால்
நற்பகலும் நரம்பினுட காயம் போகும்
நானூற்றி பதினேழில்நா குளறில்
உற்பவமாய் சுரங்காய்ந்து வியர்வை யுண்டாம்
உத்தமனே நானூற்றி நாற்பத் தெட்டில்
வெறுப்புலவும் உயிரதுவும் போகு மென்று
விதித்தார்கள் இன்னமொரு தூட்சம் கேளே.

நேத்திரத்தின் அருகில் உள்ள மாற்றான் நரம்பில் முறிவு ஏற்பட்டால் சிரசானது இடித்துக் குத்தும். தேகம் பொன்னிறமாகக் காணும். சுவாசித்தலில் சிரமம் உண்டாகும். 42 ம் நாளில் தேகமெல்லாம் நடுக்கம் உண்டாகி கண்கள் மஞ்சள் நிறமாக மாறும். கொக்கரித்தல் போன்ற ஒலியினை எழுப்பும். 48 ம் நாளில் உடல் வெதும்பிக் காணப்படும். 60 ம் நாளில் மரணமாகும். தப்பினால் திச புஸ்பாதி எண்ணெயும், புஸ்பாதி எண்ணெயும் ஒன்றாகக் கலந்து தாரைசெய்து கையிதமும் செய்து உள்ளுக்கும் கொடுக்க நலமாகும். இல்லையேல் 417 ம் நாளில் அதிக சுரமும் வியர்வையும் உண்டாகும். 448 ம் நாளில் மரணமாவான்.

நெருப்பு வர்மத்தில் முறிவு

397. இன்னுமொரு நடுமுதுகின் இடது பக்கம்
எதிரான நெருப்புவர்மம் முறிந்து தாகில்
குன்னியே நெருப்பதுபோல் காந்தும் காந்தும்
கூர்ந்தவிழி ரண்டதுவும் காணா தப்பா
மின்னிமேல் சொருகியே வேக முண்டாம்
வித்தகனே தேகமது வறட்சை யாகும்
பின்னியே குரலடைக்கு மாறில் சன்னி
பேதலித்து நாள்இருபத்தி யொன்று தன்னில்.

398. இருபத்தி யொன்றினிலும் முப்பத் தாறில்
இசந்தமேல் நெருப்பணலும் உடனே மாறும்
மருவியே அமிர்த முக்கூட் டெண்ணெய்
மைந்தனே கொண்டிடவே மயக்க மெல்லாம்
திரும்பியே போகுமின் விமல நாதன்
செப்பினார் யானறிந்து அன்பு கூர்ந்து
வருந்தியே இந்நூல் சூத்திரத்தில் யானும்
மகிழ்ந்துமே பாடி வைத்தேன் அறிந்து கொள்ளே.

399. கொள்ளுமே முன்சொன்ன கர்மத் தாலே
கூர்மையாய் எடுத்தவிட ணசா ணுக்குள்
மெள்ளவே வர்மமோடு நரம்பெ லும்பு
மேவியே நின்றதொரு சடலக் கோவை
கள்ளமில்லா தெழுந்தபல நிலைக்கும்
கருணையாய் இந்நூல் சூத்திரத்தை யானும்
மெள்ளவே யுந்தனுக்கு அறிந்து கொள்ள
மேலாக யானுரைத்தேன் மேன்மை யாக.

400. காணுமேன் மையாய்வர் மங்கள் வெருவி
நின்றபல காயமெல்லாம் ஆண்மையாய்
நின்றநிலை தூட்சமெல்லாம் அறிந்துமே சரத்தினுள்
அதிர்நிலையும் தூய்மையாய் செய்து விட்டேன்
இந்நூல்தன்னில் தூட்சமுடன் சரத் தாட்டம்
உள்ளினாட்டம் நானு ரைத்தேன்
நீயறிந்து நாடிப்பாரு நன்மை தீமை
என்ற ரண்டு நிலையுங் காணே.

401. காணுமடா சரத்தினுட ஆட்ட மெல்லாம்
கருவான சூத்திரங்கள் ஏதுதான் உனக்கு
நாணுமிடை பின்கலையும் சுழி தானும்
நடுநிலையும் சூத்திரமும் சாத்தி னாட்டம்
பூணுமிந்த பொறிநிலையு மறிந்தா யானால்
பூவுலகில் சித்தனும்நீ புகழ்ந்து பாரு

தோணுமடா வர்மமது துண்டா மணியில்
சூத்திரமும் சரநிலையும் சூட்ச மெல்லாம்.

402. எல்லையுடன் கண்டாலோ எல்லாம்
தோன்றும் இடரான பண்டிதர்கள் பூவுலகில்
வல்லமையாய் வாய்மதங்கள் பேசி மெத்தா
வரசரியன் நாள்தான் ஒன்றில் குக்கி
லெல்லாம் துல்லிபெத்தால் நடுநி லையை கண்டேன்
சூட்சமதை ஒருநாளும் கண்ட தில்லை
நல்லினத்தில் அவுசதவும் அவனுக் கேது
நாடியே அவன்செய்ய வித்தை யெல்லாம்.

403. வித்தையெல்லாம் பாழாக போகு மப்பா
விரும்பியே குருவருளை அறியாப் பாவி
சுற்றியே தோஷமது அவனைச் சார்ந்து
சொல்லுலகில் பத்தனேன் சொல்வா னப்பா
புத்தியது கெட்டுமண்ணில் புலம்பித் தானே
பொல்லாத இவைநான்கு கரளா மென்று
இத்தரையி லுத்திரவு மிட்டாப் போலே
இவர்நகைத்துத் திரிவானேன் என்றுஅறி வானேன்.

கசேருக்கொடியின் இடது பக்கத்தில் நெருப்பு வர்மம் முறிந்துதானால் அங்கமெல்லாம் நெருப்புப் போல் காயும், கண்களில் காந்தல் உண்டாகி பார்வை போகும். உடல் வறண்டு காணும். 21 ம் நாளில் குரல் அடைக்கும். சன்னி உண்டாகும். 21 முதல் 36 நாட்களுக்குள் இக்குறி குணங்கள் மாறும். அமிர்த முக்கூட்டெண்ணெய் பயன்படுத்தி தடவல் செய்ய சன்னி நீங்கும், மருத்துவர் நோயாளியின் இதயத்துடிப்பிலும், நாடி நிலையிலும் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும்.

இருமல், இரைப்பு, அதிசாரம், அடிவயிறு குத்தல், சுரம் முதலிய குறிகுணங்கள் தோன்றும். நா வறண்டு காணப்படும். பதினைந்தாம் நாளில் வர்மம் கொள்ளுமாயின் பார்வை போகும். தோல் நிறமானது கறுக்கும். உடனடியாக காணராஜாங்க எண்ணெய்

பயன்படுத்தி தடவல் செய்ய நலமாகும். நோயாளிக்கு உடல் முழுவதும் ஊரலும் விந்துநீர் இயல்பிற்கு மாறாய் அதிகமாக வெளிப்படுதலும் காணப்பட்டால் பதினெட்டாவது வருடத்தில் மரணமாவான்.

குடுக்கை நரம்பு முறிந்தால்

404. நகைப்பான யோனிஇரு விரலின் மேலே
நாடிநிற்கும் குடுக்கை நரம்பது முறிந்தால்
பகைத்துமே அடிக்கடியே பனியுண் டாகும்
பாதவித்து அங்கமது பதறி விம்மும்
தொகையான நேரமது கடந்து தானால்
தூச்சமுடன் தன்மைபோல் சுறுக்கு பேசும்
தகையெழுப்பி தாகமுண்டாம் தண்ணீர் வேண்டும்
சத்தலுட னேகிவரும் சரமிட் டாடில்.

405. விட்டோடி யோப்பிழைப்பு மின்னும் தேகம்
விரண்டுமே பதிமூன்றில் நடுசா மத்தில்
தட்டொதிங்கி நின்றபனி யழலு மேறி
சண்டாள கோபமுடன் வியர்வை யுண்டாம்
தாட்டெழுப்பும் போதெழும்பி மயக்க மாகி
தூச்சமுடன் என்றுபல நினைவு முண்டாம்
மட்டொதுங்கு சரமத்தில் உணர்வு முண்டாம்
மாறியே இருபத்தி ரண்டில் நாடி
இரண்டிலே நடுநிலையை நெருக்கிப் பாரு.

406. என்றநரம் பெல்லாம் எழுந்தொன் றாகி
விண்டிருந்த நிலையதினை மேலாய் நிற்கும்
விரும்பியுண் பஞ்சபுஸ்பாதி யெண்ணெய்
கொண்டிடுமேல் அமிர்த முக்கூட்டின் எண்ணெய்
கூர்மையுடன் தாரையினால் கையிதம் செய்
பண்டிருந்த உறுப்பிடையின் சங்கள் செய்ய
பகர்ந்தநல் குடுக்கைநரம்பது அதிர்ந்த காயம்.

407. அதிர்ச்சியொடு பலவிஷயங்கள் உஷ்ண காயம்
அதிர்ந்தோடும் பலகா யங்கள் தீரும்
கதிப்பாக மீறியே நின்று கொண்டால்
காணுநாள் அறுபத்தி மூன்றில் சாவான்
துதிப்பாக இசங்கியே தாழ்ந்திட் டாலும்
தூட்சமாய் சுளுசுளுத்து நின்று கொண்டால்
சொதிப்பான சுவாசமது துன்னி துன்னி
தூட்ரமது விட்டு உள்ளிசங்கும் பாரே.

408. உள்ளிசங்கு இருமலிலே இழப்பு சாகம்
போதுமதி சாரமுடன் இரச்சல் குத்து
தள்ளியே யேகாகி சுரம்போல் காய்ந்து
தாறுமாறாக அயமு துள்ளி ருந்து
மெள்ளவே நாவசந்து விள்ளா தப்பா
மீறியே காய்ந்துவிடும் மூவஞ் சாம்நாள்
கள்ளமாய் காயமது உள்ளே சிக்கி
கண்காணா தங்கமது கறுக்கும் பாரே.

409. கறுக்குமே காய ராஜாங்க எண்ணெய்
கருதியே தாரையது உறுப்பி சங்கல்
சுறுக்குடனே கையிதவும் செய்து கொண்டால்
தூச்சாதி துச்சமெல்லாம் மூலஞ் சேரும்
மறுத்துமே சரநிலையும் வருந்தி நின்று
மாறுமடா காயபல விசகாயம் போம்
சேர்த்துமே சிக்க லுற்றால் இரண்டு ஏழில்
செறுக்குமே பித்தமதின் தீர்ச்சை யாகி.

410. முள்ளுரைபோல் தாமரைமேல் ஆணியைப் போல
முண்டிவரும் வேகமு டாணி யெல்லாம்
கள்ளாமல் விசம்போல் காணும் பாரு
கைகா லெங்குமேல் சொறியு முண்டாம்

துள்ளியே தேகமது வறட்சை யாகி
தூட்சமுடன் வியாதிநிலை தொடர்ச்சி யாகும்
விள்ளுமூ வாறாண்டில் மரண மாவான்
மேதியினில் பண்டிதர்க்கு விதித்த வாறே.

யோனிக்கு இருவிரற்கடை மேலே அமைந்துள்ள குடுக்கை நரம்பானது முறிந்தால் அடிக்கடி குளிர் காய்ச்சல் உண்டாகும். உடல் பதறி வீழும். குறித்த நேரம் கடக்குமானால் தாகம், சர்த்தல் உண்டாகும். இளைப்பு உண்டாகும். பதிமூன்றாம் நாளில் இரவில் வியர்வை, மயக்கம் உண்டாகும். இருபத்திரண்டாம் நாளுக்குள்ளாக நடுநிலையில் நெருக்கிவைக்க நரம்புகள் நிலைபெறும். பஞ்சபுஸ்பாதி எண்ணெய் உள்ளே கொடுத்து மேலே அமிர்த முக்கூட்டெண்ணெய் தாரைசெய்ய அதிர்ச்சி, உஷ்ணகாயம் மாறி நலமாகும். இதற்கும் மீறியே நின்றால் 63 ல் சாவான். நரம்பானது இசங்கியே தாழ்ந்ததானால் சுவாசமானது தடைபடும். இருமல், இளைப்பு உண்டாகும். அதிசாரம், வயிற்றில் இரைச்சல், குத்துகண்டு ஏகாதி சுரம்போல் காயும். 15 ம் நாளில் உட்காயத்தினாலே கண் ஒளி இழந்து உடல் கறுக்கும். காய ராஜாங்க எண்ணெய் தாரை செய்து கையிதமும் செய்துகொண்டால் சரநிலைகள் சரிப்பட்டு நலமாகும். இதிலும் மறுத்து காயங்கள் ஆறாவிடில் பித்தம் மீறி உடலெங்கும் தாமரை முள்போல் காணும். கை காலெங்கும் சொறி உண்டாகும். தேகம் வறண்டு 18 ஆண்டுகளில் மரணமாவான்.

### முண்டுறுக்கி நரம்பில் முறிவு

411. விதியான தோள்புசத்தின் இருது பக்கம்
மேவு முண்டுறுக்கி நரம்பது முறிந்தால்
துதியான பலகரமும் ஒன்றோ டொன்று
துச்சமுடனே இறுக்கி முறுக்கிக் கொள்ளும்
மிதியான பதியிலொறுங் கருத்தாய் பாரு
மேல்புழு வூர்ந்தால்போ லேறும்
மதிமயங்கி உணர்வயர்ந்து வேக முண்டாம்
மாறமடா முப்பத்தி மூன்றில் கேளே.

412. கேளுநீ கிரிசமது கொண்டவன் போல்
　　செறுவாக வார்த்தை யறியாமல் பேசும்
வாழுமந்த வீடு விட்டேகி வைக்கும்
　　மாறிவே றெட்டாம்நாள் கபரா ஜாங்கம்
நாளுமே கொடுத்துமேல் துவாலை செய்ய
　　நாடிநின்ற முண்டுறுக்கி நரம்பின் காயம்
மாழுமே மாமுனிவர் உரைத்த நூலில்
　　மாறாட்டம் இல்லையடா மகிழ்ந்து பாரே.

413. மாறாட்டமாகவே இசங்க லற்று வலுவாக
　　நெருங்கியே பரிந்திட் டாலும்
சீறியே ஊர்ந்துடனே ஏறும் பாரு
　　தேகவிறைத் தங்கமது சிதைத்துக் குன்றும்
மாறியே வாய்ப்பாறும் கனவு கண்டு
　　பந்தொடியாள் அரசையுறும் பார்வை போல்
மாறியே திமிரதுவும் மருவிக் காணும்
　　மார்க்கமது குன்றுமடா உள்ளங் கையில்.

414. கையில் நின்றூர்ந்துடனே ஒடு மாம்போல்
　　கழுத்தினுக்குள் விட்டிலைப்போல் தெறிக்கும் சன்னி
நைய்யவே பகர்ச்சையாய் வெருவிக் காணும்
　　நலமாகவே யதுவும் ஆறெட்டில்
செய்யவே முன்குறிகள் திரிச்சை யாகி
　　ஓடிவரும் வாதபித்த சிலேர்ப்ப முற்று
பய்யவே கரமும் தளர்ச்சை யாகி
　　பலநோயு முற்றுபதி னாறாண் டுக்குள்.

415. ஆண்டுக்குள் மரணமது வருமே சொன்னேன்
　　அருளான குருபரளே அறிந்து நீயும்
தூண்டாத மணிவிளக்கு போலே கண்டு
　　தூச்சாதி துச்சமதை ஆய்ந்து நீயும்
கூண்டிருந்த நல்வினை தீவினையுங் கண்டு
　　குறியான மாத்திரையும் பதந் தெளிவும்

ஈண்டுநிலை அணுவான பானங் கண்டு
எவ்வினையும் செய்துவிட்டால் இடற் றேகும்.

தோள்புசத்தின் இருபக்கங்களிலும் உள்ள முண்டுறுக்கி நரம்பு முறிந்தால் கரமானது இறுக்கமடைந்து முறுக்கிக் கொள்ளும். புழு ஊர்தல் போன்ற உணர்வெழும். அறிவு மயங்கி உணர்விழந்து மீண்டும் முப்பத்து மூன்றாம் நாளில் தன் இயல்பான நிலைக்குத் திரும்புவான். பைத்தியம் கொண்டவன்போல் தான் பேசுவதென்னவென்று அறியாமல் பேசும். எட்டாம் நாளில் காயராஜாங்க எண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து வெளியாட்சியாகவும் தாரைசெய்து வர்மத் தடவல் செய்துவர நலமாகும் என அகத்தியர் கூறியுள்ளார்.

இச்சிகிச்சைக்குப் பின்னரும் நலமாகவில்லையெனில் உடலெங்கும் நடுக்கம் உண்டாகி தாம் ஒரு அரசனாக இருப்பது போல் கனவுகள் உண்டாகும். உள்ளங்கையில் ஊரல் உண்டாகும். கழுத்திற்குள் விட்டிலைப்போல துடிப்பு உண்டாகும். சன்னி உண்டாகும். நாற்பத்தெட்டாம் நாளில் வாத, பித்த சிலேர்ப்பன நாடியானது, மெள்ள மெள்ள தளர்வடைந்து பதினாறு ஆண்டுகளில் மரணம் வரும்.

துண்டு நரம்பின் முறிவு

*416.* இடரான உச்சிதனில் அருகின் மத்தி
எதிரான துண்டு நரம்பது முறிந்தால்
படபடனே உயிர்போகும் கடிகை மூன்றில்
பதமாக இசங்கியே நெருங்கி னாலோ
இடராக வேமுற்று மதிமயங்கி எதிரான
நித்திரையின் இசையுங் காலம்
கடராக கரைகாத்து கரங்கள் இரண்டில்
கமறியே செட்டையினால் பறண்டு மப்பா.

419. ஆயிரத்தி முப்பத்தி யாறாம் நாளில்
அதிகமாய் வியர்த்துவிடும் பனியு முண்டாம்
பாயுமே மேகமது மிகவே பூண்டு
பண்டுள்ள கிரிசமது போலே கூவும்
ஆயுமே பித்தமது சர்த்த லுண்டாம்
அடிக்கடியே உணர்வுண்டாம் வேக மாறும்
தீயதுபோல் அங்கமதில் அனலு முண்டாம்
சொல்பெரிய மூவாண்டில் மரண மாவான்.

உச்சியின் மத்தியில் உள்ள துண்டுநரம்பு முறிந்தால் உடனே உயிர் பிரியும். முறியாமல் இசங்கியிருந்தால் மயக்கம் உண்டாகி கா ங்களினால் தன்னைத்தானே பிராண்டிக் கொள்வான். *1036* ம் நா ரில் உடல் வியர்த்து பனி உண்டாகும். மேகம் அதிகரித்து நை ததியம் போலே கூவும். பித்தவாந்தி அடிக்கடி காணும். உடல் அ ால்போல் காயும். மூன்று ஆண்டுகளில் மரணமாவான்.

பூவலசன் நரம்பின் முறிவு

420. ஆவான தாமரையின் வட்டத் தின்மேல்
அடங்குமூ விரல்மேலே நடுமை யத்தில்
பூவலசன் நரம்பது முறிந்திட் டாலோ
புத்தியுடன் அஞ்சாம்நாள் மரண மென்று
தயவாக இசங்கியே நெருக்க முற்றால்
சரியாக எட்டில் ஆறாம் நாளில்
மேவியே பனிகுளிர் போல் சுரவும்
காயும் விண்டநாள் பக்கமதின் வழிய தாகா.

421. பக்கமுடன் சிலநேரம் நரம்பி னோடே
பரபரத்து துடிக்குமடா அங்க மெல்லாம்
சிக்கியே நீரோடும் காய முண்டாம்
சித்திருமல் சிலநேரம் சிணுங்கிக் காட்டும்
வீக்கமுடன் மேனியெல்லாம் வெழுத்துக் காணும்
வெருவியே மதிமயங்கு முணர்வு முண்டாம்

தக்கனவே காயரா ஜாங்க எண்ணெய்
தப்பாமல் உள்ளுக்குக் கொடுத்தி டாயே.

422. கொடுத்திடவே பலகாயம் பனி குளிரும்
குமிறியே வீக்கமுடன் விசங்க ளெல்லாம்
சடுதியிலே ஓடுமிது கண்டு கொள்ளு
தப்பாமல் முறையுற்று கபமுற் றாலோ
நடுக்கமு வாயிருபத் தாறில்
நடுங்கியே பித்தமுடன் தளர்ச்சை யாகி
துடியாக சோரைவற்றி நீரை யேறி
சோரையதி சாரமுடன் கழிச்ச லாமே.

423. ஆமென்ற மலசலமும் கறுத்துக் காணும்
அருளுநாலா யிரத்தி முப்பத் தாறில்
போவுமுயிர்தான் ஒருநாளும் மீளா தப்பா
புத்தியுடன் கண்டுநீ புவியுள் ளோர்க்கு
ஓமென்ற நல்வினை தீவினையும் நன்றாய்
உற்றுணர்ந்து மனக்கண்ணால் கண்டு கண்டு
பரமனென்று வழியறிந்து தேர்ந்து செய்தால்
வையகவும் போற்றுமடா மகிழ்ச்சி யாமே.

இதயத்திற்க மூன்று அங்குலத்திற்கு மேலிருக்கும் பூவலசன் நரம்பு முறிந்தால் 5 ம் நாள் மரணம் நேரிடும். தப்பினால் 6 ம் நாளில் உடலெங்கும் நடுக்கம், குளிர், அதிகமான சுரமும் காணும். உடல் முழுவதும் வீங்கி இருமல் உண்டாவதுடன் மதிமயக்கம் உண்டாகும். காயராஜாங்க எண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்திட மேற்கண்ட குறிகுணங்கள் மாறும். கபம் காணப்படில் 3006 ம் நாளில் பித்தம் தளர்ச்சியுற்று இருமல், அதிசாரம், மலசலம் கறுத்துக் காணல் முதலிய குறிகணங்களைத் தோற்றுவிக்கும். 4036 ம் நாளில் நிச்சயம் மரணம் சம்பவிக்கும்.

## நீர்பிசி நரம்பில் முறிவு

424. மகிழ்ச்சியாய் இடுப்புதனில் தாரைக் குள்ளே
வகுத்த நீர்பிசி நரம்பது முறிந்தால்
புகழ்ச்சியா யுயிர்போகும் மூன்றாம் நாளில்
பொருமியே நெருக்கமுற்றி சங்கி னாலும்
நிகழ்ச்சியாய் வெருவியே விசைகொண் டாலும்
நின்றயுயிர் உணர்வுமதி மயக்க முண்டாம்
தளர்ச்சியால் எழும்புஉயிர் உணர்வு முண்டாம்
சார்ந்துமே கழுத்தடிமேல் பக்கம் பற்றி.

425. பற்றியே நரம்புசெறு சுளுக்கு முண்டாம்
பகருமுன்னே பக்கமது சுளுக்கும் பாரு
உற்றஇடை சுளிக்கியது உடன் கடுக்கும்
ஒருமிடை விழிகாணா தடைக்கும் பாரு
சுற்றியே இருமலுடன் வாந்தி பண்ணும்
சொல்லுவேன் வியர்வைகபம் நடுக்கி வெட்டும்
நற்றியே நாள் நூற் றிருப துக்குள்
நாடிமுன் விடைகழுவி நழுகிக் காணும்.

426. காணுமடா வயறுபொருமி மலசலங்கள்
காணாமல் அரையின்கீழ் குளிர்ச்சை காணும்
காணுமே அடந்திருக்கும் நாலாந் நாளில்
கண்டகுறி குணங்களெல்லாம் கதறி யெங்கும்
நாணுமிந்த இடைபெசகி மாறி யேகி
நாட்டமாய் காணுமடா கருத லுற்று
வேணுமிந்த படிகரச்சல் விட்டு
மேவிவரும் அவதியது கருது வேனே.

427. கருதியே இரண்டாயிரத் தியறுநூ றாம்நாள்
கடந்துமய் யாயிரத்துள் ளங்க மெல்லாம்
வேகியே ஏகாகி சுரம்போல் காயும்
வேகமுடன் தேகந்தன்னில் குத்த லுண்டாம்

பெருகவே சிறுநீர்போல் பழுப்பு போன்றும்
பேதவித்து பரன்வழியாய் இறங்கும்
நெருங்கியே மலசலங்கள் அடைத்துக் கொள்ளும்
நேசமுடன் வயிறுபொருமி வேக முண்டாம்.

428. வேகமுடன் சிறக்குமடா தறிநாள் மட்டும்
விலகுமடா நாலாநாள் அசந்து மாறும்
ஆக்கமுடன் இப்படியே பேத லித்து
அடிக்கடியே நாள் பிசகிக் காணும்
தேகமது வறண்டுமிக வாத பித்தம்
சிலேர்ப்பமது மிஞ்சிபல நோய்க்குள் ளாகி
வாகமென்ற நாள்பதி னய்யா யிரவும்
மருவியே கடந்தாலோ மரண மாகும்.

429. ஆகுமடா நாள்கடந் தேகு முன்னே
அருளால துவாலையது அடவால் செய்து
பாகமுடன் திசபுஸ் பசதி எண்ணெய்
பகர்ந்துமே யருந்திடுவர் புகைக சாயம்
வாகுபெற செய்துகை யிதம றிந்து
வளம்பெரிய மாத்திரையும் தெளிவு பரம்
வேகமுடன் செய்து கொண்டால் நீர் பிசின்
விசுலான நரம்பினுட காயம் போமே.

430. காயமது தீருமுன் சொன்னோம் அப்பா
கருவூன்றி பூக்காத மங்கை யர்க்கு
மாயமாய் கொண்டாலோ பூப்பு ஏது
மாதவிடாய் ஒருநாளும் வாரா தப்பா
ஓயுமிடை காணா திருளி யாவாள்
உத்தமனே முன்சொன்ன குணக் குறியும்
நேயமாய் காணுமந்த அவுச தங்கள்
நிச்சயமாய் செய்திடுவீர் நினைவு அதனை.

431. நினைவாக நீர்பிசியின் நரம்பு தானும்
நேசமுறும் புருஷருக்கு குறைவ தாகும்
கனவாக எண்ணாதே அறிந்து கொள்ள
கண்ணரிய சூச்சமதை கருதிக் கேளு
தலையான நீர்பிசியின் நரம்பு ஒன்று
துறப்பேசி எலும்பொன்று இரண்டு மப்பா
தனையாணி யானபுருஷருக்கு குறைவ தாகும்
சாற்றுமந்த மங்கையர்க்கு சார்ந்து காணும்.

432. சாருமந்த மங்கையர்க்கு பீசக் காலம்
தானேது புருஷருக்கு சாரு மப்பா
பாருமிந்த படியாகும் அறிந்து நீயும்
பரமக்குரு அருள்தினமும் பாரு பாரு
நேருமிந்த நிலனரு ளாதி தன்னில்
நேசித்து வைத்துபொருள் அடக்க மென்று
கோருமிந்த விவரமதை கண்டு நீயும்
குருவான மனக்கண்ணால் கண்டு பாரே.

இடுப்பு சாலத்தில் உள்ள நீர்பிசி நரம்பு முறிந்தால் மூன்றாம் நாளில் மரணம் சம்பவிக்கும். பாதிக்கப்பட்டவனுக்கு மதிமயக்கம் உண்டாகும். உடல் தளர்ச்சியுற்று கழுத்தின் மேல்பாகத்தில் ஈடுகொண்டு சுழுக்கிக் கொள்ளும். வியர்வை, கபம், உடல்நடுங்குதல், இருமல், வாந்தி ஆகியவை காணும். கண்ஒளி போகும். 120ம் நாளில் வயிருபொருமி மலசலங்கள் அடைபடும். அரைக்குக்கீழே குளிர்ந்து காணும். ஐயாயிரம் நாட்களுக்குப்பின் உடல் முழுவதும் குளிர்ந்து குத்தல் உண்டாகும். மலச்சிக்கல் உண்டாகும். சிறுநீர் சீழ்கலந்து வெளிப்படும். 4 நாட்களில் இது மாறும். இவை மீண்டும் மீண்டும் ஏற்பட்டு வாத, பித்த சிலேர்ப்பனமானது தன்னளவில் மிகுந்து நோய்க்குள்ளாகும். பதினைந்தாயிரம் நாட்களில் நோயாளி மரணமாவான். தப்பினால் திச புஸ்பாதி எண்ணெய் உள்ளே கொடுத்து வெளியாட்சியாகவும் பயன்படுத்தி முறைப்படி கையிதம் செய்ய நலமாகும்.

## மயிர்கூசல் நரம்பு முறிந்தால்

433. வரையான நெஞ்சறையின் இடக்குய் யத்தில்
மயிர்கூச்சல் நரம்பதுவும் முறிந்திட் டாலோ
திரையான தேகமது குன்னிக் கொள்ளும்
சிறுமயிர் கூசுமடி கடி இரவும்
நிறையான நெஞ்சில் துடிப்பு முண்டாம்
நெருங்கியே பெருமூச்சால் உடல்க றுக்கும்
விறைத்துமே குருவியர்வை விக்கல் சர்த்தல்
மேவிவரி யீராறில் மரண மாகும்.

434. ஆகுமேயி சங்கியேமுன் பின்னாகி அதர்ச்சை
உள்ளுறைந் தாலோ ஒருநூற் றெட்டில்
வேகமுற்ற தீகமூர்ச்சை மிகவே கொண்டு
வெருவேறே ஊருமிடை கார லுண்டாம்
தாக்குமே குய்யநடு காந்த லுண்டாம்
சார்ந்தநாள் இருநூற்றி அறுபத் தெட்டில்
வாகுமே தொப்புள்நடு மத்தி பத்தில்
வாட்டமுற்ற நீர்பொருமி காணும் கண்டாய்.

435. கண்டாக்கால் முன்னூற்றி அறுபத் தாறில்
கைலமுற உயிரதுவும் கடவும் பாரு
கண்டதோர் நீர்நிலையும் காணாய் விட்டால்
கருவான வாதரா ஜாங்க எண்ணெய்
திண்டாட்ட மாகவேயே ஏல துவாலை
செய்துமேல் கையிதமும் தரமாய் செய்து
விண்டதொரு திச புஸ்பாதி எண்ணெய்
விரும்பியே உண்டுநீ ............. ........

436. சடமான சிரசுமுதல் அங்க மெல்லாம்
சார்பாக மெழுகியே வெந்நீர் தன்னில்
விடமாக மெழுகியேநீ வந்தா யானால்
வெருவியே வர்மமது முறிவு காயம்

திடமாக மயிர்கூச்சல் நரம்பின் காயம்
தீருமே குருபரனை தினமும் போற்றி
நடனமாய் மனக்கண்ணால் கண்டு நீயும்
நாடிவரும் பலகாயம் நன்றாய் காணே.

நெஞ்சறையின் இடக்குய்யத்தில் மயிர்கூச்சல் நரம்பு முறிந்தால் உடல்வளைந்து குன்னிக்கொள்ளும். மயிர்கூசும், இதயத்துடிப்பு அதிகரிக்கும், பெருமூச்சால் உடல் கறுக்கும், வியர்வை, விக்கல், சர்த்தல் முதலியவை தோன்றுவதுடன் பனிரெண்டு நாளில் மரணமாவான். தப்பினால் 108 நாட்களில் சுவாசம் அதிகரித்தல், ஊரல், குய்யத்தின் நடுவில் காந்தல் முதலியவை உண்டாகும். 268 ம் நாளில் தொப்புழின் நடுவே நீர்பொருகிக் கண்டால் 366 ம் நாளில் உயிர் பிரியும். இவ்விதம் காணாவிடில் திசபுஸ்பாதி எண்ணெய் உள்ளே அருந்தக் கொடுத்து வாதராஜாங்க எண்ணெய் சிரசுமுதல் அங்கமெல்லாம் தாரைசெய்து திறமாகக் கையிதமும் செய்து வெந்நீரில் முழுகிவர வர்மம், முறிவு காயமும் மயிர் கூச்சல் நரம்பின் காயமும் தீரும்.

கூரல் நரம்பின் முறிவு

437. கூறவே காரைமுன் அருகதி விழகூரல்
நரம்பது முறிந்தால் தேக மெல்லாம்
மீறவே மின்னல் பழிங்கும் காணும்
விறுவிறென ஊருமடா வறட்சி யாகி
தெற்றிபதி னேழில்சன்னி சீதம்
சேர்ந்துவரும் இருபத்தி மூன்றில் போகும்
ஊறியே குறுந்தொட்டி வேர்க சாயம்
உண்டிடவே கூர்நரம்பது அதிர்ந்து காயும்.

438. காயது போகுமிடை உள்ளு றைந்து
கதிர்தீட்டை யுற்றாலோ யாயு றைந்து
பாயும்நாள் அறுபதிலே சுரமும் காய்ந்து
பாதமதின் வெள்ளைநடு மத்தி பத்தில்

தோயவே காந்தலுடன் நீரில் புக்கி
சுற்றியே பொள்ளலுடன் துடர்ச்சை யாகி
சாய்வான பக்கமது இழுத்துக் குத்தும்
சன்னிசுரம் இருமலோடு அதிசா ரங்கள்.

439. அதிசார முற்றுடனே நரம்பி லுத்தும்
அண்டவாய் வதுபோல நீருண் டாகும்
பதியான நாசிரண்டில் நீரு முண்டாம்
பரபரனே ஊருமது சிரசு வெட்டும்
விதியான வாதபித்த சிலேர்ப்பன மெல்லாம்
வேகமுற்று சயம்வறட்சை மேகம் யீடை
கொதிப்பாக வல்லார கசாயம் கொள்ளு
கூர்மையாய் நாகலத்தின் பழத்தின் எண்ணெய்.

440. எண்ணெயது மூழ்கி வென்னீர் மூழ்கி
இதமாக அமிர்த முக்கூட் டெண்ணெய்
நண்ணியே மண்டலமு முண்டா யானால்
நாடியே கூரல்நரம் பதிகா யம்போம்
திண்ணமாய் காயமது தீரா விட்டால்
சேர்மையாய் ஆயிரத்தி இருநூ றுக்கு
விண்ணுலகம் தேடி ஆறுயிர் தான்போமே
மேவியே நின்றமதி குய்யத் துள்ளே.

காரையென்பின் முன்அருகில் உள்ள விரகூரல் நரம்பானது முறிந்தால், உடல்முழுவதும் மின்னல்போல மின்னி வறட்சியாக ஊரல் கொள்ளும். 17 ம் நாள் சன்னியும் குளிரும் தோன்றும். 23 ம் நாளில் இவை மாறிவிடும். குறுந்தொட்டிவேர் கசாயம் கொடுக்க வேண்டும். அகப்புறத்தில் குருதி கட்டிக்கொள்ளுமாகில் 60 ம் நாளில் சுரம் காயும். பாத்தின் வெள்ளை மத்தியில் காந்தல், சுரம், இருமல், இளைப்பு, அதிசாரம், சன்னி, அண்டத்தில் நீர்கோர்த்து வீக்கம், மூக்குநீர் பாய்தல் போன்றவை உண்டாகும். வாதபித்த கபமாகிய முக்குற்றமும் கேடடையும். வல்லாரை கசாயமும், அமிர்தமுக்கூட்டெண்ணெயும் தக்க அளவுக்கு உள்ளே கொடுத்து

நாகலத்தின் பழத்தின் எண்ணெய் தாரைசெய்து வெந்நீரில் மூழ்கிவர நரம்பதி காயம் தீரும். தீராவிடில் 1200 நாள் கடந்து மரணம் நேரிடும்.

**சுவாசப்பை நரம்பில் முறிவு**

441. குய்யத்தின்கீழ் குய்யமதி னகத்துள் கூண்ட
சுவாசப்பை நரம்பது முறிந்திட் டாலோ
ஒய்யவே கடிகையது மூன் றுக் குள்ளே
உயிர்பிரி யவேநின்று இயங்கு மானால்
தொய்யவே நாற்பத்தி ஒன்றாம் நாளில்
துணிவாக உயிரதுவும் பிரியும் பாரு
தைய்யவே கடந்தாலோ எண்பத்தி யெட்டில்
தப்பாமல் உயிர்பிரியும் தப்பா தாமே.

சுவாசப்பை நரம்பில் முறிவு ஏற்பட்டால் மூன்று நிமிடங்களில் மரணமாவான். தப்பினாலோ 41 அல்லது 88 ம் நாளில் தப்பாமல் உயிர் பிரியும்.

**தவளை நரம்பில் முறிவு**

442. தப்பாமல் முட்டுமே லிடத் தவளை
சார்பாக முறிந்தாலோ அயதி யுண்டாம்
ஒப்பாலு றுமியே உருளும் பாரு
ஒருகாலும் விறைத்துடனே நீட்டி வெட்டும்
செப்பியே கண்ணிரண்டும் சிவந்து காணும்
செறுசிவந்து வீழ்ந்த டைக்கும் மூக்கு
அப்பனே பதினெட்டில் உணர்வு முண்டாம்
பகருநீ இதிலுதிரம் கண்டிட் டாலும்.

443. கண்டாலோ இருபத்தி யாறில் சாவான்
கருவான உதிரமது காணா விட்டால்
விண்டலொரு நடுநிலையை நெருங்கிப் பாரு
விதமான நரம்பதுவின் தாழ்ச்சி நீங்கி

மண்டியே நிலைசேரும் பற்றும் விட்டு
மகிழ்ச்சியாய் கச்சையது மருவி சுற்றி
கண்டுமேல் முறிவெண்ணெய் தாரை செய்து
திசபுஸ்பாதி ....................................

444. திசபுஸ்பாதி எண்ணெய் திறமாக செய்து
சிறப்பாக மண்டலந்தான் கழிந்த பின்பு
அசையாமலே நாகப் பழத்தி னெண்ணெய்
அன்பாக மெழுகியே அசையும் வென்னீர்
நிசமேமுகத் தவளைநரம்பு திரிந்த காயம்
நெறியாக அகமுறிகாயம் விசகா யங்கள்
விசையான நீர்காயம் பலகா யங்கள்
விருந்தோடும் என்றுமாம் விதித்த வாறே.

445. விதித்ததோர் நரம்புதிரிச்சி யுற்றிட் டாலோ
வித்தகனே ஆயிரத்தி யிருபத்தி அஞ்சில்
பதமாக இருமியே சுரமும் காயும்
பஞ்சமது உலரும்பல் கூச்ச லுண்டாம்
துதியாக விட்டுவிட்டு எடுத்துக் குத்தும்
துச்சமாய் இருந்துமூ வெட்டாம் நாளில்
சிதையாமல் அக்கினிபோல் பாய்ந்து காணும்
சிரசுநொந் தொழுதுநிலை கண்டத் தின்கீழ்.

446. வலிக்குமே மேல்நோக்கி நெஞ்சு மட்டம்
மகிழ்ந்துநிலை கண்டத்தின் நீரி ரும்மல்
சலிக்குமே சுவாசமது சிதறி ஓடும்
சடமான குரல்நோகும் தளர்ச்சி யுண்டாம்
ஒலிக்குமே சுவாசமது சிதறி ஓடும்
உத்தமனே நித்திரை உறவற் றேகும்
கலித்துநடு வயிற்றில்மிக குன்ம மேறி
கமிழ்ந்துமேல் ஒழுக்குமிடா தாக முண்டாம்.

447. உண்டாகும் நெஞ்சுதனில் இடித்துக் குத்தும்
ஓதுமூ வாயிரத்தி ஐந்நூற் றுக்குள்
திண்டாடும் பைய்யறு தைலங் கொள்ள
சேர்ந்துமே வந்திபல காய ரோகம்
வண்டியே வர்மத்தின லெழுந்த
மாறியே நின்றபல வியாதி யெல்லாம்
கண்டோடி போகுமுன் நாமு ரைத்தோம்
கடிகைநாள் அதில்திறன் கண்டிட் டாலோ.

448. கண்டநாள் இருபத்தி யாறில் சாவான்
கதிரான உதிரமது காணா தாகில்
விண்டதொரு நடுநிலையில் நெருக்கிப் பாரு
விதமான முறிவெண்ணெய் தாரை செய்து
மண்டியே கையிதமும் செய்தி யாக
மருவுதிச புஸ்பாதி தைலங் கொள்ளு
கொண்டுநீ நாகப்பழத்தி ணெண்ணெய் முழுகி
கொடிதான வென்னீரு மொழுகிப் பாரு.

449. மொழுகவே தவளைநரம் பதிரகாயம் போம்
முத்தியுட கர்மங்கள் நிவர்த்தி செய்து
தாழ்வான மனக்கண்ணால் கண்டு நீயும்
தப்பாமல் அன்னமொடு தான தர்மம்
சூழவே அனுதினமும் வாலை பூசை
துணிவாக செய்துமே நிவர்த்தி செய்து
பாழான கர்மமது உனைதீண் டாகும்
பகருவேன் ஊரல் நரம்பது முறிந்தால்.

தோள்பொருத்துக்கும் முழங்கை பொருத்துக்கும் இடையில் காணப்படுகின்ற தவளை நரம்பு முறிந்துதானால் உணர்விழந்து கீழேவிழுந்து உருளுவான். கால்விறைத்து நீட்டி வெட்டும். கண்கள் சிவந்து காணும். மூக்கடைக்கும் 18ம் நாளில் உணர்வுண்டாகும். சிறுநீரில் இரத்தம் காணப்படின் 26 ம் நாளில் சாவான். உதிரம் காணாவிடில் நடுநிலையை நெருக்க நரம்பு தன்நிலையைச் சேரும். பாதிக்கப்பட்ட இடத்தில் பற்றிட்டு கச்சையால் சுற்றி மேலே

முறிவெண்ணெய் தாரைசெய்து திசபுஸ்பாதி எண்ணெய் உள்ளே கொடுக்க வேண்டும். ஒரு மண்டலம் இவ்வாறு செய்தபின் நாகப்பழத்தின் எண்ணெய் தாரைசெய்து கையிதம் செய்து வென்னீரில் மூழ்கிவர நலமாகும்.

முறைப்படி தடவல் செய்யப்படாவிடின் ஆயிரத்தி இருபத்தைந்தாம் நாளில் சுரத்துடன் இருமல் உண்டாகும். உடல் முழுவதும் குத்தல் உண்டாகும். *24* நாட்களில் தலைவலி அதிகரிப்பதுடன் சுரமும் காணும். சிரசு நோதலுடன் சுவாசம் தடைபடல், தொண்டைவலி, இருமல், தளர்ச்சையடைதல், உறக்கமின்மை, அதிதாகம், குன்மம், நெஞ்சில் இடித்து குத்துதல் ஆகியவை உண்டாகும். *3500* நாட்களுக்குள் பைய்யறு தைலம் தக்க அளவு உள்ளே கொடுத்து வெளியாட்சியாகவும் பயன்படுத்தி கையிதம் செய்துகொண்டால் முழுவ்துதும் குணம் ஆகும். சிலவேளை *26* நாட்களில் மரணம் நேரிடலாம். உதிரம் காணப்படாவிட்டால் நடுநிலையை நெருக்கி முறிவெண்ணெய் தாரைசெய்து கையிதம் செய்து திசபுஸ்பாதி எண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்து நாகப்பழத்தின் எண்ணெய் தேய்த்து வென்னீரில் மூழ்கி வர வேண்டும். இத்துடன் கடவுள் பக்தியும் பிறர்க்கு தர்மம் செய்தலும் இந்நோய் நீங்க உற்ற துணை புரியும்.

**ஊரல் நரம்பின் முறிவு**

*450.* ஊரல்நரம்பது முறிந்தால் மூர்ச்சை யாகி
உடனருங்கு கிருகிரென உருண்டு சுற்றி
வீரமாய் சன்னியொடு சீத முண்டாம்
மேவியே மூன்றாம்நாள் மரண மாகும்
சாரமே அதிர்ச்சியுற்றால் தேக மெல்லாம்
தருவாகி வீங்குமுடன் நா றும் கண்டாய்
பாரமுடன் மண்டைக்குள் குத்து முண்டாய்
பலமான தொண்டைக்குரல் காரல் உண்டாம்.

451. காரலுண்டாம் காதுக்குள் கிருகி ருக்கும்
கருவான ஆறாம்நாள் மயக்க முண்டாம்
மீறியே உணர்வுமுண்டாம் உடன்ம யங்கும்
வித்தகன் நடுநிலையை நெருக்கிப் பாரு
தெற்றியே உணர்வுண்டாம் அமிர்தமுக் கூட்டின்
எண்ணெயது உண்டுகுறுந் தோட்டி எண்ணெய்
கூறியே மெழுகி வென்னீரில் மெழுக
கொடிதான ஊரல்நரம்பு அதிரக் காயம்போம்.

452. போகுமே அதிர்ச்சியுற்றால் ஆய்ந்து முறி
பொதுவினிய நின்றுகொண்டால் அடிக்க டிக்காய்
ஆகுமே பனிகுளிரும் அங்க மெல்லாம்
அழலெழுவி மாறுமுடனே அண்ணா ராய்ந்து
வாகுநாள் இருபத்தி ரண்டில் காய்ச்சல்
வளம்போலே காயுமே காசிப் போலே
தாகமிறு நாசிரண்டும் அடைத்து மூளை
தாம்பறந்து மதுமதி மயங்கும்.

453. மயங்கியே போதமறு ழருந்துக் காணும்
வறட்சையாய் மேகமொடு வறட்டு இருமல்
தயங்கியே வாதபித்த சிலேர்ப்ப மாகும்
சீதளை வயிறு பொருமல் மலம டக்கும்
தியங்குசில நேரமதில் வாந்தி யுண்டாம்
சித்திமல சலமடைத்து பற்றிக் கொள்ளும்
இயங்கி பதினாயிரத்தி பதினொ ராம்நாள்
எமலோகம் புக்கும் உண்மை தானே.

ஊரல் நரம்பு முறிந்தால் உடனே மூர்ச்சையாகி கீழே விழந்து உருண்டு சன்னி குளிர் ஆகியவற்றைத் தோற்றுவித்து மூன்றாம் நாளில் மரணமாகும். சிரசினுள் குத்தலும், தொண்டை காறலும் உண்டாகும். காதுக்குள் கிறுகிறுத்து 6 ம் நாளில் மயக்கம் உண்டாகும். உணர்வு மீண்டாலும் உடனே மயங்கும். நடுநிலையை நெருக்கி அமிர்த முக்கூட்டெண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்து குறுந்தோட்டி எண்ணெய் மெழுகி வென்னீரில் குளிக்க ஊரல்

நரம்பின் காயம் நீங்கும். அதிர்ச்சியுற்றாலோ குளிரும் சுரமும் காணும். 22 ம் நாளில் காய்ச்சல் நாசிஅடைத்தல், மூளை வறண்டு அறிவு மயங்குதல் ஆகியவை உண்டாகும். வறட்சி, விந்துநீர் வெளிப்படல், மேகம், வறட்டிருமல், வயிறுபொருமல், சர்த்தல், மலசலமடைத்தல் ஆகியவற்றுடன் வாத, பித்த சிலேர்ப்பமாகிய முக்குற்றமும் தன்னிலை கெடல் ஆகியவற்றை தோற்றுவிப்பதுடன் 10,013 ம் நாளில் மரணம் ஏற்படும்.

தாரு நரம்பில் முறிவு

454. உண்மையாய் கடக்கண்ணின் அருகின் பக்கம்
ஓடிநிற்கும் தாரு நரம்பது முறிந்தால்
வன்மையாய் விழிரண்டும் காணா தோடும்
மண்டைஇடித் துளையுமிடா சிரசு வட்டம்
நன்மையாய் பொள்ளவது போலே வீங்கும்
நடுநாக்கது துடிதுடிக்கும் மயக்க முண்டாம்
உண்மையாய் மயக்கமது மூன்றில் போகும்
உத்தமனே நடுநிலையை நோக்கிப் பாரே.

455. பார்ப்பா ரவிமதியும் மருவி நிற்கும்
பயத்தின் மூர்ச்சையினால் பாரா தோடும்
சேரப்பா திசபுஸ்பாதி யெண்ணெய்
சிரசுமுதல் அங்கமிட் டுண்டா யானால்
நேரப்பா தாருநரம்பு அதிர்கா யங்கள்
நேராக தீருமதில் தீர்ச்சை யுற்றால்
காரப்பா நாற்பத்தி யொன்றா யிரத்திநாள்
கடந்தே காயசுரம் போல் காயும்.

456. சுரம்போலே காய்ந்துதலை கனத்துக் குத்தும்
துச்சமுடன் சிரசுதனில் பொன்னலம் போம்
சிரசுதனில் காணுமிடா ஓங்கா ரிக்கும்
சிக்கினவாய் உளரசுழற்றும் நீர்தான் பாயும்
பாவியே உலையோடு தாக முண்டாம்
பகருநா வறளுமிடா வயிறு பொருமும்

உரமாக சாந்திலதி சார முண்டாம்
உத்தமனே ராஜாங்க கிறுதங் கொள்ளே.

457. கிறுதமுண்டாங் அருள்குறுந் தோட்டி எண்ணெய்
கிருபையுடன் முழுகி வென்னீரில் முழுகு
உறுவான தாரை நரம்பதி லெழுந்த
உற்றநோய் தீருமிடா வதிர்ச்சி யுற்றால்
மாறாகும்நாள் இருபத்தி ஒரா யிரத்துள்
மறலியினால் உயிர்பிரியும் வண்மையாய்
உறுதியுடன் இந்நூலில் சூத்திரம் போல்
ஒருநூ லும் சொல்லவில்லை உண்மை தானே.

458. தானான இந்நூல்தான் யானு ரைத்தேன்
தப்பாமல் வர்மத் துண்டா மணியில்
தேனான மதுவுண்ணும் வண்டது போல்
செப்பினேன் நானூற்றி பதினா லுந்தான்
வானான அச்சாக குறளுனுள் முன்னூறில்
வகுத்துரைத்தேன் அச்சரத்தின் நாட்ட மெல்லாம்
ஊனான வர்ம மதுவே யாகும்
ஒளிவான பராபரத்தில் ஒடுங்கி நில்லே.

459. நில்லேநீ முதுகுநடு புய மருகில்
நின்ற தீபார நரம்பது முறிந்தால்
வில்லநீ லிங்கமது கறுத்துக் காந்தும்
வில்லதுபோது குய்யமது வளைத்து குன்றும்
சில்லநீ செறுமணலாய் தேக மெல்லாம்
சிலுசிலுத்து நிறமுடன் மயக்க முண்டாம்
பொல்லாத சன்னியோடு சீத முண்டாம்
போகுதிடா மூன்றில் உணர்ந்து எழுந்திருக்கும்.

460. எழுந்துமே மயக்கமது அடிக்க டிக்காய்
எந்நேரம் விட்டுவிட் டெழுந்து மேவி
பழுந்தியே காணுமடா பதிமூன் றுக்குள்
பாலகனே நடுநிலையை நெருக்கிப் பாரு

அழுந்தியே நிலைசேரும் திசபுஸ் பாதி
அடவான தைலமது அருந்தும் போது
தழும்பான மயக்கமுடன் சன்னி சீதம்
சாரது வேகமுடன் திரிச்சி யுற்றால்.

கடைக்கண்ணின் அருகில் உள்ள தாரு நரம்பு முறிந்தால் கண்கள் பார்வை இழக்கும். சிரசில் வலி, பாதிக்கப்பட்ட இடத்தில் வீக்கம், நாக்கு துடித்தல், மயக்கம் ஆகியவை உண்டாகும். மூன்றாம் நாளில் மயக்கம் தெளியும். நடுநிலையை ஆராய்ந்து திச புஸ்பாதி எண்ணெய் தக்க அளவு உள்ளே கொடுத்து வெளியாட்சியாகவும், பயன்படுத்தி சர்வாங்கத் தடவல் செய்ய தாரு நரம்பின் முறிவானது குணமாகும். தீர்ச்சையுற்றாலோ 41000 நாள் கடந்து சுரம், தலைகனத்துக் குத்தல், சிரசு எரிதல், சர்த்தல் உணர்வு, வாய் உளறல், உமிழ்நீர் சுரந்து காணல், தாகம், வயிறு பொருமல், அதிசாரம் ஆகியவை உண்டாகும். இதற்கு ராஜாங்க கிருதம் உள்ளே கொடுத்து குறுந்தோட்டி எண்ணெய் தேய்த்து வென்னீரில் முழுகிவர குணமாகும்.முறைப்படி இச்சிகிச்சைமுறை மேற்கொள்ளப்படா விடில் 21000 நாளில் மரணமாவான்.

முதுகின் நடுவில் புயமருகில் உள்ள தீபார நரம்பு முறிந்தால் லிங்கமானது உடனே பாதிக்கப்பட்டு கறுத்துக்காணும். உடல் வளைந்து குன்னிக் கொள்ளும். உடல் காந்தலுடன், மயக்கமும் உண்டாகும். உடல் குளிர்ந்து சன்னி உண்டாகி மூன்றாம் நாளில் மாறும். பதிமூன்றாம் நாளில் நடுநிலையை சோதித்தறிந்து திச புஸ்பாதி எண்ணெய் உள்ளே கொடுக்க சன்னியும் மயக்கமும் தீரும்.

**விலா எலும்பின் அருகின் பக்கம்**

461. உற்றாலோ முன்னூற்றி அறுபத் தாறில்
ஓதரிய விலாஎலும்பின் அருகின் பக்கம்
தெற்றாக காணுமிடா பனி குளிரும்
சேர்ந்துமே இருமலுடன் நெஞ்சரிப்பு மாறுமே
அன்னமது சரியதாகும் வயிறு பொருமி
கழியும் நீர்கப முண்டாம் சுற்றிவரும்

ஏப்பமிடும் வாந்தி பண்ணும்
சேர்ந்துவயிறு வலுத்துடனே கழிச்ச லுண்டாம்.

462. உண்டாகும் எண்ணூற்றிஒரு மூன்றுநாள்
உற்றஇரு விலாவி லுருபக்க முட்டி
திண்டாடி மேல்வலிக்கும் ஈரல் நோகும்
செருமி நெஞ்சடைத்து கபத்தோடு இழுப்பு
உண்டாகும் நாவறண்டு வறட்சை யாகி
மேவும்நாள் ஆயிரத்திஒரு மூன்றாம்நாள்
விண்டான மரணமது வருமே சொன்னேன்
விதமாக இன்னுமொரு சூச்சம் கேளே.

366 நாட்களில் விலா எலும்பின் அருகில் பாதிக்கப்பட்டு கபம், குளிர், சுரம், இருமல், அசீரணம், அதிசாரம் முதலியவை உண்டாகும். சர்த்தல், வயிறுபொருமி கழிச்சல் உண்டாதல் ஆகியவையும் ஏற்படும். 803 ம் நாளில் இருவிலாவிலும் வேதனை ஏற்படுதலுடன் ஈரலும் நோகும். நெஞ்சடைத்து கபமும் இழுப்பும் உண்டாகும். நாவறட்சி உண்டாகும். 1001 ம் நாளில் மரணம் உண்டாகும்.

**உள்கொடி நரம்பில் முறிவு**

463. கேளடா நடுமுதுகின் நேர்தா ரைக்குள்
கெடியான உள்கொடி நரம்பு தானும்
கேளடா முறிந்தாலோ குடுகு டென்று
கொழுப்பது போல்செங்க லங்கள்போல் சிவந்து
நாளடா அபான வழியாய் யிறங்கும்
நடுநடுங்கி லிங்கமதில் சோரை யுண்டாம்
வாளே தேகமது நீரு முண்டாம்
வளமான அஞ்சாம்நாள் மரண மாவான்.

464. ஆயனே அதிர்ச்சியுற்றால் அறுபத் தேழில்
அப்பனே ஏகாசிசுரம் போலக் காய்ந்து
மேவியே மயக்கமுடன் சன்னி சீதம்
வருவிறை ஊருமடா விட்டிலைப் போல்
கூடியே சன்னி அடிக்கடியே உண்டாம்
குருவியர்வை வியர்த்துவரும் குமுறிக் காந்தும்
தாவியே வாருசன்னி தைலந் தன்னை
தப்பாமல் அங்கமெல்லாம் தாரை செய்நீ.

465. சேய துமே ராஜாங்க கிருத மொண்டு
தீருமுன் குண்டிநரம்பின் காய மெல்லாம்
ஒய துமே தீருமுன் நாமு ரைத்தோம்
உத்தமனே அதிர்ச்சியுற்ற மாய்ந்து கொண்டால்
கையிதமே முன்னூறில் இரும லுண்டாம்
சுத்தரிக்கோல் மாறலதில் விஷநீ ரோடி
ஐந்துமே முதுகுநடு தாரை யெல்லாம்
நருநரென பென்னுமதில் நடுக்க முண்டாம்.

466. நடுங்கியே தாரையதில் வில்லு போலே
நலமாக நீலநிற மாகக் காணும்
ஒடுங்கியே கண்டநாள் இருபத் தேழில்
உத்தமனே சயம்வறட்சி விக்கல் கக்கல்
விடுவிடனே வாதபித்த சிலேற்ப மெல்லாம்
விசம்போலே ஏறுமிக்க கோப முற்று
தடுமாறி நானூற்றி பதினே ழாம்நாள்
தப்பாமல் உயிர் பிரியுமென்று கூறே.

467. கூறாக இன்னுமொரு தடவு மார்க்கம்
கூறுகின்றேன் வர்மத்தால் தாட்சி யாகி
சீராக நோய்பலதும் தேர்ந்து மேவி
திடுக்கிட்டால் மாடமொன்று திடமாய் செய்து
ஈறாக துவாரமிட்ட அகமுள்ள தாக
இதமாக உத்தமதாழி கசாயம் வலுவாக

வாறாக செய்துடனே திசநோக் கத்தில்
வியர்வு கைத்து வார முள்ளே.

468. ஊட்டியே கண்டமதில் பாத மட்டாய்
உண்மையுடன் தாழம்பூ உணர்வாய் சுற்றி
நாட்டியே மாடமதில் சைனத் திட்டு
நலமாகவே புகையாய் நல்கி வாட்டி
சூட்டியே மேல்தாள்தணை விலக்கி நீயும்
அதி துணிவாக பெருவிரலின் பாத மட்டாய்
காட்டியே நிலையுடுப்பில் நெருங்கத் தேய்த்து
கருவான உள்கணையைக் கமலத் தூட்டி.

469. கமலமதில் ஊட்டியே வில்நி லையில்
கணையிறுக பெருவிரலால் பதமிட் டாட்டி
விமலான இதயமதில் பற்றி டாமல்
எதிர்மூலை நிலையதுதான் இறுகா வண்ணம்
நமல்மருங் காதகணு நன்றாய் செய்து
நல்கியே பதநிலையில் எடுத்தி ருத்தி
குமலருகில் திருவிரால் நெருங்கிப் பாரு
குண்டனம்போல் சுங்கிட்டு இருவி சக்கி.

470. விசக்கியே இடமருவி திருச்சி கெட்டி
எளிதாக வட்டமதில் அணையுங் கூட்டி
பசற்பியே பெருவிரலால் பதமு றுக்கி
பதநிலையும் மேல்திரையில் பதமத் தாக்கி
வசமான நிலவேரில் கசாயம் கொள்ளு
வலுவான நரம்போடு முறிவு காயம்
விசையான வர்மமோடு பலகா யங்கள்
நேர்மையாய் தீருமென் று விதித்த வாறே.

கசேருக்கொடியின் நடுவில் உள்ள உள்கொடி நரம்பு முறிந்தால் கொழுப்பு போன்ற திரவம் சிவப்பு நிறத்துடனும் அபான வாய்வழியாய் இறங்கும். லிங்கமதில் சோரை உண்டாகும். தேகத்தில் நீர் கோர்த்துக்கொள்ளும். ஐந்தாம் நாளில் மரணம் நேரிடும்.

தப்பினால் 67 ம் நாளில் சுரம், சன்னி, உணர்வின்மை, மயக்கம், விட்டிலைப்போல் துடித்து சன்னி உண்டாதல் வியர்வை ஆகியவை உண்டாகும். வாத சன்னி தைலத்தை உடலெங்கும் தாரைசெய்து, ராஜாங்க கிருதம் தக்க அளவு உள்ளே கொடுத்துவர நலமாகும். அதிர்ச்சியுற்றாலோ 300 நாட்களில் இருமல், நடுதாரையெங்கிலும் கொப்புளங்கள் உண்டாதல், உடல் நடுக்கம் ஏற்படல் ஆகியவற்றுடன் முதுகு நீலநிறமடைந்து வில்போல் வளைந்து காணும். 27 ம் நாளில் விக்கலும் சர்த்தலும் உண்டாகும். இக்குறிகுணங்கள் காணப்பட்டால் முக்குற்றமும் தன்னிலைகெட்டு நோயாளி 417 ம் நாளில் மரணமாவான்.

471. வாரேநீ வாரெலும்பு நடுவெ லும்பில்
அதனிடையாய் அதிசார நரம்ப துவும்
கூரேநீ மூறி கொண்டு தென்றால்
குடுகுடென வயிறிரையும் அதிசா ரந்தான்
சீரேநீ கழிந்துவரும் பனிகு ளிராய்
திடுதிடென வலியுதன்னில் திடுக்கிட் டேகும்
நீரேநீ மலஞ்சல மடைத்துக் கொள்கும்
விம்மிவயிறு பொருமலுடன் அயதி யுண்டாம்.

472. பொருமலுண்டாம் நடுநிலையை நெருக்கி மைந்தா
புகழாக நிலவேரின் கசாயம் கொள்ள
வருந்தியே அதிசார நரம்பின் காயம்
வகுப்பாக தீருமடா மனக்கண் ணாலே
திருந்தவே அனுதினமும் வாலை பூசை
சிறப்பாக செய்துமே சேர்ந்து கொண்டால்
வருந்தியே தீருமடா பலகா யங்கள்
மாறியே போகமென வகுத்துச் சொல்லே.

473. வகுப்பான நரம்பதுவும் முறிந்து தாகில்
மைந்தனே அதின்குணத்தைச் சொல்லக் கேளு
தொகுப்பான கண்டசைவு காந்தல் உண்டாம்
சுறுசுறென பரிசமென துடிப்பு முண்டாம்

வெகுப்பான சன்னியோடு சீத முண்டாம்
மேவுநாள் பதிமூன்றில் மரண மாவான்
வகுப்பான அதிர்ச்சியுற்றால் இருபத் தாறில்
பல்கூசும் அடிக்கடியே பனியும் குளிரும்.

474. பனிகுளிராய் மயக்கமுடன் உடனே மாறும்
பச்சைமுற்றை முக்கூட்டின் எண்ணெய் கொள்ளு
வினையகலும் அதிர்ச்சியுற்றால் இருபத் தாறில்
இதுகடந்தால் பதினாயிரத் தொருமூன் றாம்நாள்
கனிவாய் நீரும் பனியும் குளிரும்
கடினமாய் தேகமெல்லாம் கனத்து வீங்கும்
தணமான கத்தரிக்கோல் கண்ட மட்டாய்
தாக்குநடு வில்போல் குய்ய மாட்டாய்.

பழுக்களின் நடுவில் அதிசார நரம்பில் முறுக்கிட்டுக்கொண்டால் வயிறு இரைச்சலுடன் அதிசாரம் உண்டாகும். உடல் வெப்பநிலை மாறி தேகம் குளிர்ந்து வயிறு பொருமி மலசலம் அடைத்துக்கொள்ளும். களைப்பு தோன்றும். நடுநிலையை நெருக்கி நிலவேரின் கசாயம் கொள்ள அதிசார நரம்பின் காயம் தீரும். அதிசாரநரம்பு முறிந்துதானால் கண்ணெரிச்சல், உருட்டல், கண் துடித்தல் ஆகியவற்றுடன் குளிரும் சன்னியும் உண்டாகும். 13 ம் நாளில் மரணம் நேரிடும். தப்பினால் 26 ம் நாளில் பல்கூசும், குளிர் மயக்கம் உண்டாகி உடனே மாறும். இதற்கு பச்சைமுட்டை முக்கூட்டு எண்ணெயுடன் கலந்து அருந்தவேண்டும். அதிர்ச்சியுற்றால் 26 அல்லது 10,003 ம் நாளில் குளிர் உண்டாகும். தேகமெல்லாம் கனத்து வீங்கி மரணம் நேரிடும்.

வாசாய நரம்பு திரிதல்

475. குய்யமாட்டாய் வாசாகி நரம்பு அதிரின்
கொடுமுனையின் நரம்பதிலே குன்னல் கொள்ளும்
உய்யவே வில்லுபோல் வளைந்து வெட்டும்
உடனகம் கூனுமிடா குய்யம் கண்டால்

பைய்யவே இருமலது மேகக் காயும்
பரந்துடன் அசவிநீர் உஷ்ண காயம்
மெய்யவே வாதபித்தம் நடுக்க முடன்
சிலேர்பணத்தின் நடுவூ டாடி.

476. ஊடாடி வேகமுடன் சலம்வ றட்சை
உடன்மெலிந்து ஈழைகபம் விக்கல் கக்கல்
கூடாடி அதிசாரம் கழிச்சல் சிறுநீர்
கூண்டுமே குடலெரிவு சன்னி சீதம்
வாடியே உயிரதுவிம் எமலோ கத்தில்
வலியவே போகமடா வன்மை யாக
நாடியே அதன்முன்னே கயங் கூர்ந்து
நாட்டிசைய ராஜாங்க கிருத மப்பா.

477. அப்பனே மூலியது மெத்த உண்டு
அருளான மூலியடா முறைய தாகும்
தப்பில்லா ஒளியரசன் மகனே மூலி
சஞ்சீவி வெற்றியென்ற கொடிய மூலி
ஒப்பில்லா மூலிகளுக்கு காச தாக
ஓங்கிலே ஆதித்தியன் பிரட்டை தன்னில்
தப்பில்லா சுவடதிலே தாவி நிற்கும்
தானறிந்தால் அதுவும் முகவும் சித்தி.

478. முத்திசத்தி யாகுமடா அறிந்தா யானால்
மூதண்ட கேகர்ண உனக்கு மாச்சு
வெற்றிபெறு நீயுமொரு சித்த னாகும்
வேதகலைக் குள்ளடக்கி முகத்த லாகி
இத்திரையி லும்தனக்கு மரண மேது
இகபரவும் தெரிசனமும் நீயே காண்பாய்
நித்திரையும் உந்தனுக்கு நிண்மை கண்ணாம்
நீடூழி காலம்வரை நிலைக்கும் காணே.

பச்ச எலும்பின் அருகில் உள்ள வாசாய எலும்பு முறிந்தால் அங்கமானது வில்போல் வளைந்து குன்னிக்கொள்ளும். புச்ச

எலும்பானது அகப்புறமாக வளைந்து காணும். சுரமும், இருமலும் உண்டாகும். உடல்வறட்சை, உடல்மெலிதல், கபம், ஈழை, விக்கல், சுக்கல், அதிசாரம், சன்னி, சீதம், சிறுநீர் இழிதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும். தக்க தருணத்தில் மருத்துவம் செய்யாவிடில் மரணம் உண்டாகும். அதன் முன்னாக சயராஜாங்க கிருதம் கொண்டு மருத்துவம் செய்ய குணமாகும். அல்லாது அருள்மூலி, ஒளியரசன், மகன்மூலி, சஞ்சீவி மூலி, வெற்றி பச்சிலை இவைகொண்டு மருந்து செய்ய இத்தரையில் மரணமில்லாது நீடூழிக்காலம் வாழ்வான்.

### துரபேசி நரம்பின் முறிவு

479. நிலையான மார்பினிடை நடுப்பக் கத்தில்
நிலத்த துரபேசி நரம்பது முறிந்தால்
துலையாமல் நெஞ்சில் அக்கினிபோல் காய்ந்து
துயரமுடன் நெஞ்சினுள் குத்த முண்டாய்
நலமானதாக முறுதண்ணீர் வேண்டு
நாடிவரும் சன்னியது மூன்றில் சாகும்
பிலமாக அதிர்ச்சியுற்றால் நூற் றெட்டில்
பேசரிய நெஞ்சில் நடுமத்தி பத்தில்.

480. மத்திபத்தில் அக்கினிபோல் பறந்து காயும்
மராப்புகைய லாகுமிடம் வளர்த்தி குன்றி
சுற்றியே சிப்பிபோல் வளர்ந்து பாசி
சூழ்ந்தபோ லாகுமுடல் வறண்டு காயும்
சிற்றியே திக்குண்டால் பூபூக்கும் போது
துடிதுடித்து சன்னியோடு சீத முண்டாம்
வெற்றியாய் மாறுமடா மூன்றாம் நாளில்
மேவியே மங்கையர்கள் ஈன்ற போது.

481. ஈன்றாலும் பாலமிருதம் அவர்க்கே யில்லை
ஈன்றெடுத்த பாலனுட தேக மப்பா
கூன் றுமே மஞ்சளுட வர்ண மாகும்
குடகடிவாய் வதர்ச்சியுற்று கூடும் பாரு

ஊன்றுமே இருமலிழப்பு முண்டாம்
உடல்வறண்டு இறங்குமடா தீர்ச்சை யாக
ஆணொன்றாக அறிவதற்கு முன்னூல் சொன்னார்
அறிந்தவர்க்கு பதவுபின்னால் உண்மை தானே.

482. உண்மையாய் ஈன்றெடுத்த மங்கை யர்க்கு
ஓதரிய எலும்பாச்சி முற்றிட் டாலோ
வண்மையாய் முன்சொன்ன குணக்கு றியுமே
வகுத்துமே காணுமடா ஈன்ற பாலன்
தண்மையாய் ஓராண்டுக் குள்ளே சாகும்
அதிர்ச்சி யுற்றோர் ஆகநாள் ஆறுக்குள்
நன்மையாய் வேர்புகையி னும்பி சங்கல்
நாடிதிச புஸ்பாதி தைலங் கொள்ளே.

நடுமார்பில் இருக்கின்ற துறபேசி நரம்பானது முறிந்தால் நெஞ்சில் தீபோல காயும். நெஞ்சில் குத்தல் உண்டாகும். தாகம் அதிகரிக்கும். சன்னிவரும், பதிமூன்றாம் நாள் மரணமாவான். நடுநெஞ்சில் பலமான அதிர்ச்சி ஏற்பட்டால் நெஞ்சு பறந்து காயும். நெஞ்சு புகையும், வளர்ச்சி குன்றும். உடல் வரளும். சன்னி உண்டாகும். மூன்றாம் நாளில் உடல் மஞ்சள் வர்ணமாகி இருமல் இளைப்பு உண்டாகும். கருவுற்ற மங்கையர்க்கு இந்த வர்மம் காணுமானால் ஈன்ற குழந்தை ஓராண்டுக்குள்ளே சாகும். இதற்குத் திச புஸ்பாதி தைலம் கொள்ள வேண்டும்.

குடகரி வர்மத்தில் முறிவு

483. கொள்ளவே பஞ்சவர்ண நிலைய றைக்குள்
குடகரி வர்மத்தில் முறிந்திட் டாலோ
விள்ளுமே சன்னியோடு சீத முண்டாம்
மேல்வலிக்கும் மூன்றாம்நாள் மரண மாவான்
உள்ளி பஞ்சவர்ண குகைய றையின்
நொடிக்குள் கூரெலும்பு முறிந்தால் கடிகைக்
குள்ளே உயிரதுவும் நைலாசம் போகும்
கதிராக வறட்சியுற்றி இயங்கு மானால்.

484. இசங்கியே வேகமுற சன்னி யுண்டாம்
இருகாலும் கூட்டியே மேல்வ லிக்கும்
பசங்கியே மயக்கமுண்டாம் உடனே மாறும்
பரபரனே ஊருமிடா கண்க ளிரண்டும்
விசமாக நாள்எழுபத் தொன் று தன்னில்
மேவியே மருபுறம்நீர் விறுவி றுத்து
இடங்கியே காணுமடா திமிரு முண்டாம்
எதிராக பனிமீறல் அழல்வே கந்தான்.

485. வேகமுடன் அங்கமெல்லாம் காந்த லுண்டாம்
விடுவிடனே கண்ணுருட்டல் இருமல் சர்த்தல்
ஆகமுடன் சொல்லிடனும் விசர்க்கும் தேகம்
ஆங்கார முற்றுடனே மயக்க முண்டாம்
தாகமுடன் பயந்துளங்கு குறுகி கூட்டும்
தட்டடைக்கும் இருமலுள்ளே காரல்
தாகமுடன் நெஞ்சரிப்பு கொழுத்து குத்து
நடுவாய் வெருவெருக்கம் நடுக்க முண்டாம்.

486. நடுக்கமுண்டாம் இருநூற்றி எண்பத் தேழில்
நாடுதடு மாறியுடல் மயங்கு மாகில்
திடுக்கெனவே உயிர்பிரியும் கடந்திட் டாலோ
செப்பரிய சயவறட்சை திகில்போ லாகில்
தடுக்கெனவே உயிர துவும் கடுக லாக
கண்டுமே ராஜாங்க கிருதம் கொள்ள
திடமாக ஊறெலும் பீனிசம் காயம்
தீருமென நாமுரைத்தோம் சேர்ந்து பாரே.

பஞ்சவர்ண குகையில் இருக்கும் குடகரி வர்மத்தில் முறிந்தால் சன்னி, சீதம் உண்டாகும். உடல் வலிக்கும். மூன்றாம் நாளில் மரணமாவான். பஞ்சவர்ண குகையறையில் கூரெலும்பு முறிந்தாலோ கடிகைக்குள் உயிர் போகும். வறட்சியுற்று இசங்கமானால் சன்னி, மயக்கம் காணும். எழுபத்தோராம் நாளில் உடலில் நீர் கோர்த்து அழல் வேகத்தால் அங்கமெல்லாம் காந்தல் உண்டாகி இருமல், சர்த்தல் உண்டாகி, நெஞ்செரிப்பு, குத்து, நடுக்கம்

உண்டாகி, இருனூற்றி எண்பத்தேழில் உயிர் பிரியும். இது கடந்தாலோ சயம், வறட்சை, திகில் போன்ற குறிகுணங்கள் காணுமாகில் ராஜாங்க கிருதம் உள்ளே கொள்ள திடமாக நோய் தீர்ந்து நலமாகும்.

*சிரசாத முறிவுகள்*

*487.* தேர்ந்துபார் முக்கூட்டின் இடை நடுவில்
சிரசாத நரம்பதுவு முறிந்திட் டாலோ
கூர்ந்துமே தேகமெல்லாம் நரம்பு தோன்றி
குடுகுடனே மேல்துடிக்கும் சுரம்போல் காயும்
சேர்ந்துமே கண்மயங்கும் விலாவி ரண்டும்
திடுத்துடனே விம்மல் காய்ந்துடல் குளிரும்
ஊர்ந்துமே வாயில்நுரை பதையும் தள்ளும்
உத்தமனே மலசலவும் அடைத்துக் கொள்ளும்.

*488.* அடைத்துமே மலசலவும் கழிந் திருக்கும்
அடியே பலவரியும் பூண்டு கட்டும்
தடையாக சன்னியோடு சீத முண்டாம்
தப்பாமல் நாளேழு கடந்து தாகில்
திடமாக திசபுஸ்பாதி எண்ணெய்
சிறப்பாக உண்டுமே எல்லு துவாலை
நடனமாய் பூண்டுமே கையிதம் செய்
நாடியே அதிர்ச்சியுற்றால் அம்பத் தேழில்.

*489.* அம்பத் தேழில்தாம் தாழ்ச்சி யுற்று
அங்கமது சீறியே கொள்த லுண்டாம்
துன்பமுடன் மயக்கமுற்று எடுத்தெ றிந்து
துயரமிகும் அடிக்கடி உணர்வு முண்டாம்
பின்புறமே மயக்கவரும் பதினெட் டாம்நாள்
பேசரிய நடுநிலையை நெருக்கும் போது
அன்புற மயக்கமது தீருஞ் சொன்னேன்
அமிர்தமுக் கூட்டுடன் எண்ணெய் கொள்ளே.

சிரசாத நரம்பு முறியுமானால் உடலெங்கும் தடித்து சுரம் உண்டாகும். இருவிலாவிலும் வலிகாணும். வாயில் நுரை பதையும் தள்ளும். மலசலம் அடைத்துக்கொள்ளும். ஏழுநாள் கடக்குமுன்னே திசபுஸ்பாதி எண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து மேலே துவாலை செய்து கையிதம் செய்ய நலமாகும். மாறாகக் குணமாகாமல் இருக்குமானால் 57 நாளுக்குள்ளாக அமிர்த முக்கூட்டெண்ணெய் அருந்தத் தீரும்.

### கொளு நரம்பின் முறிவு

490. கொள்ளடா காரீரல் நடு முனையில்
கொளுநாடி நரம்பது முறிந்திட் டாலோ
விள்ளடா மயக்கமுண்டாம் எழுந்து பாடும்
விடுவிடனே கண்சிமிட்டும் கைகா லெல்லாம்
பள்ளமாய் வளைத்துமே சுருட்டிக் கொள்ளும்
பரபரனே காய்ந்துடனே குளிர்ந் திருக்கும்
மெள்ளவே உடல்பருத்து கனத்துக் காணும்
மேல்நோக்கி வலித்துமேல் கொளுத்து முண்டாம்.

491. கொளுத்தியே விழிரண்டும் சிமிட்டிப் பார்க்கும்
கொடுகொடனே பல்கடிக்கும் மயக்க முண்டாம்
விழுந்துருண் டெழுந்துமதி வுணர்வு முண்டாம்
மேவுநாள் இருபத்தேழில் உயிர்தான்
துளுங்கியே போகுமிடா அதிர்ச்சி யுற்றால்
சொல்லுவேன் ஆயிரத் திருபத் தேழில்
கழுகியே தொண்ட நடுகுழி வட்டத்தில்
கருநிறம்போல் காணுமுடன் குளிர் பனியாம்.

492. குமரியுடன் துவாலை செய்கை யிதமும்
கூறான வேர் புகையின்க சாயம்
தமருமிட்டு ஊன்றிகை யிதமும் செய்ய
சராபரம் கொருநாடி நரம்பின் காயம்
திமிரான நோய்களது தீரு மென்று
செப்பினோம் பரமகுரு அருளி னாலே

கமலமென்ற மனக்கண்ணால் தினமுங் கண்டு
செய் இன்னுமொன்றாக கருத்தாய் கேளு.

காரீரலின் நடுமுனையிலிருக்கும் கொளுநாடி நரம்பானது முறிந்தாலோ மயக்கம் உண்டாகும். கண்கள் வெட்டும், கை கால்கள் வளைத்து உடலை சுருட்டிக் கொள்ளும். உடல் குளிர்ந்து கனத்துக்காணும். பல்கடிக்கும். அடிக்கடி மயங்கி இருபத்தேழாம் நாளில் மரணமாகும். முறியாமல் அதிர்ச்சியுற்றால் *1027* ம் நாளில் தொண்டையின் நடுகுழியில் கருநிறம் காணும். இதற்கு குமரி எண்ணெய் துவாலை செய்ய நலமாகும்.

நீர்கோரி நரம்பில் முறிவு

*494.* கருத்தாக தொண்டைக்குள் இடபக் கத்தில்
கருதுநீர் கோரி நரம்பது முறிந்தால்
சிரசுவெட்டி தெறிக்குமிட நெஞ்சில் குத்தும்
சீறுமிடா கண்முகமும் திருக்கிப் பார்க்கும்
வெருவியே காந்தலுடன் அழலு முண்டாம்
வேகமுடன் தாகமுண்டாம் இருமிக் கொள்ளும்
வருந்தியே சிலநேரம் சிரித்துப் போகம்
வழக்கமுடன் அறிவழிந்து மயக்க முண்டாம்.

*495.* மயக்கமுடன் நாக்கைமுன் னீட்டிக் காட்டும்
வளமாக நீர்பாய்ந்து துள்ளிப் போடும்
பயமாக முப்பத் தேழில் சாவான்
பாலகனே அதிரியுற்றி மயங்கிக் கொண்டால்
செயமாக கண்வெட்டி சிமிட்டிப் பார்க்கும்
சிரசுநோய் பனிகுளிரும் சோர்ந்து காணும்
நயமாக அமிர்தமுக் கூட்டெண்ணெய்
நாடியே உண்டுவர நன்றாய் பாரே.

496. நன்றாக கூம்பிடியில் உள் முனையில்
நாடுமிரை மாலி நரம்பது முறிந்தால்
குன்றான கண்ணிரண்டில் நீர்சொரிந்து
குருவியர்வை வியர்த்து வயிறு குடம்போல் ஊதும்
மன்றான மலசலவும் அடைத்துக் கொள்ளும்
வாய்பிளந் திருக்கும்நீர் சுளறி காட்டும்
சென்றாடும் காலகரமும் பிலம் கொள்ளாது
திடுதிடனே வயிற்றெரியும் மயக்க முண்டாம்.

497. உண்டாகும் கொட்டாவி வாய்நீர் ஊறும்
ஊனுருவி மூன்றில்வரும் சன்னி சீதம்
திண்டாடி ஒன்பதிலே மரண மாவான்
திடுக்கனவே நடுநிலையை நெருக்கிப் பாரு
மண்டான இராமலி நரம்பின் காயம்
மாறுமே அதிர்ச்சியுற்றி மயங்குங் கெண்டால்
பண்டான மயிர் கூச்சலுடனே உண்டாம்
பரபரனே ஊருமிடா பரத்துக் காயும்.

498. காயுமிடா நானூற்றி நாற்பத் தெட்டில்
கண்களிலே சிகப்பேறும் விளறு மேனி
தேயுமே வயிறெரையும் வேர்வை யுண்டாம்
சீர்மேகம் சொரிந்துவரும் அருகில்மேல் மேனி
பாயுமே நீர்கடுக்கும் இரையும் விழும்
பரந்துவிழும் பலநிறம்போல் மேனி காயும்
சாயுமே மலத்தில்இரை இரத்த மோடும்
தப்பாமல் பைய்யரு தைலங் கொள்ளே.

499. பய்யரு தைலமது தானே கொள்ளு
பகருகுறுந் தோட்டினெண்ணெய் பதமிட் டாட்டி
நய்யவே வேர்புகையின் கசாயம் செய்து
நலமாக கையிதமும் நாடிச் செய்து
துய்யவே குமரியுட துவாலை போடு
சூட்சமொடு மூன்றுநாள் இட்டுக் கொண்டால்

ஒய்யவே இராமலி நரம்பின் காயம்
ஓடுமே நாமுரைத்தோம் அறிந்து பாரே.

500. பாரேனீ வர்மமோடு நரம் பெலும்பு
பருகநல் லிவினையின் முறிவி சங்கம்
கூரேனீ இருத்தலோடு தட்டல் மார்க்கம்
குருநிலை பூசையது அனுஸ்டான மோடு
காரேனீ திருத்த அட்சகனை இருத்தல்
கையிதமும் நரம்பறந்து கருத்தாய் சொன்னோம்
சீரேனீ இவைகள்பல நோய்களுக் கெல்லாம்
செப்புகிறேன் அவுசதவும் தேர்ந்து பாரே.

தொண்டையின் இடப்பக்கத்தில் இருக்கின்ற நீர்கோரி நரம்பானது முறிந்தால் தலை துடிக்கும். நெஞ்சில் கத்தல் உண்டாகும். கண்ணும் முகமும் திருகிக் கொள்ளும். அதிகமான தாகம், இருமல் உண்டாகும். மயக்கம் உண்டாகும். நாக்கு வெளியே இழுத்துக்கொள்ளும். முப்பத்தேழில் மரணமாவான். முறியாமல் அதிர்ச்சியுற்று மயங்கினாலோ கண் வெட்டிக்கொள்ளும். சிரசு நோய் உண்டாகும். பனிகுளிரும். இதற்கு அமிர்த முக்கூட்டெண்ணெய் உண்டுவர நலமாகும்.

மலி நரம்பு முறிந்தால் கண்களிலிருந்து நீர் சொரியும். வியர்வை அதிகரித்து வயிறு ஊதும். மலசலம் அடைத்துக்கொள்ளும். வாய்பிளந்து உமிழ்நீரானது வழிந்து கொண்டிருக்கும். கால்கள் வலுவிழந்து வயிற்றில் எரிச்சல் உண்டாகி மூன்றாம் நாளில் சன்னியும் குளிரும் உண்டாகும். இக்குறி குணங்கள் காணப்படின் ஒன்பதாம் நாளில் மரணமாவான். நடுநிலையை நெருக்கி சோதித்தறிய மலிநரம்பின் காயம் மாறும். அதிர்ச்சியுற்றிருந்தால் மயக்கம், ஊரல், சுரம் காணும். 448 ம் நாளில் கண்கள் சிவப்பு நிறமாய் மாறும். வயிறு இரைச்சல், நீர்கடுப்பு, மேகம், சுரம் முதலியவை தோன்றும். மலத்தில் இரத்தம் காணும். இதற்கு பையயரு தைலம் உள்ளே கொடுத்து குறுந்தொட்டி எண்ணெய் தாரைசெய்து கையிதம் செய்ய குமரியின் துவாலை மூன்றுநாள் இட்டுக்கொள்ள மலி நரம்பின் காயம் நீங்கி நலமாகும்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் செய்யுளெண்)


| | |
|---|---|
| அகலாது | 82 |
| அங்கமெல்லாம் | 202 |
| அசவை வழி | 75 |
| அசைவான | 26 |
| அஞ்சாம் நாள் | 242, 255 |
| அடைத்துமே | 488 |
| அண்டபிண்ட | 1 |
| அண்ணரம்பில் | 217 |
| அண்ணலே | 9 |
| அணுகாமல் | 126 |
| அதர்ச்சையது | 387 |
| அதிசார | 330, 439 |
| அதிர்ச்சியொடு | 407 |
| அப்பனே | 477 |
| அம்பத் | 489 |
| அம்பத்தேழு | 374 |
| அமத்தவே | 98 |
| அருளான | 53 |
| அழலேறி | 352 |
| அறிந்தாலோ | 375 |
| அறிந்திருந்த | 47 |
| அறிந்துகொள் | 296 |
| அறிந்து செய் | 16 |
| அறிந்துடனே | 237 |
| அறிந்துமே | 136, 266 |
| அறியவே | 229 |
| அறிவான | 29 |
| அன்பான | 121 |
| அன்புடனே | 115 |
| ஆகுமடா | 429 |
| ஆகுமதின் | 299 |
| ஆகுமே | 27, 86, 186 |
| ஆகுமேயி | 434 |
| ஆச்சரியமது | 264 |
| ஆச்சுதே | 63 |
| ஆடியே | 169 |
| ஆண்டுக்குள் | 415 |
| ஆதியந்தம் | 2 |
| ஆமப்பா | 101 |
| ஆமென்ற | 95, 423 |
| ஆமெனவே | 240 |
| ஆய்ந்து பார் | 288 |
| ஆய்னே | 464 |
| ஆயிரத்தி | 419 |
| ஆராய்ந்து | 256 |
| ஆலான | 420 |
| இசங்கியே | 125, 484 |
| இசம்பிகேள் | 222 |
| இசம்பினோம் | 162, 272 |
| இசையவே | 270 |
| இடரான | 416 |
| இதமாக | 173 |
| இந்நூல்தான் | 335 |
| இப்படி செய்து நீ | 389 |
| இருநூறு | 278 |
| இருபத்தி | 398 |
| இருபத்தெட் | 250 |
| இருளாக | 392 |
| இல்லையென்ற | 308 |
| இன்றுமென்று | 5 |
| இன்னுமொரு | 174, 397 |
| இன்னுமொன்று | 336 |

| | | | |
|---|---|---|---|
| ஈரம்போலே | 456 | எழுபத்திரண்டில் | 140 |
| ஈரெண்டால் | 65 | என்றதொரு | 218 |
| ஈவதுகேள் | 148 | என்றாலோ | 31 |
| ஈன்றாலும் | 481 | ஏகாகி | 368 |
| உண்டாகும் | 447, 462 | ஏகாசி | 316 |
| | 497 | ஏகியே | 52 |
| உண்மையாய் | 321, 344 | ஏம்புரம் | 246 |
| | 454, 482. | ஐந்துநாள் | 43 |
| உண்மையிலே | 384 | ஐந்துருவும் | 4 |
| உண்மையுடன் | 144 | ஒன்பதிலே | 193 |
| உணர்வது | 280 | ஒன்றாக | 386 |
| உணர்வற்றுக் | 138 | ஒன்றான | 105 |
| உணர்வாக | 77 | ஓதிக்கேள் | 371 |
| உணர்வான | 310 | ஓடுமென் | 247 |
| உபதேச | 155 | ஓமப்பா | 139 |
| உமறலது | 291 | ஓராண்டு | 345 |
| உருட்டவே | 305 | கட்டிநின்ற | 73 |
| உருளுமடா | 339 | கட்டியே | 30 |
| உரைக்கவே | 238 | கடந்தாலோ | 215, 267 |
| உள்ளபடி | 71, 81 | கடருமென்ற | 39 |
| உள்ளாகி | 271 | கண்டநாள் | 448 |
| உள்ளான | 92, 104 | கண்டாக்கால் | 435 |
| உள்ளிசங்கு | 408 | கண்டாலோ | 312, 443 |
| உற்றதோர் | 380 | கண்டுகொள் | 254 |
| உற்றாலோ | 461 | கண்டுநீ | 35, 177 |
| உறுதியென்ற | 68 | கண்டுமே | 385 |
| உன்னியே | 184 | கண்ணிலே | 221 |
| ஊட்டியே | 465 | கபமுண்டாய் | 269 |
| ஊடாடி | 74, 476 | கமலமதில் | 469 |
| ஊரல் நரம்பது | 450 | கருகி | 93 |
| எட்டதனில் | 142 | கருத்தாக | 231, 494 |
| எட்டான் | 15 | கருத்துமே | 277 |
| எண்ணெயது | 440 | கருதியே | 219, 427 |
| எப்படியும் | 40 | கறுக்குமே | 409 |
| எல்லையுடன் | 402 | காணப்பா | 351 |
| எழுந்துமே | 460 | காணுமடா | 401, 426 |

| | |
|---|---|
| காணுமிடா | 197 |
| காணுமே | 17 |
| காணுமேன் | 400 |
| காலையிலே | 12 |
| காயது | 438 |
| காயமது | 188, 251 322, 430. |
| காயமாம் | 206 |
| காயுமிடா | 498 |
| காயமென்றால் | 19 |
| காரலுண்டாம் | 451 |
| காலமது | 78 |
| காலையிலே | 334 |
| கிறுதமுண்டாங் | 457 |
| குத்துமடா | 358 |
| குப்பமாட்டாய் | 475 |
| குமரியுடன் | 492 |
| குய்யத்தின் கீழ் | 441 |
| குருவான | 86, 359 |
| குளிர்ச்சிகொண்ட | 248 |
| குறிப்பான | 76 |
| கூடியது | 67 |
| கூடியே | 97 |
| கூர்ந்து கேள் | 236 |
| கூரேனி | 179 |
| கூறப்பா | 120 |
| கூறவே | 437 |
| கூறாக | 467 |
| கூறாத | 61 |
| கூறான | 116, 304 |
| கேளடா | 463 |
| கேளப்பா | 207 |
| கேளுநீ | 245, 412 |
| கைப்புசத்தில் | 114 |
| கையிதம் | 263, 294 |
| கையிதமும் | 111, 209 |
| கையிதமே | 49 |
| கையில் | 414 |
| கொடுத்திடவே | 422 |
| கொண்டுமே | 99 |
| கொள்ளடா | 362, 490 |
| கொள்ளவே | 84, 154 159, 279, 483 |
| கொள்ளுமே | 87, 399 |
| கொள்ளேநீ | 233 |
| கொளுத்தியே | 491 |
| கோணமடா | 94 |
| கோபமாய் | 360 |
| சடமான | 436 |
| சரியாக | 135, 285 |
| சரியாகச் | 119 |
| சன்னியுண்டாம் | 317 |
| சாடுமடா | 326 |
| சாருமந்த | 432 |
| சாவாரும் | 90 |
| சாற்றியே | 367 |
| சாற்றினோம் | 190 |
| சில்லனவே | 286 |
| சிவக்குமே | 167 |
| சீதமுண்டாம் | 234 |
| சீதமுண்டாய் | 214 |
| சீறலுடன் | 20 |
| சுடரான | 394 |
| சூச்சமாய் | 153, 295, 338 |
| சூட்சமே | 391 |
| சூட்சாதி | 13 |
| சூழையிட்டு | 353 |
| செப்பினார் | 194 |
| செய்தாலோ | 170 |
| செய்திடுநீ | 350 |
| செய்து கொள் | 372 |

| | |
|---|---|
| செய்துமே | 300 |
| செய்யப்பா | 102 |
| செய்யவே | 117 |
| செய்யேநீ | 283 |
| சென்னிரண்டும் | 287 |
| சென்றாலோ | 113 |
| சென்றுகொண்டு | 57 |
| சென்றுமே | 273 |
| ்சேயதுமே | 465 |
| சேர்ந்துமே | 327 |
| சேருநி | 141 |
| சேரேனு | 32 |
| சொல்லிடறி | 333 |
| சொல்லுகிறேன் | 28 |
| சொல்லுவேன் | 41 |
| சொன்னதொரு | 146, 191 |
| சொன்னோமே | 361 |
| ஞன்றதிலே | 252 |
| தடவுசித் | 340 |
| தப்பாமல் | 442 |
| தமருமிட் | 112 |
| தயவாக | 161 |
| தரணிதனில் | 303 |
| தலமான | 7 |
| தாக்கிய | 51 |
| தாக்குவாய் | 37 |
| தாமேகேள் | 196 |
| தாரை | 103 |
| தாரையது | 137, 243 |
| தானாக | 163 |
| தானான | 134, 203 |
| | 284, 458 |
| தானேதா | 80 |
| தானேதான் | 253, 342 |
| தானொன்று | 363 |
| திசடுஸ்பாதி | 444 |
| திடங்காணும் | 34 |
| தியானமான | 58 |
| திரியான | 318 |
| தீருமடா | 183 |
| துவாலையது | 182 |
| தூரட்சமா | 249 |
| தெளிவான | 46, 56 |
| தெறிக்குமடா | 395 |
| தேகமது | 265, 324 |
| தேய்ந்துநீ | 332, 355 |
| தேர்ந்துபார் | 487 |
| தேர்ந்துமே | 226, 356 |
| தேர்ந்துரைத்த | 320 |
| தைலத்தை | 259 |
| தொகுப்பான | 289 |
| தொண்ணூறாம் | 176 |
| தோன்றிடா | 64 |
| நகரான | 79 |
| நகைப்பான | 404 |
| நடுக்கமுண்டாம் | 486 |
| நடுங்கியே | 22 466 |
| நடுநிலையின் | 357 |
| நடுவெலும்பின் | 365 |
| நரம்பினுடைய | 198 |
| நலமாக | 106, 293 |
| நலமாகும் | 151 |
| நவிலவே | 261 |
| நளினமென்ற | 59 |
| நன்றனவே | 244, 281 |
| நன்றாக | 496 |
| நன்றாகச் | 301 |
| நாட்டியே | 44 |
| நாடி | 298 |
| நாடிநீ | 156 |
| நாடியே | 128, 241 |
| நாதமுடன் | 157 |

| | | | |
|---|---|---|---|
| நாள் சென்றால் | 33, 147 | பதியவே | 149 |
| நாளிலே | 211 | பதினெட் | 223 |
| நிசழ்த்தினார் | 181 | பதினெட்டும் | 382 |
| நிகழ்த்தினோம் | 129, 131 | பய்யரு | 499 |
| நிசழ்த்துவாய் | 8 | பற்றறுத்து | 205 |
| நிசங் கண்டு | 328 | பற்றாமல் | 55 |
| நிசமாகும் | 38 | பற்றியே | 109, 307, 425 |
| நித்திரையில் | 164 | பற்றுமே | 127 |
| நில்லென்ற | 24 | பனிகுளிராய் | 474 |
| நில்லேநீ | 459 | பார்த்திடவே | 50 |
| நிலைசரியாய் | 187 | பாரப்பா | 107, 201, 216, 311, 455. |
| நிலையான | 204, 479 | | |
| நிற்குமே | 347 | பாருநீ | 178, 225 |
| நிறுத்தியே | 118 | பாரென்ற | 185 |
| நின்றதொரு | 200 | பாரேநீ | 91, 276, 500 |
| நினைவாக | 431 | | |
| நீங்கிடுநீ | 60 | பாரேனி | 364, 373 |
| நீங்கியே | 378 | பிரகாத | 379 |
| நீயுமவர் | 376 | பின்னாக | 133, 297 |
| நீருண்டாம் | 160 | புக்கவே | 329 |
| நீருண்டாய் | 239 | புகட்டினோம் | 369 |
| நூலான | 292 | புஸ்பாதி | 396 |
| நூலுமிக | 235 | பூக்குமே | 381 |
| நெருங்கியே | 319 | பூட்டியே | 48,150,262 |
| நேர்மையாய் | 124 | பூமரிசை | 258 |
| நேர்மையென்ற | 383 | பெருக்கியிடை | 152 |
| நோயது கேள் | 165 | பெலங்கொண் | 175 |
| பக்கமுடன் | 421 | பெலமாக | 180 |
| பக்கமென்ற | 25 | பேணப்பா | 48 |
| பகர்ச்சையது | 2 2 | பொக்கிநின்ற | 69 |
| பகர்ச்சையாய் | 232 | பொருந்தியே | 132 |
| பகருண்ணா | 172 | பொருமலுண்டாம் | 472 |
| படுகாயங்க | 54 | பொருமியே | 192 |
| பதறாக | 110 | போக்கான | 11 |
| பதிசெய்து | 108 | போகுமே | 452 |
| பதித்திடத்தாகி | 388 | போற்றவே | 158 |

போற்றியே 331
மகிழ்ச்சியாய் 424
மத்திபத்தில் 480
மட்டுவிட்டு 66
மயக்கமுடன் 495
மயங்கிநின்ற 70
மயங்கியே 453
மலரான 6
மறந்திடா 300
மறுகாலம் 23
மன்றாகும் 268
மாத்திரையாய் 10, 171
மாமுனிவர் 199
மாறாட்ட 413
மாறியே 314
மாறுமடா 213
மிகவுண்டாம் 228
முகங்கறுத்து 341
முடிவான 83
முத்திசத்தி 478
முப்பத்தாறில் 302
மூப்பொருளும் 260
முள்ளுரைபோல் 410
முறிந்தாலோ 145
முறிந்து 143
முன் தலத்தில் 100
முன்போலே 45
மூலமுத 3
மூன்றிலும் 370
மூன்றுநாள் 306
மெத்தெனவே 354
மெத்தையுது 122
மேயுமே 366
மேல்தாரை 195
மேலதுவே 275
மேவியே 313
மைந்தனே 310
மொழுகவே 149
வகுக்கவே 346
வகுத்தோர் 274
வகுப்பறாது 168
வகுப்பாக 14
வகுப்பான 473
வட்டமடா 72
வந்தவகை 18
வந்தனையாம் 21
வர்மத்தின் 337
வரையான 433
வலிக்குமே 446
வலுத்துமே 323
வழிமறைத்துக் 315
வன்மையாய் 208
வன்னியென்ற 62
வாரேநீ 471
வாழ்த்தினேன் 224
வாறான 130, 227
வாலுகண்டு 85
வாறுகேள் 166
விசக்கியே 470
விசகாயம் 348
விட்டோடி 405
வித்தையெல்லாம் 403
விதித்தோர் 445
விதியாக 325
விதியான 411
விபர்வையுண்டாம் 349
விலகியே 123
விலகுமடா 257
விழித்துமேல் 343
விழுந்தாடும் 290
விளங்கவே 282
விளங்கவே 309
வீறான 220
வெட்டியே 230
வெந்துமே 377
வெருவியே 393
வேகமுடன் 428, 485
வையேநீ 96